தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 7, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஆகஸ்ட் 23, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை"

மற்ற உயிர்களின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாவிட்டால் நாம் பெற்றுள்ள அறிவினால் ஆகப் போகும் பயன்தான் என்ன?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2244, 2580, 5215, 9336 மற்றும் 9656 ஆகியவை சுற்றுப் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சாலையோர சிற்றுண்டி விடுதிகள்

* 5208—திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப் பெற்று வரும் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை (Motels) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

ஆம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய பல்வேறு வழித்தடங்கள் போகக்கூடிய பாதைகளிலே இன்றைக்கு தனியார்கள் நடத்தக்கூடிய சிற்றுண்டி விடுதிகளை யெல்லாம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை அல்லது கருத்துரு நீண்ட காலமாக அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்று அறிகிறேன். இப்படி நடத்தக்கூடிய மோட்டல்கள் அல்லது சிற்றுண்டி விடுதிகள் தனியாராலே நடத்தப்படு வதற்குப் பதிலாக அவை தமிழ்நாடு அரசினுடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய சார்பிலே நடத்தப்படுமானால் பயணிகளுக்குப் பயனுள்ள சேவையை அளிக்க முடியும் என்கிற காரணத்தினாலே இந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி, இது போன்ற சிற்றுண்டி விடுதிகளை எல்லாம் அரசுத் துறையிலேயே அல்லது அரசு நடத்தக்கூடிய கழகத்தின் மூலம் நடத்த விரை வாக அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 5 இடங்களில் சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. கொட்டாம்பட்டி, எட்டையபுரம், மூவரைவென்றான், தொழு தூர், பழனி. இந்த 5 இடங்களில் தனியார்கள் சிலருக்கு ஏற்கெனவே நடத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிலைமையில் அவைகளை எல்லாம் உடனே காலி செய்ய முடியாமல் நீதி மன்றத்தினுடைய நடவடிக்கைகளிலே இருக்கின்ற காரணத்தால் அதைக் காலி செய்து, நம்முடைய போக்குவரத்துக் கழகமே ஏற்று அதற்குப் பின்னர் ஒப்படைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பழனி, தொழுதூர் ஆகிய இடங் களில் மட்டும் சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் தனியார்களிடம் உரிமத்திற்கு விடப் பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்ததற்குப் பிறகு சுற்றுலா வாரியத்திடம் இந்தச் சாலை யோரச் சிற்றுண்டி விடுதிகள் ஒப்படைக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் 5 இடங்களில் நடத்தப்படுகின்றன. அதிலும் இரண்டு இடங்களில் ஒப்பந்த அடிப் படையில் தனியார்களிடம் விடப்பட்டிருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். குறிப்பாக, பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே மாமண்டூரிலே ஒரு சிற்றுண்டி விடுதி கட்டப்பட்டும் கூட அதிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் நிறுத்தப்படாமல் தனியார் இடங்களிலே நிறுத் தப்படுகின்றன. அப்படி மிகப் பெரும் அளவிற்கு திருவள்ளுவர் போக்குவரத்தினால் நடத்தப்படும் பேருந்துகள் முழுவதும்

1990 ஆகஸ்ட் 23]

தனியார் சிற்றுண்டி விடுதிகளிலே நிறுத்தப்படுவதனால் பயணி களுக்குப் பெருமளவு சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, இதைத் துரிதப்படுத்தி முடிக்கவும், குறிப்பாக மாமண்டூரில் பெரியார் போக்குவரத்துக் கழக சிற்றுண்டி விடுதியைப் பயன் படுத்திக் கொள்வதற்கும் அரசு முயற்சி எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாமண்டூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இந்த வழிப் பயணச் சிற்றுண்டி விடுதி திறக்கப்பட்ட தற்குப் பிறகு எல்லாப் பேருந்துகளுமே அந்தச் சிற்றுண்டி விடுதி க்கு அருகிலேதான், அதனுடைய வளாகத்திற்குள்ளேதான் நிறுத் தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றது. அதையும் மீறி சில போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் தனியார் விடுதிகளுக்கு முன்னால் நிறுத்தப்படு கின்றன என்ற புகார் ஏற்கனவே அரசாங்கத்திற்கு வந்து அதன் முன்னாலே நிறுத்தப்படுகின்ற அந்தப் பேருந்து ஓட்டுநர் அல்லது நடத்துநர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர்களுக்கும் எச்சரிக்கை செய்யப்பட்டதற்குப் பிறகு முழுமையாக இப்போது திருவள்ளுவர் பேருந்துகள் அல்லது மற்ற போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் மாமண் டூரிலே இருக்கின்ற மோட்டலிலேதான் நிறுத்தப்படுகின்றன. அப்படி ஏதாவது புகார்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பி னருக்கு நேரடியாகத் தெரியுமானால், எந்த வண்டி அந்த வளாகத்திலே போகாமல், தனியாருடைய விடுதிக்கு முன்னாலே நிறுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பாகச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

9.05 மணி

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இதுபோன்ற சாலை ஓரச் சிற்றுண்டி விடுதிகளிலே பயணிகளுக்கு குறைந்த விலையிலே, No Profit, No Loss, என்கின்ற முறையிலே தரமான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அரசு ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? அல்லது இலாப நோக்கத்தோடு நடத்து கின்ற முறையிலே அந்த விடுதிகள் நடத்தினால், மக்களுக்குப் பயன் ஏற்படாது என்பதைக் கருத்தில் கொண்டு இனியாவது அப்படி ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பஸ்களிலே செல்லக்கூடிய பயணிகளுக்கு தரமான, சுத்தமான உணவுகள் கிடைக்க வேண்டும். அதேநேரத்தில், நியாயமான விலையில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்த

சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் போக்குவரத்துக் கழகத்தினால் அமைக்கப்படுகின்றன. ஏற்கனவே, தனியார் உணவு விடுதிகளுக்கு முன்னால், சில இடங்களில் நம்முடைய போக்குவரத்துக் கழக பஸ்கள் இரவு நேரத்திலே நிறுத்தப்படுகிற காரணத்தினால், அவர்கள் போடுகிற விலையைக் கொடுக்க வேண்டும்; அந்த விலைக்கு எந்த உணவு—அது தரமில்லாத உணவாக வழங்கப்பட்டாலும், அதைச் சாப்பிட்டே தீர வேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத் தான் இப்படிப்பட்ட உணவு விடுதிகள் அமைக்கப்பட்டு, பயணிகளுக்கு மேலும் நன்மை செய்கின்ற வகையிலே, நியாயமான விலையிலே உணவுப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையிலிருந்து சென்னை வருகின்ற பேருந்துகள், விழுப்புரத்தில் 'ஓட்டல் அபிலாஷ்' முன்னாலே நிறுத்தப்படுவதால், அங்கே ஆண் பயணிகளும், பெண் பயணிகளும், சாலையோரத்திலேயே சிறுநீர் கழிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்படுகிறது. அமைச்சரவர்கள் கவனித்து, தகுந்த கழிப்பிட வசதிகள் உள்ள இடங்களில் அந்தப் பேருந்துகளை நிறுத்த வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தனியார் உணவு விடுதிகளுக்கு முன்னாலே நிறுத்தப்பட்டு, அதனாலே பல்வேறு விதமான குறைபாடுகள் ஏற்படுவது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படியிருக்கிற காரணத்தினாலே தான், நீண்ட தூரப் பேருந்துகள் அரசின் சார்பிலோ, சுற்றுலா வாரியத்தின் சார்பிலோ, அல்லது போக்குவரத்துக் கழகங்களின் சார்பிலோ நடத்தப்படுகின்ற விடுதிகளுக்கு முன்னாலேதான் நிறுத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நீண்ட தூரப் பேருந்துகளில் வரக்கூடிய நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள், அந்த விதிகளை மீறி வேறு தனியாருடைய உணவு விடுதிகளில் சலுகைகளைப் பெறுவதற்கு யாரேனும் ஆங்காங்கே நிறுத்தினார்கள் என்று சொன்னால், அந்தப் புகார்களைத் தயவுசெய்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எல்லாக் கழகங்களிலும் கழக ஊழியர்களுக்கான சிற்றுண்டிச் சாலைகள் இருக்கின்றன. அங்கே சமையல் செய்வதற்குத் தேர்ச்சி பெற்றவர்கள் சமையல் நுணுக்கம் தெரிந்தவர்கள் கூட, எல்லா போக்கு

1990 ஆகஸ்ட் 23]

வரத்துக் கழகங்களிலும் அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய பணியைப் பயன் படுத்தி—சேவையினைப் பயன்படுத்தி, கழகங்களால், நடத்தப்படுகிற சாலையோர சிற்றுண்டி விடுதிகளையும், கழகங்களினாலேயே நேரடியாக நடத்தி, பயணிகளுக்கு தரமான, நியாயமான விலையிலான உணவு வகைகளைப் பரிமாறுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய தொழிலகங்கள்—'டெப்போக்களில்' இருக்கக் கூடிய கேண்டீன்களில்தான், சமையல் செய்யக் கூடிய நபர்களை வைத்து, தொழிலாளர் களுக்காக உணவுகள் தயாரிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சாலையோரச் சிற்றுண்டி விடுதி களில் பணியாற்றுவது என்று சொன்னால், தொழிலாளர் களுக்கான சேவைகள் செய்வதிலே குந்தகம் ஏற்படும். எனவேதான், அது நடைமுறைக்கு ஒத்து வராது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான சாலையோர உணவு விடுதிகள், தனியாரால் நடத்தப்படுகின்றன. தனியார்கள் தருகிற அந்தச் சலுகைகளை அனுபவிக்கத்தான் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பேருந்துகளை அங்கே நிறுத்துகிறார்கள். எனவே, இவற்றைத் தவிர்ப்பதற்காக, அந்தந்த மாவட்டங் களிலே முக்கியமான இடங்களில், எந்த மாவட்டத்தில் எந்தப் போக்குவரத்துக் கழகம் இருக்கிறதோ, அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக சாலையோரச் சிற்றுண்டி விடுதிகளை ஏற்படுத்தி, தனியார்கள் தருகின்ற அந்தச் சலுகைகளை, கழகங்கள் நடத்துகின்ற சிற்றுண்டி விடுதி களிலும் கிடைப்பதற்கு ஓட்டுநர்களுக்கும், நடத்துநர் களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் தவிர்க்கப்படலாம். எனவே, இந்த ஆலோசனையைக் கருத்தில் கொண்டு, நம்முடைய அரசு அவ்வாறு அமைக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னக் கருத்தை மையமாக வைத்துத் தான் போக்குரத்துக் கழகங்கள், ஆங்காங்கே சாலையோர சிற்றுண்டி விடுதிகளை உருவாக்கியிருக்கின்றன. குறிப்பாக, தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளில் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுபவம்

இருக்கும். செங்கல்பட்டிற்குப் பக்கத்திலேயும், அதே போல் மாமண்டூரின் சாலையோர வலது பக்கத்திலே இருக்கக் கூடிய சில தனியார்களுடைய உணவு விடுதிக்கு முன்னால் இரவு 9 மணி, 10 மணிக்கு அந்தப் பேருந்துகளை அங்கே நிறுத்தி, செல்லக்கூடிய பயணிகள் வேறு எங்குமே செல்ல முடியாது, நடுக்காட்டிற்குள்ளே இருக்கின்ற மாதிரி ஒரு அமைப்பு. ஆகவே, அவர்கள் கொடுக்கின்ற உணவைத் தான் சாப்பிட்டுத் தீர வேண்டும். போடுகின்ற பில்லுக் குண்டான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் அரசு இத்தகைய மோசமான நிலைமையை உணர்ந்து பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு நல்ல, தமிழ் நாட்டிற்கே எடுத்துக் காட்டாக இருக்கின்ற வகையில் ஒரு அருமையான சிற்றுண்டி விடுதியை, மோட்டலை உருவாக்கி இன்றைய தினம் அது சிறப்பான முறையிலே பணியாற்றி வருகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நீண்ட தூரப் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்துகின்ற வகையில் மேலும் எங்கெங்கு இத்தகைய விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கி நடத்துவதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும்.

முறைசாராக் கல்வித் திட்டம்.

*5215—திரு. ப. முத்துச்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இதுவரை இயங்கி வரும் முறை சாராக் கல்வித் திட்டத்தில் கல்வி கற்றுத் தரப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அளவில் பொதுத் தேர்வு வைத்து சரியாகக் கற்றுக் கொடுக்காதவர்களைக் கண்டறிந்து உடன் நீக்கி வேறொருவரை நியமித்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் சரியாகக் கற்றுத் தராத ஊக்குநர்கள் அவ்வப்போது நீக்கப்பட்டு புதிதாக நல்ல ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டு, போதனா முறை ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொதுத் தேர்வு, ஒன்றிய அளவில் ஏற்பாடு செய்தால் இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் கற்போர்கள் தேர்வு எழுத அச்சப்பட்டு கல்வி கற்பதையே விட்டு விடக்கூடும் என்று இந்தத் துறை கருதுகிறது.

இருக்கும். செங்கல்பட்டிற்குப் பக்கத்திலேயும், அதே போல் மாமண்டூரின் சாலையோர வலது பக்கத்திலே இருக்கக் கூடிய சில தனியார்களுடைய உணவு விடுதிக்கு முன்னால் இரவு 9 மணி, 10 மணிக்கு அந்தப் பேருந்துகளை அங்கே நிறுத்தி, செல்லக்கூடிய பயணிகள் வேறு எங்குமே செல்ல முடியாது, நடுக்காட்டிற்குள்ளே இருக்கின்ற மாதிரி ஒரு அமைப்பு. ஆகவே, அவர்கள் கொடுக்கின்ற உனவைத் தான் சாப்பிட்டுத் தீர வேண்டும். போடுகின்ற பில்லுக் குண்டான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் அரசு இத்தகைய மோசமான நிலைமையை உணர்ந்து பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு நல்ல, தமிழ் நாட்டிற்கே எடுத்துக் காட்டாக இருக்கின்ற வகையில் ஒரு அருமையான சிற்றுண்டி விடுதியை, மோட்டலை உருவாக்கி இன்றைய தினம் அது சிறப்பான முறையிலே பணியாற்றி வருகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நீண்ட தூரப் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்துகின்ற வகையில் மேலும் எங்கெங்கு இத்தகைய விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கி நடத்துவதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும்.

முறைசாராக் கல்வித் திட்டம்.

*5215—திரு. ப. முத்துச்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இதுவரை இயங்கி வரும் முறை சாராக் கல்வித் திட்டத்தில் கல்வி கற்றுத் தரப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அளவில் பொதுத் தேர்வு வைத்து சரியாகக் கற்றுக் கொடுக்காதவர்களைக் கண்டறிந்து உடன் நீக்கி வேறொருவரை நியமித்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் சரியாகக் கற்றுத் தராத ஊக்குநர்கள் அவ்வப்போது நீக்கப்பட்டு புதிதாக நல்ல ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டு, போதனா முறை ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொதுத் தேர்வு, ஒன்றிய அளவில் ஏற்பாடு செய்தால் இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் கற்போர்கள் தேர்வு எழுத அச்சப்பட்டு கல்வி கற்பதையே விட்டு விடக்கூடும் என்று இந்தத் துறை கருதுகிறது.

1990 ஆகஸ்ட் 23]

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் பல இடங்களில் ஏதோ பெயருக்காக—சம்பளம், குறைந்தபட்சச் சம்பளம் என்றாலும் கூட, அந்தச் சலுகையை மாத்திரம் அனுபவித்து விட்டு, முறையாகக் கற்றுத் தராமல் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் வெற்றி பெற முடியாமல் இருக்கிறது. ஆகையினாலே தான் முடிந்த அளவுக்கு ஆங்காங்கே இருக்கின்ற ஒன்றிய அளவில் மேல் கல்வி அலுவலர்களை அனுப்பி, 'ரிட்டன்' எழுத்து மூலமான பயிற்சி இல்லாவிட்டாலும் கூட அவர்கள் நேரடியாகக் கேட்கக் கூடிய சில கேள்விகளுக்காவது பதில் அளித்து முறையாக நடக்கிறதா என்று அரசு கண்காணித்தால் இந்தத் திட்டம் வெற்றி பெற வாய்ப்பிருக்கும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த வயது வந்தோர் கல்வித் திடடம், கிடைக்கின்ற ஊக்குநர்களுடைய ஊக்கத்தைப் பொறுத்துதான் சிறப்பு அடைய முடியும். இந்த ஊக்குநர்களுக்கு மேல்களப் பணியாளர்கள் அவர்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 3 மாதம், 4 மாதத்திற்கு ஒரு முறை அங்கே நடைபெறுகிற பயிற்சியை மதிப்பீடு செய்கிறார்கள். அந்த மதிப்பீடும்கூட ஒப்புக்குச் செயல்படுகிற மதிப்பீடாகத்தான் இருக்க முடியும் ஏனென்றால் ஆங்காங்கே உள்ள அறியாத நிலையிலே உள்ள மக்கள் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களோ, எந்த அளவுக்கு அவர்களுக்கு அதிலே ஒரு நாட்டம் ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்துதான் இந்த இயக்கம் வெற்றி அடைய முடியும். ஆனால் அதற்காக நியமிக்கப்பட்டவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு தொடர்ந்து இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்கள்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, இதுபோன்று மேற்பார்வை செய்கின்ற களப் பணியாளர்கள் முறையாக அவ்வப்போது அங்கு ஆய்வு செய்வதில் தடங்கல் ஏற்படுமானால் அதை விரைவுபடுத்தியாவது இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, கடந்த சில மாதங்களாக அந்த ஊக்குநர்கள் தொடர்ந்து பணியாற்றுகிற நிலைமை தடைபட்டு இருக்கிறது. கிராம நலப் பணியாளர்கள் மூலமாக இந்தப் பணியை நிறைவேற்றுவதாகத் திட்டமிடப்பட்டு கிராம நலப் பணியாளர்களுக்கு இந்த வயது வந்தோர் கல்விப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கான பயிற்சி வழங்கிட அதற்கு ஏறத்தாழ ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தகுந்த முறையிலே

அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசிலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

வினாக்கள்—விடைகள்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ரேசன் கார்டுகள் விநியோகம்.

* 8615 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிதாக ரேசன் கார்டுகள் விநியோகம் செய்யக் கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மைதானா ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; புது குடும்ப அட்டைகளை வழங்கலாம் என தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புது குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்றால், இடைக் காலங்களிலே எத்தனை மாதங்களாக இந்தக் குடும்ப அட்டைகள் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் புதிதாக வழங்க வேண்டாமென்று எப்போதும் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. 16–3–1990-ஆம் நாளன்று புதிய குடும்ப அட்டைகள் உரிய சோதனைக்குப் பின்னால் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே, இதுவரையிலே 1–1–1990 முதல் ஜூலை மாதம் இறுதி வரையிலே வரப்பெற்ற மனுக்கள் 51,171 ஆகும். இவை பரிசீலிக்கப்பட்டு, 27,905 புதிய அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஜூலை மாதம் மட்டும், 9,672 குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்பட்டிருக்கின்றன

வினாக்கள்—விடைகள்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ரேசன் கார்டுகள் விநியோகம்.

* 8615 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதிதாக ரேசன் கார்டுகள் விநியோகம் செய்யக் கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மைதானா ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ); புது குடும்ப அட்டைகளை வழங்கலாம் என தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புது குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்றால், இடைக் காலங்களிலே எத்தனை மாதங்களாக இந்தக் குடும்ப அட்டைகள் கொடுக்கக்கூடாது என்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் புதிதாக வழங்க வேண்டாமென்று எப்போதும் ஆணை பிறப்பிக்கப்பட வில்லை. 16–3–1990-ஆம் நாளன்று புதிய குடும்ப அட்டைகள் உரிய சோதனைக்குப் பின்னால் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதிலே, இதுவரையிலே 1–1–1990 முதல் ஜூலை மாதம் இறுதி வரையிலே வரப்பெற்ற மனுக்கள் 51,171 ஆகும். இவை பரிசீலிக்கப்பட்டு, 27,905 புதிய அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஜூலை மாதம் மட்டும், 9,672 குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப் பட்டிருக்கின்றன

[1990 ஆகஸ்ட் 23

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து குடும்பக் கார்டுகள் கொடுப்பதிலே ஒன்றும் தடை விதிக்கவில்லை என்பதாகச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும் கூட, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மழை இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஏராளமான மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன தாலுக்கா தலைநகரங்களிலே. ஆகையினால், இன்னொரு அதிகாரியையாவது நியமித்து, விரைவிலே குடும்பக் கார்டுகள் கொடுத்தால்தான், அவர்கள் ரேஷன் கடையிலே சென்று அரிசி வாங்குவதற்கோ, அல்லது இதரப் பொருட்கள் வாங்குவதற்கோ சரியாக இருக்கும். மேலும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு, உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவில், இன்னொரு அதிகாரியையும் நியமித்து, குடும்பக் கார்டுகளை விரைவிலேயே—இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள்ளாகக்கொடுப்பதற்கான ஒரு முயற்சியினை எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது என்பது ஒரு காலக் கெடுக்குள் முடிந்து விடக்கூடிய பிரச்சினை அல்ல. அது ஒரு தொடர் பிரச்சினை என்கிற காரணத்தினாலே, வரப்பெற்ற மனுக்கள் எல்லாம் உரிய முறையிலே பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் அட்டைகள். வழங்கப்படுகின்றன மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்னும் விரைவுப்படுத்தப்பட வேண்டுமென்கிற ஆலோசனையை ஏற்று இந்த அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கார்டுகள் வழங்குவதற்குப் பதிலாக, ஏற்கெனவே கார்டுகள் தவறி அல்லது நியாய விலைக் கடைகளை நடத்துகிறவர்களே கார்டுகளை வைத்துக் கொண்டு, அவ்வாறு குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காமல் இருக்கிற குறை அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்டவர்களுக்கு பதிதாக கார்டுகள் வழங்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவது, ஏற்கெனவே அரசு அறிவித்தபடி, நியாய விலைக் கடைகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருந்தால், கடைகள் பிரிக்கப்படும் என்று உள்ளது. தற்போது 1,200 கார்டுகளுக்கு மேலாக இருந்தால்தான் பிரிக்கப்படும் என்ற உத்தரவு வந்திருப்பதாக அறிகிறேன். தயவுசெய்து, பல கிராமங்களைச் சார்ந்தவர்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று இருக்கிற காரணத்தினாலே, பழையபடி 800 கார்டுகள் உள்ள.....

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்கு ஒரு கேள்வி தானே, உங்களுக்குக் கூட அளப்பதாகத் தவறாகச் சொல்கிறார்கள் (சிரிப்பு) ஒரே மாவட்டம் என்பதால் அளக்கிறீர்களோ?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளில் போலி அட்டைகள் இருப்பதை இந்த அரசு அறிந்துதான் போலி அட்டைகளை முதலில் கைப்பற்றுவதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து, பல்லாயிரக்கணக்கான போலி அட்டைகள்—குடும்ப அட்டைகள்—இந்த அரசு கைப்பற்றி இருக்கிறது. அதே சமயத்தில், உண்மையாக குடும்ப அட்டைகள் வேண்டுமென மனுச் செய்தவர்களுக்கு உடனுக்குடன் கொடுப்பதற்கான ஏற்பாட்டையும் இந்த அரசு செய்திருக்கிறது. அடுத்த கட்டமாக, 800 குடும்ப அட்டைகளுக்கு தனியாக புதிய நியாய விலைக் கடைகள் உருவாக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருந்தாலும், முதல் கட்டமாக 1,200 குடும்ப அட்டைகள் இருந்தால் அந்தக் கடைகள் பிரிக்கப்பட்டு முதல் கட்டமாக இயங்கும். படிப்படியாக அது 800 அட்டைகள் வரையிலும் வந்து புதிய கடைகள் திறக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—20 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடைகளுக்கு நீண்ட தூரம் சென்று பொருட்கள் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அது போக நீண்ட தூரத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள கடைகளைப் பிரித்து அமைக்கின்ற திட்டம் அரசிடம் உண்டா என அறிய விரும்புகிறேன். ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு, பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் கிராமங்கள் பரவியிருக்குமானால் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் இருக்கக்கூடிய ஊர்களுக்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கலாம் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்ட வழங்கல் அதிகாரி அவர்களுக்கும் அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்பவும் மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் மக்களின் வேண்டுகோளுக்கு ஏற்பவும் அரசு விடுத்து இருக்கின்ற நிபந்தனைகளின் அடிப்படையில் புதிய பகுதி நேரக் கடைகள் திறப்பதற்கான வாய்ப்பு உண்டு.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு

நபர் ரேஷன் கார்டுகள் பறிமுதல் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? கணவன் இறந்து விட்டால் மனைவிக்கு ரேஷன் கார்டு வேண்டும் என்பதை உணர்ந்து அவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். உண்மையாக குடும்ப அட்டைகள் வேண்டுமென்று யார் மனுச் செய்தாலும் அவர்களுடைய நியாயங்கள் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைகள் கொடுப்பது இல்லை என்ற உத்தரவு இருப்பதாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் அநேகமாக பல்லாயிரக்கணக்கான போலி கார்டுகள் 12 ஆயிரம் வரைக்கும் பிடிக்கப்பட்டும் ; அதேபோல் 15 ஆயிரத்திற்கு மேல் புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று விண்ணப்பித்தும் இன்று வரையிலும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை அவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அந்த அட்டைகள் உடனடியாக வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கோவை மாவட்டத்தில் 5,041 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து எத்தனை தவறான குடும்ப அட்டைகள் இருக்கிறதோ அதற்கு சரி நிகர் சமமாக புதிய அட்டைகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயத்தின் அடிப்படையில் அமைந்த கோரிக்கை அல்ல. தவறான அட்டைகளை கைப்பற்றுவது அரசாங்கத்தின் கடமை, தேவையின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கவேண்டும் என்பதுதான் நியாயமாகும்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவது சம்பந்தமாக எந்த முறையில் அந்த மனு கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையை குறிப்பாகச் சொல்வார்களானால் அந்த முறையில் அந்த மனுவைக் கொடுக்கலாம். பரிசீலித்து அட்டைகள் வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். புரியாத மக்களுக்கு புரியும்படியாக நமது அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டல், வழங்கல் அதிகாரியிடம் மனு செய்யவேண்டும். இங்கே நான் குறிப்பிடுகின்ற நாலு வகைப்பட்டவர்களுக்கு புதிதாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (1) பிற மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து இடம் மாறி வருபவர்களுக்கு அவர்கள் முன்பு தாங்கள் வசித்து வந்த இடத்திலிருந்து ஒப்பளித்தல் சான்றிதழ், சரண்டர் சர்ட்டிபிகேட் பெற்று வந்து கொடுத்தால் அவர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (2) திருமணம் ஆகி புதிய குடும்பங்கள் அமைப்போருக்கு நீக்க சான்றிதழ், டெலிஷன் சர்டிபிகேட் அளிக்கும்பட்சத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். புதிய அட்டைகள் வழங்கும் முன் அவர்கள் தனிக் குடும்பமாக வசிக்கிறார்களா என்பது உறுதி செய்யப்படும். (3) முன்பு பெறப்பட்ட குடும்ப அட்டைகளை தொலைத்தவர்களும், பழுதுபட்ட அட்டைகளை வைத்து இருப்பவர்களும் அவர்களுடைய உறுதிமொழி ஒன்று பெற்று 'ஏ' ரிஜிஸ்தரிலிருந்து அவர்களுடைய பெயரை நீக்கி பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். (4) இதுவரை குடும்ப அட்டைகள் பெறாதவர்களுக்கு 100 சதவீத விசாரணைக்குப் பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

9-25 மணி

இதுவரை குடும்ப அட்டைகள் பெறாததற்கான காரணங்கள், வாக்காளர் பட்டியலில் அவர்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா, குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அவர்கள் வசிக்கிறார்களா போன்ற விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின் அவர்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கப்படும்.

சென்னை மாநகரத்தில் உதவி உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர்களாலும் மாவட்டங்களில் மாவட்ட வழங்கல் அதிகாரியும் வட்ட வழங்கல் அதிகாரிகளின் பரிந்துரைகளின் பேரில் புதிய குடும்ப அட்டைகள் வழங்குகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ரேஷன் கார்டு என்பது மக்களுக்கு மிக முக்கியமான கருவியாக இருந்துகொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம், இன்றைக்கு 300 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ள கார்டு வைத்திருந்தால் அவர்களுக்கு அரசின் ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்குவதற்கு உபயோகப்படுத்த முடியும். ஆகவே, இந்தப் புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டு இருப்பவர்களுக்கு இன்றைக்கும் கார்டு கிடையாது.

அவர்களுக்குப் புதிய கார்டு புதுப்பிக்கக்கூடிய முறையும் இல்லை. அவர்களில் எத்தனையோ பேர் தாலுக்கா அலுவலகங்களில், ஒவ்வொரு அலுவலகத்திலும், 200, 300 பேர் மனு செய்தும் கார்டு கிடைக்காமல் இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக விசாரணை செய்து, அதற்கென தனி அதிகாரிகளைப் போட்டு விசாரித்து அவர்களுக்குக் கார்டுகள் கொடுத்தால் அந்த லோன் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். அதோடு இந்த 800 கார்டு என்பதை......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறி இருக்கிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய வட்ட வழங்கல் அதிகாரிக்கு இதிலே வேலைப்பளு அதிகமாக இருக்குமேயானால்தான் இன்னொரு அதிகாரியை அதிகப்படுத்தி அந்த வேலையை அவர்களைப் பார்க்கச் செய்யலாம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய வட்ட வழங்கள் அதிகாரிகளே இதைச் சரிபார்த்து, அட்டைகள் வழங்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே, வட்ட வழங்கல் அதிகாரி, மாவட்ட வழங்கல் அதிகாரிக்குத் துணையாக வேறு அதிகாரிகள் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தனிப்பட்ட முறையிலே அப்படி குறைபாடுகள் இருக்குமேயானால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும்.

மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

*2244—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடியில் மட்டும் வசிக்கும் பண்ணையார் என்ற சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தூத்துக்குடியில் வசிக்கும் பண்ணையார் சமூகத்தை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரத்திலே ஒரு பகுதியி

அவர்களுக்குப் புதிய கார்டு புதுப்பிக்கக்கூடிய முறையும் இல்லை. அவர்களில் எத்தனையோ பேர் தாலுக்கா அலுவலகங்களில், ஒவ்வொரு அலுவலகத்திலும், 200, 300 பேர் மனு செய்தும் கார்டு கிடைக்காமல் இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக விசாரணை செய்து, அதற்கென தனி அதிகாரிகளைப் போட்டு விசாரித்து அவர்களுக்குக் கார்டுகள் கொடுத்தால் அந்த லோன் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். அதோடு இந்த 800 கார்டு என்பதை......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறி இருக்கிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய வட்ட வழங்கல் அதிகாரிக்கு இதிலே வேலைப்பளு அதிகமாக இருக்குமேயானால்தான் இன்னொரு அதிகாரியை அதிகப்படுத்தி அந்த வேலையை அவர்களைப் பார்க்கச் செய்யலாம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய வட்ட வழங்கள் அதிகாரிகளே இதைச் சரிபார்த்து, அட்டைகள் வழங்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே, வட்ட வழங்கல் அதிகாரி, மாவட்ட வழங்கல் அதிகாரிக்குத் துணையாக வேறு அதிகாரிகள் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தனிப்பட்ட முறையிலே அப்படி குறைபாடுகள் இருக்குமேயானால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும்.

மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

*2244—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடியில் மட்டும் வசிக்கும் பண்ணையார் என்ற சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தூத்துக்குடியில் வசிக்கும் பண்ணையார் சமூகத்தை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரத்திலே ஒரு பகுதியி

1990 ஆகஸ்ட் 23]

லேயும் சிதம்பரனார் மாவட்டத்திலே குலசேகரப்பட்டினம், முக்காணி, திருச்செந்தூர் ஆகிய பகுதிகளிலேயும் மட்டும் வசித்துக் கொண்டிருக்கிற பண்ணையார் சமூகத்தைச் சேர்ந்த வர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பார்த் தாலும்கூட 10 ஆயிரத்திற்குமேல் ஜனத்தொகையிலே அவர்கள் இருக்க மாட்டார்கள். அதேநேரத்திலே, ஜாதியின் பெயரி லேதான் பண்ணையார் சமூகமே தவிர, அவர்களைப் பொறுத்தமட்டிலே பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பிற்பட்ட நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலே உப்பளத்தில் கூலித் தொழில் செய்துதான் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக் கிறார்கள். ஆகவே, அந்தச் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவினுடைய அறிக்கையில் இந்தப் பண்ணையா ருடைய வகுப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 9,700 பேர் என்ற அளவுக்குத்தான் இருக்கிறார் கள் என்றும், அவர்கள் தங்களது வகுப்பினை மிகப் பிற் படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை நியாயமானதாகத் தோன்றுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படித் தெரிவிக்கப்பட்ட கருத்து பட்டியலிலே இடம் பெறவில்லை. அதைப்போலவே, இரண்டாவது பிற் படுத்தப்பட்டோர் நலக் குழுவும் அந்தப் பட்டியலிலே அவர் களைச் சேர்க்கவில்லை. எண்ணிக்கை மிகக் குறைவாக இருக் கிற காரணத்தாலும், அவர்கள் பெரும்பாலோர் கூலிகளாக வேலை செய்கிற நிலைமையிலே உள்ள காரணத்தாலும், ஒரு 10 சதவீதம் பேர்கூட அவர்களிலே கல்வியறிவு பெற்றவர்கள் அல்ல என்ற அந்தக் காரணத்தாலும் மாண்புமிகு உறுப்பின ருடைய இந்தக் கருத்தை ஏற்கலாம். சமூக அடிப்படையிலே தான் இந்தப் பண்ணையாரை ஏற்கலாமே தவிர, பொருளா தார அடிப்படையிலே என்று வைத்தால் பண்ணையாரை மிக வும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முடியாது. அதனால்தான் சமூக அடிப்படையிலே பார்க்கவேண்டுமென்று நாம் கருதுகின்றோம்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேருங்கள் என்று தமிழகத்தில் எந்தெந்த சமூ கத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்குக் கோரிக்கை அனுப்பி யுள்ளார்கள் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்பு கிறேன்.

9-30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராமணர்களைத் தவிர மற்ற எல்லோரும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, கோரிக்கை வந்தால் எங்களை ஏற்றுக்கொள் வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கோரிக்கை வந்து ஏற்றுக்கொள்ளப்பட்டால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற சொல்லுக்கு அகராதியில் பொருள் வேறு எழுதப்படும்.

திரு. எச். எம். ராஜீ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசின் அடிப்படை விதிமுறைகள் என்னென்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருப்பதோடு மாத்திரம் அல்லாமல் இட ஒதுக்கீடு அவர்களுக்கு என்று அமைந்தாலும் கூட அதையும் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலையில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் சிலபேர் குறுக்கே நிற்கிற காரணத்தால் அதிலிருந்து விடுபடுவதற்கு அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க வேண்டிய சூழ்நிலை அமைகிறது.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற சில சமூகத்தினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேரவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதேபோல் முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற சைவ வேளாளர் போன்றவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர வேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்றைக்கு 27 சதவீதம் மத்திய அரசு பிற்பட்டோருக்காக இட ஒதுக்கீடு செய்திருக்கிறது. எனவே இப்படிப்பட்ட மாறிய சூழ்நிலையில் மீண்டும் யார், யார் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள் என்று தெளிவாக அறிந்துகொள்ள உதவியாக அம்பா சங்கர் கமிஷன் போன்று மீண்டும் ஒரு கமிஷன் அமைக்க அரசு முன் வருமா?

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொல்லையை வரவழைத்துக்கொள்ள அரசு தயாராக இல்லை. இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரிடைச் சொல்லாக முற்படுத்தப்பட்டோர் என்று சொல்கிறார். அது சரியான சொல் அல்ல. இதை எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் முன்னேறியவர்கள். தாங்களாகவே முன்னேறியவர்கள். மற்றவர்கள் அதாவது பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எல்லாம் மற்றவர்களால் பிற்படுத்தி வைக்கப்பட்டவர்கள். அதனால் தான் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்கிறோம். பின்தங்கியவர்கள் என்று கூடச் சொல்வதில்லை. அவர்களாக யாரும் பின்தங்கிவிடவில்லை. மற்றவர்களால் பிற்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் பிற்படுத்தப்பட்டோர் என்றும் அதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படியும் தாழ்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் சொல்கிறோம். எனவே முற்படுத்தப்பட்டவர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. முன்னேறியவர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துவதுதான் சரியானது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அரசு வெளியிட்ட சீர் மரபினர் பட்டியலில் நெல்லை, முகவை மாவட்டங்களில் உள்ள மறவர் இனங்கள் சீர் மரபினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மதுரை மாவட்டத்தில் உள்ள அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சீர் மரபினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அவர்களையும் சேர்க்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறதா? ஆமெனில் அரசு அதுபற்றிப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குற்றப் பரம்பரையினர் சட்டத்தின்படி அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்தான் சீர் மரபினர் என்று மாற்றப்பட்டிருக்கிறார்கள். குற்றப்பரம்பரையினர் சட்டத்திலே இருந்தவர்கள் அதிலே இருந்து விடுவிக்கப்பட்டு அப்படி உள்ளவர்கள் தான் சீர் மரபினர் என்று சொல்லப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த வகுப்பினர் அந்தப் பட்டியலிலே ஏற்கெனவே இடம் பெற்று இருப்பார்களேயானால், சீர் மரபினர் பட்டியலில் இணைப்பதற்கு எந்த மறுப்பும் இராது. கவனிக்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் என்று ஒதுக்கியதற்குப் பிறகு ஒரு

நான்கைந்து வகுப்பார்கள் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் இந்த 20 சதவீதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்திலே ஏதாவது வழிவகை உண்டா? மேலும் சில இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அதாவது துளுவ வெள்ளாளர், தொழுவ வெள்ளாளர் என்று மாற்றி சர்ட்டிபிகேட் வாங்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் தங்களுடைய வகுப்புகளின் பெயர்களை மாற்றித் தந்திரமாக இந்தச் சலுகைகளைப் பெற முயற்சித்தால், அது சுட்டிக்காட்டப்படுமேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மிகவும் பிற்பட்டுத்தப்பட்டோர் பட்டியலில் நான்கைந்து சமுதாயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி சேர்க்கப்பட்டிருந்தாலும் அது நம்முடைய உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 6000, 7000 பேர் என்ற அளவுக்குத்தான் மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் பெரிய எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைத்தல்

*2580—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க ஆய்வு செய்யப்பட்டுள்ளது?

9-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் போளூரிலும், நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்

நான்கைந்து வகுப்பார்கள் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் இந்த 20 சதவீதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்திலே ஏதாவது வழிவகை உண்டா? மேலும் சில இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அதாவது துளுவ வெள்ளாளர், தொழுவ வெள்ளாளர் என்று மாற்றி சர்ட்டிபிகேட் வாங்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் தங்களுடைய வகுப்புகளின் பெயர்களை மாற்றித் தந்திரமாக இந்தச் சலுகைகளைப் பெற முயற்சித்தால், அது சுட்டிக்காட்டப்படுமேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மிகவும் பிற்பட்டுத்தப்பட்டோர் பட்டியலில் நான்கைந்து சமுதாயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி சேர்க்கப்பட்டிருந்தாலும் அது நம்முடைய உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 6000, 7000 பேர் என்ற அளவுக்குத்தான் மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் பெரிய எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைத்தல்

*2580—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க ஆய்வு செய்யப் பட்டுள்ளது?

9-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் போளூரிலும், நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்

திலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமைக்க இந்த அரசு முடிவு செய்து, ஒப்புதல் கடிதங்கள் (letter of intent) பெற விண்ணப்பங்கள் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் கூட்டுறவு இணையத்திடமிருந்து பெற்று, அவைகளை மைய அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அவற்றில், கள்ளக்குறிச்சி, கும்மிடிப்பூண்டி சர்க்கரை ஆலைகளுக்கான உரிமம், மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 'தொழில்கள்' என்ற கொள்கைக் குறிப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நான்கு சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறை மூலம் புதிதாகத் துவங்குவதற்கான ஆணைகள் பெறப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நன்றி. அதோடு மட்டுமல்லாமல், 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுடைய விரிவாக்கம் துவங்கப்பட்டிருக்கிறது என்றும் அதிலே குறிப்பிட்டிருக்கிறது. அதிலே மயிலாடுதுறை பகுதியில், மணல்மேடு பட்டவர்த்தியில் இருக்கிற நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி சர்க்கரை ஆலை விரிவாக்கப் பணி தொடங்கப்படுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேவைப்படும்போது உரிய நேரத்தில் தொடங்கப் பெறும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் இயங்கிக் கொண்டிருந்த திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை இப்போது இயங்கவில்லை. அதனால் குத்தாலம், திருவிடைமருதூர் பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பை எடுத்துச் செல்வதால், ஏராளமான கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் அவர்கள் உட்படுகிறார்கள். லாரிகளும் கிடைப்பதில்லை. எனவே மணல்மேட்டில் அந்த ஆலை விரிவாக்கப்பட்டு துவங்கப்படும்போது அதற்குத் துணை ஆலையாக குத்தாலம் தொகுதியில் அந்த ஆலை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்வதோடு அரசின் மூலமாகவும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எவ்வளவு பணிவோடு கேட்டுக் கொண்டாலும், தனிக் கேள்வி போட்டால்தான் நானும் பணிவோடு பதில் சொல்ல முடியும்.

கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம்

*9425— திரு. அ. இராசேந்திரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளி துவங்கும் எண்ணம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரிந்திருக்கிற திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு பல வசதிகள் வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. அதில் இந்த கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியும் ஒன்று. அது பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால் இதை அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இந்த 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கு ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு மாவட்டங்கள் செயல் எல்லைகளாக இருக்கிற காரணத்தால், வேலூரில் உள்ள அந்த கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில், சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் படிப்பதற்கான வாய்ப்பு உண்டு என்ற காரணத்தால் இப்போது மேலும் ஒரு பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர்களுக்குத் தமிழ்நாட்டில் எத்தனை பேருக்கு வேலை தரப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்பில்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

1990 ஆகஸ்ட் 23]

திரு. எஸ். எஸ். தென்னரசு; பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு பயிற்சி பள்ளி என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு விட்டது. சென்ற ஆண்டு கிழக்கு இராமநாதபுரத்திற்கு ஒரு பயிற்சிப்பள்ளி வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது விபரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்டது கிழக்கு இராமநாதபுரம்.

அணைத் திட்டங்கள்.

* 566—திரு. ஆர். ஈஸ்வரன்:

திரு. சு. குருநாதன்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோம்பையார் அணைத் திட்டம், உள்ளார் அணைத் திட்டம், கோட்டமலையார் அணைத் திட்டம், வாழமலையார் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

9-40 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோம்பையாறு அணைக்கட்டுத் திட்டம் பொருளாதார அடிப்படையில் பயன் தராது என்பதால் ஏற்கனவே கைவிடப்பட்டது. உள்ளார் அணைக் கட்டுத் திட்டத்திற்கு வனப்பகுதி நிலங்கள் தேவைப்படுகின்றன. ஆய்வுப் பணிகளைத் தொடங்குவதற்காக வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டமலையார்

1990 ஆகஸ்ட் 23]

திரு. எஸ். எஸ். தென்னரசு; பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு பயிற்சி பள்ளி என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு விட்டது. சென்ற ஆண்டு கிழக்கு இராமநாதபுரத்திற்கு ஒரு பயிற்சிப்பள்ளி வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது விபரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்டது கிழக்கு இராமநாதபுரம்.

அணைத் திட்டங்கள்.

* 566—திரு. ஆர். ஈஸ்வரன்: :

திரு. சு. குருநாதன்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோம்பையாா அணைத் திட்டம், உள்ளார் அணைத் திட்டம், கோட்டமலையார் அணைத் திட்டம், வாழமலையார் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

9-40 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோம்பையாறு அணைக்கட்டுத் திட்டம் பொருளாதார அடிப்படையில் பயன் தராது என்பதால் ஏற்கனவே கைவிடப்பட்டது. உள்ளார் அணைக் கட்டுத் திட்டத்திற்கு வனப்பகுதி நிலங்கள் தேவைப்படுகின்றன. ஆய்வுப் பணிகளைத் தொடங்குவதற்காக வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டமலையார்

அணைக்கட்டுத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் செயலாக்கத்தை எதிர்த்து பாதிக்கப்பட்ட சிலர் வழக்கு தொடுத்திருக்கிற காரணத்தால் அந்த வேலையும் அப்படியே நிற்கிறது. வாழமலையார் அணைக்கட்டுத் திட்டத்திற்கான மதிப்பீட்டை தயாரித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4 அணைத் திட்டத்தில் உள்ளார் அணைத் திட்டம் ஒரு முக்கியமான பெரிய திட்டம். சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி ஏற்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயார்செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரடியாக அங்கே வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

வினா எண் 8806—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் பேருந்து நிலையம் விரிவு படுத்த வேண்டுமென்ற பேரூராட்சி தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

விடை—

(அ) மற்றும் (ஆ): நத்தம் பழைய பேருந்து நிலையத்தை புதிதாக அபிவிருத்தி செய்ய 28-11-1986 அன்று நத்தம் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது நத்தம் பேரூராட்சி செயல் அலுவலர் பரிசீலனையில் உள்ளது.

36—

நத்தம் —திருமலைக்கேணி நகரப் பேருந்து.

வினா 8830—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம்—திருமலைக்கேணி ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் நகரப் பேருந்தின் நடைகள் குறைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நத்தம்—திருமலைக்கேணி வழித்தடத்தில் நடைகளை அதிகப்படுத்தி இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

37—

பேருந்து நிலையம் சீரமைத்தல்.

வினா 8935—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சியிலிருந்து மதுரை செல்லும் சாலையின் மையப் பகுதியில் பொன்னம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பஸ் ஸ்டாண்ட் உரிய சீரமைப்பு செய்யப்படவும், பயணிகள் தங்குவதற்கான வெயிட்டிங் ஹால் மற்றும் ஸ்டால்கள் கட்டவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இத்தகைய செயற்குறிப்பு பெறப்பட்டால் அதுபற்றி அரசு ரிசீலிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 ஆகஸ்ட் 23

38—

பொன்னமராவதி—குளிபிறை டவுன் பஸ்.

வினா 8939—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில் இருந்து கொன்னையூர், மூலங்குடி வழியாக குளிபிறைக்கு டவுன் பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

பொன்னமராவதியிலிருந்து குளிப்பிறை வரை உள்ள தடத்தின் மொத்த நீளம் 18.5 கி.மீ. ஆகும். இத்தடத்தில் கொன்னையூர் முதல் மேல்நிலைப்பட்டி வரை உள்ள 4.7 கி.மீ. தூர சாலை பேருந்து போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

39—

அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுதல்.

வினா 8945—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், செவல்பட்டியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மேற்படி பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கட்டும் கட்டிடப் பணி தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளது.

40—

பள்ளிகளுக்குக் கட்டட வசதி

வினா 9002—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பள்ளிகளுக்குக் கட்டட வசதி மற்றும் பெஞ்சு, நாற்காலிகள் வழங்க உலக வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் கோரப்பட்டு உள்ளதா?

1990 ஆகஸ்ட் 23]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை

(அ) மற்றும் (ஆ) : உலக வங்கியிடம் கடன் இதுவரை கோரப்படவில்லை. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மைய அரசு மூலம் நிதி உதவி பெற முயற்சிக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் உதவி பெறும் திட்டங்களில் பள்ளிக் கட்டடம் கட்டுதல் போன்ற திட்டங்கள் சேர்க்கப்படவில்லை என்பதால், நிதியுதவி பெற முடியவில்லை. எனவே, பள்ளிக் கட்டடம் கட்டும் திட்டத்தை மேற்கூறிய உதவி பெறும் திட்டங்களில் ஒன்றாக சேர்க்க மைய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—

துறையூர் நகரில் கல்லூரி.

வினா 9087—திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள துறையூர் நகரில் அரசு கல்லூரியோ அல்லது தொழிற் கல்லூரியோ புதியதாக நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

மயிலாடுதுறை கொக்கூர் நகரப் பேருந்து.

வினா 9196—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மயிலாடுதுறையிலிருந்து குத்தாலம் வழியாக கொக்கூர் வரையில் சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் நகரப் பேருந்து விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): மயிலாடுதுறை—கொக்கூர் தடத்தில் நச்சினார்க்குடியிலிருந்து கொக்கூர் வரை 3 கி.மீ. தூரம் சாலை இதுவரை பேருந்து இயக்கப்படாத பகுதியாகும். இப் பகுதியில் 1 கி.மீ. தூரம் சாலை பேருந்து இயக்க இயலாத அளவு பழுதுபட்ட நிலையில் உள்ளது. சாலை சீர் செய்யப்பட்டால்தான் இத்தடத்தில் பேருந்து இயக்குவது தொடர்பாக சோழன் போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை எடுக்க இயலும்.

43—

சேலம்—சென்னை பேருந்து

வினா 9255—திரு. செ. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்திலிருந்து சென்னைக்கு கருமந்துறை, வெள்ளி மலை, கள்ளக்குறிச்சி வழியாக திருவள்ளுவர் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தற்பொழுது சேலத்திலிருந்து கருமந் துறை, வெள்ளிமலை, கள்ளக்குறிச்சி வழியாக சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்து விடும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

44—

ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

வினா **9384**—திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1990 ஆகஸ்ட் 23]

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பணிமனை கட்டுவது குறித்து பாண்டியன் போக்குவரத்துக் கழக நிர்வாக குழுமம் 28–5–1988 ஆம் நாளன்று நடந்த கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. நிலத் தேர்வு குழுவின் ஒப்புதலுக்குப் பிறகு நில ஆர்ஜித நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன. அப்பணிகள் முற்றுப் பெற்று இடம் கையகப் படுத்தப்பட்ட பின்னர் கட்டுமானப் பணிகள் அப்போதைய நிதி நிலைமைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

45—

பேச்சிப்பாறையில் மாட்டுப் பண்ணை துவங்குதல்

வினா 9459—திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேச்சிப்பாறையில் இயற்கையான மேய்ச்சல் பகுதி பெருமளவில் இருப்பதால், அங்கு மாட்டுப் பண்ணை ஒன்று துவங்க வேண்டும் என்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) புதியதாக ஓர் கால்நடைப் பண்ணை ஏற்படுத்த தேவையான வசதிகள் இல்லாமையால் பேச்சிப்பாறையில் மாட்டுப் பண்ணை அமைக்கும் நடவடிக்கை இல்லை.

46—

வேலைக்காக காத்திருப்போர்களின் மொத்த எண்ணிக்கை.

வினா 9502—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலை வாய்ப்பு நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு வேலைக்காக காத்திருப்போர்களின் மொத்த எண்ணிக்கை 1–1–1990 தேதியில் எவ்வளவு?

(ஆ) இதில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருப்போர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 31–12–1989 தேதியில் உள்ளவாறு தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு நிறுவனங்களில் தங்களது பெயர்களைப் பதிவு செய்து, வேலைக்காகச் செல்லுபடிப் பதிவேட்டில் காத்திருப்போர்களின் மொத்த எண்ணிக்கை—29,92,394 பேர்கள்.

(ஆ) 31–12–1989 தேதியில் செல்லுபடிப் பதிவேட்டில் உள்ளோர்களின், மூன்றாண்டுகளுக்கு மேலாக காத்திருப்போர்களது எண்ணிக்கை—12,25,937 பேர்கள்.

47—

பட்டுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலகம்

வினா 9614—திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகம் தற்போது தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ). ஆம். அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

48—

இறால்மீன் வளர்க்கும் திட்டம்.

வினா 9629—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு படையளிப்பாரா;

1990 ஆகஸ்ட் 23]

(அ) பெரியார் மாவட்டம், பவானி ஆற்று அணைப் பகுதியில் இறால் மீன்வகை வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

49—

ஆரணியில் கலைக் கல்லூரி அமைத்தல்

வினா 9664—திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணியில் புதிய அரசினர் கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

50—

ஆண்கள் அரசு கலைக் கல்லூரி ஆரம்பித்தல்.

வினா 9703—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதியில் ஆண்கள் அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

51—

சென்னை–பழனி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து.

வினா 685—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) சென்னை–பழனி சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அவ்வூருக்கு அதே பேருந்தை விட அரசு உத்தரவிடுமா ?

விடை—

(அ) நிறுத்தப்படவில்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

52—

பதிவுத் துறை துணைப் பதிவாளர் அலுவலகம்.

வினா 879—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகரில் ஒரு பதிவுத் துறை துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ). பவானிசாகரில் புதியதாக சார் பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை.

53—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி.

வினா 977—திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1990 ஆகஸ்ட் 23]

(அ) முகையூர் தொகுதியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நிறுவ அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து ?

விடை—

(அ) முகையூர் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் புதிதாக நிறுவுவதற்கான கருத்துருக்கள் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

54—

பள்ளி நூலகர்.

வினா 1049—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி நூலகர் என தனிப் பணியாளர் ஒருவரை பணிக்கு அமர்த்தும் செயற்குறிப்பு அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

55—

செங்கை—அண்ணா மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

வினா 1231—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, மறைந்த தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பெயரில் புதிய மாவட்டம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய மாவட்டம் எப்பொழுது முதல் செயல்படத் துவங்கும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

56—

கல்லூரிகளில் மூன்று ஷிப்டுகள்.

வினா 1307—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லூரிகளில் மூன்று ஷிப்டுகளில் பாடம் நடத்த அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

விடை—

இல்லை.

57—

கடல் நீரை குடிநீராக்கும் ஆராய்ச்சி மையம்.

வினா 1341—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடல்நீரை குடிநீராக்கும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்ட் 23]

58—

ஊழல் ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த சிறப்பு நீதிமன்றங்கள்.

வினா 1401—திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊழல் ஒழிப்புச் சட்டத்தை (Prevention of Corruption Act, 1988) தீவிரமாக செயல்படுத்த சிறப்பு நீதிமன்றங்களை நிறுவும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

விருத்தாசலம் கலைக் கல்லூரி.

வினா 1637—திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— :

விருத்தாசலம் கலைக் கல்லூரிக்கு மேலும் ஒரு மாடிக் கட்டிடம் கட்டி, முதுகலை பட்ட வகுப்புகள் திறக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

60—

விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகம்.

வினா 1666—திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்டப் பதிவாளர் அலுவலகமாக உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

61—

கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்.

வினா 1721—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஊராட்சி ஒன்றியங் களைச் சேர்த்து மூன்றாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

62—

மத்திய குழு மூலம் வழங்கப்படும் மருந்துகள்.

வினா 1728—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் இயங்கிவரும் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் தற்போது மத்தியக் குழு மூலம் வழங்கப்பட்டு வருவது சரியாகச்செயல்பட வில்லை என அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஒழுங்காகச் செயல்படுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1990 ஆகஸ்ட் 23]

63—

கோயம்புத்தூர் அரசினர் மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்துகள்.

வினா 1823—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூர் அரசினர் மருத்துவமனையில் உயிர் காக்கும் மருந்துகள் இல்லை என்று அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இது குறித்து புகார் எதுவும் அரசுக்கு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

64—

கோவை மாநகரத்தில் குழந்தைகள் மருத்துவமனை தொடங்குதல்.

வினா 1824—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாநகரத்தில் குழந்தைகள் மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

65—

வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல்.

வினா 1947—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்ய தனியார்கள் அனுமதிக்கப்படுவார்களா ?

விடை—

வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்ய தனியார்களுக்கு அரசு அனுமதி தேவையில்லை.

66—

மாட்டு வண்டி சக்கரங்களுக்கு டயர் பயன்படுத்துதல்

வினா 1965—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள அனைத்து மாட்டு வண்டி சக்கரங்களி லும் டயர்தான் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

இது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

போடி நகரில் மின்சார சப்-டிவிசன்.

வினா 1976—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், போடி நகரில் மின்சார சப்-டிவிசன் துவக்க கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

68—

குடிநீர்த் தொட்டி ஆக்கிரமிப்பு.

வினா 2716—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட்டில் உள்ள குடிநீர்த் தொட்டியைத் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

69—

கல்வித் திட்டத்தை மாற்றி அமைத்தல்.

வினா 2784—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க அரசிடம் செயல் திட்டம் உள்ளதா ?

(ஆ) அதற்காக கமிட்டி ஏதாவது நியமிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

70—

பாமாயில் எண்ணெய் உற்பத்தி.

வினா 2790—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் பாமாயில் எண்ணெய் உற்பத்திக்கான ஆப்பிரிக்க பனைகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை —

இது போன்ற திட்டக் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

மானிய விலையில் விதை மணிலா.

வினா 2865—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அருகில் உள்ள கீழ்மலை விவசாய கூட்டுறவு வங்கியில் மானிய விலையில் தர வேண்டிய விதை மணிலாக்கள் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டதாக புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

72—

கோவை அரசு மருத்துவமனை.

வினா 2961—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

கோவை அரசு மருத்துவ மனையில் ஸ்பெஷல் மற்றும் ஜெனரல் வார்டுகளில் கூடுதல் படுக்கை வசதிகள் செய்திட எல்.ஐ.சி. நிறுவனத்திடம் கடன் பெறும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

1990 ஆகஸ்ட் 23]

73—

மறைமலை நகரில் புதிய வடிகால் திட்டம்.

வினா 3016—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மறைமலை நகரில் புதிய வடிகால் திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

74—

நகரப் பேருந்து விடுதல்.

வினா 3074—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் பேரூராட்சியில் இருந்து வடவேர் பிலாவடி, கண்டிரமாணிக்கம், எரவாஞ்சேரி வழியாக மயிலாடுதுறை வரையில் நகரப் பேருந்து விட வேண்டும் என கோரிக்கை மனு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

75—

திருப்பெரும்புதூர் சென்னை நகரப் பேருந்து.

வினா 3159—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(அ) திருப்பெரும்புதூர்-சென்னை வழித்தடத்தில் நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

76—

குறை தீர்க்கும் நாள்.

வினா 3228—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படும் குறை தீர்க்கும் நாள், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடும் ஊரில் நடத்தப்படுமா ?

விடை—

இல்லை.

77—

ஜெயங்கொண்டம் தொகுதியில் கல்லூரி தொடங்குதல்

வினா 3328—திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

ஜெயங்கொண்டம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது தொழில் கல்வி அல்லது விவசாயக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

78—

காசநோய் மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

வினா 3477—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1990 ஆகஸ்ட் 23]

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் நகரத்தில் உள்ள காசநோய் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் நகரத்திலுள்ள காசநோய் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

79—

புதிய வருவாய்க் கோட்டம்.

வினா 3493—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய்க் கோட்டம் (RDO) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

80—

கடலூர்-கோட்டகுப்பம் டவுன் பஸ்.

வினா 3525—திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூரிலிருந்து கோட்டக் குப்பத்திற்கு டவுன் பஸ் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

81—

ஆரம்ப சுகாதார நிலையம்.

வினா 3629—டாக்டர் எஸ். சுந்தரராஜ : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா எமனேஸ்வரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று நிறுவப்படுமா ?

விடை—

எமனேஸ்வரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு கொள்கையின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

எமனேஸ்வரம்-கமுதக்குடி நகரப் பேருந்து.

வினா 3670—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;:

எமனேஸ்வரம்-கமுதக்குடிக்கு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

83—

சாயல்குடி தாலுக்கா உருவாக்குதல்.

வினா 3831—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதுகுளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து சாயல்குடியில் ஒரு புதிய தாலுக்கா உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது புதிய தாலுக்கா உருவாக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

84—

பரமக்குடியில் அரசு பாலிடெக்னிக்.

வினா 3870—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பரமக்குடியில் அரசு பாலிடெக்னிக் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

85—

சார் பதிவாளர் அலுவலகம்.

வினா 3986 : டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் சார் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

86—

புதிய போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

வினா 4024—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திருவண்ணாமலையைத் தலைமையகமாகக் கொண்டு அன்னை அஞ்சுகம் போக்குவரத்துக் கழகம் என அதற்குப் பெயரிடப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

87—

கலையரங்கம் கட்டுதல்.

வினா 4161—திரு. க வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் ஓர் கலையரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இது சம்பந்தமான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

சென்னை-மதுரை படுக்கை வசதியுடன் கூடிய பேருந்து.

வினா 4184—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை முதல் மதுரை வரையிலும், மதுரையிலிருந்து சென்னை வரைக்கும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளை விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

இல்லை.

89—

ஒலவிளையில் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் பணி.

வினா 4215—திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கப்பியறை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அதிக மின் அழுத்தம் கிடைக்கும் வகையில் ஒலவிளையில் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் பணி நடந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அப்பணி எப்போது பூர்த்தி அடையும் ?

விடை—

(அ) ஒலவிளையில் டிரான்ஸ்பார்மர் அமைக்கும் கருத்துரு எதுவும் இல்லை.

(ஆ) மற்றும் (இ); எழவில்லை.

1990 ஆகஸ்ட் 23]

90—

மார்பு புற்று நோய்.

வினா 4509—திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கருத்தடை மாத்திரைகளை உட்கொள்வதன் காரணமாக பெண்களுக்கு மார்பு புற்றுநோய் அதிகரித்துள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்படிப்பட்ட மாத்திரைகளை வழங்குவது தடை செய்யப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

91—

போக்குவரத்துக் கழகத்திற்கு ஒளவையார் பெயர் சூட்டுதல்.

வினா 4527—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசு போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த கழகம் ஒன்றிற்கு ‘ ஒளவையார் ’ போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் சூட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் , அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

92—

மினி நகரப் பேருந்து விடுதல்

வினா 4622—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி, சோழன் போக்குவரத்துக் கழக டெப்போவிலிருந்து பள்ளி மாணவர்கள் வசதிக்காக பழைய நகரம், மாவடுகுறிச்சி, சீவன்குறிச்சி, தென்னங்குடி, பின்னவாசல், ஆதனூர், ஊமத்தநாடு, உடையநாடு, வீரியன்கோட்டைக்கு மினி நகரப் பேருந்து விட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

93—

தொண்டமான் புதுக்கோட்டை மாவட்டம் எனப் பெயரிடுதல்

வினா 4723—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு தொண்டமான் புதுக் கோட்டை மாவட்டம் எனப் பெயரிடப்படுமா ?

விடை—

இத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

காமராசர் மாவட்டம்.

வினா 4724—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காமராஜர் மாவட்டத்தை பெருந்தலைவர் காமராஜர் மாவட்டம் எனப் பெயரிட அரசு முன்வருமா ?

விடை—

காமராஜர் மாவட்டம் என்ற தற்போதைய பெயருக்கு எவ்வித மாற்றமும் தேவையில்லை என அரசு கருதுகிறது.

95—

தஞ்சாவூர்-சென்னை புதிதாக விரைவுப் பேருந்து

வினா 4909—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர்-சென்னை (வழி—திருவையாறு, கபித்தலம் சுவாமிமலை, கும்பகோணம், பண்ருட்டி, திண்டிவனம்) வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிதாக விரைவு பேருந்தை விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

96—

திருவையாறு பேரூராட்சியில் புதிதாக அரசு மருத்துவ மனை.

வினா 4918—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவையாறு பேரூராட்சியில் புதிதாக அரசு மருத்துவமனை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

அரசால் அனுமதி வழங்கப்படவில்லை.

97—

பாளையங்கோட்டையில் சட்டக் கல்லூரி அமைத்தல்.

வினா 5045—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் பாளையங்கோட்டையில் சட்டக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

98—

தூத்துக்குடியில் சட்டக் கல்லூரி அமைத்தல்.

வினா 5370—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடியில் சட்டக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

99—

கொப்புளிப்பட்டி வழியாக பேருந்து.

வினா 6118—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, உசிலம்பட்டி-பாப்பாபட்டி வழி தடத்தில் செல்லும் பேருந்தை கொப்புளிப்பட்டி வழியாக செலுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

100—

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி.

வினா 6823—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. வகுப்பு ஆரம்பிக்க அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் முடிவுற்றன.)

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு பற்றி, மற்ற மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது சபைக்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பம். அது என்னவென்றால், கர்நாடக மாநிலத்தில் மைசூரில் மூன்று முதலமைச்சர்கள் அதாவது மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களின் மூன்று முதலமைச்சர்கள் சேர்ந்து கிருஷ்ணா நதியில் வரக்கூடிய சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பங்கு போடுவது என்று பேசி, அவர்கள் மூன்று பேரும் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். ஏற்கனவே நமக்கு பங்கு போடுவதற்கு இங்கே தெலுங்கு கங்கை திட்டம் இருந்துக்கொண்டிருக்கிறது. அதையும் அவர்கள் கலந்து பேசினால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும்.

1990 ஆகஸ்ட் 23]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

100—

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி.

வினா 6823—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் எம்.எஸ்.ஸி. வகுப்பு ஆரம்பிக்க அரசிற்கு வேண்டுகோள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் முடிவுற்றன.)

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு பற்றி, மற்ற மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது சபைக்கு ஒரு முக்கியமான சந்தர்ப்பம். அது என்னவென்றால், கர்நாடக மாநிலத்தில் மைசூரில் மூன்று முதலமைச்சர்கள் அதாவது மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களின் மூன்று முதலமைச்சர்கள் சேர்ந்து கிருஷ்ணா நதியில் வரக் கூடிய சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பங்கு போடுவது என்று பேசி, அவர்கள் மூன்று பேரும் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். ஏற்கனவே நமக்கு பங்கு போடுவதற்கு இங்கே தெலுங்கு கங்கை திட்டம் இருந்துக்கொண்டிருக்கிறது. அதையும் அவர்கள் கலந்து பேசினால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும்.

இதைப் பற்றிய பேச்சுக்கே அங்கே இடம் இல்லை. இதைப் பற்றியும் பேசாமல் அர்கள் மூன்று பேர் மட்டும் இன்றைக்கும் கிருஷ்ணா நதித் திட்டம், சர்ப்ளஸ் வாட்டரைப் பற்றிப் பேசி ஏதோ முடிவு எடுத்து இருக்கிறார்களாம். அதைப் பற்றி நம் முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சங்கூட தாமதம் இல்லாமல், நல்ல முடிவு எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது வேறு பிரச்சினை. அது அவர்களுக்குள்ளே உள்ள பங்கீடு பற்றி. இது ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கு-கங்கைத் திட்டம் தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னை மாநகருக்குத் தண்ணீர் விடுவது குறித்த திட்டமே வேறானது. இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : கேள்வி நேரமா இது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரமெல்லாம் முடிந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

(ஆ) சென்னை மத்திய சிறையிலிருந்து, சில கைதிகள் தப்பியோடி விட்டது குறித்துப் போடப்பட்டுள்ள நீதி விசாரணை குறித்தும், சந்தன மரம் கடத்தல் செய்யும் வீரப்பன், தமிழ் நாட்டிலிருப்பதாக வந்துள்ள செய்தி குறித்தும்.

9-55 மணி

* திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக மிகவும் பரபரப்பாகத் தமிழகத்திலே பேசப்படுகின்ற செய்தி, ஆட்டோ சங்கர் சிறையிலே இருந்து தப்பிவிட்ட செய்தி, மிகவும் பரப்பரப்பாகப் பேசப்படுகின்றது. அவன் ஒரு பயங்கர மான குற்றவாளியாகக் கருதப்பட்டான். Eventhough he was not a condemned prisoner அவன் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்தான் சிறையிலேவைத்து இருக்கப்பட வேண்டும். சாதாரணமாக மாலை யிலே செல்லைப் பூட்டுவதற்கு முன்னால், ரோல் கால் எடுத்து செல்லைப் பூட்டி, அந்தச் சாவிகளை எல்லாம் டவரிலே ஒப்படைத்து இருக்க வேண்டும். அதற்குப் பிறகு மீண்டும் 3 மணி நேரத்துக்கு ஒரு முறை அசிஸ்டன்ட் ஜெயிலர் ரவுண்ட் வந்து சரிபார்த்து ரிஜிஸ்டரிலே கையெழுத்துப் போட வேண்டும். இதற்கெல்லாம் மீறி அவன் தப்பித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அவனோடு அவனுக்குப் பிடிக்காத இன்னு மொரு கைதியும் அதே செல்லில் இருந்திருக்கிறான். அகரம்

இதைப் பற்றிய பேச்சுக்கே அங்கே இடம் இல்லை. இதைப் பற்றியும் பேசாமல் அர்கள் மூன்று பேர் மட்டும் இன்றைக்கும் கிருஷ்ணா நதித் திட்டம், சர்ப்ளஸ் வாட்டரைப் பற்றிப் பேசி ஏதோ முடிவு எடுத்து இருக்கிறார்களாம். அதைப் பற்றி நம் முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சங்கூட தாமதம் இல்லாமல், நல்ல முடிவு எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் பேசிக்கொண்டு இருப்பது வேறு பிரச்சினை. அது அவர்களுக்குள்ளே உள்ள பங்கீடு பற்றி. இது ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கு-கங்கைத் திட்டம் தமிழ்நாட்டுக்கு, குறிப்பாக சென்னை மாநகருக்குத் தண்ணீர் விடுவது குறித்த திட்டமே வேறானது. இதற்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : கேள்வி நேரமா இது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரமெல்லாம் முடிந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது.

(ஆ) சென்னை மத்திய சிறையிலிருந்து, சில கைதிகள் தப்பியோடி விட்டது குறித்துப் போடப்பட்டுள்ள நீதி விசாரணை குறித்தும், சந்தன மரம் கடத்தல் செய்யும் வீரப்பன், தமிழ் நாட்டிலிருப்பதாக வந்துள்ள செய்தி குறித்தும்.

9-55 மணி

* திரு. எஸ், ஆர். பாலசுப்ரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக மிகவும் பரபரப்பாகத் தமிழகத்திலே பேசப்படுகின்ற செய்தி, ஆட்டோ சங்கர் சிறையிலே இருந்து தப்பிவிட்ட செய்தி, மிகவும் பரப்பரப்பாகப் பேசப்படுகின்றது. அவன் ஒரு பயங்கர மான குற்றவாளியாகக் கருதப்பட்டான். Eventhough he was not a condemned prisonerஅவன் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்தான் சிறையிலேவைத்து இருக்கப்பட வேண்டும். சாதாரணமாக மாலை யிலே செல்லைப் பூட்டுவதற்கு முன்னால், ரோல் கால் எடுத்து செல்லைப் பூட்டி, அந்தச் சாவிகளை எல்லாம் டவரிலே ஒப்படைத்து இருக்க வேண்டும். அதற்குப் பிறகு மீண்டும் 3 மணி நேரத்துக்கு ஒரு முறை அசிஸ்டன்ட் ஜெயிலர் ரவுண்ட் வந்து சரிபார்த்து ரிஜிஸ்டரிலே கையெழுத்துப் போட வேண்டும். இதற்கெல்லாம் மீறி அவன் தப்பித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அவனோடு அவனுக்குப் பிடிக்காத இன்னு மொரு கைதியும் அதே செல்லில் இருந்திருக்கிறான். அகரம்

1990 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

நாராயணன் அவனோடு இருந்திருக்கிறான். அவன் பயங்கரமான குற்றச்சாட்டில் ஈடுபட்டவன். அவன் தப்புவிக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் ஆட்டோ சங்கர் தப்பித்திருக்கிறான். இது எப்படி சாத்தியமானது என்பதைப் பற்றித் தான் மற்ற பலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, சிறை நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், பல்வேறான செய்திகள் வெளியிலே பேசப்படுகின்றன. பல விசாரணைக் கமிஷனுடைய அறிக்கைகளின் அடிப்படையிலே பல அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தாலுங்கூட அவர்களுக்கு சிறைச்சாலை நிர்வாகத்திலே நல்ல செல்வாக்கு இருப்பதாகவும் அவர்கள் சிறைச்சாலை நிர்வாகத்தை தங்கள். கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதாகவும் பேசப்படுகிறது. குறிப்பாக, சஸ்பண்ட் செய்யப்பட்ட ஒரு அதிகாரி ஜூலை மாதம் 6 ஆம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு சேலம் செல்கிறார். சேலத்திலிருந்து கோவைக்குச் செல்கிறார். கோவையில் அவரை வரவேற்று எம். டி. ஈ. 5610 என்ற ஜெயில் இலாக்காவிற்குச் சொந்தமான கார் வந்து அவரை அழைத்துச் செல்கிறது. அவர் அரசாங்க மாளிகையில் தங்க வைக்கப்படுகிறார். அந்தக் காரை ஓட்டி வந்தவர் ஒரு ஜெயில் வார்டர் என்று சொல்லப்படுகிறது. அவருக்கு கோவையிலிருந்து பெங்களூர் செல்வதற்கு இரவு இரயிலில் டிக்கட் ரிசர்வேஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரிசர்வேஷன் பாமில் கையெழுத்து போட்டிருப்பவர் ஒரு ஜெயிலர் என்று சொல்லுகிறார்கள். அவருடைய பெயர் என்னிடத்திலே இருக்கிறது. அந்த ஜெயிலர் யார் என்று கேட்டால் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னையிலிருந்து கோவைக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டவர் என்று சொல்லுகிறார்கள். அவருடைய பெயரை சொல்லலாம் என்றால் சொல்லுகிறேன். அவருடைய பெயர் ஜெயிலர் இராமச்சந்திரன்.

அதே போல ஆட்டோ சங்கர் வழக்கிலே சம்பந்தப்பட்டதாக அன்றைய தினம் கருதப்பட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்ட 3 அதிகாரிகள்—டி.எஸ்.பி. தங்கையா, திருவான்மியூர் இன்ஸ்பெக்டர் தலைமலை, சப்-இன்ஸ்பெக்டர் பவுன், இந்த மூன்று பேரும் ஆட்டோ சங்கரோடு சேர்ந்து ஏராளமான பணம் சம்பாதித்துவிட்டதாகக் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அவர்கள் எல்லாம் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த டி. எஸ். பி. தங்கையாவுக்கு பெருத்த செல்வாக்கு உண்டு என்று சொல்கிறார்கள். சினிமாத் துறையில் பெரிய இடத்தில் உறவினர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நிறைய செல்வாக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தச் செல்வாக்கையெல்லாம் பயன்படுத்தி அவர் மீது இருந்த சஸ்பண்ட் உத்தரவு ரத்து செய்யப்பட்டு இன்றையதினம் மீண்டும் பாலீஸ் பயிற்சி பள்ளியிலே அவர் பணிக்கு அமர்த்தப்பட்

டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவருடைய சஸ்பெண்ட் உத்திரவு எப்போது ரத்து செய்யப்பட்டது? யாரால் ரத்து செய்யப்பட்டது? எப்படிப் பணியில் அமர்த்தப்பட்டார்? பணியில் அமர்த்தப்பட்டாலும் கூட சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஒருவர் அவர் எங்கே குற்றங்கள் இழைத்தார் என்று கருதப்படுகிறதோ அதே சென்னை நகரத்திலே அவர் எப்படி பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்? அதுவும் அவர் சாட்சியங்களைக் கலைப்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் சென்னையிலே செல்வாக்கு செலுத்தக் கூடிய வகையிலே ஒரு பணியில் அவர் எப்படி அமர்த்தப்பட்டார்? அவர் போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இருக்கிறார் என்று சொன்னால், அவரிடத்திலே பயிற்சி பெறுகிற அதிகாரிகள் எப்படி இருப்பார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

அதேபோல மற்ற இருவரும் கூட பணியில் அமர்த்தப் பட்டிருப்பதாக இன்றையதினம் பரவலாகப் பேசப்படுகிறது. இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் ஆட்டோ சங்கரும், அவனுடைய கூட்டாளிகளும் தப்பிக்க வேண்டுமென்றே அனுமதித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இவர்களையெல்லாம் ஆட்டோ சங்கர் மிரட்டிக் கொண்டிருக்கிறான். என்னிடத்திலே வீடியோ கேசட் இருக்கிறது, என்னிடத்திலே பல சாட்சியங்கள் இருக்கின்றன, இவர்கள் எல்லாம் என்ன கொடுமை இழைத்தார்கள் என்பதை நான் வைத்திருக்கிறேன். என்னோடு சேர்ந்து இவர்கள் செய்தார்கள் என்ற சாட்சியங்கள், தடயங்கள் என்னிடத்திலே இருக்கின்றன என்று சொல்லி மீண்டும் மீண்டும் மிரட்டிக் கொண்டிருக்கிறான். ஆகவே அவனை வெளியே விட்டு, அவனை தீர்த்துக் கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு வேண்டுமென்றே வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டான் என்று பரவலாக சென்னை நகரத்திலே இன்றையதினம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ''போலீசாருடன் மோதல்'' என்ற பெயரால் அவனை சுட்டுத் தள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக வெளியே பேசப் படுகிறது.

அது மட்டுமல்ல. அவன் வெளியே நீண்ட நாட்கள் இருப்பது அனைவருக்கும் ஆபத்து. ஏனென்றால் அவன் ஒரு பயங்கரமான குற்றவாளி. யாருக்கும், எதற்கும் கவலைப்படக் கூடியவன் அல்ல அவன். ஆறு பேரை உயிரோடு புதைத்தவன் என்றால் எப்படிப்பட்ட பேர்வழியாக அவன் இருப்பான் என்பதை நம்மாலே ஊகித்துக்கொள்ள முடியும். அவனால், அப்ரூவராக மாறியவர்களின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. சாட்சியங்கள் சொன்னவர்களுடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அவனைப் பற்றி பேசுகின்ற எம்.எல்.ஏ.க்களுக்குக் கூட ஆபத்து ஏற்படக் கூடும். எனவே அவன் நீண்ட நாட்கள்

1990 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

வெளியே திரிய அனுமதிக்கக் கூடாது. அவனை உடனடியாகப் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், நிச்சயமாக அவன் கொல்லப்படுவான் என்று சொல்லுகிறார்கள். நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள், உயர்நீதி மன்ற நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துகிறேன் என்று இங்கே சொன்னார்கள். நான் எதிர் வரிசையிலே இருந்தாலும் அந்த அறிவிப்பை நிச்சயமாக வரவேற்கிறேன். என்றாலும் நீதி விசாரணை என்றால் எத்தனை நாட்களுக்கு நடக்கும் என்பதை நம்மாலே இறுதியாக, உறுதியாகச் சொல்ல முடியாது. சமீபத்திலே 'அடிஷனல் சொலிசிட்டர்-ஜெனரல்' டில்லியிலே ஒரு கருத்தரங்கில் பேசுகின்ற நேரத்தில், 'எல்லா நீதி விசாரணைகளையும் அடிக்கடி பணியில் இருக்கின்ற உயர்நீதிமன்ற நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதி ஆகியவர்களைக் கொண்டு விசாரணை நடத்துவது முறையல்ல' என்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால் They may have some sort of prejudice என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களை இதுபோன்ற பணிகளுக்கு அடிக்கடி அழைத்து விடுவதால் வேறு பணிகள் எல்லாம் முடக்கப்படுகிறது ; எனவே அதை முடிந்தவரையில் தவிர்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் அந்த வாதத்தை ஏற்காவிட்டாலும் கூட அதையும் நீங்கள் கருத்திற் கொண்டு பரிசீலிக்க வேண்டும்.

10-00 மணி

அடுத்து, யார் அவருக்கு உதவப் போகிறார்கள்? எந்த நிறுவனம் உதவப் போகிறது என்பது முக்கியமான விஷயம். எனவே, நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இவ்வளவு சந்தேகங்கள் இருக்கிற இந்தப் பிரச்சினையில் ஒரு தெளிவான தீர்வு ஏற்பட வேண்டுமென்று சொன்னால், அந்த ஜூடிசியல் கமிஷனுக்கு ஒரு சி.பி.ஐ. டீம், ஒரு சி.பி.ஐ. என்குயரி நடத்தி அவர்கள் மூலமாக முழு உண்மையையும் வெளியே கொண்டு வர முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காலதாமதம் இல்லாமல் அவனுக்கு எந்த இடையூறும் ஏற்படாமல், அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல், ஆட்டோ சங்கரை கைது செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த அதிகாரிகளுடைய நடமாட்டத்தை முழுமையாக கண்காணிக்க வேண்டுமென்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய அதே பிரச்சினையை ஒட்டி நானும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப ஆசைப்படுகிறேன். நீதி விசாரணையை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த நீதி விசாரணை யாருக்கு நீதி கிடைப்பதற்கு? இந்த நீதி விசாரணையால் என்ன உண்மை வெளிவரப்போகிறது? இந்த நீதி விசாரணைக்கு ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை நாம் நியமிப்போமானால், பணியில் இருக்கக்கூடிய உயர்நீதி

மன்ற நீதிபதியை நியமிப்போமானால் அவர் உயர்நீதி மன்றத்தில் நீதி செலுத்தக்கூடிய காலம் குறைகிறது. அவர் அங்கே ஒரு ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு நீதி வழங்குவதை விட்டு விட்டு, இங்கே இந்த நீதி விசாரணைக்கு நாம் அமைப்போமானால் ஏற்கெனவே நம்முடைய சமுதாய நீதியைக் கெடுத்த ஒரு சமூக விரோதிக்கு இப்படியொரு நீதி விசாரணையை நாம் அமைத்திருப்பது யாருக்கு நீதி கிடைப்பதற்கு என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றொன்று. எப்படி தப்பித்தார் என்று தெரிந்துகொள்வதற்கு நீதி விசாரணை அமைக்க வேண்டாம். அதற்கு அதிகார மட்டத்தில் போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்னும் பெரிய பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மட்டத்திலே வைத்து விசாரித்து கண்டுபிடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.பி.ஐ. என்று சொன்னார். நான் அதற்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டவன். மாநிலத்திற்குள் சி.பி.ஐ. அதிகாரமே வரக்கூடாது. ஆனால் இந்த ஆட்டோ சங்கர் வழக்கைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தில் தைரியமான போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள் எம். எல். ஏ.க்களுக்கே ஆபத்து வரும் என்று சொன்னார்கள். ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் விசாரணை தள்ளித் தள்ளிப் போன காரணத்தால் தான் அவனே இன்றைக்கு உயிரோடு இருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு சமூக விரோதிக்கு இன்றைக்கு வேகமாக ஒரு தீர்ப்பைப் பெற்றிடுவதற்கு அரசாங்கம் முயல வேண்டுமேயொழிய அதற்காக ஒரு நீதி விசாரணையை நியமிக்க வேண்டாம் என்பது தான் என்னுடைய கருத்தாகும்.

மற்றொன்று. இன்றைக்கு காலை பத்திரிகையில் பார்த்தேன். சந்தன மரம் கடத்தல் மன்னன் வீரப்பன் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருப்பதாக அங்கே கர்நாடக மாநில அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் இன்னும் நாம் கண்டு பிடிக்கவில்லை. அதிகாரிகளுக்கு முழு சுதந்திரத்தைக் கொடுத்து, இன்னும் சொல்லப்போனால் போலீஸ் ஐ.ஜி.யாக இருக்கிற திரு. தேவாரம் கையில் இந்த அதிகாரத்தைக் கொடுங்கள். ஒன்று உயிரோடு கொண்டு வருவார், இல்லையென்றால் பிணத்தையாவது உங்கள் கையில் கொடுப்பார் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டை அச்சுறுத்தக் கூடிய அளவிற்கு போலீஸ் துறைக்கே இந்த இரண்டு சமூக விரோதிகள் இன்றைக்கு சவாலாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கே சவாலாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு பேரையும் கண்டுபிடித்து நாம் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், இந்த நாட்டில் சட்டம் இருக்கிறதா,

இல்லையா என்ற சந்தேகம் சட்டத்தைப் பின்பற்றுகிற மக்களுக்கு வந்துவிடும் என்ற காரணத்தால் தெரிவிக்கிறேன். தைரியமான அதிகாரி திரு. தேவாரம், இந்த இரண்டு பேரையும் பிடிப்பதற்கு உடனே முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அண்ணாநம்பி அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு இருப்பதால், அவர் அவையிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) 'Marshall' அவரை வெளியேற்றலாம்.

(திரு. அண்ணாநம்பி பேரவையினின்றும் வெளியேற்றப் பட்டார்.)

10.05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களும், நண்பர் பாண்டியன் அவர்களும் ஆட்டோ சங்கர் சிறையிலிருந்து தப்பியதன் அடிப்படையில் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நண்பர் பாண்டியன் அவர்கள் இந்த நீதி விசாரணை எந்த நீதியைத் தெரிந்துகொள்ள, எந்த நீதியை வரவழைக்க என்ற அடிப்படையிலே தன்னுடைய கருத்தை இங்கே அமைத்து, வினா எழுப்பினார்கள். நீதிபதி விசாரணையைத் தான் நாம் சுருக்கி நீதி விசாரணை என்று சொல்கிறோம். ஏற்கெனவே இந்த வழக்கு, மாநில கிரைம் பிராஞ்சுக்குத் தரப்பட்டு, புலன் விசாரணையில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நான் நேற்றைக்கு முன் தினமும், நேற்றும் அறிவித்ததைப் போல, அந்த சிறைச்சாலையில் உள்ள சூப்பிரின்டென்டண்ட் உள்பட 13 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பேர்கள் கைது செய்யப்பட்டு, மற்றவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கமும் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது ஒரு பெரிய நடவடிக்கை என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நடவடிக்கை எடுத்து, ஒரு அதிகாரியைக் கொண்டே விசாரணை என்கிற அளவிலே கூட நிறுத்தி இருக்கலாம். அப்படிப்பட்ட— விவாதத்தில்—கருத்துக்கள் கூட அதிகாரிகள் மட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இருந்தாலும் கூட ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதன் மூலம் நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கான உண்மைகள் வெளிப்படும், வெளிப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த உறுதியாக இருக்கிற காரணத்தாலேதான், அவைகள் வெளி வரவேண்டும் என்பதற்காகத்தான் நீதிபதியைக் கொண்டு அந்த விசாரணை நடைபெற வேண்டும் என்ற அந்த முடிவை எடுத்து, நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 23

உண்மையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் பல கருத்துக் களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே நடைபெற்று இருக்கின்றன, எத்தகைய திரைமறைவுப் பணிகள் கடந்த ஆண்டுகளில் நடந்திருக்கின்றன, அரசுக்குத் தெரியாமல், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வராமல் அரசினுடைய கண்களை மறைத்துவிட்டு, அரசு அதிகாரிகள் சிலரே இதுபோன்ற ஒரு சமுதாய விரோதியினுடைய செயல்களுக்கு உடன்பாடாக இருந்து இருப்பதும், அவன் சிக்கிக் கொண்ட பிறகு அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் விடு விப்பதற்குஉடந்தையாக இருந்திருப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும். அப்படிப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு யார் யார் ஒத்துழைத் தார்களோ, அவர்களையும் அடையாளம் காட்டவேண்டும். இந்த மாநில கிரைம் பிராஞ்ச் புலன் விசாரணையோடு முடிவுற்று ஓடியவர்கள் பிடிக்கப்பெற்று, ஓடுவதற்குக் காரணமாக இருந்த சில பேர்கள் தண்டிக்கப்பட்டால் மட்டும் போதாது என்பது என்னுடைய எண்ணம்.

அதற்குப் பின்னாலே, பின்னணியிலே, எத்தனை பேர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண் டும் என்பதற்காகத்தான், ஆரம்பகாலத்திலே மிகுந்த பரபரப்போடு ஆட்டோ சங்கர் கைது செய்யப்பட்ட காலத்திலே வெளிவந்த பல விவரங்கள், அதற்குப் பிறகு, அவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து 'ஃபேட் அவுட்' ஆகிவிட்ட நிலையிலே மறைந்துவிட்ட பல விஷயங்கள், இவைகள் எல்லாம் மீண்டும் கிளப்பப்படுவதற்கு நீதிபதி விசாரணை தேவை என்கிற முடிவை அரசின் சார்பிலே எடுத்திருக்கிறோம். அந்த விசா ரணையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனக்குக் கிடைத்த தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அவையிலே பேசுவதோடு அமையாமல், அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக ஓர் எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணத்தோடு என் னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அந்தக் கடமை களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் சொன்ன கருத்துக்களும் உள்ளபடியே ஏற்றுக்கொள்ள வேண்டிய நல்ல கருத்துக்கள். அவ்வளவு கருத்துக்களும் உண்மையா அல்லவா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தாலும் கூட, உண்மை எது, உண்மை அல்லாதது எது என்பது நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும். அதற்கு நீதிபதியினுடைய விசாரணை நிச்சயமாகப் பயன்படும் என்ற கருத்தை நண்பர் பாண்டியன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே பணியில் உள்ளவர்களை நியமிப்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் அவர்கள் சொன்ன கருத்தை பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கருத்து தனக்கு ஒத்தது இல்லை என்றும் அவர்கள் குறிப்

1990 ஆகஸ்ட் 23] *[டாக்டர் மு. கருணாநிதி]*

பிட்டு இருக்கிறார்கள், பணியில் உள்ளவர்களை இந்த நீதிபதி விசாரணைக்கு அமர்த்துவதா, அல்லது ஓய்வு பெற்ற ஒருவரை அமர்த்துவதா என்ற முடிவை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் எடுத்து நமக்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்பு கிறேன். அத்தகைய அறிவிப்பு வந்த பிறகு, அவர்கள் யாரை வைத்து இந்த விசாரணையை நடத்தலாம் என்று கருதுகிறார் களோ, அது நாட்டுக்கு செய்தியாக அறிவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-10 மணி.

இத்தோடு சேர்த்து பாண்டியன் அவர்கள் வேறொரு வழக் கைப் பற்றியும்—சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததாகச் சொன்னார். சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டிலே இல்லை என்பது தான் எங்களுக்கும் கிடைத்துள்ள தகவல். இது நம்முடைய காவல்துறையை மாத்திரம் குற்றம் சொல்வதாக கருதிவிடக் கூடாது. இதிலே எல்லா அதிகாரங்களையும் காவல் துறைக்கு-இங்குள்ள அரசு மாத்திரமல்ல, கர்நாடகத்திலே உள்ள அரசும் சேர்ந்து எல்லா அதிகாரங்களையும் காவல்துறைக்கு-அளித்திருக்கிறது. கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திர பாட்டீலை டில்லியிலே சந்தித்த போது அவரோடு இதைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். அவரும் இதைப்பற்றி என்னிடத்திலே விவாதித்திருக்கின்றார். இரு தரப்பு, இரு அரசுகளுடைய போலீசாரும் கலந்து பேசி, மிகுந்த ஒற்றுமை யோடு இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட தேவாரம் போன்ற அதிகாரிகளைப் பயன்படுத்த இந்த அரசு தயங்காது, அவருக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணி ஒப்படைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அவரை இந்தப் பணியிலே ஈடுபடுத்துவதிலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. எப்படி யும் இது போன்ற சமுதாய விரோதிகளை, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை வேறு வழியிலே இன்றைக்கு திருடிக் கொண்டிருக்கிற இத்தகைய கொள்ளைக்காரர்களைப் பிடிப் பதிலே அரசு தீவிரமாக இருக்கும். இதிலே இரண்டு அரசு களும்—கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநில அரசுகளுமே-மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால் விரைவிலே அந்தத் திருடர்கள் பிடிபடுவார்கள் என்பதையும் நான் தெரி வித்துக் கொண்டு, இந்த நீதிபதி விசாரணையில் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் போன்ற உறுப் பினர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் தர வேண்டும். ஏனென்றால் மறைந்து கிடக்கின்ற ஒரு பேருண்மை நாட்டுக்கு வெளியிடப்பட வேண்டுமென்ற அந்த ஆசையின் காரணமாக இதைத் தெரிவித்து அமைகிறேன்.

(இ) 15—7—1990 ஆம் நாளன்று இரவு விருதுநகர் முத்து ராமன்பட்டி அருகில் ஒருவர் கொலை செய்யப் பெற்றதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான நிகழ்ச்சி குறித்து தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த 15—7—1990 ஆம் தேதி இரவு சுமார் 10-45 மணியளவில் விருதுநகர் நகரத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினுடைய விருதுநகர் நகரத்தினுடைய முக்கியமான தலைவர்களிலே ஒருவரான 28 வயது நிரம்பிய இளம் தோழர் சந்துரு என்பவர், அந்த விருதுநகர் நகரத்திலே பிரபல ரௌடியாகவும், சமூகவிரோத செயல்களிலே தொடர்ந்து ஈடுபட்டு, கள்ளச் சாராயம், வழிப்பறிக் கொள்ளை உட்பட பல்வேறுவிதமான சமூக விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டு, அந்த நகரத்தினுடைய மிகப் பிரபலமான ரவுடி கரிக்கோல் ராஜு என்று அழைக்கக் கூடிய அந்த கரிக்கோல் ராஜுவினுடைய தலைமையில் மேலும் 9 பேர் கூட்டாகச் சேர்ந்து அன்றிரவு முத்துராமன்பட்டி என்று சொல்லப்படுகின்ற இடத்தில், அந்த வழியிலே சைக்கிளில் சென்று கொண்டிருந்த சந்துருவை அரிவாளால் வெட்டிக் கொலை செய்திருக்கிறார்கள். ஆகவே கொலை செய்த 10 பேர் மீது காலவல்துறையிலே புகார் கொடுக்கப்பட்டு, அதிலே 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தக் கொலைக்கு மூல காரணமாக அரிவாளால் முதலிலே வெட்டுவதற்குக் காரணமாக இருந்த, அதற்குத் தலைமை தாங்கி இருக்கக் கூடிய அந்த ரௌடியான கரிக்கோல் ராஜு என்பவர் இன்று வரையில் கைது செய்யப்படாத நிலை அந்த நகரத்திலே ஒரு பதட்டமான சூழ்நிலைமையைத் தொடர்ந்து தோற்றுவித்து வருகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு அவர் முன் ஜாமீன் பெற்று, அதன் பிறகு கோர்ட்டிலே சரண் அடைவதாக, அதற்கு கீழ் நிலையில் இருக்கக் கூடிய சில காவல்துறை அதிகாரிகள், அவர்கள் கள்ளச் சாராய வியாபாரம் செய்கின்றபோது அவர்களிடத்திலே கையூட்டு பெற்றவர்கள், மேலதிகாரிகள் இதிலே ஆர்வமாக இருந்தாலும் கூட, கீழே இருக்கக் கூடிய சில அதிகாரிகள் அதற்கு உறுதுணையாக இருப்பதாகக் கூட சொல்லப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட இந்த நிலையில் இந்தக் குற்றத்திற்கு முதல் காரணமாக இருக்கக் கூடிய அந்த கரிக்கோல் ராஜுவை உடனடியாகக் கைது செய்வதோடு, அவரை இந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பல உதவிகளை அங்கே இருக்கக்கூடிய சிலகாவல்துறைஅதிகாரிகள் மேற்கொள்வதாகக் கூட அறிகிறோம். ஆகவே உரிய நட

வடிக்கை எடுக்க தாங்கள் தலையிடவேண்டுமென்று வலியுறுத்துவ தோடு, குறிப்பாக இந்தக் கொலை நடப்பதற்குச் சில தினங் களாகவே அந்த நகரத்தினுடைய மற்றொரு வாலிபச் சங்கத் தினுடைய தலைவராக இருந்த காமராஜ் என்று சொல்லக் கூடியவரை கொலை செய்வோம் என்று பகிரங்கமாக வீதிகளிலே பேசப்பட்டு வந்தும் கூட, புகார் கொடுக்கப்பட்டும் கூட, உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டதோடு, 15 ஆம் தேதி கொலை நடப்பதற்கு முந்தைய நாள் 14 ஆம் தேதி இன்னொரு வாலிபச் சங்கத்தினுடைய உறுப்பினரான மாதவன் என்று சொல் லக் கூடிய அந்த உறுப்பினருடைய வீட்டிற்கே அந்த கரிக்கோல் ராஜூவினுடைய கும்பல் நேரடியாகச் சென்று அவருடைய பெற் றோர்கள் முன்னிலையிலேயே அந்தமாதவனைக் குத்தியிருக்கிறார் கள். மருத்துவமனையிலே அதற்கான வாக்குமூலம் கூட கொடுத்திருக்கிறார் அந்த மாதவன்.

10-15 மணி

அந்த வாக்குமூலத்தை பதிவு செய்யச் சென்ற காவல்துறை அதிகாரி செல்லம் என்று சொல்லப்படக் கூடியவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிற மாதவனிடத்தில் ''கரிக்கோல் ராஜ் எவ்வளவு பெரிய மனிதர், நீங்கள் அவரைப் போய் இந்த வழக்கிலே சேர்க்கலாமா என்று சொல்லி ஒரு கள்ளச் சாராய பேர்வழிக்காக ஒரு சமூக விரோதிக்காக பரிந்து பேசி, அவர் மீது புகார் கொடுக்கக் கூடாது என்று ஒரு காவல் துறை அதிகாரியே சொல்லு கிறார். கடந்த காலத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் குறிப்பிட்டதைப் போல், கள்ளச்சாராயப் பேர்வழிகளோடு சிலர் கைகோர்த்துக் கொள்கிற ஒரு நிகழ்ச்சியின் ஒரு பகுதி யாகத்தான் இது இருக்கிறது. அந்த அதிகாரியே இதை நேரிடை யாகச் சொல்லி எப்.ஐ.ஆரி.-லே கரிக்கோல் ராஜூவினுடைய பெயர் சேர்க்காமல் விடுபட்டு இருக்கிறது. அதில் மேலும் 3 பேர்களை சேர்த்து வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். பதிவு செய்தவர்கள் ஒரு நாள் முழுவதும், மறுநாள் முழுவதும் அங் கேயே இருந்தவர்கள். ஆனால் மறுநாள் இரவு சந்துருவை ஏற்கனவே வழக்கில் இருக்கிற 3 பேரோடு மேலும் 7 பேரைச் சேர்த்து 10 பேர்கள்—அந்த 3 பேர் உட்பட—சைக்கிளிலே சென்றவர்களை ஓட ஓட விரட்டி கொலை செய்திருக்கக் கூடிய கொடுமையான நிகழ்ச்சி அங்கே நடைபெற்றிருக்கிறது என் பதை நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சருடைய (மணி அடிக்கப்பெற்றது) கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தக் கரிக் கோல் ராஜ் வழக்கிலிருந்து தப்பாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, கொலை செய்யப்பட்ட சந்துரு ஒரு பி.ஏ. பட்டதாரி, 28 வயது இளம் வாலிபர், அவருக்கு நோய்வாய்ப்பட்ட தந்தை, வயதான தாய் திருமணம் ஆகாத 2 தங்கைகளோடு சாதாரண ஏழைக் குடும்பத்தில் வசித்து வந்தார். அவர் அரசுடைய வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து,

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே, வேலைக்கான உத்திரவு கிடைத்து, ஜுலை 18 ஆம் தேதிக்கு வேலைக்கு வர வேண்டும் என்று உத்திரவு வந்திருக்கிறது. அந்த நிலையில் 2, 3 தினங்களுக்கு முன்னால் கொலை செய்யப்படுகிறார்.

ஆகவே அவருடைய வருமானத்தை நம்பியிருந்த அவருடைய குடும்பம் இன்று பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிறது. பல்வேறு ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்திருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, அநியாயமான முறையிலே படுகொலை செய்யப்பட்டிருக்கிற சந்துருவின் ஏழைக் குடும்பத்திற்கு வாழ்வு அளிக்கக் கூடிய முறையில் முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு குறிப்பட்ட தொகையை நிவாரணமாக கொடுத்து அந்த ஏழைக் குடும்பத்தை பாதுகாப்பதற்கு தாங்கள் ஒரு நல்ல அறிவிப்பை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டு, தெரிவிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நகரசபை உறுப்பினரான காங்கிரஸ் கட்சியின் சார்பிலே விருதுநகரிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற திரு. கரிக்கோல் ராஜ் அவர்களைப் பற்றி ஒரு அபாண்டமான செய்தியை அவர் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நேரமும் காவல் துறை மானியத்தில் பேசுவது போலவே அவர் பல்வேறு செய்திகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ''Mention'' சொல்லும் போது அதிலே வாதங்கள் வருவது சரியாக இருக்குமா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் ஒரு '' Mention '' சொல்லிவிட்டார். முதலமைச்சர் விடை சொல்லி விட்டால் அது முடிந்து விடும், இதில் வாதம் எதற்கு? (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன்: ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி விடுகிறேன். எங்கள் கட்சியைச் சார்ந்தவர் அவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி நீங்கள் பேச வேண்டும் என்றால் பதிலுக்கு திரு. கோவிந்தசாமி பேச வேண்டும் என்பார். அது வாதமாக நீண்டு விடும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். இதிலே விளக்கங்கள் கொடுப்பது முறையல்ல. (குறுக்கீடு) இப்போது வழங்கப்படுவது தீர்ப்போ அல்லது நிவாரணமோ அல்ல. அவர் ஒரு செய்தியைச் சொல்லி விட்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்று சொல்ல இருக்கிறார். ஆகவே தொடர்ந்து இதிலே வாதம் வேண்டாம். (குறுக்கீடு). இப்படி நீங்கள் எழுப்புவது சரியல்ல. உறுப்பினர்கள் எல்லோரும்

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ''zero hour''-இல் இப்படி நீங்கள் வாதங்கள் செய்ய ஆரம்பித்தால் சுத்தமாக அதற்கு நான் எந்த அனுமதியும் தரமாட்டேன். ஏற்கனவே ஒரு தடவை அவையிலே சொல்லியிருக்கிறேன். அதற்குச் சற்று இளக்காரம் கொடுத்தேன். (குறுக்கீடு).

இல்லை, அவர் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்ல வில்லை. அவர் கட்சிப் பெயரைச் சொல்லவில்லை, ஆள் பெயரைத்தான் சொல்லி இருக்கிறார். அதற்காக நீங்கள் எழுந்து பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேச வேண்டும் என்றால் அவர் பதில் சொல்ல வேண்டும் என்பார். இது பட்டி மன்றம் அல்ல. ''zero hour''ஐ விவகாரமாக ஆக்கக்கூடாது. எல்லோரும் உட்காருங்கள்...

10-20 மணி

திரு. கே. ரமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள்.

திரு. குமரி அனந்தன் : சொன்ன அந்த நபர் யார் ? இல்லை, இல்லை......

திரு. உ. ரா. வரதராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர்......

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவர்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராசன் ஒரு ''Point of order'' சொல்லுகிறார். என்னவென்று கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரம் இல்லாத நேரத்திலே.......

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய மரபுகளை மீறி, விதிகளையும் மீறி பல விஷயங்கள் நடப்பதை நான் அவ்வப்போது உங்களுக்கு எடுத்துக்காட்டி வருகிறேன். இந்த நடவடிக்கை அவர், கோவிந்தசாமி ஒரு உறுப்பினர், பொறுப்பானவர், அந்த விஷயம் முழுவதையும் நேராகத் தெரிந்திருப்பவர். அவர் சொல்லக் கூடிய காரியத்தை அந்த சம்பந்தப்பட்ட நபரையே மறுத்து நல்லவர் என்று வாதம் பண்ணுகிறார் அவர். அவர் சொன்னதில் இருக்கின்ற சட்டப் பூர்வமான தவறு என்ன, விதிமுறையில் இருக்கின்ற தவறு

என்ன என்று அவர் சுட்டிக்காட்டவில்லை. எனக்கு அவரைப் பற்றி வேறு பிரச்சினை இல்லை. அந்த நிலைமையில் அதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் பதில் சொன்ன பிறகு அவர் கிளப்பட்டும், அவருக்கு நியாயம் இருந்தால். மற்றபடி இதை அனுமதிக்கக் கூடாது ஸ்பீக்கர் சார், அனுமதிப்பது தவறு, விதிகளுக்கும், மரபுகளுக்கும் எதிரானது என்று நான் சொல் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு உங்களுடைய பதில் என்னவென்று சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய பதில் அவர் சொன்ன நபர் கொலை நடந்த நேரத்தில் அந்த விருதுநகரில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அது உங்கள் வேலை இல்லையே. திரு. குமரி அனந்தன் அட்வோகேட் ஆக முடியாது. (கு..க்கீடு) நோ, நோ அதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் வழக்கை ஏற்று நடத்துகிறீர்களா என்ன? இங்கே உங்களுடைய வேலை அல்ல அது. (குறுக்கீடு) நோ, நோ அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. எல்லோரும் உட்காருங் கள். இல்லை, இல்லை, அவர் உங்களுடைய கட்சியைச் சுட்டிச் சொல்லவில்லை. (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உ..ப்பினர் கோவிந்தசாமி அவர்கள் இநதப்படுகொலை நிகழ்ச்சி குறித்து விவரங்களைச் சொன்னபோது இதிலே ஈடுபட்டவர் எந்தக் கட்சிக்காரர் என்று குறிப்பிடவில்லை. நபர்களின் பெயர்கள் தான் குறிப்பிடப்பட்டதே அல்லாமல் கொலை செய்த வர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் சொல்லவில்லை. அப்படி ஒரு கட்சியைப் பற்றிச் சொல்லியிருந்தால் அந்தக் கட்சி யின் சார்பிலே இங்கே இருப்பவர்கள் அதை மறுத்துப் பேச ஓரளவு உரிமை உண்டு என்று நான் கருதுகின்றேன். இருந்தாலும் அது இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களால் மறுக்கப்பட்டு இருக்கிறது. எனக்கு வந்துள்ள தகவல்களை இங்கே வைத்திட விரும்புகின்றேன். 15—7—1990 அன்று இரவு 10-45 மணியளவில் இந்திய ஜனநாயக வாலிபச் சங்கத்தின் பாண்டியநகர் கிளைச் செயலாளர் சந்துரு என்ற ஜெயச்சந்திரன் என்பவர் விருதுநகரில் பெரியகரிக்கோல்ராஜ் அவரது சகோதரர் சின்னகரிக்கோல்ராஜ் மற்றும் 8 நபர்களால் அரிவாள், வேல்கம்பு, கத்தி போன்றவற்றால் குத்தி கொலை செய்யப்பட்டார் என புகார் தரப்பட்டுள்ளது — நான் செய்யப்பட்டார் என்று சொல்லவில்லை, என்று புகார் தரப் பட்டுள்ளது—கொலையாளிகளும் கொலை செய்யப்பட்டவரும்

ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். பெரியகரிக்கோல் ராஜ், விருதுநகர் நகராட்சியிலே உள்ள வார்டு எண் 28-க்கு கௌன்சிலராக இருக்கிறார். இவரும் சின்னகரிக்கோல்ராஜூம் ஏற்கெனவே பல கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டு, அந்த வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதாகச் சொல்லப் படுகிறது. ராமசாமி மகன் மாதவனும், இந்திய ஜனநாயக வாலிப சங்கத்தினர் சிலருமாக விருதுநகரில் நடக்க இருந்த தங்களது சங்கத்தின் ஆறாவது தாலுக்கா மாநாட்டிற்கு 14—7—1990 அன்று அல்லம்பட்டி வட்டாரத்தில் பணம் வசூலிக்கச் சென்றனர். நாகராஜ், ஜெயராஜ், காடைஎன்பவர்கள் விருதுநகர் புதுத்தெருவில் தன் வீட்டின் முன்னால் உட் கார்ந்திருந்த மாதவனை எங்கள் அல்லம்பட்டி வட்டாரத்திலே வந்து ஏன் காசு வசூலித்தாய் என்று கேட்டு கத்தி முதலிய ஆயுதங்களால் தாக்கினார்கள். மாதவனின் மனுவின் பெயரில் விருதுநகர் பஜார் காவல் நிலைய குற்ற எண். 103/90-ல் 341, 324 இ.பி. கோ. பிரிவுகள் கீழ் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

10-25 மணி

இதைத் தொடர்ந்து 15—7—1990 அன்று இந்திய ஜன நாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சி யினரைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டினார்கள். அன்றைய தினமே சந்துரு என்ற ஜெயச்சந்திரன், காமராஜ் (பெரியப் பேட்டை கிளையின் செயலாளர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்திற்கு) முருகன், அவர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் நிரவித் தெரு கிளைச் செயலாளர்; குள்ளூர் சந்தை ரோட்டில் மேல்நிலைத் தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்திலுள்ள பட்டையாவின் பெட்டி கடைக்கு அருகில் நின்றபோது பெரிய கரிக்கோல்ராஜூம் மற்றவர்களும் அரிவாள், கத்தி, வேல்கம்பு, சோடா பாட்டில் முதலியவற்றோடு அவர்களை சூழ்ந்து கொண்டு இந்த ஏரியாவிலே எங்களை எதிர்த்து கட்சி வளர்ப்பதா, வால் போஸ்டர் ஒட்டுவதா ? என்று கோபத்துடன் வினவியதாகவும் ஜெயச்சந்திரன் அதற்கு அதையெல்லாம் நீங்கள் அரசியலிலே பார்த்துக்கொள்ளுங்கள் என்று பதில் கூறியதாகவும் உடனே பெரிய கரிக்கோல் ராஜ், ஜெயச்சந்திரன் முதுகில் குத்தியதாக வும், ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது, காயத்துடன் ஓடியவரை துரத்தி நாகராஜனும், பாண்டியும் மீண்டும் வேல்கம்பால் குத்தியதாகவும் புகாரில் கூறப்பட்டிருக் கிறது. சின்ன கரிக்கோல் ராஜ் அரிவாளால் கழுத்தில் வெட்டிய தாகவும் ஜெயச்சந்திரன் கீழே விழுந்தார் என்றும் புகாரில் கூறப் பட்டிருக்கிறது. அவரோடு இருந்த காமராஜூம், முருகனும் தப்பி ஓடி இந்திய ஜனநாயக வாலிபர் சங்க நகரச் செயலாளர் ராஜேந்திரனிடமும், வட்டச் செயலாளர் பழனிச்சாமியிடமும் முறையிட்டார்கள். அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து சேருவதற்கு முன் ஜெயச்சந்திரன் என்ற சந்துருவின் உயிர் பிரிந்து விட்டது. காமராஜின் புகார் மீது 16—7—1990 அன்று

விருதுநகர் கிழக்கு காவல் நிலையக் குற்ற எண். 192/90, 147, 148, 302 இ.பி.கோ. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உடன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிரேத பரிசோதனைக்குப் பிறகு மாவட்டத்தினுடைய செயலாளர் எஸ்.ஏ. பெருமாள் அவருடைய தலைமையில்—-மார்க்சிஸ்ட் கட்சியின் செயலாளர்—ஊர்வலம் எடுத்த பின் உடல் அடக்கம் செய்யப் பட்டது.

குற்றவாளிகள் என்று கூறப்பட்ட சின்ன கரிக்கோல் ராஜ், நாகராஜன், ஜெயராஜ், காளியப்பன் ஆகியோர் திருவில்லிப் புத்தூர், மதுரை நீதிமன்றங்களில் சரண் அடைந்தார்கள். காமராஜ் மற்றும் 3 பேர் கைது செய்யப்பட்டு ரிமாண்டுக்கு அனுப்பப்பட்டார்கள். பெரிய கரிக்கோல் ராஜ் தலைமறைவாகி யுள்ளார் என்று கூறப்படுகிறது. அவர் கைது செய்யப்படவில்லை. ஜெயச்சந்திரனின் ரத்தம் தோய்ந்த உடைகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு ரசாயன அறிக்கை வரவேண்டும் என்பதற்காக, இன்றைக்கு எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கு விசாரணையில் உள்ளது. இது தான் கொடுக்கப்பட்ட புகார். அதன் அடிப்படை யில் நான் தகவல்களைச் சொல்லியிருக்கிறேன். உண்மை என்ன? குற்றவாளிகள் யார் ? என்பதை நீதிமன்றம் விசாரித்து அதற்குப் பிறகு தான் முடிவை எடுக்கும்.

இருந்தாலும் இன்றைக்கு ஒரு ஜனநாயக வாலிபர் சங்கத்தில் துடிப்புள்ள வாலிபராக பாடுபட்டுக்கொண்டிருந்தவர் சந்துரு என்பதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் அவருக்கு இப்போது தான் போக்கு வரத்துக் கழகத்திலே அந்த பி. ஏ. பட்டதாரிக்கு ஒரு வேலை கிடைத்ததாகவும், அந்த வேலையைப் பெற்று தன்னுடைய ஏழைக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு முற்படும் முன்பே அவர் இப்படிப்பட்ட ஒரு கொலை செய்யப்பட்டு மரணம் அடைந்து விட்டதாகவும் சொல்லி அவருடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். மனித நேய அடிப்படையில் அது எந்தக் குடும்பமாக இருந்தாலும், எந்தக் கட்சியினுடைய குடும்பமாக இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு வாலிபர், ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பிலுள்ள ஒரு வாலிபர் திடீரென்று அகால மரணம் அடைகின்ற அளவுக்கு கொலை செய்யப்பட்ட காரணத்தால் அந்தக் குடும்பத்திற்கு பாதுகாப்பு நிதியாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். (கைத்தட்டல்.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே 10 ஆயிரம் ரூபாய்......(குறுக்கீடுகள்).

திரு. உ. ரா. வரதராசன் : பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக் கீடுகள்).

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் வேறு செய்தி பேசுகிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசுவதற்கு முன்பாக நீங்கள் Point of Order எழுப்புவது சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்). உட்காருங்கள், (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கொலை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஒரு குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த 10 ஆயிரம் ரூபாயை — அதை வரவேற்று — அதற்கு மேல் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதிலே நாங்களும் துணை இருக்க தயார். ஆனால் குற்றம் செய்யாத ஒருவர் மீது பழி வந்து விடக்கூடாது என்கின்ற நோக்கத்தோடு தான் இங்கே எடுத்து சொல்லப்பட்டது என்பது தவிர வேறு ஒன்றும் இல்லை. அவருக்குத் தெரிந்த செய்தியைப் போலவே எனக்குத் தெரிந்த செய்தியும் விருதுநகரிலே காமராஜ் விழாவிலே கலந்து கொண்ட தோழர்களிலே அவர் ஒருவர் என்று எனக்கு வந்த செய்தி சொல்கின்ற காரணத்தால் அந்தச் சம்பவம் நடந்த நேரத்திற்கும் அதற்கும் இருக்கின்ற வேறுபாட்டைக் காட்டினேன்.

10-30 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன். (குறுக்கீடு) உட்காருங்கள். No further discussion. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : Point of Order. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன Point of Order சொல்லுங்கள். இனிமேல் 'Zero Hour' கிடையாது. இது தான் கடைசி முடிவு. Point of Order-ஐ கேளுங்கள்.

திரு. கோ. வீரையன் : அது எப்படி? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனி அப்படிச் செய்தால் தான் சரியாக வரும். (குறுக்கீடு) இப்பொழுதே அல்ல. இப்போது இருந்தே.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் உட்காருங்கள். நேராக விதி 110-க்கே போகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர்(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன், 'Point of Order' தானே ?

திரு. கோ. வீரையன் : Point of Order தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுங்கள்.

திரு. கோ. வீரையன் : இப்போது அவர்கள் கிளப்பி இருப்பது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி செய்தது சரி என்று சொன்னார்கள். அதேபோல உண்மையான குற்ற வாளிகளைக் கண்டுப்பிடிப்பதற்கும் உதவுவோம் என்று சொன்னார்கள். உண்மையான குற்றவாளிகளை மறைப்பதற்கு அவர்கள் துணை போகக் கூடாது. உண்மையான குற்றவாளி களைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்தி (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன Point of Order (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இது என்ன Point of Order தேவையா இது? Point of Order என்றால், ஏதாவது நடை முறையிலே பிரச்சினைகள் இருந்தால் பேசவேண்டும். சும்மா, Point of Order என்ற பேரிலே எழுந்து பேசி விடுவ தென்றால் முறையல்ல. (குறுக்கீடு) இதிலே ஒவ்வொருவரும் வழி மொழிவது, முன்மொழிவது (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தராஜன் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன் இல்லையா ? உட்காருங்கள். திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டு இருக்கக் கூடாது.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினைகளை, எந்தப் பிரச்சினை யாக இருந்தாலும் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டு மானாலும் பேச முடியும். பேச முடியும் என்பதற்காக பேசுவது சட்டமன்றத்திற்குச் சரியல்ல. ஏதோ, ஒன்றிரண்டு கருத்துக்கள், அவரவர் கருத்தைக் கூறினால், அரசாங்கத்திற்குப் பதிலளிக்க ஒரு கடமை இருக்கிறது ; அரசாங்கம் தன்னுடைய கடமையை எப்பொழுதும் செய்யும். தன்னால் முடிந்த அளவுக்கு நியாயத்தை வெற்றி பெறச் செய்ய அரசு என்றைக்கும் முயற்சிக்கும். ஆகவே,

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் க. அன்பழகன்]

அவரவர்கள் சொல்கிற கருத்துக்களுக்கெல்லாம் வாய்ப்பாக Point of Order எழுப்புவது அவசியமல்ல. எனவே, அடுத்த பிரச்சினையைத் தொடர்ந்து மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன் . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : Point of Order என்று இந்தப் பிரச்சினை வரத் தேவையில்லை என்பது பொதுவான கருத்து. அவரவர் உணர்வுகளை, அவரவர்கள் வெளியிடுவதிலே பெரிய மாறுபாடு கிடையாது. சட்டத்தையும், ஒழுங்கையும், நீதியையும் பாதுகாக்க இந்த அரசு தன்னுடைய கடமையை முறையாகச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தராஜன். . . (குறுக்கீடுகள்) இது தொடர்பாக வேண்டாம். வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால் பேசுங்கள் (குறுக்கீடுகள்) இது தொடர்பாக வேண்டாம்; உட்காருங்கள் (குறுக்கீடு) வேறு வாதமெல்லாம் வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஆயிரம் செய்தி பேசுகிறீர்கள். அப்புறம் அதிலே ஒவ்வொரு வாக்கியத்திலும் பொருள் பார்த்துக்கொண்டே இருப்பதா ? (குறுக்கீடு) நீங்கள் இப்படிப் பேசினீர்கள் என்றால், கண்டிப்பாக நான் சொல்கிறேன், எல்லா உறுப்பினர்களும் கவனியுங்கள், இப்படி ஒவ்வொன்றையும் கிளறிக் கிளறிப் பிரச்சினையை எழுப்புவோம் என்று ஆரம்பித்தீர்களானால் பேசுவதற்கே அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அதனால் பரவாயில்லை. உட்காருங்கள் எல்லோரும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் வீரையன் அவர்கள் சொன்னது, யாரும் துணை போகக் கூடாது என்றுதான் சொன்னார். அது காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய காதிலே சரியாக விழாத காரணத்தாலோ என்னவோ, அவர் துணை போகிறார் என்று எடுத்துக் கொண்டு 'Point of Order' கேட்பதாக நான் அறிய வருகிறேன். யாரும் துணைபோகக் கூடாது, உண்மையான குற்றவாளிகளுக்கு யாரும் துணை போகக் கூடாது என்ற ஒரு பொதுக் கருத்தைத்தான் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன் கீழ் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) இருக்கட்டும். Chance வரும் போது பார்த்துக் கொள்ளலாம்.

3. உரிமைப் பிரச்சினை.

பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு மாறாக 22—8—1990 ஆம் நாளன்று "பொன் மனம்" நாளிதழில் வெளிவந்துள்ள செய்தி குறித்தும், இந்திய குடியரசுத் தலைவரிடம், பேரவைத் தலைவர் குறித்து, செல்வி ஜெயலலிதா புகார் கூறியது குறித்தும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, reach of privilege....
B

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன "Breach of privilege ?" (குறுக்கீடு). சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அவையினுடைய உரிமையையும் பெருமையையும் காக்கின்ற பெரும் பொறுப்பை நீங்கள் தங்கள் கடமையாகக் கருதி ஆற்றி வருகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியா ? (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : அது ஆளுங்கட்சியிலிருந்து வருகிறதைவிட எங்களிடமிருந்து வருவதும் உங்களுக்கு சேர்த்து துணை புரியும் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். ஆக, இங்கே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினருடைய பெருமையை மட்டுமல்லாது, தாங்களும் இந்த அவையினுடைய ஒரு பாகமாக அமைந்து அதற்குத் தலைமை ஏற்கின்ற பெரும் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினாலே இந்த அவையினுடைய பெருமை, அவையினுடைய உரிமை எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே எல்லோரும் இங்கே அக்கறையோடு இருக்கிறோம் என்பதிலே ஐயமில்லை. நீங்கள் உங்களுடைய ஆழ்ந்த ஞானத்தாலும், பட்டறிவாலும், படிப்பறிவாலும், விதிகளைத் தெரிந்துகொண்டு இருப்பதினாலும் இங்கே இடமாற்றத்தைச் செய்கின்றபோது பல்வேறு செய்திகளைக் கவனத்திலே கொண்டு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு அமர்த்தி, அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளரும், அந்தக் கட்சியின் சார்பிலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற இராதா அவர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, துணைத்தலைவராக திரு. செங்கோட்டையன் அவர்களை ஏற்றுக் கொண்டு, ஏற்றுக்கொண்ட காரணத்தினாலே அவருக்குரிய இடத்தை நீங்கள் அளித்தீர்கள். எனவே அவர் முன் வரிசையிலே எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருக்கிறார். இது நீங்கள் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஏற்பட்ட ஒரு முடிவு. அதை இங்கே ஏற்று அவர்கள் மூன்று தினங்களாக இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில்....(குறுக்கீடு) அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1990 ஆகஸ்ட் 23]

10—35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வருகிற செய்தியை மட்டும் சொன்னால் போதும். ஏனென்றால் அதற்காகத்தான் அவர்கள் இரண்டு பேரும் வெளியே போனார்கள்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. துணைத் தலைவர் யார் என்று நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். எங்களுக்கு முக்கியம் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களா என்பதுதான். அவ்வாறு நீங்கள் ஏற்றுக்கொண்டு, இருக்கையும் ஒதுக்கிவிட்ட பிறகு இப்போது 'பொன் மனம்' என்ற மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் நடத்துகிற ஏட்டில் தன்னையே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று 22-ம் தேதியிட்ட அந்த இதழில் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என் கையிலே அந்த நாளேடு இருக்கிறது.ஆக உங்களுடைய தீர்ப்பைமீறி உங்களுடைய அதிகாரத்தை மீறி தன்னை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று அவர் எழுதினாரா? அல்லது பத்திரிகை வெளியிட்டதா என்பதை எல்லாம் நீங்கள் முடிவு செய்யவேண்டும். பொன்மனம் பத்திரிகையில் அவரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்று வந்திருப்பதால் இந்த அவையின் பெருமையும், உரிமையும், தங்கள் அதிகாரமும் மீறப்பட்டு இருக்கிற காரணத்தால் இதனை உரிமைக் குழுவுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிலே தாங்கள் என்ன தீர்ப்புக் கூறுவீர்களோ எனக்குத் தெரியாது. அதில் தலையிட எனக்கு உரிமை இல்லை. அதே நேரத்தில் தங்களைப் பற்றி இந்தியக் குடியரசுத் தலைவரிடத்தில் தாங்கள் யார் பேச்சையோ கேட்டுக்கொண்டு செயல்படுகிறீர்கள் என்று தங்களுடைய இறையாண்மை, தங்களுக்கு இந்த அவையிலே உள்ள அதிகாரம் இவைகளை எல்லாம் கேள்விக்குறியாக்குகின்ற வகையில் இந்த அவையிலே வராவிட்டாலும் கூட உறுப்பினர் என்ற முறையில் உள்ள ஒரு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள் குடியரசுத் தலைவரிடத்தில் தங்களைப் பற்றி ஒரு புகார் கொடுத்திருக்கிறார்கள். இது நம்முடைய நண்பர் இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னது உரிமைப் பிரச்சினை என்ற அடிப்படையில் வருமேயானால் தங்களையே இழிவு படுத்துகிற முறையில் தாங்கள் யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு ஆடுகிறீர்கள் என்ற வகையில் கொடுக்கப்பட்ட அந்தப் புகாரும் அந்த உரிமைப் பிரச்சினையின் கீழ் வரும் என்று கருதுகிறேன். எனவே, இதைத் தாங்கள் யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) வடலூர் தொழிற்சாலை லே-ஆஃப் பிரச்சினை குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றோடு இந்தக் கூட்டத்தொடர் முடிகிறது. ஏராளமான ஒத்திவைப்புத் தீர்மானங்களை நாங்கள் கொடுத் திருக்கிறோம். அதனாலேதான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேராகச் செய்திக்கு வாருங்கள். முன்னுரை எல்லாம் வேண்டாம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் சம்பந்தமான சில பிரச்சினைகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் மற்றும் முதலமைச்சரின் கவனத்திற்கும் நான் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன். வடலூர் சம்பந்தமான பிரச்சினை குறித்து ஏற்கனவே இந்த மன்றத்தில் எழுப்பப்பட் டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்கு அவர்கள் லே-ஆஃப் கேட்டு அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதுவே சட்டவிரோத மானது. இந்த சட்ட விரோதமான லே-ஆஃப் என்பதை 8 மாத காலமாகத் தொடருகிறார்கள். இது சட்டவிரோத லே-ஆஃப் என்று அறிவிப்பதற்கு அரசு முன்வரவில்லை. தொழிலாளர் இலாக்காவும் எழுதியாகிவிட்டது.

இன்றைக்கு அங்கேயுள்ள நிலைமை என்ன? தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். முதலமைச்சர் அவர்களும் மார்ச் மாதம் 28 ஆம் தேதியன்று இந்த லே-ஆஃபை எடுத்துவிடுவோம் என்ற உறுதியை இந்த மன்றத்திற்கு அளித்தார்கள். அங்கேயுள்ள தொழிலாளர்கள் முதலமைச்சரின் இந்த வாக்குறுதி பற்றியே என்ன என்று நினைக் கிறார்கள். முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்த பிறகும் கூட ஒன்றும் நடைபெறவில்லையே என்று பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற அந்தத் தொழிலாளர்களும், தொழிலாளர்களின் குடும்பத்தாரும் கேட்கிறார்கள்.

இதற்கு ஒரே ஒரு சிறு உதாரணத்தைச் சொன்னால் போதும். அங்கே உள்ள பட்டினி நிலைமை எப்படி இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். கடந்த பல மாதங்கள் அங்கே சம்பளம் கிடை யாது. குழந்தைக்கு ஜுரம் இருக்கிறது என்பதற்காக 'பிரட்' வாங்க முடியாமல் ஒரு மலிவு விலை ரொட்டித் துண்டைத் தாய் வாங்கி வைத்திருந்தாள். வெளியே சென்று வந்த கணவன், பசியால் வாடி வந்ததால் அந்த ரொட்டித் துண்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டான். தாய் வந்து பார்த்தவுடன் அந்த ரொட்டித் துண்டைக் காணவில்லை. குழந்தைக்கு உடல் நலம் சரியாக இல்லை என்ற காரணத்திற்காக ரொட்டித் துண்டை வாங்கி வைத்தேன். அதையும் சாப்பிட்டு விட்டீர்களே என்று சொல்லி

அந்தக் குடும்பத்திலே சண்டை சச்சரவு ஏற்பட்டது. இப்படிப் பட்ட நிலைமை அங்கே ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. அவ்வளவு அவசரம் அவசரமாக அந்த லே-ஆப்புக்கு அனுமதி அளித்து தொழிலாளர் நல இலாக்கா இது சட்ட விரோதமானது என்று கூடச் சொல்வதற்கு முன்வரவில்லை. எனவே, அந்த சட்ட விரோத லே ஆஃப்-ஐ ரத்து செய்து அந்தக் குடும்பங்களைப் பாதுகாத்திட வேண்டும். அதேமாதிரி ஆரோ ஃபுட் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் ஒரு மாத காலமாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'Mention' என்றால் ஒரு பிரச்சினைதான். இது தொடர் சொற்பொழிவல்ல. தொழில் மானியத்திலா பேசுகிறோம். ஒரு பிரச்சினையைச் சொல்லுங்கள். இருக்கிற மூன்றையும் பேசுகிறீர்களே.

10-40 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்த ராஜன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி ஏற்கெனவே தெள்ளத் தெளிவாக இந்த சபையிலேயே விளக்கியிருக்கிறோம். அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் ஒன்று, 'லே-ஆப்' விடக் கூடாது, அத்தனை தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அரசின் சார்பாகவும், அந்தத் துறையினுடைய அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டு, அவர்களுக்கு 'லே-ஆப்' வழங்கியது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த நிர்வாகம் ஏன் வேலை தரவில்லை என்றும், காலதாமதம் எதனால் ஏற்பட்டது என்பது குறித்தும் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இறுதி யாக ஆணையர் அவர்கள் 27—8—1990 அன்று இந்த விசாரணையை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த விசாரணை முடிவில் தக்க நடவடிக்கைகள் அவர்கள் மீது எடுக்கப்படும். இருந்தாலும் அந்தத் துறையினுடைய அதிகாரிகள் தொடர்ந்து நிர்வாகத்தை வற்புறுத்தியபோது,அந்த நிர்வாகத்தினர் தொடர்ந்து எங்களுடைய அந்த ஆலை நஷ்டத்தில் இயங்குகிற காரணத்தால், எங்களால் வேலை வாய்ப்பு அளிக்க முடியாத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அப்படிச் சொன்னாலும், சம்பளம் கூட ஒழுங்காக மாதா மாதம் கொடுக்கவில்லையே, அதையாவது தரவேண்டுமென்று சொல்லி அதிகாரிகள் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

இறுதியாக 27-ந் தேதி நடைபெறுகிற பேச்சுவார்த்தை முடிந்த பின்பு அரசின் சார்பாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) மேட்டூர் அணையிலிருந்து கடைமடைப் பகுதிகளுக்குப் போதுமான நீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். அரசு அறிவிக்கும்போது அங்கே 29 அடிதான் தண்ணீர் இருந்தது. இது மிக தைரியமான அறிவிப்பு. அப்படிப்பட்ட அறிவிப்பாக இருந்தாலும், இன்று தண்ணீர் ஓரளவுக்கு திருப்தி தருகிற வகையில் மேட்டூர் அணையில் இருக்கிறது. ஆனால் இந்தத் தண்ணீர் இருப்புப் போதாது. இதேபோலத்தான் சென்ற ஆண்டும் இருந்தது. கடைசியில் மிகவும் மோசமான நிலை ஏற்பட்டு, பற்றாக்குறை ஏற்பட்டு, கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை. கடைமடைப் பகுதிக்குப் போய்ச் சேராததால் 100-க்கு 100 விவசாயிகள் கடந்த ஆண்டு விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். வசதி படைத்த சில பெரியவர்கள் பொதுப் பணித்துறை சிப்பந்திகளிடம் இருந்து தண்ணீரை விலைக்கு வாங்குகிறார்கள். இவர்களும், விலைக்கு விற்கிறார்கள். இந் நிகழ்ச்சியால் கடைமடைப் பகுதிகளில் வருடா வருடம் விவசாயம் முழுமையாகப் பாதிக்கப்படுகிறது. ஆகவே, மேலும் நாம் கர்நாடக அரசிடம் தண்ணீர் பெற்று, 'ஷிப்ட்' இல்லாமல் அதாவது முறை வைக்காமல் தண்ணீர் விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, 'டர்ன் சிஸ்டம்' வைப்பதே தண்ணீரை சிக்கனப்படுத்துவதற்காகத் தான். இவ்வளவு 'டர்ன் சிஸ்டம்' வைத்த பிறகும், சென்ற ஆண்டு இறுதியில் எப்படிப்பட்ட நிலைமையை அனுபவிக்கவேண்டி வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகையினால்தான் அந்த 'டர்ன் சிஸ்டம்' வைத்து சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்தவேண்டுமென்று முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக ஒன்றைச் சொன்னார்கள். யாரோ பொதுப் பணித்துறை ஊழியர்கள் விற்கிறார்கள், வாங்குகிறார்கள் என்று. இப்படி பொத்தாம் பொதுவாக அப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நெஞ்சிலே கைவைத்துச் சொல்லட்டும். சென்ற ஆண்டு பொதுப்பணித் துறையினர் இரவு பகலாக எவ்வளவு பாடுபட்டு, கடைசி நாள் வரையில் தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரைக் காப்பாற்றினார்கள் என்பதை உணர்ந்து அவர் நன்றி சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பழியைத் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த ஆண்டு 'டர்ன் சிஸ்டம்' இருக்கக்கூடாது என்று அவர் சொல்கிறார். இவர் உறுப்பினராக இருக்கிற காரணத்தால் இங்கே எழுந்து கேட்டு

1990 ஆகஸ்ட் 23] [திரு. துரைமுருகன்]

விட்டார். ஆனால் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு மணி அவர்கள் என்னை இரண்டு நாட்களாக 'பிரைய்ன் வாஷே' செய்து கொண்டிருக்கிறார். காரணம் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர்ப் போய்ச் சேரவேண்டுமென்பதாலே. ஆனால் எல்லா நேரத்திலும் 'டர்ன் சிஸ்டம்' என்பதை முழுக்க எடுத்துவிட முடியாது. இன்றைக்கு இருக்கிற நிலைமை, நேற்றைய தண்ணீர் வரத்தை விட குறைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் மணி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றைச் செய்யலாம்.

எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில்—சேடை நாற்று என்பார்கள்—அதுவரையில் வேண்டுமானால் 'டர்ன் சிஸ்டத்'தைக் கொஞ்சம் ஒத்தி வைக்கலாம். அதற்கே என்ன ஆகுமென்றால், 1 டி.எம்.சி. எடுக்கிறவர்கள், ஒன்றேகால் டி.எம்.சி. எடுக்கவேண்டும். 18,000 கியூசெக்சுக்குப் போகவேண்டும், உறுப்பினர் சொன்னாரே ரொம்ப தைரியம் என்று, அந்த தைரியத்தின் அடிப்படையில்தான் இந்த மன்றத்திலே இதை அறிவிக்கிறேன். எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில், 'டர்ன் சிஸ்டம்' இருக்காது. போய்ச் சேர்ந்த மறுநிமிடமே 'டர்ன் சிஸ்டம்' அமல்படுத்தப்படும்.

10-45 மணி

4. விதி 110-இன்கீழ் செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் மறு நிர்ணயம் செய்வது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வரதராசன் மற்றும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தனர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் 2—5—1990 அன்று இப்பேரவை முன் அறிக்கை ஒன்றை வைத்தேன். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க இரண்டு முறைகள் உள்ளன என்றும், ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை திருத்தியமைப்பது என்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்பட இருக்கும் ஊதிய விகிதங்களைக் குறித்து

1990 ஆகஸ்ட் 23] [திரு. துரைமுருகன்]

விட்டார். ஆனால் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு மணி அவர்கள் என்னை இரண்டு நாட்களாக 'பிரையன் வாஷே' செய்து கொண்டிருக்கிறார். காரணம் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர்ப் போய்ச் சேரவேண்டுமென்பதாலே. ஆனால் எல்லா நேரத்திலும் 'டர்ன் சிஸ்டம்' என்பதை முழுக்க எடுத்துவிட முடியாது. இன்றைக்கு இருக்கிற நிலைமை, நேற்றைய தண்ணீர் வரத்தை விட குறைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் மணி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றைச் செய்யலாம்.

எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில்—சேடை நாற்று என்பார்கள்—அதுவரையில் வேண்டுமானால் 'டர்ன் சிஸ்டத்'தைக் கொஞ்சம் ஒத்தி வைக்கலாம். அதற்கே என்ன ஆகுமென்றால், 1 டி.எம்.சி. எடுக்கிறவர்கள், ஒன்றேகால் டி.எம்.சி. எடுக்கவேண்டும். 18,000 கியூசெக்சுக்குப் போகவேண்டும், உறுப்பினர் சொன்னாரே ரொம்ப தைரியம் என்று, அந்த தைரியத்தின் அடிப்படையில்தான் இந்த மன்றத்திலே இதை அறிவிக்கிறேன். எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில், 'டர்ன் சிஸ்டம்' இருக்காது. போய்ச் சேர்ந்த மறுநிமிடமே 'டர்ன் சிஸ்டம்' அமல்படுத்தப்படும்.

10-45 மணி

4. விதி 110-இன்கீழ் செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் மறு நிர்ணயம் செய்வது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வரதராசன் மற்றும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தனர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் 2—5—1990 அன்று இப்பேரவை முன் அறிக்கை ஒன்றை வைத்தேன். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க இரண்டு முறைகள் உள்ளன என்றும், ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை திருத்தியமைப்பது என்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்பட இருக்கும் ஊதிய விகிதங்களைக் குறித்து

ஒரு முதல் நிலை அறிக்கை வெளியிட்டு அது குறித்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் பரிசீலித்து அதன் பின் முதல் நிலை அறிக்கையை முடிவு செய்வது என்பது மற்றொரு முறை. அதாவது அறிவிப்பு முறை என்றும் குறிப்பிட்டேன். தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்கக் குழு அமைத்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க காலதாமதம் ஆகும் என்பதால் ஊதிய விகிதங்களை அறிக்கை முறையில் திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று குறிப்பிட்டேன்.

அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க ஒரு முதல்நிலை அறிக்கை வெளியிடும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் நான் கோவில்பட்டி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்கள் என்னைச் சந்தித்து மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமான ஊதிய விகிதங்களும் அகவிலைப் படி விகிதங்களும் உள்ளன என்று முறையிட்டனர். அவர்கள் கொடுத்த மனுவை தொழிலாளர் நல ஆணையாளரிடம் தந்து இதைப்பற்றி விசாரிக்க சொன்னபோது, அவரும் அங்கே இருக்கின்ற தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் அதுபற்றி ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிந்தேன். நேற்றைக்கு நான் இதை உரிமை மீறல் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் இங்கே எழுப்பப் போகிறேன் என்று சொன்னபோது, இல்லை, ஏற்கெனவே தங்களிடம் சொன்னது போல அறிக்கை முறையிலேயே ஊதிய விகிதம் நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை அவரிடம் சொன்னேன். அவரும் இதுபோல ஓர் அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் ஆணையாளர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தக் கடிதம் ஒரு தொழில் குழுவை ஏற்படுத்தி, அதில் இருக்கின்ற சங்கடங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் அது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு விரைவில் தீப்பெட்டி தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

காமராசர் மாவட்டத்திற்கென்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப் படாததால் அப்பகுதி மக்களின் நிலை குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராசர் மாவட்டத்திற்கு என்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாததால் அப்பகுதி மக்களின்

ஒரு முதல் நிலை அறிக்கை வெளியிட்டு அது குறித்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றைப் பரிசீலித்து அதன் பின் முதல் நிலை அறிக்கையை முடிவு செய்வது என்பது மற்றொரு முறை. அதாவது அறிவிப்பு முறை என்றும் குறிப்பிட்டேன். தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்கக் குழு அமைத்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊதிய விகிதங்களை திருத்தியமைக்க காலதாமதம் ஆகும் என்பதால் ஊதிய விகிதங்களை அறிக்கை முறையில் திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று குறிப்பிட்டேன்.

அந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களைத் திருத்தியமைக்க ஒரு முதல்நிலை அறிக்கை வெளியிடும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையில் நான் கோவில்பட்டி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்கள் என்னைச் சந்தித்து மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமான ஊதிய விகிதங்களும் அகவிலைப் படி விகிதங்களும் உள்ளன என்று முறையிட்டனர். அவர்கள் கொடுத்த மனுவை தொழிலாளர் நல ஆணையாளரிடம் தந்து இதைப்பற்றி விசாரிக்க சொன்னபோது, அவரும் அங்கே இருக்கின்ற தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் அதுபற்றி ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக அறிந்தேன். நேற்றைக்கு நான் இதை உரிமை மீறல் பிரச்சினையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் இங்கே எழுப்பப் போகிறேன் என்று சொன்னபோது, இல்லை, ஏற்கெனவே தங்களிடம் சொன்னது போல அறிக்கை முறையிலேயே ஊதிய விகிதம் நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை அவரிடம் சொன்னேன். அவரும் இதுபோல ஓர் அறிக்கையை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் ஆணையாளர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தக் கடிதம் ஒரு தொழில் குழுவை ஏற்படுத்தி, அதில் இருக்கின்ற சங்கடங்களை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் அது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொண்டு விரைவில் தீப்பெட்டி தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

காமராசர் மாவட்டத்திற்கென்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப் படாததால் அப்பகுதி மக்களின் நிலை குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராசர் மாவட்டத்திற்கு என்று மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கப்படாததால் அப்பகுதி மக்களின்

1990 ஆகஸ்ட் 22] [திரு. வே. தங்கபாண்டியன்]

நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1984-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாக பின்வருமாறு பிரித்து அரசு ஆணையிட்டது :

மாவட்டம். (1)	தலைமையிடம். (2)
(1) இராமநாதபுரம்	இராமநாதபுரம்.
(2) பசும்பொன் தேவர் திருமகன் ..	சிவகங்கை.
(3) காமராசர்	விருதுநகர்.

அரசு புதிதாக தோற்றுவித்த மாவட்டங்களுக்கென மத்தியக் கூட்டுறவு வங்கிகள் போன்ற மைய கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான முன்மொழிவுகளை அனுப்பும்படி கோரியது. இதற்கிடையில் இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 'நாபார்டு' என்று அழைக்கப்படும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் வரண்முறைகளின்படி 30—6—1985 ஆம் நாளிலிருந்து நலிவுற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது. தேசிய வங்கியின் வரண்முறைகளின்படி, கூட்டுறவு ஆண்டின் இறுதியில் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியின் சொந்த நிதியாதாரங்கள் சந்தேக மற்றும் வராக் கடன்கள் (Doubtful and bad debts) திரண்ட நட்டம் மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட தவணை தவறிய கடன்கள், ஆகியவற்றின் மூலம் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிக்கப்பட்டிருக்குமானால், அந்த வங்கி நலிவுற்ற மத்திய கூட்டுறவு வங்கியாக வகைப்படுத்தப்படும். இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நலிவுற்ற மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பட்டியலிலிருந்து விடுவிக்க அதனை ஸீரமைப்பு திட்டத்திற்குட்படுத்தப்பட்டது (Rehabititation programme). ஏற்கனவே நலிவுற்ற நிலையில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் ஆஸ்தி பொறுப்புகளை புதிய மாவட்டங்களில் பிரத்தியேக மத்தியக் கூட்டுறவு வங்கி தோற்றுவிப்பதற்காக பிரிவினை செய்தால் அவ்வங்கி

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 ஆகஸ்ட் 23

மேலும் வலுவிழந்துவிடுவதுடன், புதிதாக தோற்றுவிக்கப்படவுள்ள புதிய மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் தன்னிறைவற்ற நிலையில், அவை தோற்றுவிக்கப்பட்ட நோக்கத்தையே பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும். மேலும், தாய் வங்கியே தன்னிறைவற்ற நிலையில் உள்ளபோது, அதன் சேய்களான புதிய வங்கிகளும், தன்னிறைவற்ற நிலையிலேயே அமையுமாதலால், இவ்வங்கிகள் வங்கியியல் பணிகளை மேற்கொள்வதற்கான உரிமத்தை இந்திய தலைமை வங்கியிடம் இருந்து பெறுவதற்கான வாய்ப்பில்லை. எனவே, புதிய மாவட்டங்களுக்கான பிரத்தியேக மத்தியக் கூட்டுறவு வங்கிகளை உடனடியாக ஏற்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி புனரமைப்புத் திட்டச் செயல்பாடுகள் பதிவாளராலும், அரசாலும் முறையே அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் மாநில அளவிலான திறனாய்வுக் குழுக்களின் தீவிர கண்காணிப்பின் விளைவாக நலிவுற்ற வங்கிகள் பட்டியலில் இருந்து தேசிய வங்கி அறிக்கையின் அடிப்படையில் அவ்வங்கி நீக்கப்பட்டுவிட்டதாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, அதனது 24—5—1989-ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தது. இதற்கிடையில் இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் ஆஸ்திப் பொறுப்புக்களை மூன்று மாவட்டங்களுக்கான மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கிடையே பகிர்மானம் செய்வதற்கான மாதிரி முன்மொழிவுகள் (Draft proposals) பெறப்பட்டு அதன் மீது தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் கருத்துக்கள் பிப்ரவரி 1990ல் பெறப்பட்டன.

மேலும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 91-ன் கீழ் ஆஸ்திப் பொறுப்புக்களை காப்பு செய்யப்பட்ட வங்கிகளுக்கிடையே மாற்றம் செய்வதற்கான எழுத்து மூலமான அனுமதியை வழங்கும்படி இந்திய தலைமை வங்கிக்கு (Reserve Bank of India) கோரிக்கை தனியே அனுப்பியபின், இந்திய தலைமை வங்கியின் ஒப்பளிப்பை எதிர்நோக்கி புதிய சங்கங்கள் பதிவு செய்யப்படும். ஆனால் இந்திய தலைமை வங்கியின் ஒப்பளிப்பு மற்றும் உரிமம், கிடைக்கப் பெற்ற பின்னர்தான் ஆஸ்திப் பொறுப்புகள் மாற்றம் செய்தல், வங்கியியல் பணிகள் முதலியன மேற்கொள்ள இயலும்.

தற்சமயம் இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கடன் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. கடந்த 1989-90ஆம் நிதியாண்டில் இவ்வங்கி மாவட்ட வாரியாக வழங்கியுள்ள கடன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்).

வரிசை எண்ணும் கடன் வகையும்.	இராமநாத புரம்.	பசும்பொன் தேவர் திருமகன்.	காமராசர்.
(1)	(2)	(3)	(4)
1. குறுகிய காலக் கடன்	153.46	280.50	430.93
2. மத்திய காலக் கடன்	155.00	135.25	195.73
3. நகைக் கடன்—			
(அ) கிளைகள் மூலமாக	145.85	127.65	273.22
(ஆ) சங்கங்கள் மூலமாக	315.42	413.89	1013.14
4. வேளாண்மை சாராக் கடன் (சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்)	1.34	4.23	8.33

மேலே குறிப்பிட்ட புள்ளி விவரங்களிலிருந்து ஏனைய இரு மாவட்டங்களைவிட காமராஜர் மாவட்டத்திற்கு விவசாயம் மற்றும் தொழில்களுக்கு கடன்கள் அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது என்றும், எந்த ஒரு மாவட்டத்திலும் விவசாயக் கடன்கள் வழங்குவது பாதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விவர அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இராமநாதபுரம் 1984-லேயே பிரிக்கப்பட்டது. 6 ஆண்டுக் காலமாக அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக மத்திய வங்கி ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பிட்ட இந்த அறிக்கையில், 1984-ஆம் ஆண்டிலே இராமநாதபுரம் மாவட்ட மத்திய வங்கி நலிவுற்ற வங்கியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ரிசர்வ் வங்கியின் சார்பாக 1989ல் நலிவுற்ற வங்கியிலிருந்து அது நீக்கப்பட்டுவிட்டது. இப்போது தனித்து இயங்கலாம் என்று ரிசர்வ் வங்கி உத்தரவு வழங்கியிருக்கிறது. கடந்த ஓராண்டுக் காலமாக அரசு அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கால் தனித்து இயங்குகிற வாய்ப்பு காமராசர் மாவட்டத்திற்குக் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற முறை இந்த அவையில் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றுவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் 1984-ஆம் ஆண்டு மூன்றாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் எதிர்

பாராத வகையில் 30—6—1985 ஆம் தேதி அன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நலிந்த வங்கி பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டது. அதற்குப் பின்னாலே அந்த, நலிவினை நீக்குகின்ற வகையில் மாநில அளவிலேயும் மாவட்ட அளவிலேயும் குழு நியமிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் மத்திய கூட்டுறவு வங்கி வைக்கப்பட்டது. தீவிர கண்காணிப்பின் காரணமாக 24–5–1989 அன்றுநலிந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுவிட்டதாகதமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி அறிவித்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து தொடர் நடவடிக்கையாக மத்திய வங்கியினுடைய நிதி ஆதாரங்களைப் பிரித்துத் தருவதற்கு இந்தியத் தலைமை வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகின்ற காரணத்தால் அந்த அனுமதி கிடைத்த பின்னாலேதான் பதிவு மற்றைய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற நிலைமை காரணமாக அந்த அனுமதியை எதிர்நோக்கி அரசு இருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, அரசு இன்னும் அதில் தீவிரம் காட்டி, தலைமை வங்கியிடமிருந்து அனுமதி பெற்று, விரைவில் தனித் தனி கூட்டுறவு மத்திய வங்கிகள் ஆரம்பிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

10-50 மணி

திரு. வே. தங்கபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, காமராசர் மாவட்டத்தினுடைய அசெட்ஸ் மத்திய வங்கியிலே 60 சதவிகிதம் இருக்கிறது. தேவர் திருமகனார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம் மத்திய வங்கிகள் தனித் தனியாக இயங்க வையபிளாக இருக்கிறதென்ற அடிப்படையிலே அரசு அதிகாரிகள் சிபாரிசு செய்திருக்கிறார் கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் பல முறை உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, காமராசர் மாவட்டத்தினுடைய பங்கு அதிகமாக இருந்தாலும், அவர்கள் கடன் பட்டிருக்கும் பங்கும் அதிகமாக இருக்கிறதென்ற விவரம் என்னிடத்தில் இருக்கிறது. எது எப்படி இருந்தாலும்கூட, 3 மாவட்டத் தலைநகரங்களிலும் கூட்டுறவு மத்திய வங்கிகள் ஏற்பட வேண்டுமென்பதில் அரசு அக்கறையோடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய உணர்வை மதிக்கும் வகையில் அரசு இன்னும் தீவிரம் காட்டி விரைவில் அங்கே கூட்டுறவு மத்திய வங்கிகள் ஏற்பட அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1990-91ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன் வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்செய்தல்).

(அ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

10-55 மணி

10. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42 /1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

10-55 மணி

10. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42 /1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

10-55 மணி

10. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42 /1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1990) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் விவாதிப்பவர் இருவர். திரு. வல்லரசு, ஐந்து மணித்துளிகள்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை உயர்த்துகின்ற இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் பங்குகொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இன்று அரசு உத்தியோகஸ்தர்கள் ஆனாலும் சரி, பொது நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் ஆனாலும்சரி

*21-8-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1990) ஆய்வுக்கு எடுத்து கொள்ளப் பெறவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் விவாதிப்பவர் இருவர். திரு. வல்லரசு, ஐந்து மணித்துளிகள்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை உயர்த்துகின்ற இந்தச் சட்டத் திருத்தத்தில் நான் பங்குகொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இன்று அரசு உத்தியோகஸ்தர்கள் ஆனாலும் சரி, பொது நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் ஆனாலும்சரி

*21-8-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அத்தனை பேரும் இன்றைய தினம் தங்களுடைய சம்பள உயர்வைப் பற்றி கோரிக்கை விடுத்துக் கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் மக்கள் பிரதிநிதியாக அரசு ஊழியர்களுக்கு எல்லாம் தொண்டாற்றுகின்ற பிரதிநிதியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த முறை சம்பளம் இங்கே உயர்த்தி இருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கின்றேன். அதே முறையில் இன்று ஒரு முக்கிய மான பிரச்சினை எழுந்து இருக்கிறது. சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் சட்டமன்றத் திற்கே வராமல் சட்டமன்ற வளாகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் செல்வார்களேயானால் இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் சட்டமன்றத்தினுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின் றேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து........

திரு. குமரி அனந்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தச் செய்தி என்பது தேவையில்லாதது; தொடர்புடைய செய்தி களை மட்டும் சொல்லிவிட்டுப் போவது நல்லது. அதை நான் ஆலோசனையாகச் சொல்ல முடியாது; இருந்தாலும் என் னுடைய கருத்தை வெளியிடுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வேலை செய்யாமல் கூலி பெறுவது எவ்வளவு நியாயம் இல் லையோ அதைப்போல் இந்த மன்றத்திற்கு வந்து மக் களுக்காக வாதிடாமல் வராண்டாவில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் சம்பளம் வாங்குவது தவறு என்று உறுப்பினர் கருத்து.

திரு. குமரி அனந்தன் : இங்கே வந்தும் கூட சில பேர் பேசாமலேயே இருப்பார்கள். அவர்கள் வேலை செய்த தாகப் பொருளா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இங்கே வந்து உட்கார்ந்து மன்றத்துக்குக் கௌரவம் அளிக்க வேண்டும், வாதத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று உட்கார்ந்து இருக்கிறார்களே அதுவே அவர்கள் இந்த மன்றத்திற்குக் காட்டுகிற மரியாதை அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னொன்று நான் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர் பேசவேண்டுமென்றாலும் இங்கே 'கோரம்' இருக்க வேண்டும். எல்லோரும் வந்து உட்கார்ந்

தால் தான் பேச முடியும். சில பேர் வராமல் இருந்து விட்டார்கள் என்றால் நாமே பேச முடியாமல் போய்விடும். எனவே வருவதே கூட இந்த அவைக்குச் செய்கிற உதவி தான்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திற்கு வருபவர்கள் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்வார்கள் என்றுதான் அவர்களை அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறுபட்ட நிலையில் தொடர்ந்து வளாகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு சம்பளத்தை மட்டும் பெற்றுக் கொள்கிறோம் என்ற ஒரு நிலை நீடிக்குமேயானால் இதற்கு தமிழக முதல்வர் அவர்களும், சட்டப்பேரவைத் தலைவரவர்களும் ஒரு முடிவு கட்ட வேண்டும்; மறுபரிசீலனை செய்ய வேண்டும். சட்டத் திருத்தம் கொண்டுவந்து இதற்கு ஒரு நிலை ஏற்படுத்த வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

11-00 மணி

திரு. எஸ். ஆர். : பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவின் மீது ஒரே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகள் சில வசதிகள் வழங்கப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்குஎன்ன மருத்துவ வசதிகள் கிடைக்குமோ அதே மருத்துவ வசதிகள் 'மிசா' கைதிகளாக இருந்த அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு பழைய பத்திரிகையாளர்—பெயரை சொல்லலாம் என்று கருதுகிறேன்—திரு. சம்பந்தம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அந்த அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே தவறு சொல்லவில்லை. அவருக்கு நிச்சயமாக மருத்துவ வசதியைத் தரலாம். மிசா கைதிகளாக அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் மட்டும் சிறையில் இருந்ததில்லை. விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள், கள்ளக்கடத்தலில் ஈடுபட்டவர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள் ஆகியவர்கள் எல்லாம் மிசா கைதிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை சேர்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் It is a discrepancy நிச்சயமாக இதை மாற்றவேண்டும். அரசியல்வாதிகளுக்கும், பொது வாழ்க்கையில் தொடர்பு உடையவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஆக்ஸ்டு 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, தியாகிகள் மானியம், மொழிக் காவலர்கள் மானியம் என்று வழங்கப்படுகிறது. அவர்கள் இரண்டு, மூன்று மாத காலம் சிறையிலே இருந்தார்கள் என்பதற்கான சான்று காட்ட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதற்காக, இரண்டு, மூன்று மாதம் சிறையிலே இருந்தேன் என்று சாராயக் கைதிகள் கூட அந்தத் தியாகிகள் மானியத்தை எப்படிப் பெற்றுவிட முடியாதோ அதைப் போலவே தான் இந்த 'மிசா' கைதிகளும், அரசியல்வாதிகள் அல்லாதவர்கள் நிச்சயமாக இதைப் பெற்றுவிட முடியாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : விளக்கத்திற்கு நன்றி. அந்தத் தவறு இழைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். முன்னாள் எம்.எல்.ஏ.-க்களுக்கும், எம்.எல்.ஏ.-க்களுக்கு என்ன மருத்துவ வசதி வழங்கப்படுகிறதோ அதே வசதி வழங்க வேண்டும். எம்.எல்.ஏ. க்களைவிட முன்னாள் எம்.எல்.ஏ. க்களுக்குத்தான் அது மிகவும் அவசியம் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிரமப்படுகிறார்கள். வாழ்க்கையை நடத்துவதற்கே கஷ்டப்படுகிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

தியாகிகளுக்கு எப்படி பஸ் பாஸ் வசதி கொடுத்திருக்கிறோமோ அதே போல முன்னாள் எம்.எல்.ஏ.-க்களுக்கும் பஸ் பாஸ் வசதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் எம்.எல்.ஏ. க்கள் சில பேரை எனக்குத் தெரியும். குறிப்பாக ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு சிரமத்தில் இருக்கிறார்கள் என்பது தெரியும். திரு. எஸ்.ஆர். ஆறுமுகம் 1952 முதல் 1957 வரை உறுப்பினராக இருந்தவர். 1957 முதல் 1962 வரை மக்களவை உறுப்பினராக இருந்திருக்கிறார். நாமக்கல் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருடைய குடும்பம் பெரிய குடும்பம் அவர் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர். இரண்டு பென்ஷன்களை வாங்கக் கூடாது என்று இருப்பதால் தமிழ்நாடு பென்ஷனைப் பெற முடியவில்லை. அவருடைய குடும்பம் பெரிய குடும்பம், வயதான காலத்தில் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே எப்படியாவது சட்டத்தைத் திருத்தி, எம்.பி. பென்ஷன் கிடைத்தாலும் எம்.எல்.ஏ. பென்ஷனும் கிடைக்க வழி செய்ய வேண்டும். நேற்று திரு. விஜயராகவன் அவர்கள் சொன்ன நல்ல கருத்தைப் பரிசீலிக்க வேண்டும். அவர் சொன்ன கருத்து—மராட்டிய மாநிலத்தில் எம்.எல்.ஏ. தொகுதி ஒவ்வொன்றுக்கும் குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு 21 இலட்சம் ரூபாய் அளவிற்கு

எம்.எல்.ஏ.-க்கள் இஷ்டப்படி திட்டப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதைப் பரிசீலித்து முதல்வர் அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.க்களுக்கு, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில், ஒரு ஊராட்சி மன்றத் தலைவருக்கு உள்ள நேரடி அதிகாரம் கூட கிடையாது. ஊராட்சி மன்றத் தலைவர், பெருந்தலைவர், முனிசிபல் சேர்மென் ஆகியவர்களுக்கு அங்கேயுள்ள அதிகாரத்தை மேற்பார்வையிடும் அதிகாரம் நேரிடையாகக் கிடையாது. ஆனால் அவர்களைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக டெலிபோன் பில் தாங்கமுடியாமல் இருக்கிறது. அதை இன்னும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-05 மணி.

இன்னுமொன்று, இந்த வருகைப் பதிவேடு என்ற முறையை மாற்ற வேண்டும். அதற்கேற்ற முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும். சட்டசபைக்கு வருகிற எம்.எல்.ஏ.க்கள், ஹாஸ்டலுக்கு மாத்திரம் வருகிற எம்.எல்.ஏக்கள் வறாண்டா எம்.எல்.ஏ.—க்கள் என்று மூன்று வகையாக இருக்கிறார்கள். யாராக இருந்தாலும் அவருடைய இருக்கையில் வந்து கையெழுத்து போடக்கூடிய வகையிலே ஒரு 'பெர்மனென்ட்' அட்டென்டன்ஸ் ரெஜிஸ்டர்' ஒவ்வொரு எம். எல். ஏ.க்கும் தனியாக சிறிய டைரி மாதிரி போட்டு, அன்றாடம் சட்டமன்ற செயலாளர் அதைச் சரிபார்க்கக் கூடிய முறையை உருவாக்கினால் நிச்சயமாக அவர்கள் உள்ளே வருவார்கள். ஏதோ சட்டசபைக்கு வருவது, வராண்டாவில் இருந்து கையெழுத்து போடுவது — அதுவும் வரும்போது கூட பெரிய மிலிட்டரி பிரிகேடியர் வருகிற மாதிரி — ஐந்தாறு வண்டிகளில் ரவுடிகளை ஏற்றிக்கொண்டு வருவது என்றால் இதெல்லாம் சட்டசபையை அவமானப்படுத்துகிற முறை. உள்ளே வந்தால் மட்டும் என்ன பயன், எல்லோரும் பேச முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூடக் கேட்டார். உள்ளே வந்து பேசுவது மாத்திரமல்ல, உள்ளே சட்ட மன்றத்தில் அமர்வது, விவாதங்களைக் கவனிப்பது அதன்மூலம் பயிற்சி பெறுவது, வாய்ப்பு ஏற்படும் போது பேசுவது என்று இங்கே பல கடமைகள் இருக்கின்றன. ஏறத்தாழ

இரண்டு லட்சம் வாக்காளர்கள் இங்கே நம்மை அனுப்பியது வராண்டா வரைக்கும் வருவதற்கு அல்ல. உள்ளே வர வேண்டும், சட்டசபை விவாதத்தில் பேச வேண்டும்....

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். சொல்வதற்கு அவருக்கு முழு உரிமை உண்டு. இருந்தாலும் கட்சித் தொண்டர்களை ரவுடிகள் என்று அழைத்த சொல் இங்கே பொருத்தம் தானா என்று மட்டும் கேட்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, கட்சித் தொண்டர்களை ரவுடிகள் என்று நான் சொல்ல மாட்டேன். நானே ஒரு கட்சியின் தொண்டன். ஆனால் ரவுடிகளைக் கட்சியில் சேர்த்து அவர்களைத் தொண்டர்கள் என்று ஞான ஸ்நானம் கொடுப்பது பொருத்தமல்ல. இந்த விவாதத்திற்கு சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூட நீங்களே விருதுநகருக்கு வந்தீர்களானால் அந்த நிலைமையை நான் உங்களுக்குத் தெளிவாக்க முடியும். நீங்கள் குறிப்பிடுகிற நபருக்கு என்ன தொழில், இருக்கிற வசதி என்ன....

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, சொல்வதாக இருந்தால் நான் சீனிவாசன் அவர்கள் இருக்கிற இடத்திலும் எப்படிப்பட்ட ரவுடிகள் இருக்கிறார்கள் என்று நான் சொல்லத் தொடங்குவேன். இப்படி ஒவ்வொன்றும் தேவையில்லாமல் போய்க் கொண்டிருக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, I regret very much. மரியாதைக்குரிய, கண்ணியம் மிக்க வார்த்தைகளை எப்போதும் அளந்து பேசுகிற திரு. குமரி அனந்தன் அவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அதை நீதிமன்றம் முடிவு செய்யட்டும். கொலை செய்தவர்கள் யாராக இருந்தாலும் குற்றவாளி தான், இல்லையென்று சொல்லவில்லை. நீதிமன்றம் முடிவு செய்யட்டும். அதற்குப் பதிலாக இங்கே நாம் சாட்சியத்தை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம் என்பது தான் என்னுடைய நோக்கமே தவிர வேறு எதுவுமில்லை. நீங்கள் சொன்ன பாராட்டு வார்த்தைகளுக்கு நன்றி. அதிலேயிருந்து நான் மீறவே மாட்டேன். நழுவ மாட்டேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட மன்றத்திலே கடந்த காலத்தில் மிக மரியாதைக்குரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, பி. ஆர்., மணலி கந்தசாமி, ஜீவானந்தம் போன்ற பெரிய பெரிய தலைவர்கள் இந்திய சரித்திரத்தில் தங்களுடைய வாழ்க்கையை வரலாறாகப் பொறித்தவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இங்கே வந்து உள்ளே சும்மா உட்கார்ந்

தால் போதும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தியாகத்தை வாழ்க்கையாகக் கொண்டவர். அவர் முதலமைச்சராக இருந்த போது இங்கே அதிகமாகப் பேசிய தில்லை. ஆனால் தவறாமல் சட்டமன்றத்தில் வந்து உட்கார்ந்து கொண்டிருப்பார். சில நேரங்களில் உட்கார்ந்த படியே 'ஆப் தி ரெக்கார்டு' என்ற வகையில் சில கமெண்ட்ஸ் அடிக்கும்போது சபையே 'கொல்' என்று சிரிக்கும். அந்த அளவிற்கு அவர் பொறுப்போடு இங்கே இருந்தார்.

ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சித் தலைவர் என்றால், முதலமைச்சர் என்றால் இரண்டு பேரும் ஒன்று தான். எதிர்க்கட்சித் தலைவர் வரக்கூடாது என்பதல்ல. இது ஒரு விசித்திரமான ஜனநாயகம். பத்தாண்டு காலம் தமிழ் நாட்டைப் பிடித்தது ஒரு அமாவாசை காலம். அந்த அமாவாசை காலத்தினுடைய பின் விளைவுகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, வந்து பேசலாம். இன்று நம்முடைய முதல்வர் அவர்கள் அருமையான வாதத் திறமையுள்ளவர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வோம். வார்த்தைகளில் அவர் விளையாடுகிற அந்த அற்புதத்தை நம்முடைய நாடும், தமிழறிந்த அத்தனைபேரும் பாராட்டுகிறார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, 1984-ஆம் ஆண்டு வரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது இங்கே பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு துர்பாக்கியவசமாக இறைவன் அவரை பேசுவதற்கு வழியில்லாமல் செய்து விட்டார் என்பதால் பேசவில்லை. ஆகவே, அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றுதான் பாண்டியன் அவர்கள் கருப்புச் சட்டையின் மகிமையைச் சொன்னார்கள். இன்று இறைவனை அழைக்கிறார்கள். இது வேறு கருப்புச் சட்டையா (சிரிப்பு).

திரு பி. எச். பாண்டியன்; தலைவர் அவர்களே, அணிந்து இருக்கக்கூடிய கருப்புச் சட்டை நாட்டில் வெளியே நடைபெறக் கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள், சட்டமன்றத்தின் உள்ளே நடைபெறக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளுக்காகத் தான். அதற்காகத் தான் இதை நான் அணிந்திருக்கிறேனேயொழிய வேறு எதற்கும் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி; தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்த அவை தெரிந்து கொள்ள விரும்புவது நாடு தெரிந்து கொள்ள விரும்புவது, இறைவனுக்கும் இந்த கருப்புச் சட்டைக்கும் சம்பந்தம் உண்டா, இல்லையா? (சிரிப்பு)

1990 ஆகஸ்ட் 23]

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே' இறைவனுடைய பணியைச் செய்யக் கூடியவர்கள் இந்தக் கலர் சட்டை போட்டிருக்கிறார்கள் கருப்புச் சட்டை போட்டிருக்கிறார்கள். எல்லா மதத்திலும் இதை போட்டிருக்கிறார்கள், இந்தச் சட்டைக்கு ஒரு தனி மரியாதை உண்டு. இங்கேயும் கருப்புச் சட்டை இருந்தால்தான் பேசுவதற்கு ஒரு வேகம் வரும் வக்கீல் மாதிரி. கோர்ட்டுக்குப் போகும்போது ஏன் கருப்பு கோட் போடுகிறோம். வேறு கலர் போடவில்லை. ஆகவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1984 வரை பேசியிருக்கிறார்கள். வந்திருக்கிறார்கள். 1984-க்குப் பிறகு நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். அதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

11-10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. சீனிவாசன் அவர்கள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இங்கே பேசவில்லை என்றே சொல்லவில்லை. சொல்லாத ஒன்றுக்கு வாதம் தேவை இல்லை

திரு. பி. எச். பாண்டியன்: 10 ஆண்டுக் காலம் அமாவாசை என்று சொல்லிவிட்டார்கள். அது தவறு. (குறுக்கீடு.) இல்லை, இல்லை. அந்த மாதிரி வார்த்தையைச் சொல்லியிருக்கக் கூடாது. 10 ஆண்டுக் காலத்தில் இந்த நாட்டில் மக்கள் வாழவில்லையா? 10 ஆண்டுக் காலத்தில் பஸ்கள் ஓடவில்லையா? (குறுக்கீடு) 10 ஆண்டுக் காலத்தில் மக்கள் வாழவில்லையா? 10 ஆண்டுக்காலத்தில் பள்ளிக் கூடங்கள் இல்லையா? 10 ஆண்டுக் காலத்தில், ஆஸ்பத்திரிகள் இல்லையா? 10 ஆண்டுக் காலத்தில் போக்குவரத்து இல்லையா? 10 ஆண்டுக் காலத்தில் மக்கள் நிம்மதியாக வாழவில்லையா? 10 ஆண்டுக் காலம் ஆட்சி இருந்தது. 10 ஆண்டுக் காலத்தில் எந்த அதிகாரிகள் இருந்தார்களோ. அதே அதிகாரிகள்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலத்தில் எந்த எம்.எல்.ஏக்கள் இருந்தார்களோ, அதே எம். எல். ஏக்கள் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலத்தில் எத்தனை கட்சிகள் இருந்ததோ, அதே கட்சிகள் தான் இன்றைக்கும் இருக்கின்றன. இன்றைக்கு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தான் இல்லை.

திரு. பெ. சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்கள், நான் சொல்ல வந்த ஒரு கருத்தை திரு பாண்டியன் அவர்கள் எங்கேயோ இழுத்துச் சென்றுவிட்டார்கள். எம். ஜி. ஆர். அவர்கள் அவ்வளவு உடல் நலிவோடு இருந்தபோதுகூட இந்த அசெம்பிளிக்கு வந்தார்கள். எனக்கு ஒரு நல்ல பாயின்ட்டை எடுத்துக் கொடுத்தார்கள். ஆகவே இன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்களுடைய சீடர்கள் வெளிநடப்பு செய்வதற்கென்றே சட்டசபைக்கு வருகிறார்கள். ஆகவே வெளிநடப்பு செய்தால் குறைந்த அளவு அந்த டி.ஏ.-வையாவது நீங்கள் கட் செய்ய வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, அது நடப்பது அரசியல். நான் கூட சில நண்பர்களிடத்திலே கேட்டேன், 'எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சியைக் கொண்டு வருவோம் என்று இரண்டு பேரும் சொல்கிறீர்கள், எப்படிப்பா கொண்டுவரப் போகிறாய்' என்று. ஒரு ஆளும் கட்சியை எதிர்க்கவேண்டும் அல்லவா? முதலமைச்சர் அவர்கள் தவறாக நினைக்கக்கூடாது. 29 பேர்கள் இருக்கிறார்கள். ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுக்கவில்லை, ஆட்சி மீது. 24 பேர்கள் இருந்தால் போதுமல்லவா? இப்படி இருந்தால் எப்படி எம்.ஜி.ஆர். ஆட்சி வரும்? அதனால் இரண்டு பேரும் எம்.ஜி.ஆர். பெயரைச் சொல்லி வியாபாரம் பண்ணப் பார்க்கிறார்கள். (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன் : நன்றி. ஆக, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்து தங்களுடைய பணியை ஆற்றவேண்டிய முறையிலே ஆற்ற வேண்டும். வெளியே ஏராளமான வேலைகள் இருந்தாலும் கூட, சட்டசபை கூடுகின்ற அந்த நாட்களில் இங்கே அமைச்சர்கள் அறிகின்ற வகையில், நம்முடைய கருத்துக்களைப் பற்றி, நாட்டு நிலவரத்தைப் பற்றிப் பேசவேண்டுமே தவிர, இப்படி வெளிநடப்புச் செய்வதையே ஒரு முறையாக வைத்துக் கொள்ளக் கூடாது. இதற்கு விதிமுறைகளை நீங்கள் தயவு செய்து திருத்த வேண்டும் என்று நான் இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எல்லா எம். எல். ஏ. க்களுக்கும் பொதுவான ஒரு கோரிக்கை, ஒரு உதவியாளர் வேண்டும் என்பது. எங்களுக்கு மிகுந்த சிரமமாக இருக்கிறது. நாங்களே எழுதி, எழுதி கை விரல்கள் எல்லாம் தேய்ந்து போகக் கூடிய நிலைமை. ஆகவே மிகக் குறைந்த அளவு இந்த மக்கள் நலப் பணியாளர்களிலிருந்தாவது ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவியாளரை வைத்துக் கொள்ளக் கூடிய உரிமையை முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும். தொகுதியிலே போகும்போது இது எங்களுக்கு அத்தியாவசியமாக இருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : திரு. பெ. சீனிவாசன் அவர்கள் உதவியாளரைக் கேட்கிறார்களே, அது ஆண் உதவியாளரா, அல்லது பெண் உதவியாளரா, யார் வேண்டும் என்று கேட்கிறார்கள்? (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன் ; பெரியவர் தீட்சிதருடைய சுவைக்கேற்ற வகையிலே வைத்துக் கொள்ளலாம். (சிரிப்பு) எனக்கு ஆண் உதவியாளரே போதும். ஏன் என்றால், பெண் உதவியாளரை வைத்துக் கொண்டு, அது உதவி என்பது பின்னாலே உபத்திரவமாகவே மாறிவிடும். ஆகவே அந்த மக்கள் நலப் பணியாளர்களிலிருந்தாவது எங்களுக்குப் பொருத்தமான உதவி

யாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிற ஒரு உரிமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சம்பள உயர்வுக்கு நன்றி தெரிவிக்கின்ற நேரத்தில் விலைவாசி உயர்வையும் கொஞ்சம் கருத்திலே கொண்டு, வருங் காலத்திலே இதைப் போல இன்னும் கொஞ்சம் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆர். சிங்காரம்: பாயிண்ட் ஆப் கிளாரிபிகேசன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கக் கூடாது,. இங்கே வந்து பணியாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் நான்கு நாட்களாக பல ஒத்திவைப்புத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறேன்.ஒன்று கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எடுத்துக் கொள்ளப்படவில்லை. பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டேன். கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை இந்தச் சட்டமன்ற உறுப்பினர் பெற்றிருக்கிறாரே, இதையெல்லாம் நீங்கள் ஆமோதிக்கிறீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப்பற்றி எல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேச வேண்டும். உட் காருங்கள்.

திரு. கே. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, இந்த சம்பள பில் சம்பந்தப்பட்ட விஷயத்தில், சம்பளங்களைக் கூட்டச் சொல்லி, நாங்கள் கேட்கவில்லை. நாங்கள் கேட்பது எல்லாம், தொகுதிகளிலே வேலை செய்வதற்கு சில வசதிகளை உண்மையாகவே அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டியது அவசியம். மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட சில வசதிகளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செய்து கொடுத்திருப்பதை நமது அரசாங்கம் கவனத்தில் எடுத்து, இங்கேயிருக்கிற நிலை மைக்கு ஆவன செய்வது நல்லது.

11-15 மணி

அதில் முதல் கடமையாக ஒவ்வொரு தொகுதியிலும் அந்த சட்டமன்ற உறுப்பினர் செயல்படுவதற்கான ஒரு சிறிய காரியா லயத்தை அரசாங்கம் அமைத்துத் தர வேண்டும். அவரவர் ஞடைய கட்சிக் காரியாலயத்திலே வைத்து ஒரு சட்ட மன்ற தொகுதியிலுள்ள எல்லா கட்சிகளையும் சேர்ந்த, பொதுமக்களு டைய காரியங்களைச் செய்வது என்பது சரியானதல்ல. அது

கஷ்டத்தை உண்டாக்குகிறது. ஆகவே ஒரு சிறு காரியாலயத்தை அரசாங்கம் அமைத்துத் தர வேண்டும். எந்த எம்.எல்.ஏ. மாறினாலும் அந்தக் காரியாலயம் தொடர்ந்து இருக்கும். சந்நியாசி சத்திரத்திலே வந்து தங்கி விட்டுப் போவார், சத்திரம் தொடர்ந்து இருக்கும். எம்.எல்.ஏ. சந்நியாசி அல்ல. ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். ஆகவே ஒரு காரியாலயத்தை அமைத்துத் தரவேண்டும்.

இரண்டாவது, எழுத்து வேலைகள் ஏராளமாக வருகிறது. அதற்குக் காரணம் எம்.எல்.ஏ. க்கள் மட்டும் அல்ல. இன்றைக்கு சமூகத்தில் இருக்கும்படியான பெரிய நெருக்கடியினுடைய பிரதி பலிப்பு அது. நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வருகிறது. இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் காரியாலயத்திற்கு எத்தனை ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விண்ணப்பங்கள் வந்திருக்கும் என்பதை நாம் இந்தச் சமயத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்களுக்கு அதனுடைய ஒரு பகுதியாவது வருகிறது. அவற்றை கவனித்துக் கொள்வதற்கு கொஞ்சம் விவரமான, ஒரு டைப் வேலை தெரிந்து இருக்கக் கூடிய, கடிதங்களை எழுதக் கூடிய, அதே மாதிரி அரசாங்கத்தினுடைய பல்வேறு இலாக்காக்களுக்கு விவரங்களை தெரிவிக்கக் கூடிய, ஒரு தந்தி கொடுக்கக் கூடிய, ஒரு டெலக்ஸ் மெசேஜ் கொடுக்கக் கூடிய இப்படிப்பட்ட பயிற்சி பெற்ற ஒரு நபரை எங்களுக்கு உதவியாளராக அதற்கு என்ன பெயரைப் போட்டாலும் சரி, அது அரசாங்கத்தினுடைய ஊழியராக இருக்க வேண்டும். அது இல்லையென்றால், அந்தப் பொறுப்பை எங்கள் தலையில் சுமத்துவதினால் நீங்கள் கொடுக்கின்ற சம்பளத்தினுடைய ஒரு நல்ல பகுதி போய்விடும் அதில். அந்தக் காரியத்தை இரண்டாவதாகச் செய்யவேண்டும்.

மூன்றாவதாக, சர்வீஸ் ஸ்டாம்ப் ஏன் எம்.எல்.ஏ.க்களுக்குக் கொடுக்கக் கூடாது? இப்போதுதான் ஒரு சாதாரண கடிதத்திற்குக் கூட ஒரு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டிய நிலைமை வந்தாகிவிட்டது. அதற்கு மேலே ரிஜிஸ்டர் தபாலுக்கு ரொம்ப ஜாஸ்தி. அது எல்லோருக்கும் தெரியும். அதை விளக்க வேண்டிய தேவையில்லை. அதனால் சர்வீஸ் ஸ்டாம்ப் உபயோகப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து அந்த சர்வீஸ் ஸ்டாம்ப் தருவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மென்ட் கொடுக்கிறீர்கள். நாங்கள் எல்லாம் அனேகமாக மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மென்ட் பக்கமே போனது கிடையாது. தொடர்ந்து நாங்கள்பல சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டு இருக்கிறவர்கள். நான் சொல்வது வேறு ஒன்றுமில்லை. இந்தியன் மெடிசினாக இருக்கக் கூடிய ஆயுர் வேதிக், சித்தா இந்த மருந்துகளுக்கான ரிஜிஸ்டர்டு மெடிக்கல் பிராக்டிஷனர்களும், ரிஜிஸ்டர்டு ஆஸ்பத்திரிகளும் இருப்

பதால், இந்திய மருத்துவ முறைகளையும் வைத்து, அவைகளில் வைத்தியம் செய்து கொள்பவர்களுக்கும், சரியான அத்தாட்சியோடு, அந்த வியாதிக்காட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அதற்கான வவுச்சர்கள், பில்களை சட்டப்படி ப்ரடியூஸ் பண்ணினால் அதையும் ஏற்றுக் கொண்டு அந்த மெடிக்கல் ரீ-இம்பர்ஸ்மென்ட் செய்து தர வேண்டும். அது ஆங்கில முறை வைத்தியத்திற்கு மட்டும் என்ற நிலை இருக்கக் கூடாது என்பதையும் நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பதிலுரையாக விளக்க உரை எதுவும் நிகழ்த்த வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அடுத்து இலங்கைத் தமிழர் குறித்த தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் இதில் நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஏற்கெனவே இந்த அவையில் நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி விவாதிக்கப்பட்ட மானியத்தில் உறுப்பினர்கள் பலரும் எழுப்பிய கோரிக்கைகளின் அடிப்படையில் அன்றைக்கே அவையின் முன்னவர் கல்வி அமைச்சர் அவர்களால் அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட பல சம்பள விகிதங்களுக்கான சட்டமுன்வடிவு இன்று சட்டமாக ஆகிறது என்பதே தவிர, வேறு ஒன்றும் இதில் புதுமை இல்லை. இதிலே ஒரேயொரு திருத்தம். அரசுக் கொறடாவையும் பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் ஆகியோருடைய வரிசையிலே இணைத்து அவர்களுக்கு உள்ள வசதிவாய்ப்புகள், ஊதியம் இவைகள் தரப்படுவதற்கான திருத்தம் அரசின் சார்பில் தரப்பட்டிருக்கின்றது. முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் வழங்கப்பட்ட சம்பளம் ரூ. 2,100 என்பதிலிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. பேரவைத் துணைத் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், அரசுக் கொறடா ஆகியோருடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,900 என்பதிலிருந்து ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

11-20 மணி

உறுப்பினர்களுக்கு 600 ரூபாய் என்று இருந்தது, ஆயிரமாக உயர்த்தப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுப் படி மாதம் ஒன்றுக்கு 700 ரூபாய் என்று இருந்தது, 800 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. தொலைபேசிப் படி திங்கள் ஒன்றுக்கு 480 ரூபாய் என்பது 700 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. எனவே இதுவரையில் 1,750 ரூபாய் என்ற அளவுக்குப் பெற்றுக் கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் 2,500 ரூபாய் வழங்கப்படுகின்றது என்ற ஒரு நிலையிலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு வீடு, கார், செக்யூரிட்டி, கன்மேன் போன்றவைகளெல்லாம் வழங்குவதற்கும் ஏற்கெனவே உத்திரவு இடப்பட்டிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் பேசும்போது உறுப்பினர்கள் உள்ளே வந்து கடமையை ஆற்ற வேண்டும், கையெழுத்து மாத்திரம் போட்டு விட்டுப் போகக் கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி சட்டமன்ற விதிகளை ஆராய்ந்து—சட்டமன்ற விதிகளை வகுக்கும்போது அந்த விதிகளுக்காக அமைக்கப்பட்ட குழு இதனை ஆலோசித்து முடிவு எடுத்து— அந்த விதியை அதிலே இணைக்க வேண்டும். அது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஜனநாயகத்திலே ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று சொல்வார்கள். எதிர்க்கட்சிக்கு உரிய மதிப்பினை ஆளும் கட்சி தருவதும், ஆளுங்கட்சிக்கு உரிய மதிப்பை எதிர்க்கட்சி தருவதும்— எவ்வளவு தான் காரசாரமான விவாதத்தை—சூடான பேச்சுக்கள் இருந்தாலும் கூட—அதிலே மனத்திற்குள் வெம்மை இல்லாமல் நாடு நலிவின்றி நடப்பதற்கான ஒரு ஒளி இருக்க வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்தினுடைய இலக்கணம். எதிர்க்கட்சி என்பது—எண்ணிக்கையில் அதிகமாக உள்ள கட்சியை மாத்திரம் நான் குறிப்பிடவில்லை, எல்லாக் கட்சிகளும், தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட—

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''

என்ற குறளுக்கு ஏற்ப, அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியவைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பிலே உள்ள கட்சிகளாகத்தான் இருக்கின்றன. அந்த நிலையிலே பணியாற்றுகிற கட்சிகளை இங்கே நான் பாராட்டினாலும் கூட, பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையில் நேற்றையதினம் கூட சட்டமன்றத் தலைவர் அவர்களிடத்திலே கொடுத்து விட்டுப் போன தாளில்—ஆளும் கட்சியினுடைய தலைவனாக உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள—முதலமைச்சராக இருக்கின்ற என்னைப் பற்றி படிப்பதற்கே கண் கூசக்கூடிய அளவுக்கு எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். ஏதோ எதிர்க்கட்சியைப் பிளந்து அதன் மூலமாக என்னுடைய எதிர்கால வாழ்வை நான் சரிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன் என்றும் ‘ஏய் கருணாநிதி, நீ ஆட்சிக்கு ஒரு கேடு’ என்பதைப்போல வாடா, போடா என்கிற வகையிலே எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். இது எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணம் அல்ல.

இங்கே மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தினை, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்தினை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தினை மாட்டி வைத்திருக்கின்றோம். இங்கிருக்கிற எல்லாப் படங்களுக்கும் மேலாக உத்தமர் காந்தியடிகளுடைய படமும்

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

இருக்கிறது. அந்த வகையில் இந்த அவையிலே நாம் பரிமாறிக் கொள்கின்ற வார்த்தைகளிலே கண்ணியம் இருக்க வேண்டும். நாம் ஆற்ற வேண்டிய கடமையைப் பொறுத்து இடையிலே கடுமையான வார்த்தைகள் வந்தாலும் கூட—கடமைக்கும் கடுமைக்கும் இடையிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. ஒரு எழுத்துதான் வித்தியாசம்—அந்தக் கடமைக்காக சில நேரங் களில் கடுமை தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து அதற்குப் பிறகு தோழமையோடு பழகக் கூடிய ஒரு பண்பை, அரசியல் நாகரிகத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக் கிறோம்.

எதிர்க்கட்சியைப் பிளக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு என்றைக்கும் இல்லை. அவர்களே அவர்களுக்குள்ளே இருப்பவர்களை நீக்கிக்கொண்டு அவர்களே இரண்டாகப் பிரிந்து போய், 'இதற்கு எல்லாம் காரணம் முதலமைச்சர்தான், கருணாநிதிதான்' என்று கூறுவது சரியல்ல. ஆளும் கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு இன்றைக்கு நடுநிலை யாக இருந்து தீர்ப்பு வழங்குகிற அவைத் தலைவராகிய பேரவைத் தலைவர் அவர்களே கூட அன்றைக்கு திருக்குறளில் 'உட்பகை கூடாது' என்கிற அந்தக் குறளோடுதான் இந்த அவையைத் தொடங்கினார்கள். அதே உணர்வோடுதான் நானும் இருக்கிறேனே அல்லாமல் யாருக்கும் விரோதமாகச் செயல்பட்டு கட்சியைப் பிளக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. ஏனென்றால் இந்த அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி நான் இந்த அவையிலே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த சம்பள விகிதங்களின் உயர்வை இந்த அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-25 மணி

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அன்றைக்கு விஜயராகவன் எடுத்துச் சொன்ன கருத்தை இந்த அரசு மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் இந்த நேரத்திலே விவாதிக்கப்பட வேண்டிய வைகள் அல்ல; சட்டமன்றத்தைப் பற்றியோ அல்லது வேறு பல திட்டங்களைப் பற்றியோ நிதிநிலை அறிக்கையிலே பேசும் போது விவாதிக்கப்பட வேண்டிய கருத்துக்கள். அதனால் இன் றைக்கு நான் அவைகளை அலட்சியப்படுத்திவிட்டேன் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் எடுத்துக் காட்டி, சீனி வாசன் அவர்கள் சொன்னார்கள், ஒரு ஊராட்சி மன்றத் தலைவருக்கு, ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற அதிகாரம் கூட எம். எல். ஏ.க்களுக்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டில் எம்.எல்.ஏக்கள் என்றால் எம்.பி.க்கள் என்றால் அப்படி பழகிவிட்டோம். உண்மையிலேயே ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான், ஒன்றியத் தலைவர்கள்தான்

மக்களோடு இணைந்து அவர்களுக்குத் தேவையான பணிகளை, சேவைகளை, திட்டங்களை, வளர்ச்சிக் காரியங்களைச் செய்ய வேண்டியவர்கள். ஆனால் நம்முடைய நாட்டில் எப்படி பழகி விட்டோம் என்றால் சட்டமன்றத்திற்கு வருவது சட்டங்களை இயற்றுவதற்காக, நாட்டுக்குத் தேவையான சட்டங்களைப் பற்றி ஆராய்வதற்காக, அவைகளைப் பெரும்பான்மையாக இருந்து நிறைவேற்றிக் கொடுப்பதற்காகத்தான் சட்டமன்றம் இருக்கிறது. ஆனால் இங்கே ஒரு எம். எல். ஏ., எம்.பி. ஆனால் தொகுதிக்கு எத்தனை முறை வந்தாய் என்று கேட்கின்ற அளவிற்கு ஒரு பழக்கத்தை உண்டாக்கிவிட்ட காரணத்தால் ஒரு ஒன்றியத் தலைவருக்கு இருப்பதைப் போன்ற அதிகாரங்கள் எம்.எல்.ஏ. க்களுக்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. அது சரியா, தவறா என்ற விவாதத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை. அப்படி ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலைக்கு ஏற்ப சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் தொடர்ந்து பரிசீலித்து அடுத்தடுத்து வருகின்ற இதுபோன்ற பிரச்சினைகள் ஆராயப்படும்போது இயன்றதை இந்த அரசு செய்யும் என்பதை உறுதியாகத் தெரிவித்து இந்த சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;**

For clause 5, substitute the following clause, namely:—

"5. *Amendment of section* 6-A.—In section 6-A of the principal Act,—

(1) in sub-section (1), for the expression "one thousand and nine hundred rupees per mensem", the expression "two thousand and seven hundred rupees per mensem" shall be substituted;

(2) in sub-section (2),—

(i) for the expression "in addition to the salary to which he is entitled under section 12", the expression "a salary of two thousand and seven hundred rupees per mensem and" shall be substituted;

(ii) the following proviso shall be added, namely:—

"Provided that clause (*a*) of sub-section (1) of section 12 shall not apply to the holder of the office mentioned in this sub-section.""

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 5 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு-6,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

In clause 6, for sub-clause (2), *substitute* the following sub-clause, namely :—

"(2) in sub-section (1-A), for the expression "and 6 and in sub-section (1) of section 6-A shall be entitled to receive a compensatory allowance of seven hundred rupees per mensem", the expression "6 and 6-A shall be entitled to receive a compensatory allowance of eight hundred rupees per mensum" shall be substituted.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 6 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 7 மற்றும் 8 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்!

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

1990 ஆகஸ்ட் 23]

(இ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

11–30 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற மாநகராட்சித் தேர்தல்கள் வருகின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று எனது கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற ஆசைப்படுகின்றேன். மாவட்டங்கள், புதிய மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் மாவட்டத்தின் தலைநகரங்கள் ஏராளமாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றினுடைய வளர்ச்சியும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நகரைச் சுற்றி இருக்கும்படியான கழனி நிலங்கள், காடுகள் வீடு கட்டும் மனைகளாகப் பிரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. நிலங்களின் விலைகளும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு நகரங்கள் பெருகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவித்ததைப் போன்று, வீடு கட்டும்படியான டவுன் பிளானிங் சட்டத் திருத்தத்தை விரைவுபடுத்தி அமல்படுத்தவேண்டும். ஏனெனில், ரோடுகள், ஓடைகள், மின்சார விளக்குகள் இல்லாமலே நிலங்களை விற்கக்கூடிய, லே-அவுட் போட்டு விற்கும்படியான நபர்கள் விற்று விடுகிறார்கள். குடியிருப்பதற்குத் தேவைப்படுகின்ற மக்கள் நிலங்களை வாங்கி வீடு கட்ட முடியாத நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது.

எனவே, இத்தகைய நிலங்களை வாங்கி மனையடிகளாகப் பிரித்து விற்கக்கூடிய நபர்களிடத்தில் மாநில அரசு அறிவித்ததைப் போன்று சாலை வசதி, மின்சார வசதி, ஓடை வசதி போன்ற வசதிகளைச் செய்து மனையடிகளாகப் பிரித்து

*20-8-1990 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

விற்கும்படியான நிர்பந்தத்தை அரசு கொண்டு வந்து அமல் படுத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற் புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோலவே, இந்த நக ராட்சிகள் சுய நிதியில் இயங்குவதற்கு முடியாத நிலை நீடித்துக் கொண்டே இருக்கிறது. நகராட்சிகளுக்கு மாநில அரசு கொடுக்க வேண்டிய மானியங்கள் காலத்தில் கிடைக்காத நிலை நீடித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நகராட்சிகள் சுய நிதி நிலையில் ஆட்சி நடத்துவதற்கு, நகராட்சி நிர்வாகத்தைக் கொண்டு செல்வதற்கு, அபிவிருத்திகளைச் செய்வதற்கு இந்த நகராட்சி கள், கடைகள், திருமண மண்டபங்கள், டவுன் ஹால்கள் போன்ற வசதிகளைச் செய்து வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு ஆக் கப்பூர்வமான சில நடவடிக்கைகளை மாநில அரசு இந்த நகராட்சிகளுக்கு நிதியுதவி செய்து, கடனுதவி செய்து சுய நிதியை நிறைவேற்றவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். எவ்வாறு மாநில அரசு மத்திய அரசிடம் நிதியுதவியை எதிர்பார்த்து நிற்கின்றதோ அது போல் மாநிலத்தின் நிர்வாகத்தை, மாநில அரசை எதிர்பார்த்து இந்த நகராட்சிகளின் நிதிநிலை இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமுதாயத்தின் அடித் தட்டு மக்களான அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளையும், கோரிக்கைகளையும் அறிவித்து இருக்கின்றார்கள். நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அவைகள் காலத்தில் அந்த மக்களுக்குக் கிடைப்பதற்கு உதவி யாக சட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, துப்புரவுப் பணியில் மிகவும் பின்தங்கிய நிலை நீடிக்கின்றது, போதிய அளவுக்கு ஜனப் பெருக்கமும், குடியிருப்புகளும் அதிகரித்ததற்குப் பிறகும் அந்த மக்களுக்குச் செய்யவேண்டிய சுகாதார வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. குப்பைகள் எடுப்பதற்கு, மலங்களை அப்புறப்படுத்துவதற்கு, சாலைகளைப் பெருக்குவதற்கு, அபிவிருத்தி விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்கு துப்புரவுப் பணியாளர்களை நியமிப்பதிலும் இன்றைக்குக் குறைபாடு இருக்கின்றது. போதிய ஊழியர்கள் இல்லாத நிலை நீடிக்கின்றது. எல்லா நகராட்சிகளும் தமிழக அரசிற்குத் தீர்மானங்களை நிறைவேற்றி, துப்புரவு ஊழியர் களை அதிகப்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கின் றார்கள். அதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்தி, ஜனத் தொகை பெருகிய அளவிற்கு மாநகராட்சிகளாக ஆன பிற்பாடு, ஊராட்சிகள் பேரூராட்சிகளாக ஆன பிற்பாடு, பேரூராட்சிகள், நகராட்சிகளாக ஆன பிற்பாடு, இந்தத் துப்புரவுப் பணியாளர்களை அதிகப்படுத்தாத நிலை நீடிப் பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஏராளமான நாட்கூலித் தொழிலாளர்களாக, கேங்க் கூலிகள், துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்

கிறார்கள். அரசு விதிப்படி 480 நாள் பணி புரிந்த ஊழியர் அனைவரையும் நிரந்தரப் படுத்துவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவாகள் முன முயற்சி காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் திண்டுக்கல் நகரததில் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றிய 65 ஊழியர்களைத் திடீரென்று வேலையிலிருந்து வெளியேற்றிவிட்டு, புதிதாக நபர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தையும் மீறி, சட்ட நீதியையும், சமூக நீதியையும் மீறி பழைய ஊழியர்களை வேலை நீக்கம் செய்து புதிய ஊழியர்களை வேலைக்கு எடுத்து இருப்பது என்பது அநீதியானது. இதை எதிர்த்து ஊழியர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றமும் தடை விதித்த பிறகும் அந்த தடையை மீறி இந்த புதிய ஊழியர்களை வேலையில் சேர்த்து இருப்பது, ஒரு அரசு நிறுவனமே தான் போட்ட சட்ட நீதியை மீறுவது என்பது வேதனையானது என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவாகளின் நேரடியான கவனத்திற்குக் கொண்டுவந்து வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11—35 மணி.

எங்கள் திண்டுக்கல் நகரத்தினுடைய குடிநீர் திட்டம் நிறைவேறியதற்கு பிறகும் அங்கு பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேறாத காரணத்தால் நகரத்திலிருந்து வெளியேறும்படியான கழிவு நீர் தினசரி தேங்கி சாக்கடை குளங்களாக நிற்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அந்தக் குளங்களிலிருந்து வரும் கொசுக்கள் மக்களை மிகவும் துன்புறுத்துகிறது எனபதை இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, திண்டுக்கல் உறுப்பினர் திரு. தங்கராஜன் அவர்கள் சில கருத்துக்களை வழங்கியதைப் பற்றி சந்தோஷப்பட்டாலும் இந்த லே அவுட் போட்டு கொடுக்கின்ற சில நகராட்சிகளில் என்ன செய்கிறார்கள் என்றால் தாங்களே ரோடு போடுவதாகவும், தாங்களே லைட் போடுவதாகவும் எல்லா வசதிகளையும் தாங்களே செய்து கொடுக்கிறோம் என்று சொல்லி அந்தப் பணத்தை எங்களிடம் கட்டு என்று சொல்லிவிட்டு பல நகராட்சிகளிலே அந்தப் பணத்தைப் பெற்று வேறு விதமான வேலைகளுக்கு அதை பயன்படுத்துகிறார்கள். இன்னும் பல வருடங்கள் ஆகியும் அந்த லே அவுட்களில் ரோடு போடுவது இல்லை, லைட் போடுவது இல்லை, எந்தவிதமான சௌகரியமும் செய்யாமல் பல நகராட்சிகள் இருக்கின்றன.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 ஆகஸ்ட் 23

அதேமாதிரி பப்ளிக் பர்பஸ் என்று விடக்கூடிய இடத்திலே நகராட்சிகள் எங்களிடமே அதை ஒதுக்க வேண்டும் என்ற ஒரு வார்த்தையைப் போட்டு ஒதுக்கிய உடனே அப்படி பப்ளிக் பர்ப்பஸ்க்கு என்று விட்ட இடத்திலே பல சமூக விரோதிகளைக் கொண்டு வந்து உட்புகுத்துகின்ற காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. நான் முக்கியமாகச் சொல்கிறேன் சமூக விரோதிகள். அதேமாதிரி பிரைவேட் இடத்திலே இருக்கும்போது அந்த லே அவுட் போடும்போது அவனை அனுமதிக்கவில்லை, ஆனால் முனிசிபாலிட்டிக்கு வந்த உடனே சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு வந்து விடுகிறது. அப்படி வரும் ஆக்கிரமிப்பை எடுப்பதற்கு வகை இல்லாமல் போய் விடுகிறது, நானே சொல்கிறேன், பல கட்சிகள் அதற்கு உதாரணமாக இருக்கின்றன. அவர்கள் ஏழைகள், பாழைகள் என்று போகக்கூடிய உதாரணங்கள் இருக்கின்றன என்பதை நான் காட்டுகிறேன். அதேபோல் அந்த நகராட்சிகளில் முக்கியமான இடங்கள் ஒதுக்கப்பட்ட பலயிடங்களில் ஆக்கிர மிப்பு நடந்து இருக்கின்றன. ஐசலேட்டட் ஷெட் போன்றுள்ள பல பொது இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளை நகராட்சிகள் அகற்றாமல் இருப்ப தால் பலவிதமான சுகாதாரக் கேடுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பலவிதமான பிரச் சினைகள் இருக்கின்றன. இதையெல்லாம் மாண்புமிகு நக ராட்சித் துறை அமைச்சர் அவர்கள் சரி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மா- மன்றத்திலே என்னால் முன்மொழிந்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இங்கே பேசப்பட்டதை ஒட்டி நான் இரண் டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 7-ன் படி இதுவரை நகராட்சிகள் உட்பட்ட வார்டுகள் அனைத்திற்கும் மொத்தமாக நான்கில் ஒரு பங்கு சேர்ந்தது ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு செய்யலாம் என்ற முறை தான் இருந்தது. இந்திய தேசத்திலே முதன் முறையாக இந்த ஒதுக்கீடுகளை அமல் செய்த அரசு நம்முடைய அரசு, அதிலும் குறிப்பாக மாண்புமிகு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரசு தான். அதற்கு ஏற்கனவே ஊராட்சி மன்றத் திற்கு அறிவித்து விட்டு அதற்குப் பிறகு அண்மையிலே கூட மாநகரட்சிகள் சென்னை, கோவை மதுரை, ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் ஆதி திராவிடர்கள் பழங்குடியினர்க்கு விழுக்காடுகள் ஒதுக்கவும் அதேபோல் 30 சதவீதம் மகளிருக்கும் இட ஒதுக்கீடு ஒதுக்கவும் அதற்கு சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டு இன்று

1990 ஆகஸ்ட் 23] [திரு. கோ. சி. மணி]

11-40 மணி

தேர்தல் நடைபெறுகிற நிலையில் இருக்கிறது. அதையே ஒட்டி அதன்படி இப்போது நகராட்சிகளுக்கும் வார்டுகள் உரிய எண்ணிக்கையில் உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்தில் எல்லா ஆதி திராவிடர்கள் பழங்குடியினர்கள் நகராட்சி எல்லைக்குட்பட்ட மக்களில் ஆதி திராவிடர்கள் பழங்குடியினர் எத்தனை விழுக்காடு இருக்கிறார்களோ அத்தனை விழுக் காட்டில் வார்டுகளில் அவர்கள் நிற்கிற பகுதியை எண்ண வேண்டும் என்றும் அதேபோல் மகளிருக்கு 30 சதவீதம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் தான் இந்த சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் தங்கராஜ் அவர்கள் சில கருத்துக் களை இங்கே சொன்னார்கள். ஒரு கருத்து, மாநில அரசு, மத்திய அரசின் உதவியை நாடி நிற்பதைப்போல ஆங்காங்கு சுயநிதி இல்லாமல் ஊராட்சிகள் நகராட்சிகள் இன்றைக்கு நிற்கிறது என்ற கருத்தையும் சொல்லி அதோடுகூட போதுமான அளவுக்கு அரசு உதவி அளிக்காத காரணத்தால் பல சங்கடங்கள் வரு கின்றன என்பதையும் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றை குறிப்பிட்டுக் கூற விழைகிறேன். அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்கும் அதற்குப் பின்னாலே, 13 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இந்தப் பொறுப்பை அவர் ஏற்று முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு, நிதிநிலை அறிக்கையைப் படித்து முடித்ததற்குப் பிறகு அவ்வப்போது எந்தெந்தத் துறையில் அத்தியாவசியமான செலவினங்கள் என்று கருதி அவரிடத்தில் நிதியுதவி கேட் டோமோ அவர் அந்த அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி தந்து, இன்னும்கூட குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நேற்றைய தினம் அவர் இந்த மாமன்றத்தில் துணை மானியக் கோரிக்கையை வைத்தபோதுகூட அதில் இரண்டு மூன்று பக்கங் கள், ஊராட்சி, நகராட்சி இவைகளுக்கு, புதிய அத்தியாவசிய மான பணிகளுக்கு ஒதுக்கிய தொகையைத்தான் பின்னேற்பவர் கேட்டார் என்பதை நான் இங்கே நினைவு கூற விழைகிறேன். அவ்வளவு அதிகமான தொகைகளை நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதற்குப் பிறகு துணை மானியக் கோரிக்கைக்கு முன் னால் ஒதுக்கி அதை அளித்து அது ஆங்காங்கு விநியோகிக்கப் பட்டு அந்தப் பணிகள் தொடரப்பட்டிருக்கிறது என்பதையும், அவர் இன்றைய தினம் அளித்திருக்கிற உதவித்தொகையால் என்னென்ன பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டி யலும் சில நாட்களுக்கு முன்னாலே வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியல்கள் பணிகளாக இப்போது மாறி வந்திருக் கிறது என்பதையும் அவர்கள் நேரில் பார்க்கலாம் என்பதை நான் தெரிவித்தேன்.

துப்புரவுப் பணிகளைப் பற்றி ஒரு கருத்தை வெளியிட் டார்கள். மக்களின் எண்ணிக்கைக்கு தக்கவாறு அது இல்லை யென்று சொன்னார்கள். ஒரு துறையை நாம் ஏற்றுக்கொண்

டாலும், அதாவது தூசு படியாத நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும், அதை கூட்டிச் சுத்தம் செய்யவேண்டும் என்று ஒரு பகுதியும் அதைப்போலவே மலம் எடுத்து அதைச் சுத்தம் பண்ணவேண்டும் என்று ஒரு பகுதியும் இரண்டும் சேர்ந்து துப்புரவு பணியாக இருக்கிறது. நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் இப்போது இருக்கிற தேசிய முன்னணி அரசைப் பொறுத்தவரையில், கூடுமானவரையில், மக்கள் எடுக்கிற கழிவிடங்களில் மனிதர்கள் அப்படிப்பட்ட அந்தக் கழிப்பிடங்களில் போய் மலத்தை எடுக்கக் கூடாத அளவுக்கு அதிலே நீருற்றியாக திட்டங்களை அமைத்து அந்த எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும். அவர்களை அந்த நிலையில் மாற்றவேண்டும் என்பதற்காகத்தான் அதிலே அதிகமான எண்ணிக்கையை நாம் எடுக்கவில்லை. படிப்படியாக தன்னுடைய எண்ணிக்கையைக் குறைத்து மாற்றுப் பணிகளுக்கு அவர்களை அமர்த்துவதற்காக பல திட்டங்களை வகுத்து அதை மாற்றிக்கொண்டு வருகிறோம். மெல்ல மெல்ல அந்தச் சிக்கலும் தீர்க்கப்படும். ஓரிரு நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்தாலும் அப்படிப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் குறைவாலும் சில சங்கடங்கள் இருப்பது எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதை பிரத்தியேகமாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை தேவையென்றால் எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அத்தோடுகூட நம்முடைய மாண்புமிகு ஜனதா தளத்தின் தலைவர் தீட்சிதர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், டவுன் பிளானிங்கில் சில சங்கடங்கள் வருகிறது என்று. இதை நம்முடைய தங்கராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பிடும்போது அவர்கள் அதற்கான உரிய தொகை செலுத்தாமல், அந்தத் தொகையைச் செலுத்தாத காரணத்தாலே அதை நகராட்சி ஏற்றுக் கொள்ளாமல், தேவையான அத்தியாவசியப் பணிகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நினைவூட்டினார்கள். அதற்கு மறுத்து, நம்முடைய தீட்சிதர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சில இடங்களில் வீடு கட்டப்பட்டு, அடிப்படை வசதிகளான விளக்கு போடுதல், சாலைப் பராமரிப்பு, குடிநீர்வசதி போன்றவற்றைச் செய்கிறோம் என்று நகராட்சி மன்றத்தில் இருக்கிற அலுவலர்களும் மற்றவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணியைச் செய்யாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவல், யார் பணம் தர வேண்டுமோ அவர்கள் பணம் தராமல் இருந்தும்கூட அப்படிப்பட்ட இடங்களில்கூட சில பணிகளைப் பெருந்தன்மையோடு நகராட்சி மன்றங்களும், மாநகராட்சி மன்றமும் சேர்ந்துதான் நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். குறிப்பாக ஒன்று சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் இருக்கிற தனியார் தெரு என்று இரண்டு மூன்று மாதங்கள் வரை ஒதுக்கப்பட்டு கிடந்ததை இன்றைய தினம் நாம் எடுத்து அவைகளுக்குப் பணி

1990 ஆகஸ்ட் 23] [திரு. கோ. சி. மணி]

11-45 மணி

செய்வதற்கு பல கோடிக்கணக்கான ரூபாயை தமிழக அரசும் சென்னை மாநகராட்சியும் சேர்ந்து அந்தப் பணியைத் துவங்கி அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு இல்லாமல் தகவலை நீங்கள் தந்தால், நம்முடைய தீட்சிதர் அவர்கள் இன்ன நகராட்சியில் இன்னார் வீடு ஒதுக்கி கட்டியதற்கு கொடுக்கப்பட்ட தொகையை நகராட்சி பெற்றுக்கொண்டு அவர்கள் என்ன பணி செய்யவேண்டுமென்று சொன்னார்களோ அவர்கள் எதை ஏற்றுக்கொண்டார்களோ அதைச் செய்யவில்லை என்ற புகார் இதுவரை சட்டமன்றத்திலும் சொல்லவில்லை; தனியாகவும் என்னிடத்தில் குறிப்பிடவில்லை. இனிமேல் அப்படி குறிப்பிட்டு அவர் காட்டுவாரேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் கடந்துவிட்ட காரணத்தால், நான் குறிப்பிட்ட ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் இந்த சட்டமுன்வடிவை இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன். இட ஒதுக்கீட்டை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இந்திய தேசத்திலேயே, நாம்தான் முதலிடமாக முனைந்து கொண்டு, இந்த வரலாற்றையும், நல்ல ஒரு புதுமையையும் உண்டாக்கியிருக்கிறோம். எனவே, இதைப் பெருந்தன்மையோடு ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டி விழைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கோ. சி. மணி] [1990 ஆகஸ்ட் 23

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொத்துவரிக் கணக்குகளுக்கு சில நெறி முறைகளை—'கெய்டு லைன்ஸ்'—வரையறுத்து, கடந்த அரசு 1137 எண்ணுள்ள ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை செல்லத்தக்கதாக ஆக்குவதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொன் னால், ஏற்கனவே சொத்து வரிகளை அதிகமாக போடப்பட் டிருக்கக்கூடிய அந்த நிலையில் பலபேர் நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியும். எனவேதான், அதற்கான ஒரு சட்டத் திருத் தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். முந் தைய அரசு இதை மட்டும் செய்யவில்லை; நகராட்சிகளுக்கு இருந்த அதிகாரங்களையே பறித்தது. 5 ஆண்டுகள் என்று இருக்க வேண்டிய நகராட்சிகளின் காலத்தை 3 ஆண்டுகளாக குறைத்தது. 'அப்பீல் கமிட்டி' — வரி முறையீட்டுக் குழு இதில் நகராட்சித் தலைவர்களையே நீக்கிவிட்டு, 'ஆர்.டி.ஓ.'-க் களைப் போட்டது. வரியைக் குறைப்பதற்குக் கூட, ஐந்து சதவிகிதத்திற்கு மேல் குறைக்கக் கூடாது என்பது போன்ற பல நிர்பந்தங்களையெல்லாம், திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்தது. இதற்கு அடிப்படையான காரணம், தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே உள்ளாட்சித் தேர்தல்கள் பெரு வாரியான நகரமன்றங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எதிர்க்கட்சிகள் அதில் பெருவாரியாக வந்துவிட்டக்

* 20—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கோ. சி. மணி] [1990 ஆகஸ்ட் 23

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொத்துவரிக் கணக்குகளுக்கு சில நெறி முறைகளை—'கெய்டு லைன்ஸ்'—வரையறுத்து, கடந்த அரசு 1137 எண்ணுள்ள ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை செல்லத்தக்கதாக ஆக்குவதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொன்னால், ஏற்கனவே சொத்து வரிகளை அதிகமாக போடப்பட்டிருக்கக்கூடிய அந்த நிலையில் பலபேர் நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியும். எனவேதான், அதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். முந்தைய அரசு இதை மட்டும் செய்யவில்லை; நகராட்சிகளுக்கு இருந்த அதிகாரங்களையே பறித்தது. 5 ஆண்டுகள் என்று இருக்க வேண்டிய நகராட்சிகளின் காலத்தை 3 ஆண்டுகளாக குறைத்தது. 'அப்பீல் கமிட்டி' — வரி முறையீட்டுக் குழு இதில் நகராட்சித் தலைவர்களையே நீக்கிவிட்டு, 'ஆர்.டி.ஓ.'-க் களைப் போட்டது. வரியைக் குறைப்பதற்குக் கூட, ஐந்து சதவிகிதத்திற்கு மேல் குறைக்கக் கூடாது என்பது போன்ற பல நிர்பந்தங்களையெல்லாம், திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்தது. இதற்கு அடிப்படையான காரணம், தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே உள்ளாட்சித் தேர்தல்கள் பெருவாரியான நகரமன்றங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எதிர்க்கட்சிகள் அதில் பெருவாரியாக வந்துவிட்டக்

* 20—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

காரணத்தினால் இந்த அதிகாரப் பறிப்பைப் பூராவும் அவர்கள் செய்தார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல, நகராட்சி ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறை வேற்றி விட்டதாகவும் அவர்கள் அரசு ஊழியர்கள் என்றும் கூறினார்கள். அவர்களது கோரிக்கையைப் பரிவுடன் கவனித்து, நிறைவேற்றி விட்டதாகவும், அவர்கள் அரசு ஊழியர்கள் என்றும் 1–6–1986–லிருந்து என்றும் சொல்லப்பட்டது. இதுவும் கூட அந்த நோக்கத்திற்காகத்தான். பெருவாரியான நகராட்சிகள் இப்படிப் பட்ட எதிர்க்கட்சிகளினுடைய பிடிப்பில் வந்துவிட்ட காரணத் தினால், ஆசிரியர்களை அங்கு விட்டுவைக்கக் கூடாது என்ற கார ணத்திற்காகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது. காரணம், இதுவலரயில் 'சர்வீஸ் ரூல்ஸ்' அவர்கள் காலத்தில் போடப்படவில்லை. அதுமட்டுமல்ல, 1—6—1986–லிருந்து அவர்கள் அரசு ஊழியர்கள் என்று அறிவிக்கப்பட்டாலும்,இந்த அரசு வந்த பிறகுதான்,அவர்களுக்கு அரசின் சார்பாக ஊதியமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எனவேதான் இப்படிப்பட்ட அதிகாரப் பறிப்புகளை எல்லாம் இந்த அரசு வந்தவுடனே மீட்டுத் தந்திருக்கிறது. அதே சமயத்தில் வேறு சில பிரச்சினைகளையும் நான் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பட்ட திருத்தங்களை எல்லாம் கொண்டு வரும்போது சில முக்கிய மான குறிப்பிட்ட விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

11-50 மணி

இன்னொரு உத்தரவு என்னவென்றால், நகராட்சிகளிலே பில் கலெக்டர்களாக அந்தந்தப் பகுதிகளிலே இருப்பவர்களைப் போடலாம்; ஆனால் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அரசு அளித்த உத்தரவு என்ன இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே ரெட்ரென்ச்மென்ட் செய்யப்பட்ட வி.ஏ.ஓ.க்களை அதாவது கிராம நலப் பணியாளர்களைத்தான், வேலையிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர்களைத்தான் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.அப்படியானால் முனிசிபாலிட்டிக்கு இருக் கக்கூடிய அதிகாரம் இதன் மூலம் போனது மட்டுமல்ல; அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பில் கலெக்டர்கள் என்று சொன்னால் இந்தப் பணிகளைச் சரியான முறையில் செய்ய முடியும். நெல்லிக் குப்பத்தில் ஒரு பில் கலெக்டர் போட வேண்டும் என்று சொன் னால், செஞ்சிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆளைப் போட் டால் வேலை நடைபெறாது. அந்த உத்தரவு இன்னும் நீடிக் கிறது. எனவே அதை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத் தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. 40-க்கும் மேற்பட்ட

அரசு இலாக்காக்கள் இருக்கின்றன. எனவே உள்ளாட்சித் துறையில் மட்டும்தானா இதைச் செய்ய வேண்டும். ரெட்ரெனச்ட் வி.ஏ.ஓ.-க்களுக்கு வேறு எங்கெங்கோ வேலை கொடுப்பதற்கு, ஜூனியர் அசிஸ்டெண்ட்டாக வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் செய்யலாம். அதுமட்டுமல்ல.

நகரங்கள் வளர்ந்து வருகின்றன. மக்கள் தொகை பெருகி வருகிறது. துப்புரவுத் தொழிலாளர்களை அதிகரிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தங்கராஜ் அவர்கள் கூறினார்கள். தெருவிளக்கு அதிகமாகப் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் மின்சார வாரியம் என்ன செய்கிறது என்று சொன்னால், ஒரு கோட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 275 புது இணைப்புகள்தான் கொடுக்க முடியும் என்று அவர்கள் வரையறுத்து இருப்பதன் காரணமாக பல இடங்களில் நகராட்சிகளில் தெரு விளக்குகளைப் போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் இருட்டாக இருக்கக்கூடிய நிலைமையும், கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற இவை எல்லாம் நடைபெறக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் மின்சார வாரியத்தோடு நகராட்சி அமைச்சர் கலந்து பேசி இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னும் இங்கே நகராட்சிகளுக்கு மக்கள் நலப் பணியாளர்கள் போடப்படவில்லை. நான் என்ன கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்று சொன்னால் எப்படி ஏற்கெனவே முந்தைய அரசு ஒரு ஆணை பிறப்பித்து, அது சட்டத்தின் கீழ் நிற்குமா, நிற்காதா என்ற சூழ்நிலை வந்து அதைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் அரசு இன்றைக்கு சட்டத் திருத்தத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கிறதோ அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கின்ற வகையில் இந்த மக்கள் நலப் பணியாளர்களைப் போடும்போது சரியான விதிமுறைகளின் படி எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக எடுத்து அந்த முறையில் அரசு செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை நான் ஆதரித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் என்னால் முன்மொழியப்பட்டு இருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 1970-71-ஆம் ஆண்டில் இருந்து 1985-86ஆம் ஆண்டு வரை வரி விதிப்புச் சட்டத்தைத் திருத்தாமல் அரசு ஆணை பிறப்பித்து வசூலிக்கப்பட்டு வந்ததில் அதிகமான தொகை இருக்கிறது என்பதால் அதைக் குறைக்க வேண்டுப்

என்பதற்காக பல கோரிக்கைகள் வந்து, பிறகு ஒரு அரசாணை பிறப்பித்து அதை ரத்து செய்த பிறகும் கோரிக்கைகள் வரப்பட்டு அது இன்று முதல் அந்த நிலை இல்லாமல் போக வேண்டும் என்பதை மாற்றி, உள்ளபடியே அரசின் சட்டத்தைத் திருத்தி அதை பின்னேற்புச் செய்து முறைப்படுத்திவிட்டு அதற்கு முன்னாலேயும், இந்த அரசு வந்ததற்குப் பிறகும் அப்படிப்பட்ட வரி செலுத்துவோர் கோரிக்கைகளை ஏற்று வரி விதிப்பில் இருக்கிற தாரதன்மைகளை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு நகராட்சியில் குழு அமைத்து, அந்த நகராட்சியினுடைய மேல் முறையீட்டு மன்றங்களுக்குள்ளேயே அதைப் பரிசீலிக்கலாம் என்பதற்கும், அதற்கு முன்னால் இருந்த தடைகளை 50 சதவீதம்தான் குறைக்கலாம்— திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டது போல் 5 சதவீதம்தான் குறைக்கலாம என்று—50 சதவீதத்தை உயர்த்திவிட்டு 5 சதவீதம் தான் குறைக்கலாம்என்று அறிவித்து அந்தக் குழுவிற்கு ஒரு அதிகாரம் கொடுத்தால் அந்த அதிகாரமே சரியான அதிகாரமாக இல்லை. நல்ல முறையில் குழு இயங்க முடியாது என்ற எண்ணத்தில்தான் அதை ரத்து செய்து அவர்கள் உசிதப்படி எவ்வளவு குறைக்கவேண்டுமோ அவ்வளவு குறைக்கலாம் என்று அந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே ஏற்கெனவே போடப்பட்ட அந்த ஜி.ஓ.-க்களுக்கு பின்னேற்பைத் தான் இது தந்திருக்கிறது. அதையொட்டி நம்முடைய திரு. கோவிந்தராஜன் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மக்கள் நலப் பணியாளர்களைப் போடும்போது அதைப் பார்த்து சட்டத்திற்கு உட்பட்டுச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை எல்லாம் பரிசீலித்துச் செய்யவேண்டும் என்று இந்த அரசு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து பில் கலெக்டர்களைப் பொறுத்தவரையில் அங்கே இருப்பவர்களை இங்கே கொண்டு வந்து போடுகிறார்கள். இங்கே இருப்பவர்களை அங்கே கொண்டு வந்து போடுகிறார்கள் என்றார்கள்.

11-55 மணி

அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், ஏற்கெனவே இருந்த வீ.ஓ.-க்களை - பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களை— அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது பணிகள் தரலாம் என்ற அரசின் அறிவிப்பையொட்டி, சில நகராட்சி மன்றங்கள் இதைத் தருகிறார்கள். வேறு இலாக்காக்களில் வேலை இல்லையா என்று கேட்டார்கள். நம்முடைய இலாக்காவிலேயே தருவதைப் போல அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆங்காங்கு அந்த ஆணை போய் இருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், பில் கலெக்டர் என்பது இப்போது நகராட்சிகளுக்கு அதிகமாகத் தேவையிருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதற்குக் காரணம், இப்போது வரிகளை வரித் தண்டலர்கள் வசூலிக்கிற முறை இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்

டிருக்கிறது. ஆங்காங்கு வங்கிகளுக்குச் சென்று அவர்களாகவே வரியைக் கட்டி, அதன் மூலம் ரசீதைப் பெறும் முறை வந்தது. இந்தத் துறையிலே நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு சில பிரச்சினைகள் வந்தன. அதை மாற்ற வேண்டும், திருத்த வேண்டுமென்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். அதைப் பரிசீலித்துச் செய்கிறோம் என்று நான் சொன்னேன். ஆனால் இந்த ஆண்டு ஐந்தாறு மாதங்களில், அந்தப் பணிகள் திருப்தி கரமாக இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. குறிப்பாக இதற்கு முன்னால் வசூலித்ததை விட—வரித்தண்டலர்கள் வரி வசூலித்ததை விட—இப்போது வசூல் அதிகப்பட்டு இருக்கிறது என்றும், மக்களுக்கு சங்கடங்கள் குறைந்திருக்கின்றன என்றும் தெளிவாகத் தெரிகிறது. இனிமேல் அதைத் தொடர்ந்து பணி யாளர்களை நியமிக்கிற நிலை எந்த நகராட்சிக்கும் வராது என்பதைக் கருத்தில் கொண்டு, அப்படி ஏதாவது வருமானால் அப்பகுதிகளில் இருக்கிறவர்கள் இருந்தால்தான் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஆலோசனை வழங்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் இந்தச்சட்ட முன் வடிவு இங்கே கொண்டுவரப்பட்டது. ஏற்கெனவே அரசு வழங்கிய ஆணைகளைப் பின்னேற்கச் செய்வதற்காகவும் இனிமேல் வரி முறைகள், வரி வசூலித்தல், வரி விதித்தல் இவைகளுக்கெல்லாம் இந்த அரசு ஒரு 'கைடுலைன்ஸ்' கொடுத்துவிட்டது என்பதைத் தெரிவித்து, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக் கொள்ளுமாறு விழைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

உணவு வழங்கு நிறுவனங்கள் திருத்த சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங் கள் (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ரத்து செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் What has been stated in the Statement of Objects and Reasons is, ''....based on the suggestions of the said Committee on Labour laws, it has been decided to amend the Tamil Nadu Catering Establishments Act.'' இந்தக் குழு யாருடைய தலைமையில் போடப்பட்டது? எப்போது கூட்டம் நடந்தது? அறிக்கை வந்ததா? அது இல்லாமல் எப்படி திருத்தம் செய்ய முடியும்? That is why, I sent a petition to the Hon. Speaker raising my objection for the introduction, in the Assembly, of a Bill to amend the Catering Establishments Act. We do not know the recommendations of this Committee on Labour legislation; we do not know when the Committee was constituted, when the report of the Committee was submitted to the Government, when the report of the Committee was placed on the table of the douse, etc. That is why I have stated that to bring in the amendment to the Catering Establishments Act, based on that Heport, is improper. Therefore, I have requested the Hon. reaker kindly not to permit the Bill to be taken up for consi- reration in the House at this stage and to direct the Government to table the Report first in the House,

* 21—8—1990 அம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

உணவு வழங்கு நிறுவனங்கள் திருத்த சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங் கள் (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 41/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ரத்து செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் What has been stated in the Statement of Objects and Reasons is, ". . . . based on the suggestions of the said Committee on Labour laws, it has been decided to amend the Tamil Nadu Catering Establishments Act." இந்தக் குழு யாருடைய தலைமையில் போடப்பட்டது? எப்போது கூட்டம் நடந்தது? அறிக்கை வந்ததா? அது இல்லாமல் எப்படி திருத்தம் செய்ய முடியும்? That is why, I sent a petition to the Hon. Speaker raising my objection for the introduction, in the Assembly, of a Bill to amend the Catering Establishments Act. We do not know the recommendations of this Committee on Labour legislation; we do not know when the Committee was constituted, when the report of the Committee was submitted to the Government, when the report of the Committee was placed on the table of the douse, etc. That is why I have stated that to bring in the amendment to the Catering Establishments Act, based on that Heport, is improper. Therefore, I have requested the Hon. reaker kindly not to permit the Bill to be taken up for consi- reration in the House at this stage and to direct the Government to table the Report first in the House.

*21—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

12-00 மணி

அந்த ரிப்போர்ட் இல்லாமல் இதை இங்கே வைப்பது சரியல்ல. தயவுசெய்து நான் மனு தாக்கல் செய்கிறேன். இதை இத்தோடு, வித்ட்ரா செய்துவிட்டு ரிப்போர்ட்டை எங்களுக்குத் தாக்கல் செய்யுங்கள். அதற்குப் பிறகு நான் சொல்ல வேண்டியதை சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, He is on a point of order. The report has not been placed on the Table of the House. அது கிளீயராக இருக்கிறது. Statement of Objects and Reasons-ல் "On the basis of the report the amendments are being brought forward" கிளீயராக இருக்கிறது. Where is the report ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு இதுபோல தொழிலாளர் களுக்கு என்று இருக்கின்ற சட்டத்தில் உணவு வழங்கும் நிறுவனங் கள் திருத்தச் சட்டமுன்வடிவை திருத்த வேண்டும். இதில் இருக் கின்ற அத்தனைப் பிரிவுகளுக்கும் தனியாக சட்ட முன் வடிவு கொண்டுவர வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டு 1978-ல் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தொழிலாளர் நலத் துறை செயலாளர் அவர்களைத் தலைவராகவும். தொழிலாளர் நல ஆணையாளரை கன்வீனராகவும் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் 9 தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் 9 தொழில் அதிபர்களை கொண்டு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆராய்ந்து 1978-ல் அரசுக்கு அறிக்கை ஒன்றைத் தந்தது. அரசு அதைப் பரிசீலித்து 1981 ஆம் ஆண்டு அதைத் திருத்தச் சட்டமுன்வடிவாக கொண்டு வர வேண்டுமென்று அனுப்பியிருந்தாலும். 9 ஆண்டுகாலம் அதைக் கொண்டுவராத காரணத்தால் இந்த ஆண்டு இங்கே திருத்தச் சட்டமுன்வடிவாக கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய நகல்களை வேண்டுமானால் தருதவற்குக் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இங்கே அது தரப்படும் என்பதல்ல. என்ன அமெண்ட் மென்ட் என்று எங்களுக்கு எப்படி தெரியும்? படிப்பது என்ப தல்ல. வாசகத்தை மட்டும் வைத்திருக்கிறீர்கள். The report should be placed on the table of the House. Statements of Objects and Reasons-ல் ஒன்றும் இல்லை. What are the recommendations ? When the report was placed? அதை பிளேஸ் பண்ணீர்களா இல்லையா என்பதை சொல்லுங்கள். Unless you place a copy of the report on the table of the house, how can we argue? I request you to place the Report.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இது ஏற்கனவே இந்த அவையில் வைக்கப் பட்டது. சில நேரங்களில் இன்றைக்கு வைக்கிற சில பேப்பர் கள் அடுத்த முறை டிஸ்கஷனுக்கு வரும். அப்போது மறு படியும் வைக்க மாட்டார்கள். அதுமாதிரி வரும்போது பொறுப் புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு போய் அல்லது செயலாளரை கலந்து பேசி. அல்லது லைப்பரரிக்கு போய் வைக்கப்பட்டதை எடுத்து படித்து வர வேண்டும். நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கும்போது அதைத்தான் செய் திருக்கிறோம். அப்போதைக்கப்போது பில் வருகிற போது எல்லாம் ஒவ்வொரு அறிக்கை வைக்கமாட்டார்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. It is not correct இதை எப்படி சொல்ல முடியும் ? அப்படி என்றால் எந்த பில் வந்தாலும் லைப்பரரியில் போய் படிக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா? இங்கே வைத்திருக் கிறீர்களா ? எப்போது வைத்திருக்கிறீர்கள் ? அப்படி என்றால் அதைச் சொல்லுங்கள். What is the record ?

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. 1978 ஆம் ஆண்டு இங்கே இந்த ரிப்போர்ட்டை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அன்றைக்கு இருந்த எம்.எல்.ஏ. க்கள் வேறு. அந்த 5 ஆண்டுக் காலத்தில் ஓர் அறிக்கை வைத்திருந்தால் அந்தப் பொறுப்பை அந்த எம்.எல.ஏ.க்களிடம் சொல்லலாம். எடுத்துப் படியுங்கள் என்று சொல்லலாம். 1978இல் இங்கே ரிப்போர்ட்டை வைத்த காரணத்தால். அந்த ரிப்போர்ட் இல்லாமல் இந்த மசோதாவைப் பற்றி யாருமே உண்மையிலே விவாதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. அதில் ஒரே ஒரு அமென்ட்மென்ட் மட்டும் கொண்டு வந்திருப்பதாக சொல்கிறார்கள். என்ன திருத்தம் கொண்டு வருகிறார்கள் என்றால். குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சைக்கான சிறப்பு தற்செயல் விடுப்பை வேலை ஆட்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற வகையிலும், ஆள் எவரும் உணவு வழங்கு நிறுவனம் எதிலும் அவருக்கு பெரும்பாலும் ஊறு விளைவிக்கக் கூடிய மிகப் பளுவான சுமை எதையும் தூக்கு வதற்கோ கொண்டு செல்வதற்கோ அல்லது நகர்த்துவதற்கோ வேலைக்கமர்த்தப்படலாகாது என்கிற வகையில் அதிகாரம் அளிக்கும் வகையில் வழிவகை செய்வதாக இதிலே சொல்லி

யிருக்கிறார்கள். ஏற்கனவே குடும்பக் கட்டுப்பாடு செய்பவர்களுக்கு மட்டும் என்று கொண்டு வரப்படுவதாக பொருள் இருக்கிறது. ஆகவே. முழுமையாக செய்யப்பட்ட பரிந்துரைகள் என்ன என்று எங்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும். இது நியாயமான ஒழுங்கு பிரச்சினை. முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முன்பு வைக்கப்பட்டிருந்தாலும் இப்போது மீண்டும் வைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பதில் தேவை.

12-05 மணி

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தங்கள் என்பது பொதுவாக எல்லாச் சட்டங்களுக்கும் சேர்த்துத் தான் அந்தக் குழு அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்போது ஒரு அம்சத்தைப் பற்றி மட்டும்தான் இந்த மசோதா வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தது போல, இந்த மசோதாவை இப்போது ஆய்விற்கு எடுத்துக் கொள்வதைத் தவிர்த்து, தள்ளி வைத்து, அந்தக் குழுவினுடைய முழு அறிக்கையும் உறுப்பினர்களுக்குத் தரப்பட்டு, அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் அல்லது எல்லாத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து வைத்தும் கூட முடிவு செய்யலாம். அந்தக் குழுவின் அத்தனைப் பரிந்துரைகளையும் ஒரு சேர எடுத்துக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். இதிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலையிட்டு, இப்போது இதைத் தள்ளி வைத்து, பின்னாலே எடுத்துக் கொள்ள வேண்டும். அனைத்துக் கட்சிகளோடும், அனைத்து தொழிற் சங்கத் தலைவர்களோடும், பேச்சு வார்த்தை நடத்தி, அந்தக் குழுவின் அறிக்கை எப்போதோ இந்த மன்றத்திலே வைக்கப்பட்டாலும், அது மீண்டும் தரப்பட்டு அதனுடைய அடிப்படையிலே முழுமையான சட்டமுன்வடிவாக எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்பதைது தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அறிக்கை 1978-லே தயாரிக்கப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் விவாதத்திற்கு வரும்போது அறிக்கை அவையிலே வைக்கப்பட வேண்டுமென்பது தேவையில்லாத ஒன்று. ஒரு பில் வரும்போது அதுசம்பந்தமாக அறிக்கை இருப்பதாகச் சொல்லப்பட்டவுடன், அதிலே உரையாற்றுகிறவர்கள் அதைப் தேடிப் பிடித்து, நூலகத்தில் இருந்து எடுத்துப் பார்த்து, உரையாற்றி இருக்க வேண்டும். அது

11. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) அம்பத்தூர் நகரியம் நகராட்சியாதல்.

எப்படியோ தவறி விட்டது. இருந்தாலும் அவர்களுக்கு வசதியாக இதனை இப்போது ஒத்தி வைத்து அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துப்படி இந்தச் சட்ட முன்வடிவு தள்ளி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1920) 4—பி பிரிவின் (1) உட்பிரிவிற்கிணங்க, செங்கை அண்ணா மாவட்டத்தில் தற்போதுள்ள அம்பத்தூர் நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச் சட்டப் பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) மின்சார வாரியத்தின் கடன் ஒரு சமயத்தில் 2,400 கோடி ரூபாய் இருக்கலாமென்ற செயற்குறிப்பை ஏற்றல்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக

11. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) அம்பத்தூர் நகரியம் நகராட்சியாதல்.

எப்படியோ தவறி விட்டது. இருந்தாலும் அவர்களுக்கு வசதியாக இதனை இப்போது ஒத்தி வைத்து அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துப்படி இந்தச் சட்ட முன்வடிவு தள்ளி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1920) 4-பி பிரிவின் (1) உட்பிரிவிற்கிணங்க, செங்கை அண்ணா மாவட்டத்தில் தற்போதுள்ள அம்பத்தூர் நகரியம் நகராட்சியாக அறிவிக்கப்பட வேண்டுமென்று இச் சட்டப் பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) மின்சார வாரியத்தின் கடன் ஒரு சமயத்தில் 2,400 கோடி ரூபாய் இருக்கலாமென்ற செயற்குறிப்பை ஏற்றல்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக

இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்.''

திரு. கோ. **பூவராகவன் :** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. இன்றைய தினம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள், 2,400 கோடி ரூபாய் மின்சார வாரிய கடனாகப் பெறுவதற்கு இந்த மன்றம் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர் கோரியிருப்பது ஏற்கனவே 1,600 கோடி ரூபாயிலே இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையிலே 1,432கோடி ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு வழிவகைச் செய்ய வேண்டும். அதோடு மூல தனத்திலே அதிகமாக மின்சார வாரியம் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக 2,400 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாம் அதை வழங்குவதிலே ஒன்றும் தவறில்லை. இன்னும் கொஞ்சம் அதிகமாக கூட கொடுக்கலாம். அப்போது மின்சார வாரியத்திற்கு நிறைய பொறுப்புகள் வந்து, அதிக அளவில் மின்சார நிலையங்கள் ஆங்காங்கு துவங்கப்பட வேண்டும். புதிய மின்சார உற்பத்தி நிலையங்கள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அப்படி ஏற்பாடு செய்யும்போது நிதி உதவி தாராளமாக இருப்பதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இருக்க வேண்டும். அதோடு பெறுகின்ற நிதியைக் கொஞ்சம் சிக்கனமாகவும், நல்லவிதமாகவும் செலவிடுவதற்கு அந்தத் துறையை முடுக்கிவிட வேண்டும். கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

12-10 மணி

அதிகமாக வேண்டாத பொருள்களை வாங்கிக் குவிப்பது. சமயா சமயங்களில் வாங்காமல் இருப்பது. சில சமயங்களில் மின்சார இலாக்காவிலே திருடு போவதை தடுப்பது — இதுபோன்ற விஷயங்களில் அதிகக் கவனம் காட்ட வேண்டும்.

சமீபத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விருத்தாச்சலம் நகரத்திற்கு வருகின்ற போது ஒரு வாரத்திற்கு முன்னால் அந்தப் பகுதியில் ஹை டென்ஷன் டவரில் — 4 அல்லது 5 டவரில் லாரியைக் கொண்டு போய் வைத்து பக்கத்தில் இருந்த ஆங்கில்களை எல்லாம் கழற்றி விட்டார்கள். இது ஒரு புது முறையான திருட்டு. அதுமட்டுமல்ல, நெய்வேலியை ஒட்டி இருக்கின்ற அந்தப் பகுதியில் நெய்வேலி கார்ப்பரேஷனில் பல திருட்டுகள் நடைபெறுகின்றன. அது நம்முடைய கவனத்துக்கு வராமலும்

இருக்கலாம்; தேவையும் இல்லை. அங்கு லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கேபிள்கள் திருட்டுப் போகின்றன. அவைகளை எடுத்துச் செல்பவர்கள், முன்னே கூறிய பொருட்களை எடுத்துச் சென்றவர்களாகக் கூட இருக்கலாம் என்று யூகிக்க இடம் இருக்கிறது. அங்கு பெரிய திருட்டு நடந்து இருக்கிறது. ஏதோ முதலமைச்சர் வருகையையொட்டி விரைவிலே அதை நிவர்த்தி செய்து உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு மின்சார இணைப்புத் தந்தார்கள். அந்த இலாகாவுக்கு என்னுடைய பாராட்டு. இல்லையென்றால் மாதக் கணக்கிலே அந்தப் பகுதியிலே மின் சாரம் துண்டிக்கப்பட்டு இருக்கும் என்பது நான் அறிந்த ஒன்று.

அடுத்து. கடலூரில் பல வருடங்களாக பேசப்பட்டு வருகின்ற ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் விரைவாக கொண்டு வர வேண்டுமென்று நீண்ட நாட்களுக்கு முன்பு திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத்திட்டம் அப்படியே நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களையும் முதலமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தப் பகுதியை நீங்கள் தொழில் மயமாக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்து இருக்கிறீர்கள். மின்சார உற்பத்தித் தடை இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்; அதை விரைந்து செயல்படுத்துவதற்கு மின்சார உற்பத்தி துவங்கு வதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த சமயத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலே இன்றையதினம் இருப்பவர்கள் புதிய மின்சார நிலையத்தை ராஜஸ்தானிலே துவங்க வேண்டுமென்று அக்கறை காட்டுகிறார்களே தவிர, நம் முடைய நெய்வேலியை ஒட்டி இருக்கின்ற பகுதியில் மூன்றாவது மின்சார உற்பத்தி துவங்குவதற்கோ அல்லது நான்காவது திட்டத்தைத் துவங்குவதற்கோ அதிக அளவிலே ஏற்பாடு செய் வதாகவோ விறுவிறுப்பாக, சுறுசுறுப்பாக வேலை செய் வதாகவோ, அவர்கள் அதிலே கவனம் காட்டுவதாகவோ தெரிய வில்லை. அதனாலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி விரைந்து இந்த மூன்றாவது திட்டத்தை துவங்கு வதற்கும், நான்காவது திட்டத்தைத் துவங்க வைப்பதற்கும் ஏற் பாட்டினைச் செய்வதன் மூலம் அதிக அளவிலே நமக்கு மின்சார உற்பத்தி ஏற்படுவதற்கும், அதனாலே அதிக மின்சாரத்தை மக்கள் பயன்படுத்துவதற்கும், தொழில்கள் வளர்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று பக்கத்தில் இருக்கின்ற வளங்களை வைத்து கேஸ் டர்பைன் மூலம் புவனகிரி வட்டாரத்திலும். தஞ்சை மாவட்டத்திற்கும் இருக்கின்ற நிலையை எல்லாம் உணர்ந்து 100 மெகாவாட் மின்சார உற்பத்தி துவங்குவதற்காக என்ன ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்? அதனால் தொடர்ந்து ஆய்வு செய்து விரைந்து செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் எங்கு பார்த்தாலும் மிகுந்த அளவிலே மின்சாரம் வேண்டும் என்கிற வரவேற்பு அதிகமாக இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 400 அடிக்கும் கீழே தான் தண்ணீர் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கு நீர்மட்டம் கீழே போய் விட்டது. ஆனால் நம்முடைய மின்சார வாரியத்திலே ஆழ் துளைக் கிணறுகளுக்கு, பீகார் மாநிலத்தில் கொடுத்தது போல முன்னுரிமை கொடுத்து மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே முன்னுரிமை கொடுப்பது மட்டுமல்லாமல், குறைந்த அளவில் அவர்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்): அருள்கூர்ந்து ஒரு மணித்துளிக்குள் முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகவன்: அதிர்ஷ்டவசமாக தொடர்ந்து மின்சாரத் தட்டுப்பாடு இல்லாமல் சமாளித்து இருக்கிறார்கள். மேட்டூர் நீர்த் தேக்கம் அதிகமாக நிறைந்துகொண்டு இருப்பதைப் பார்க்கும்போது ஏதோ ஓரளவுக்கு அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் இருக்கிறது என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும் தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் தருவதற்கு ஒரு நிரந்தரமான அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய மின் உற்பத்தி குறையாமல் பார்த்துக்கொள்வதற்கு வெளியிலே இருந்து வருகின்ற நிலக்கரியும் சுத்தமாக, நல்ல விதமாகவும் வந்தால்தான் அதிக அளவிலே நஷ்டம் இல்லாமல் பார்த்து மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கும். இன்றைய தினம் வருகின்ற நிலக்கரியிலே மொத்தத்தில் பார்த்தால் அதிலே அதிக அளவில் தூய்மை குறைந்து இருக்கிறது; அதனாலே நாம் மின் உற்பத்திப் பெருக்கத்தைக்

காட்ட முடியவில்லை என்கின்ற ஒரு உணர்வு இருக்கின்றது. அதை இங்கேயிருந்து செல்பவர்கள் சரிபார்த்து நல்ல முறையிலே, நல்ல நிலக்கரியை விரைந்து பெறுவதற்கு உதவியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இந்த ஆண்டு ஒரு திட்டத்தைத் துவங்க வேண்டுமென்று சொன்னால் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதை தள்ளிப் போடாமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, அந்த திட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்த இலாகா முன் வர வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

12-15 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடன்பாடு உண்டு. அவர்கள் எல்லாம் பேசாமலே மௌனமாக இதை ஆதரித்ததற்காக நன்றி. பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பூவராகன் அவர்கள், அரிய யோசனை சொன்னதற்காக அவருக்கும் நன்றி. இது ஒன்றும் பெரிதல்ல, சாதாரணமான தீர்மானம். ரூ. 1,600 கோடி வரையில் மின்சார வாரியம் கடன் வாங்கலாம் என்று இந்த மாமன்றம் எங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. அது போதவில்லை. திட்டங்கள் அதிகமாக இருக்கின்றன, எனவே மேற்கொண்டு இன்னும் பணம் தேவைப்படுகிறது. எனவே 2,400 கோடி ரூபாய் அளவிற்கு வாங்குவதற்கு இந்த மன்றம் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்பதுதான் இந்த தீர்மானத்தினுடைய முக்கிய நோக்கம். அதற்குக் காரணம் என்னவென்றால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த மாநிலத்திலே மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. இப்போது 19 மாதங்களுக்குள்ளாக கூட கிட்டதட்ட மின் வெட்டே இல்லாத மாநிலமாக இதை மாற்றியமைத்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். காரணம், நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது அல்ல, 1985 ஆம் ஆண்டிலிருந்தே மின்வெட்டு இருந்தது. பல்வேறு சோதனைகளைக் கடந்து, நீங்கள் பாராட்டத்தக்க வகையிலே, இந்த மின் இலாகாவை நடத்தி வருகிறோம். ஆகவே இன்றைக்கு நடத்திவிட்டது பெரியதல்ல. வருங்காலத்திலேயும் மின்சாரப் பஞ்சம் இல்லாமல் இந்த மாநிலத்தை உருவாக்க வேண்டுமானால் நீண்டகாலத் திட்டங்கள் தேவை. அந்த திட்டங்களில் முதலமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியால் உருவாக்கப்பட்டது வடசென்னை அனல் மின்

நிலையம். அதே போன்று எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தூத்துக்குடியிலே அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்—இரண்டு யூனிட்—420 மெகாவாட்—ரூ. 606 கோடி ரூபாய். வடசென்னை அனல் மின் நிலையத் திட்டம்—630 மெகாவாட், ரூ. 720 கோடி. நரிமணத்திலே பத்து மெ.வா., ரூ. 22கோடி. பேசின் பிரிட்ஜிலே 120 மெகாவாட், ரூ. 123 கோடி. தஞ்சை மாவட்டத்திலே எரிவாயு மின் திட்டம்—300 மெகாவாட், ரூ. 330 கோடி. காற்றாலையின் மூலம் ரூ. 100 கோடி. நுண்புலம் மூலமாக வருவது ரூ. 6 கோடி என்று கிட்டதட்ட1,584 மெகாவாட் மின் உற்பத்தியைச்செய்வதற்கு வேண்டிய சாதனங்களை நிறுவ இந்த அரசு பெருமுயற்சி எடுத்திருக்கிறது. அப்படி எடுக்கிறகாரணத்தால் அவைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக ரூ. 3,500 கோடி நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய வருவாய் மிகக் குறைந்திருக்கிறது. ஏற்கெனவே பற்றாக்குறையால் இந்த மின் வாரியம் இருக்கிறது. அதே நேரத்தில் சமுதாய நோக்கோடு பல சலுகைகளை விவசாயிகளுக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சிறு விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 10 ஹார்ஸ் பவர் வரையில் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் ரூ. 75 என்பதை ரூ. 50 ஆக மாற்றியமைத்திருக்கிறோம். இப்படி மக்களுக்கு பல்வேறு சலுகைகளை மின் வாரியம் செய்து கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே மின் வாரியத்தினுடைய செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக சிங்கரேணியிலிருந்து கரியை வாங்க வேண்டும். ஆனால் அங்கேயிருந்து நமக்குக் கிடைக்கவில்லை என்பதால் மேற்கு வங்கத்திலோ அல்லது ஒரிசாவிலோ போய் நம் ஏற்றி வருகிறபோது ரூ. 100 கோடி நமக்கு அதிகமாக செலவாகிறது. ஆகவே எந்தச் சூழ்நிலையில் பார்த்தாலும் இன்றைக்கு மின்சார வாரியத்திற்கு பல்வேறு தடங்கல்கள், அதிகமான செலவுகள் உண்டு. இருந்தாலும் இந்த மாநிலத்தில் மின்வெட்டே இருக்கக் கூடாது என்கிற ஒரு நிலை வர வேண்டும் என்பதை முதலமைச்சர் அவர்கள் விரும்பியதால் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இந்த அரசு வேகமாகச் செயல்படுகிறது. அப்படிச் செயல்படுவதற்காக நிதி தேவைப்படுகிறது. அந்த தேவைகளுக்கேற்ப அரசு எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்தாலும், மேற்கொண்டு இருக்கின்ற பிற வாயில்களிலிருந்து, எல்.ஐ.சி.யிலோ அல்லது பவர் கார்ப்பரேஷனிலோ அல்லது மற்ற நிறுவனங்களிலிருந்தோ பணம் வாங்க வேண்டும். அவைகளுக்கு அனுமதி தாருங்கள். நீங்கள் தருகிற அனுமதியை நாங்கள் துஷ்பிரயோகம் செய்ய மாட்டோம். ரூ. 1,600 கோடி வரையில் வாங்கலாம் என்று நீங்கள் அனுமதி அளித்தாலும், ரூ. 1,600 கோடியை வாங்கி விட்டு வரவில்லை. ரூ. 1,400 கோடி வரையில்தான் வாங்கியிருக்கிறோம். இன்னும் 200 கோடி ரூபாய் இருக்கிறது. ஆகவே சிக்கனமாக அதே நேரத்தில் நிறைந்த பலனை அளிக்கக் கூடிய

வகையில் இந்த இலாகா செயல்படுகிறது. அதற்கு உங்களுடைய ஆதரவு வேண்டும் என்று கேட்டு, மன்றத்து உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு ஏகமனதாக இந்த தீர்மானத்தை ஆதரித்ததற்காக அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டதின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக இரண்டாயிரத்து நாநூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

12-20 மணி

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

(இ) இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்கள் நிலையான நிம்மதியான வாழ்வைப் பெறவும் அகதிகளாக வந்திருப்போர் அச்சமின்றித் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை உருவாக்கிட வேண்டுமென இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டு கொண்டிருக்கின்றார்கள். அஃதன்னியில் விமான குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வகையில் இந்த இலாகா செயல்படுகிறது. அதற்கு உங்களுடைய ஆதரவு வேண்டும் என்று கேட்டு, மன்றத்து உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு ஏகமனதாக இந்த தீர்மானத்தை ஆதரித்ததற்காக அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டதின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

12-20 மணி

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

(இ) இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அவர்கள் நிலையான நிம்மதியான வாழ்வைப் பெறவும் அகதிகளாக வந்திருப்போர் அச்சமின்றித் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை உருவாக்கிட வேண்டுமென இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டு கொண்டிருக்கின்றார்கள். அஃதன்னியில் விமான குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்

பட்டு தங்கள் உடமைகளை இழந்து உயிர் தப்பினால் போதும் என்று பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வந்து குவிந்த வண்ணமிருக்கின்றார்கள்.

இலங்கையில் இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுவதையும் அகதிகள் வருகையின் மூலம் ஒரு வகையான ஆக்கிரமிப்பை இலங்கை அரசு இந்திய நாட்டின் மீது செய்து வருவதையும் நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே இதற்கோர் அரசியல் தீர்வு கண்டு இலங்கையில் தமிழர்கள் நிலையான, நிம்மதியான வாழ்வைப் பெறவும் இங்கே அகதிகளாக வந்திருப்போர் மன ஆறுதலுடன் அச்சமின்றி தங்கள் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வர வேண்டுமென்று இந்தப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கிய பிறகு நிறைவாக என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தங்கள், திருவாளர்கள் கே. ரமணி, உ. ரா. வரதராசன் ஆகியோரில் ஒருவர் முதல் திருத்தத்தை முன்மொழிவார்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்திற்கு பின்வரும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

"(1) பத்தி (2)க்குப் பதிலாக கீழ்க்கண்டவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

''இலங்கை அரசு போராளிக் குழுக்களிடையே பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைபிடிப்பதைக் கைவிட்டு, உடனடியாக ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும். அவ்வாறு எல்.டி.டி.இ.யினரும் ஆயுத மோதலைக் கைவிட்டு, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பவும், அரசியல் தீர்வு காணவும் முன் வருவதோடு, இதர போராளிக் குழுக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டும். இலங்கையி

ஒள்ள தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் போராளிக் குழுக்கள் அனைத்தையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி தமிழ் மக்கள் கணிசமாக வாழும் இலங்கையின் வட கிழக்கு மாகாணத்திற்குப் பரவலான கூடுதல் அதிகாரங்கள் கொண்ட சுயாட்சி உரிமையை வழங்கி இலங்கை அரசு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்''.

(2) பத்தி (3)-இல் உள்ள ''இதற்கோர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இத்தகையதோர்'' என்ற சொற்றொடரை சேர்த்துக் கொள்ளவும்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த திருத்தம், திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி ஆகியோரில் ஒருவர் முன் மொழிவார்.

திரு. ஜி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற அரசினர் தீர்மானத்தின் கடைசி பத்தியாக கீழ்க்கண்ட வாசகங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மொழிகிறேன் :

''மேலும் உரிய சூழ்நிலையை உருவாக்குவதில் இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் சக்திகளும் கூடிப் பேசி தமிழர் பாதுகாப்பிற்கும், பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு காண மத்திய அரசு முன்வரவேண்டுமெனவும் இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானமும் அதற்கான திருத்தங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கம், அதனுடைய அழுத்தம் அனைத்தும் அனைவருக்கும் தெரியும். எனவே, வேறு சிக்கல்களில், வேறு வகையான வாதங்களில் இதைத் திசை திருப்பி விடாமல், மிகுந்த

கவனத்தோடும், பொறுப்போடும் ஒவ்வொருவரும் ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொண்டு உரையாற்றுமாறு கேட்டுக் கொள் கிறேன். முதலில் திரு. இரா. மோகன்....

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற முறையில் முதலில் எங்களுக்கு வாய்ப்பளிப்பது தான் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத்தான் முதலில் வாய்ப்புக் கொடுப்பதற்கு இருந்தேன். ஆனால் உறுப் பினர் இடத்தில் இல்லை. நான் மிகுந்த கவனமாக இருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியுமே? முதலில் திரு. பீட்டர் ஆல்போன்ஸ்.

12–25 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார் பிலே கலந்துக் கொண்டு, கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்தமைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தாங்கள் பேச அழைக்கின்றபோதே, இந்தத் தீர்மானத்தி னுடைய கருத்தினை கவனத்திலே கொண்டு, உறுப்பினர்கள் வேறு எதைப் பற்றியும் பேசாமல், இந்த வட்டத்திற்குள்ளே நின்று நீங்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் என்று நீங்கள் கேட்டுக்கொண்டீர்கள். அந்த வட்டத்திற்குள்ளே நின்று பேசவேண்டும் என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் இது தமிழ் இனத்தையே பாதிக்கின்ற பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு நீங்கள் கால அவகாசத்தை மிகவும் சுருக்குவீர்கள் என்று சொன்னால், இந்தப் பிரச்சினைக்குரிய நியாயத்தைச் செய்தவர்களாக நாம் இருப்போமா என்கிற சந்தேகத்தையும் நான் கிளப்ப ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ரொம்ப அவசரமானது என்ற காரணத்தால் தான் பேச்சிலே நேரத்தை ஓட்டவேண்டாம் என்ற கருத்தில் சொல்லப்பட்டது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அவசரமானது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் அவசியமானது என்பதையும் அரசுத் தரப்பிலே ஒத்துக்கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன். இந்தத் தீர்மானத்திலே பேசுவதற்கு முன் னாலே, எனக்கு ஒரு புதுக் கவிதை ஞாபகத்திற்கு வந்தது.

''இலைகளைப் பறிக்கிறபோதும்,
கிளைகளை முறிக்கிற போதும்
எதிர்த்துக் கேட்டிருந்தால், அவர்களுக்கு
வேர்களையே எரிக்கிற வீரம் பிறக்குமா?
கண்களைத் தோண்டிய பிறகு புருவத்தில்
பூசுவதற்கு மை சேகரிக்கும் மனிதர்களே
நீங்கள் பகலின் வெளிச்சத்தில்
யானையைத் தொலைத்துவிட்டு
இரவின் இருட்டில் எலிகளைத் தேடுகிறீர்கள்
பூந்தோட்டமே அங்கு பொசுங்கிப் போனபின்
மரங்கள் இப்போது கூடி
மாநாடு போடுவதிலே என்ன பயன்?''

என்ற புதுக்கவிதை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இந்தக் கவிதை இன்றைய தினம் இலங்கையிலே நடந்து கொண்டிருக்கிற படுகொலைகளுக்கு அந்தப் படுகொலைகளின் எதிரொலியாக தமிழகம் வரலாற்றிலே ஒரு நாளும் சந்தித்திராத அகதிகளை எதிர்நோக்குவதற்குக் காரணமாக இருக்கின்ற பிரச்சினையாக இருப்பதால்தான் நான் இந்தக் கவிதை வரிகளை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்பட்டேன்.

அரசியல் தீர்வு என்று சொல்கிறார்கள். அரசியல் தீர்வு என்று ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடாது. அரசியல் தீர்வு என்ன என்பதை, அரசுத் தரப்பிலே நீங்கள் எங்களுக்கு விளக்கவேண்டும். அந்த அரசியல் தீர்வு, அரசியல் தீர்வு என்றுதான் நாங்கள் ஆளுகின்றபோதும் சொன்னோம். ஆளும் கட்சியாக இருக்கின்றபோதும் சொன்னோம். எங்கள் தலைவர் பிரதமராக இருக்கின்றபோதும் சொன்னோம். இன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றபோதும் இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் என்று சொல்கிறோம். ஆனால் அந்த அரசியல் தீர்வு என்ன? 'What is the Political solution?' அதை இந்த அரசு எங்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில், அரசியல் தீர்வு என்ன என்பதற்கு, நாங்கள் தெளிவான விளக்கத்தைச் சொன்னோம். இந்தியாவிலே இருக்கின்ற, தமிழகத்திலே இருக்கின்ற தமிழருக்கு என்ன அரசியல், சமூக பொருளாதார உரிமைகள் இருக்கின்றனவோ, அதே சமூக, பொருளாதார அரசியல் உரிமைகள் இலங்கையிலே வாழ்கின்ற தமிழனும் பெறவேண்டும் என்பதுதான் நாங்கள் நினைத்த அரசியல் தீர்வு. இந்தியாவிலே ஒரு தமிழகம் என்று சொன்னால், இலங்கையிலே ஒரு தமிழகம். இந்தியாவிலே ஒரு தமிழ் முதலமைச்சர் என்று

சொன்னால், இலங்கையிலே ஒரு தமிழ் முதலமைச்சர், இந்தியாவிலே தமிழ் மாநிலத்திலே தமிழ் பேசுகின்ற மொழி என்று சொன்னால், இலங்கையிலே இருக்கின்ற ஒரு மாநிலத்திலே தமிழ் பேசுகின்ற மொழி. இதுதான் நாங்கள் கண்ட அரசியல் தீர்வு. அதற்காகத்தான் 5 ஆண்டுகள் 6 ஆண்டுகள் 7 ஆண்டுகள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும், எங்களுடைய இனிய தலைவர் ராஜிவ் காந்தியும், இலங்கை—இந்திய ஒப்பந்தம் கண்டார்கள். அமைதிப் படையை அனுப்பினார்கள். ஜெயவர்த்தனாவுடன் பேசினார்கள். உயிரைப் பணயம் வைத்து இலங்கை சென்றார்கள். அங்கே தமிழ் மாநிலம் மலர்ந்தது. தமிழன் முதலமைச்சராக வந்தார். தமிழ் அரியாசனம் ஏறியது. அதுதான் அரசியல் தீர்வு. ஆனால், அதற்கு பின்னாலே, அந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற சம்பவங்கள்—இங்கே எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இனப் படுகொலை என்ற வார்த்தையே இந்த தீர்மானத்திலே இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பிடித்தமான வார்த்தை. 1983-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி, 27-ஆம் தேதி இதே மன்றத்திலே நடந்த தீர்மானத்திலே நீங்கள் இப்போது முன்மொழிகின்ற தீர்மானங்கள் நீங்கள் அன்று வழிமொழிந்து இருப்பீர்கள் என்று சொன்னால், இன்று இந்தப் பிரச்சினை வந்திருக்காது. அந்தச் சூழ்நிலையிலே என்ன மாற்றம் என்பதை நீங்கள் எங்களுக்கு விளக்க வேண்டும். அன்று நீங்கள் கொடுத்த தீர்மானத்திலே வழிமொழிகின்றபோது இந்த மன்றத்திலே நமது மரியாதைக்குரிய மாண்புமிகு சட்ட அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அந்த வார்த்தைகளை நான் இப்போது உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அன்று நண்பர் மரியாதைக்குரிய மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள், அந்த தீர்மானத்திற்கு. அந்தத் தீர்மானத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு இன்றுள்ள சூழ்நிலையில் அங்குள்ள தமிழர்களும், சிங்களர்களும் இணைந்து வாழ முடியாத காரணத்தால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு தனி ஈழம் அமைத்துத் தர உலக நாடுகள் முன்வரவேண்டும் என்று இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது. அப்படி ஒரு திருத்தத்தை நீங்கள் எதிர்க் கட்சியாக இருக்கின்றபோது இந்த மன்றத்திலே கொடுத்தீர்கள். அடுத்து, இன்று இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில், கலவரங்கள், கற்பழிப்புகள், இனக் கலவரங்கள் நடந்து கொண்டிருப்பதால், தமிழர்களின் உயிர், உடைமைகளுக்கு பாதுகாப்பு அளிக்க, உடனடியாக ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசை இப்பேரவை கேட்டுக்கொள்கிறது என்று அடுத்தாற்போல் அந்தத் தீர்மானத்திற்கு ஒரு விளக்கத்தை, ஒரு திருத்தத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

1990 ஆகஸ்ட் 23] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

12-30 மணி.

அதைத் தொடர்ந்து **நமது** மரியாதைக்குரிய சகோதரர் என். வி. என். சோமு அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகின்றபோது பேசி இருக்கிறார். '' இன்றைக்கு இலங்கை யிலே இவ்வளவு கோர விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணம் ராஜீவ் காந்தி அவர்கள் திருச்சியிலே கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியிலே பேசினார். '' என்ன பேசினார் ? '' இது இலங்கையிலே உள்ள உள்நாட்டுப் பிரச்சினை. அவர்களுக் காக அதிகம் பேசினால் லண்டன் வாழ் தமிழர்களுக்காகவும் பேச வேண்டும். அது முடியாத காரியம். கல்பாக்கத்திலே மீண்டும் இந்திராகாந்தி பேசினார். 24-ஆம் தேதி இலங் கையிலே அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது, என்றால் அதை இன்னும்கூட, இந்திய அரசாங்கம் தலையிடாமல் எவ்வளவு வலுவாக, தெளிவாக, தைரியமாக, உணர்ச்சி பூர்வமான தலையிடாமல் இருக்கிறது என்பதை இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் '' என்று மரியா தைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அன்றைய உறுப்பினர் என். வி. என். சோமு இந்த அவையிலே பேசினார். அதைத் தொடர்ந்து இங்கே பேசிய நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி இந்த விவாதத்தில் பங்குகொண்டு பேசியபோது சொன்னார்.

'' அண்ணாவின் கொள்கைகளையும் திட்டங்களையும் நாங்கள் சொல்கிறோம். அண்ணா அவர்கள் எதைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்களோ, அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத காரணத்தால் இதை சொல்கிறது என்பது அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தாலும் இதைத்தான் நாங்கள் சொல்லியிருப் போம். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். அந்தத் துணிவு உங்களுக்கும் வரவேண்டுமென்று '' கேட்டுக்கொண் டிருக்கிறீர்கள். நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றபோது பேசினார். '' நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்ற காரணத்தால் பேசுகிறோம் என்று நினைக்காதீர்கள். நாளை ஆளுங்கட்சியாக இருந்த போதும் நாங்கள் அதைத்தான் சொல்வோம். அந்தத் துணிவு உங்களுக்கு வரவேண்டுமென்று '' கேட்டுக்கொண்டு, அதற்கடுத்து சொல்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பியதெல்லாம் பாரதப் பிரதமர் ஒரு கண்டனத்தைத் தெரிவித்திருந்தால் ஒரு அல்டிமேட்டம் கொடுத்திருந்தால் அது பெரிய தப்பில்லை என்பதாகும். சுண்டைக்காய் நாடாக அது இருக்கிறது. சாதாரணமாக ஒரு கிராமத்திலே பார்த்தால்கூட அது தெரியும்.

ஒரு அப்பாவிப் பெண்ணிடம் ஒருவன் தகராறு செய்கிறான் என்று சொன்னால், அங்கே இருப்பவர்கள் என்ன சொல்ல வேண்டும்? அவனைப் பார்த்து நீ சரியாக நடந்து கொள். இல்லையென்றால் உதை வாங்குவாய் என்று சொன்னால் நிலைமை வேறு. அதைப்போல் பெரிய நாடாகிய இந்தியா இந்தப் பிரச்சினையிலே தலையிடவேண்டுமென்று கூட சொல்லவில்லை, அல்லது பட்டாளத்தை அனுப்பி இலங்கையை கபளீகரம் செய்து ஆக்கிரமிக்க வேண்டுமென்று அந்தக் கருத்தைக்கூட திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் இந்த தேதிக்குள் இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும். கொலை வெறியைத் தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையென்றால் இந்தியாவி லிருந்து பட்டாளம்வரும் சூழ்நிலை வரவேண்டும். அது இந்தத் தீர்மானத்திலே இடம் பெறவேண்டும் என்று நெல்லிக் குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்கடுத்து எங்களுடைய மத்திய அமைச்சர் அப்போது ராணுவ அமைச்சராக இருந்த வெங்கட்டராமன் அவர்களை, இந்த மாமன்றத்திலேயே, ராணுவத்தை அனுப்பாததற்கு நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன வார்த்தை களை நான் சொல்கிறேன். நான் அதை இப்போது சொன் னால், 'அன்பார்லிமென்டரி' என்று ஆகிவிடும். இது சட்டமன்ற அவைக் குறிப்பிலே இருப்பதால் நான் சொல் கிறேன். "சமீபத்திலே இந்திய பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள், நாங்கள் அவரைப் பாராளு மன்றத் தேர்தலில் ஆதரித்ததற்கு நல்ல பரிசு ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். கலைஞர் இப்படி ராணுவத்தை அனுப்பு என்று சொல்வது முட்டாள்தனம் என்று சொன் னார்கள். சிறந்த பேச்சு, ஏனென்றால் கலைஞர் அவர்கள் நம்முடைய வெங்கட்ராமன் அவர்களைத் தென் சென்னையிலே நிற்க வைத்து, அவர் பாராளுமன்றத்திற்குச் செல்ல வேண்டும், அது தமிழகத்திற்கு உதவியாக இருக்கும் என்று நம்பினாரே, அது மூட்டாள்தனம் தான். ஆகையால்தான் வெங்கட்டராமன் முட்டாளதனம் என்று சொன்னார்" என்று சொல்கிறார். இது வந்து சட்டமன்றப் பேரவையிலே நடந்த விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கின்றபோது பேசுகின்ற விஷயம். அடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளராகவும், இன்றைய தினம் நமது சட்டமன்றத்திலே, நம்முடைய அன்பிற்கும், மரியாதைக்கும் பாத்தியப்பட்ட சட்ட அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்? இதைப்போன்ற ஒரு தீர்மானம் அரசியல் தீர்வு கேட்டு ஒரு தீர்மானத்தை இதே மன்றத்திலே நீங்கள் எதிர்கட்சியாக இருக்கின்றபோது, நாங்கள் மத்தியிலே ஆளுகின்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்றபோது வந்தது. அத் தீர்மானத்திற்கு என்ன பதில் என்று சொன்னால், இந்தப்

1990 ஆகஸ்ட் 23] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

பிரச்சினையைப் பொறுத்தவரையில் தனி நாடு, தனி ஈழ நாடு தான் பரிகாரம் என்று தெரிவித்துக் கொண்டு "The DMK is prepared to pay any price, bear any burden, meet any hardship, support any friend, oppose any for to assure the survival and success of Tamil Ealam." என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது எங்களுக்குத் தெரிய வேண்டும். நீங்கள் அரசியல் தீர்வு என்று சொல்கிறீர்களே, அந்த அரசியல் தீர்வு இது தானா, அல்லது இப்போது இந்த நிலையிலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். ஒன்பது மணித் துளிகள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். விரைவாக முடிக்கலாம்.

12—35 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. நானும் அனாவசியமாகப் பேசவில்லை என்று நினைக்கிறேன். அடுத்து இப்போது நீங்கள் அரசியல் தீர்வு என்று சொல்கிறீர்கள். அரசியல் தீர்வு என்று சொன்னால் முதலிலே வேண்டியது 'சீஸ் ஃபையர்'. அந்த சீஸ்-பையர் பெறுவதற்காக யாராவது உத்திரவாதம் கொடுக்கத் தயாராக இருக்கிறீர்களா ? நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமருடைய unnamed diplomat இலங்கையைப் பொறுத்த வரையில் அனைத்தையும் அவர்களே பார்க்கலாம் என்று நமது பிரதமரே அறிவித்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பெரிய கடமையை ஏற்றுக் கொண்டு (குறுக்கீடு) செயலாற்ற வேண்டும். ஆனால் அவர் தீவிர வாதிகளை அழைத்துப் பேசினார்கள், போராளிகளின் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசினார்கள். அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு தகவல் கொடுக்கிற நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். எங்களுக்கு என்ன தெரிய வேண்டும் என்று சொன்னால், இந்த 8, 9 மாதங்களாக ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, தேசிய முன்னணி சர்க்கார் பதவி ஏற்றுக் கொண்ட பிறகு, இந்தப் பிரச்சினையிலே ஏற்பட்ட முன்னேற்றம் ஏதாவது உண்டா என்று நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அங்கே ஆளுகின்ற தேசிய முன்னணி அரசு இதுவரையில் சுண்டு விரலை தூக்கியாவது இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது செய்திருக்கிறதா ? அப்படி செய்திருந்தால் அந்த விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய அரசு என்று சொன்னாலே போதும் உடனே தீட்சிதர் எழுந்து விடுவார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: இந்த 6 மாத காலத்திலே சுண்டு விரல் பெருக்க வசதி இல்லை. பெருக்காது. இன்னும் நாள் போகப் போக அது பெருத்தால் சட்டை விரல் அளவுக்கு வர எத்தனை நாளாகும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். சுண்டு விரல் பெருத்த பின்பு கட்டை விரலாகும், அதற்குப் பிறகுதான் கையாகும். ஆனால் 1981—லே யிருந்து பல வருஷம் அவர்களுடைய ஆட்சிதாதானே நடந்தது? ராஜீவ் காந்தி ஆட்சி எத்தனை வருஷம் நடந்தது? இந்திரா காந்தி ஆட்சி எத்தனை வருஷம் நடந்தது? அப்பொழுதெல்லாம் அங்கே போராளிகளே இல்லையா? தமிழர்கள் ரத்தம் சிந்தவில்லையா? அப்போது என்ன பண்ணினீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தீட்சிதர் அவர்கள் வாதத்தைத் திசை திருப்ப வேண்டாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மரியாதைக்குரிய தீட்சிதருக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாமே....

திரு. சா. பீட்டர் ஆல்பேர்ன்ஸ்: பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகிறபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நம்முடைய நோக்கமே நிறைய உள்நோக்கி வாதங்களுக்குள் போக வேண்டாம் என்பது. நீங்கள் சொன்ன அந்தச் செய்தியை நோக்கி நகருங்கள் போதும்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகிறபோது ஐ.நா. சபையிலே இந்தப் பிரச்சினையை இந்தக் கருத்தினைக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ஐ.நா. சபைக்கு கருத்தினைக் கொண்டு வந்த பெருமை இந்திய தேசிய காங்கிரஸ் உடையதுதான். இந்திய தேசத்தினுடைய வரலாற்றிலே, ஒரு மாநிலத்தை அழைத்து, ஒரு அமைச்சரை அழைத்து, அவர் தமிழராக இருக்க வேண்டும் என்று தீர்மானித்து, அந்த அமைச்சருடைய தலைமையிலே ஒரு குழுவை ஐ.நா. சபைக்கு அனுப்பி அந்தப் பிரச்சினையை பேச வைத்த பெருமை யாருக்கு என்றால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குத்தான்.

நான் கேட்கிறேன் 8 மாத காலம் ஆகிவிட்டது தேசிய முன்னணி அரசு பதவி ஏற்று. இலங்கையிலே தமிழன் சாகிறான். தமிழனுடைய குழந்தை கறி விற்கப்படுகிறது. தமிழச்சி கற்பழிக்கப்படுகிறாள் என்றெல்லாம் மேடையிலே பேசினீர்களே, நீங்கள் யாராவது அரசியல் அந்தஸ்து உள்ள தலைவரை அவர் தி.மு.க. அமைச்சரோ அல்லது இந்தியாவிலே இருக்கிற வெளி உறவு அமைச்சராவது இலங்கைக்குச் சென்று தமிழனைப் பார்த்து அவன் கண் ணீரைத் துடைக்க வேண்டும் என்று நினைத்த சரித்திரத்தை நீங்கள் சொல்ல முடியுமா என்பதை இந்த அவையிலே நீங்கள் தெரிவிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆண்டபோது எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியே இலங்கைக்கு சென்றார். அது மட்டுமல்ல, தனித் தூதர் பார்த்த சாரதியை அனுப்பினார். இந்திய வெளி உறவு தூதர் நட்வர் சிங் சென்றார். எங்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் கூட இலங்கைக்கு சென்றார்கள். எங்கள் மத்திய அமைச்சர் சிதம்பரம் சென்றார், தமிழர்களுடைய கண்ணீரை துடைப்பதற்கு என்று. உயிரைப் பாராது, சொந்தம் பந்தம் என்று பாராது சென்றார்கள். ஆனால் மேடையிலே தமிழ் தமிழ் என்று பேசவில்லை. (குறுக்கீடு) ஏதோ நாங்கள் எதுவுமே செய்யாது உங்களை செய்யுங்கள் என்று சொல்லவில்லை. உயிரைக் கூட கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று வார்த்தைகளால் அல்ல, மேடைகளில் அல்ல, செயல் முறையில் நிரூபித்து காட்டிவிட்டுத்தான் இன்று கேட்கிறோம். நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறோம். இலங்கையிலே தமிழ் மாநிலம் ஏற்படுத்தினோம், தமிழக முதல்வரை ஏற்படுத்தினோம். தமிழ் மந்திரி சபை ஏற்படுத்தினோம், ஆனால் அதை முடிவு என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 2 மணித் துளிகள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : It was only a b gining. ஆனால் இப்போது இருக்கிற இந்த நிலைமைக்கு யார் காரணம்? இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று தெரிந்து கொண்டால்தான் இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் தீர்வு காண முடியும். நாளைக் காலையிலே இங்குள்ள அகதியெல்லாம் இலங்கைக்கு ஏற்றி அனுப்பிவிட முடியாது. ஆனால் தீர்மானத்திலே சொல்லுகிறீர்கள். அப்படி ஒரு பாதுகாப்பு சூழ்நிலை வரவேண்டும் என்று நீங்களே தீர்மானத்திலே கேட்கிறீர்கள். அந்த பாதுகாப்பான சூழ்நிலை எப்படி வர முடியும்? நான் சொன்னால் உங்களுக்கு கோபம் வரும். எங்களது மரியாதைக்குரிய தீட்சிதர் அவர்களே சொல்லுகிறார்கள். இலங்கை அகதிகளை சென்று பார்த்து விட்டு வந்தபோது இலங்கை அகதிகள் அவரிடம் சொன்ன வார்த்தைகளை சொல்லியிருக்கிறார்கள், மீண்டும் அமைதிப்படை இலங்கை சென்றால்தான்

இந்த அகதிகள் திரும்புவார்கள் என்று உங்களுடைய தோழமை கட்சியான தீட்சிதர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இடத்திலே தீட்சிதர் பதில் சொல்லத்தான் வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : நான் சொன்னதாக அந்த அகதிகள் சொல்லியிருக்கிறார்களே தவிர நான் அந்த வார்த்தையை ஒரு நாளும், ஒரு பொழுதும் எப்போதும் சொன்னதில்லை.

12-40 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அதைத்தான் நான் சொல்கிறேன். அகதிகள் எங்களிடம் சொன்னார்கள் என்று நாங்கள் சொன்னால் அது உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்று சொன்னீர்கள். இன்று உங்களோடு மத்தியிலே ஆளுகின்ற வாய்ப்பினை பெற்றிருக்கின்ற ஜனதா தளத்தினுடைய தலைவர் இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறார். அந்த அகதிகளை நேராகப் பார்த்திருக்கிறார். பேசியிருக்கிறார். அந்த அகதிகள் சொல்கிறார்கள், மீண்டும் அமைதிப்படை இலங்கைக்குச் சென்றால் தான் நாங்கள் அமைதியாக வாழமுடியும் என்று. நீங்கள் அதைக் கேட்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள்? அதை ஒத்துக்கொள்கிறீர்களா என்று நாங்கள் தெரிய ஆசைப்படுகிறோம். வெறுமனே அரசியல் தீர்வு என்று சொல்லிவிட்டு, இது ஏதோ தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழ் மக்களை மட்டுமல்ல, உலகத்திலே இருக்கின்ற தமிழர்களை ஏமாற்றுவதற்கு கொண்டுவரப்பட்ட தீர்மானமாக இருக்கக்கூடாது. இந்தத் தீர்மானம் உயிருள்ள தீர்மானமாக இருக்க வேண்டும். இந்த தீர்மானத்தின் மூலம் தமிழ் அகதிகள் இலங்கை நோக்கிச் செல்ல வேண்டும். அதற்கு what is the action plan of resolution? அதை நீங்கள் எங்களுக்கு தயவுசெய்து விளக்கக் கடமைப்பட்டவர்கள். இன்று அகதிகள் வருகையை முன்னிட்டு The Goverrment has com to a stand still இன்று அரசு இயந்திரம் சிக்கி தவித்து திணறி நிற்கிறது. தாலுக்கா அலுவலகங்களிலே தாசில்தார் இல்லை. ஆர்.டி.ஓ. அலுவலகத்திலே ஆர்.டி.ஓ. இல்லை. கிராம நிர்வாக அதிகாரிகள் இல்லை. எல்லோரும் அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள். வளர்ச்சிப் பணிகள் தடைப்பட்டன என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 10 கோடி வேண்டும், 10 கோடி வேண்டும் என்று கேட்டீர்களே, இதுவரை 10 பைசாவை இந்த தேசிய முன்னணி அரசு உங்களுக்கு தந்திருக்கிறதா என்று நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எங்கள் பிரதமர் இருக்கின்ற போது கடல் கடந்து கப்பல்கள் சென்றன, உணவுப் பொருள்கள் சென்றன, மருந்துகள் சென்றன.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : The last minute 16 மணித் துளிகள் ஆகிவிட்டன. முடித்து விடலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : ஆக்ஷன் ஓரியன்டட் தீர்மானமாக இந்தத் தீர்மானம் இருக்க வேண்டும். இந்தத் தீர்மானத்திலே ஆதரிப்பதற்கும் எதிர்ப்பதற்கும் ஏதும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் கட்சி நிலைமை என்னவென்று கேட்கலாம். . இந்தத் தீர்மானத்திலே—

There is no meaning in it. It is only a Political mimicry It is only bad points together. It has no force.

போகாத ஊருக்கு காட்டுகின்ற பாதை; பிறக்காத பிள்ளைக்கு வைக்கின்ற பெயர்; இல்லாத பொருளுக்கு பேசுகின்ற வியாபாரம்; ஏற்கெனவே எழுதி முடிக்கப்பட்ட தவறான தீர்ப்புக்கு நடத்தப்படுகின்ற நாடக வழக்கு; உங்கள் வார்த்தைகளில் இது ஒரு அரசியல் சித்து விளையாட்டு; செப்பிடு வித்தை; வெறும் வார்த்தை ஜாலம்; இதை ஆதரிப்பதற்கும் எதிர்ப்பதற்கும் ஒன்றும் இல்லை என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிபூர்வமான ஒரு தீர்மானத்தினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். இது முழுக்க முழுக்க இலங்கையிலேயிருந்து அன்றாடம் தமிழகத்திற்கு வந்துக்கொண்டிருக்கின்ற அகதிகளைப் பற்றிய பிரச்சினை. ஏறக்குறைய 80,000-க்கும் மேற்பட்ட அகதிகள் இதுவரை தமிழகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறார்களே, அந்த அகதிகளை நாம் என்ன செய்யப் போகின்றோம்? என்ன நன்மை நாம் அவர்களுக்குத் தரப்போகின்றோம் ? மத்திய அரசு இலங்கையிலிருந்து இப்படி ஆயிரக்கணக்கில் வருகின்ற அகதிகளை கருத்தில் கொண்டு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றது ? மத்திய அரசு இதிலே ஆக்கபூர்வமாகத் தலையிட வேண்டும். காரணம் நாம் ஒரு மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள். நாம் படை எடுக்க முடியாது. நாம் இங்கேயிருந்து படையை அனுப்ப முடியாது. நாம் இங்கேயிருந்து நம்முடைய போலீசை அனுப்ப முடியாது. ஆக மத்திய அரசு இதிலே தலையிட்டு தமிழர்களுடைய வாழ்வைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் புதுக் கவிதையோடு ஆரம்பித்தார்கள். மலர் தோட்டமே அழிந்து விட்டதே என்ற கவிதையோடு ஆரம்பித்தார்கள். எனக்கு அவர் கவிதை ஆரம்பித்தபோது பழைய பழமொழிதான் ஞாபகம் வந்தது. புதுக்

கவிதை மறந்து விட்டது. பழைய பழமொழி 'பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டலாமா' என்பதுதான். எனக்குத் தெரியும். இந்திரா காங்கிரஸ் கட்சி பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார், இந்திரா காங்கிரஸ் கட்சி பிரதமராக இருந்த ராஜிவ் காந்தி அம்மையார், ஐ ஆம் சாரி ராஜிவ் காந்தி. (சிரிப்பு) முதலிலே அம்மையார் என்று சொன்னதால் இவரையும் அம்மையார் என்று சொல்லிவிட்டேன். சிரிக்கக் கூடாது. முன்னால் அம்மையார் என்று சொன்னதால், ராஜிவ் காந்தி என்று வரும்போது அம்மையார் என்று சொல்லிவிட்டேன் I am sorry for ha .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்பையார். .

திரு. இரா. மோகன் : பிரதமராக இருந்த பெரு மதிப்பிற்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் எல்லாம் எந்த அளவிற்கு போராளிகளுக்கு உதவுகிறோம் என்ற பெயரால் என்னென்ன காரியத்தைச் செய்தார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆயுதம் வாங்கினார்கள். பயிற்சி முகாமையே அமைத்து இங்கே பயிற்சிகளைத் தந்தார்கள். ஒரு கட்டத்தில் அந்த போராளிகளைப் பிரிப்பதற்கு என்ன காரியம் செய்ய வேண்டுமோ அதையும் செய்தார்கள். அதற்குப் பின்னால் இங்கே என்னுடைய அன்பிற்குரிய ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னார்களே, இங்கே தமிழ்நாட்டிலே ஒரு தமிழ் முதலமைச்சர் என்று சொன்னால் அங்கே இலங்கையிலே நாங்கள் ஒரு தமிழ் முதலமைச்சரை உருவாக்கினோம், வரதராஜபெருமாளைக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அவர் என்ன மக்கள் ஏற்றுக்கொண்ட முதலமைச்சரா ? வரதராஜப் பெருமாள் எங்கே இருக்கின்றார் ? நம்முடைய அன்பிற்குரிய நண்பர்களைப் பார்த்துக் கேட்கிறேன். எங்கே அந்த வரதராஜப்பெருமாள் ? (குறுக்கீடு) பாலசுப்பிரமணியம்தான் நிற்கிறார், வரதராஜப்பெருமாளைக் காணோம். (குறுக்கீடு). .

12-45 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடன்பாட்டின்படி தேர்தல் நடத்தப்பட்டு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டுதான் வரதராஜப் பெருமாள் அவர்கள் அங்கே முதலமைச்சராக இருந்தார்.

திரு. இரா. மோகன் : அங்கே நடைபெற்ற தேர்தல் லட்சணம் என்ன என்பது உலகிற்கே தெரியும். அப்படி ஒரு தேர்தல். ஆக, இதைத்தான் நீங்கள் சாதனை என்று சொல்லிக் கொண்டீர்கள். எங்கே அந்த வரதராஜப்பெருமாள் இப்போது ? ராஜிவ் காந்தி அவர்கள் பிரதமராக இல்லை என்றவுடன், வரதராஜப்

பெருமாளும் நாட்டை விட்டே ஓடினார் என்ற செய்திதான் வந்தது. இப்படி ஒரு முதலமைச்சரா? எங்காவது பார்த்திருக்கிறீர்களா உலகத்திலே? ஒரு 'பப்பெட்' கவர்ன்மென்ட். பொம்மை அரசாங்கத்தை உருவாக்கி, பொம்மையைக் கொண்டு வந்து வைத்து எல்லா உரிமைகளையும் நாங்கள் தமிழர்களுக்குப் பெற்றுத் தந்து விட்டோம் என்று சொல்லி, ஒரு அரசாங்கத்தை அங்கே அமைத்தீர்கள். எங்கே போயிற்று அந்த அரசாங்கம்? எங்கே போனார் அந்த வரதராஜப்பெருமாள்? இதுவா உங்களுடைய சாதனை? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லையே! (குறுக்கீடு).

திரு. இரா. மோகன்: நீங்கள் பேசும்போது பேசலாம். நான் பேசி முடித்த பிறகு பேசலாம். (குறுக்கீடு). என்னுடைய நேரத்தை இது குறைக்கும். இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குமரி அனந்தன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, பொம்மை அரசாங்கத்தைக் கொண்டு வைத்தீர்கள் என்று சொன்ன காரணத்தினாலே நான் தலையிட வேண்டியிருக்கிறது. கொண்டு வைத்தீர்கள் என்று சொன்னது ராஜீவை. அதனாலே நான் நேரத்தை மனதிலே வைத்துக்கொண்டே சொல்கிறேன். வரதராஜப் பெருமாள் அங்கே முதலமைச்சராக இருந்தவர் இப்போது எங்கே என்ற ஒரு கேள்வியைக் கேட்கின்றபோது, நான் கேட்கிறேன். முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருடைய சம்மதம் இல்லாமல் மாகாண கவுன்சிலைக் கலைக்க முடியாது என்ற ஒப்பந்தத்தின் பேரில் ஒரு அருமையான உரிமை, உச்சகட்ட உரிமை நமக்குக் கிடைத்திருந்தது. தமிழ் மாகாண முதலமைச்சருடைய அனுமதி இல்லாமல் சபையைக் கலைப்பதற்கு இலங்கையில் இருக்கிற மத்திய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று பெற்றுத் தந்த அந்த உரிமையையே ரத்து செய்யவேண்டுமென்று வாதிட்டது யார்? அதன்மூலம் தமிழனுக்கு வருங்காலத்திலே கூட கிடைக்கின்ற உரிமையைப் பறிப்பதற்குக் காரணமாக இருந்தது யார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மோகன் தொடரலாம்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னது, அங்கே தமிழ் மாநிலத்திலே ஒரு முதலமைச்சர், அங்கே ஒரு முதலமைச்சரை நாங்கள் உருவாக்கினோம். இது சாதனை என்று சொன்னார்

அபபடி ஒரு முதலமைச்சர் என்னதான் எதிர்ப்புகள் வந்தாலும் அந்த முதலமைச்சருக்கு மக்கள் ஆதரவு இருந்திருந்தால், அவர் உண்மையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சராக இருந்திருந்தால் இன்றைக்கும் வரதராஜப்பெருமாள் தான் அங்கே முதலமைச்சராக இருந்திருப்பார். டி.வி.-யிலே தோன்றிக் கொண்டிருந்த வரதராஜப்பெருமாளை நான் டி.வி. பார்க்கும் போது எல்லாம் தேடுகிறேன், காண முடியவில்லை. அதற்கு முன்னாலே பார்த்தால் வரதராஜப்பெருமாள் நியூஸ் இல்லாத டி.வி.-யே இருக்காது. எங்கே? ஆக, ஒரு நாடகத்தை ஆடினீர்கள். ஏதோ இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசாங்கம் பெரிதாகச் செய்கிறது. ராஜிவ் காந்தி பெரிதாக இலங்கைத் தமிழர்களுக்குச் செய்கிறார் என்று தமிழர்களை நம்ப வைப்பதற்காக திட்டமிட்டு ஒரு நாடகத்தை ஆடினீர்கள். அந்த நாடகத் திரை, முகத்திரை இப்போது கிழிந்து போய்விட்டது. ஆகவே, அதை இனிப் பேசிப் பிரயோசனம் இல்லை. இப்போது போய் நாங்கள் வரதராஜபெருமாளைக் கொண்டு வந்தோமே, எங்கே என்று கேட்டுப் பிரயோசனம் இல்லை. அவர் காணாமல் போயாச்சு, எங்கே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை நோக்கி நகரலாம்.

திரு. இரா. மோகன் : வருகிறேன். குறுக்கிடுகிற 'டைமை நீங்கள் கழித்து விடக்கூடாது. இங்கே இன்றைக்கு நம்முடைய தீர்மானம், இந்த அவையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம்-- முழுக்க, முழுக்க, பல ஆண்டுக் காலமாக சோதனைகளுக்கு ஆட்பட்டு, போராளிகள் அவர்கள் எந்த அளவுக்குத் தாக்கு பிடிக்க முடியுமோ அந்தக் காரியத்தையும் அவர்கள் அங்கே தமிழர்களுக்காகச் செய்து, ஆனாலும் சிங்களப் படையினர் இன்றைக்கு மூன்று விதத் தாக்குதல்களைத் தொடர்ந்திருக்கிறார்கள், தமிழர்கள் மீது. ஒரு பக்கம் விமானத்திலே அனுதினமும் குண்டு வீச்சு. ஒரு பக்கம் கப்பல் படையிலிருந்து குண்டு வீச்சு. ஒரு பக்கம் தரைப்படை மூலமாக சிங்கள ராணுவத்தினுடைய ஆதிக்கம். இவைகள் அத்தனையையும் அங்கே தாங்கி, தாங்கமுடியாத நிலைமையில். ஆயிரக்கணக்கிலே இன்றைக்கு தமிழர்கள் அங்கே இருந்து ஓடி வந்து கொண்டிருக்கிற காட்சிகளைப் பார்க்கின்றோம். ஆகவே, தமிழ்நாடு இதையெல்லாம் பார்த்துக் கொண்டு, நாம் இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிறோம். ஆகவே எதிர்க்கட்சியாக இருக்கின்றபோது ஒரு பேச்சு, ஆளுங்கட்சியாக வந்தவுடன் ஒரு பேச்சு என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அல்ல. நிலையான கொள்கையை இந்த ஈழத் தமிழர் பிரச்சினையிலே கொண்டிருக்கின்ற இந்த அரசு, இந்தக் கட்சி, அதனுடைய முதலமைச்சர் இந்தத் தீர்மானத்தை இன்றைக்குத் தருகிறார். ஓடி வருகின்ற அந்தத் தமிழர்களை

படுகின்ற துன்பத்திற்கு என்ன காரணம்? ஏன் இந்த நிலை அங்கே ஏற்படுகின்றது? இன்று, நேற்றல்ல, திடீரென்று இப்போது ஏற்பட்ட நிலை அல்ல. தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக தமிழன் அங்கே நசுக்கப்படுகின்றான். இது நாளை முடியுமா? அதுவும் நமக்குத் தெரியாது. இன்னும் ஒரு 5 ஆண்டுக் காலம் ஆகலாம், 10 ஆண்டுக் காலம் ஆகலாம். ஆனால் அப்பாவித் தமிழன் அங்கே சாகடிக்கப்படுகிறான். பல அகதிகள் முகாமிலே, ஆயிரக்கணக்கான அகதிகள் இங்கே தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தவுடன் நம்முடைய அமைச்சர் பெரு மக்கள் எல்லாம் அங்கே போய் அவர்களைப் பார்த்தார்கள்.

12-50 மணி

நான் ஒன்றே ஒன்றை பெருமையோடு சொல்லிக் கொள் கின்றேன். கோவையிலே ஆயிரக்கணக்கான தமிழர்கள், 2,000, 3,000 இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள். இதுவரை எந்த, எந்த அமைச்சர்கள் வந்து பார்த்திருக்கிறார் கள் தெரியுமா? திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் வந்து பார்த்தார்கள்; மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் வந்து பார்த்தார்கள்; மாண்புமிகு நேரு அவர்கள் வந்து பார்த்தார் கள். மாண்புமிகு பொன் முத்துராமலிங்கம் அவர்கள் வந்து பார்த்தார்கள். இத்தனைக்கும் மேலாக, நம்முடைய மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவையிலேயிருந்து பவானி சாகருக்கு திட்டத் துவக்க விழாவுக்குச் செல்கிற வழியில் கொளுத்தும் வெயிலில், 12 மணி வெயிலில், புஞ்சைப் புளியம் பட்டியில் அகதிகள் தங்கியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, காரை நிறுத்தி, உள்ளே போய், அந்த அகதிகளிடம் எல்லாம் பேசினார்கள். ஆர்வத்தோடு ஓடி வந்து அவர்கள் ஒலி பெருக்கியை வைத்து, வெளியிலே நிற்க வைத்து, தலைவரே பேசு என்று சொன்னபொழுது, 12 மணிக்கு அவர்களிடத்திலே பேசி, உங்களுடைய பிரச்சினை எனக்குத் தெரியும்; உங்களுடைய குறை எனக்குப் புரியும், உங்களுக்காக இந்த அரசு என்ன, என்ன செய்ய வேண்டுமோ, அவற்றை எல்லாம் செய்து தரும் என்று சொன்னார். இது கோயம்புத்தூரிலே மட்டும். இதைப் போல், இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு முகாமுக்கும் சென்று அகதிகளைப் பார்த் திருக்கிறார்கள். இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் களாகிய நாங்கள் ஒவ்வொரு முகாமுக்கும் சென்று, அந்த அகதிகளை எல்லாம் பார்த்திருக்கிறோம், எங்களுடைய தலை வருடைய ஆணைப்படி. நான் கேட்கின்றேன், இலங்கையில் இந்த அளவுக்கு ஒரு கொடுமை நடைபெறுகிறது, ஆயிரக்கணக் கிலே அகதிகள் இங்கே வந்து குவிகிறார்கள். தமிழ்நாட்டிலே எதிர்க்கட்சி என்று ஒரு கட்சி எதற்கெல்லாமோ உண்ணாவிரதம், எதற்கெல்லாமோ ஊர்வலம்; எதற்கெல்லாமோ கண்டனம், ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்கள் ஏதாவது ஒரு அகதிகள் முகாமுக்குச் சென்று இலங்கையிலிருந்து வாடி வந்த அந்த அகதிகளைப் பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகம்

மட்டும் அல்ல, நாங்களும் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறோம், பின்பலமாக இருக்கிறோம், எல்லா உதவிகளையும் உங்களுக்கு செய்யத் தயாராக இருக்கிறோம், குரல் கொடுக்க தயாராக இக்கிறோம், என்று அந்தக் கட்சி—எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொண்டு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற கட்சி அங்கே போனதா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்திருக்கிற கட்சி என்று சொல்கிறீர்கள். உட்காராமல் வெளியே போன கட்சி என்று சொல்லுங்கள்.

திரு. இரா. மோகன் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ்ஸுக்குச் சொல்கிறேன், இங்கே உட்கார வேண்டிய கட்சி, எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்று இன்றைக்கு உட்கார்ந்திருக்க வேண்டிய கட்சி. என்னதான் தங்கள் கட்சியில் அவர்களுக்குள் சண்டை என்றாலும், தமிழர்கள் பிரச்சினையில் பேசுவதற்கு இங்கே வந்து அந்த அம்மாள் 5 நிமிஷம் பேசிவிட்டு போகக் கூடாதா? உடம்பு நன்றாக ஆனபிறகுதானே ஊர்வலம் போனார்கள் ; உடம்பு நன்றாக ஆனபிறகுதானே, உண்ணாவிரதம் இருந்தார்கள். தமிழ் அகதிகள் முகாமுக்குப் போய் 5 நிமிஷம் பார்த்திருக்கக் கூடாதா? போகவில்லை. இனிமேலாவது, போவார்கள் என்று பேசுகிறேன். இனிமேலாவது போய்ப் பார்க்க வேண்டும். எங்களுடைய கொள்கை, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையில் அந்தத் தமிழர்கள் வாழ வேண்டும் ; அவர்கள் கண்ணீர் துடைக்கப்பட வேண்டுமென்பதிலே தெள்ளத் தெளிவான கருத்தினை கொண்டிருக்கிற இயக்கம்.

நான் இங்கே ஒன்றிரண்டை மட்டும் கூறி விடை பெற விரும்புகிறேன். அங்கேயிருந்து சிங்கள இராணுவத்தால், காடையர்களால் தாக்கப்பட்டு இங்கே வந்திருக்கிற அகதிகளுடைய நிலைமைகளை எல்லாம் பார்த்த பொழுது, கிடைத்த தகவல்களை வைத்துப் பார்த்தால், இன்றைக்கு அந்த அகதிகள் என்ன கேட்கிறார்கள் என்றால், அங்கே தமிழர்கள் வாழ்கிற எல்லா பகுதிகளிலும் சிங்கள இராணுவம் முற்றுகையிட்டிருக்கிற காரணத்தால், உணவுப்பொருள் எங்களுக்கு வந்து சேரவில்லை, ஒரு கிலோ அரிசி கூட கிடைக்கவில்லை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் எரிபொருள் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை. எங்களுக்கு மருத்துவ வசதிக்காக மருந்துகள் வாங்க வேண்டுமென்றால் மருந்துகள் கிடைப்பதில்லை. ஆகவே, இந்தக் குறைகளை எல்லாம் தமிழர்களுக்குப் போக்குவதற்கு நம்முடைய மாநில அரசு—நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, அங்கே வாழ்கின்ற இனம்—அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற அந்தத் தமிழர்களுக்குத் தேவையான இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு மத்திய

அரசு முன் வரவேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்முடைய குரலை உயர்த்தி, அங்கே பிரதமரோடு பேச வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, இன்றைக்கு நம்முடைய மாநில அரசைப் பொறுத்த அளவில், நாம் செய்யக் கூடிய மிகப் பெரிய காரிய மாக அவர்களை வாழ வைப்பது மட்டுமல்ல, நேற்றைய தினம் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். நாமெல்லாம் மகிழ்ச்சிப் படுகின்ற ஒரு நல்ல காரியம். 10,000 வீடுகள் இலங்கை அகதிகளுக்காக ரூ. 4 கோடி செலவிலே நாங்கள் கட்ட ஆரம் பித்தோம் என்று சொல்லி வந்த முதல்வர் அவர்கள், அதற்கடுத்து அந்த 10,000 வீடுகள் அந்த அகதிகளுக்குப் போதாத நிலைமை கள் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற காரணத்தால் ரூ. 8 கோடி செலவில் 20,000 வீடுகளை இலங்கையிலிருந்து வருகின்ற அந்த அகதிகளுக்கு, அந்தத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நான் கட்டித் தருகிறேன் என்ற ஒரு நல்ல செய்தியினை அவர் நேற்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள்.

12-55 மணி

நம்முடைய மாநில அரசைப் பொறுத்த வரையிலே இதை நாம் செய்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் 'நீங்கள் வாயிலே பந்தல் போடுகிறீர்களே, அவர்களுக்காக என்ன செய்தீர்கள்' என்று கேட்டார்கள். என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்கிறோம்; அதையும் உளப்பூர்வமாக, மனப் பூர்வமாகச் செய்கிறோம். போராளிகள் ஒற்றுமையோடு வாழ வேண்டும். அவர்களைப் பிரித்தாளுகின்ற கொள்கை இந்த அரசுக்குக் கிடையாது. அவர்களைப் பிரித்து, ஒருவ ரோடு ஒருவர் அடித்துக்கொண்டு அவர்கள் அழிய வேண்டும்; அந்த இனத்தை அழிக்க வேண்டும்; அதற்கு நாம் அரசியல் ரீதியாகப் பயன்பட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கோ இந்த அரசுக்கோ இல்லை. இதை நாங்கள் மிகத் தெளிவாகச் சொல்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் முறை சொல்லியிருக்கிறார்கள். 'தமிழர்களே ஒற்றுமையாக இருங்கள்; போராளிக் குழுக்களே, உங்களிடத்திலே இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு ஒற்றுமையோடு தமிழினம் வாழ்வதற்காகப் பாடுபடுங்கள்' என்று சொன்னார்கள்.

'ஈழத்தமிழ்' என்று சொன்னீர்களே, இன்றைக்குச் சொல் வீர்களா என்று ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். அன் றைக்கும் சொன்னோம்; இன்றைக்கும் சொல்கிறோம்; நாளைக்கும் சொல்வோம். அங்கே இருக்கிற ஈழத்தமிழர் களுடைய கோரிக்கை தமிழினம் என்று சொன்னால் அதுதான்

எங்களுடைய முடிவு ; இந்த அரசினுடைய முடிவு ; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முடிவு. இதை முடிவு செய்ய வேண்டியது அங்கே இருக்கக்கூடிய தமிழினம். நாம் போய் திணிக்க முடியாது. அவர்கள் தமிழ் ஈழம் வேண்டாம் என்றால் அதெல்லாம் முடியாது, தமிழ் ஈழம் கேள் என்று சொல்ல முடியாது. அவர்கள் தமிழ் ஈழம் வேண்டும் ; இதைத்தவிர வேறு வழியில்லை எங்களுக்கு என்று சொன்னால் நீங்கள் அதைக் கேட்காதே ; வரதராஜப்பெருமாள் மாதிரி நாங்கள் ஒரு 'பப்பட் கவர்ன்மென்டை' கொண்டு வந்து காண்பிக்கிறோம், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்ல முடியாது. அப்படி அந்த.....

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். தமிழர் தலைவரை 'பப்பட்' என்று சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது இங்கே அகதியாக வந்த வரதராஜ பெருமாள் அங்கே அமைச்சராக முடிந்தது. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இல்லாதபோது அமைச்சராக இருந்தவர் அகதியாகப் போகவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மோகன் அவர்கள் தமிழ் ஈழம் தான், தனி ஈழம் தான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்று சொன்னார்களே. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் அதை ஏற்றுக் கொள்கிறார்களா? அதை ஒப்புக்கொண்டு, அதை அறிவித்தாலும் மகிழ்ச்சிதான். எதை அறிவிக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதுதான். எங்களுடைய கொள்கை தெளிவானது, அரசினுடைய கொள்கையும் அதுதான் என்று திரு. மோகன் சொல்கிறாரே. அப்படி என்றால் முதலமைச்சர் அதற்கு என்ன பதில் சொல்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது தெளிவாகச் சொன்னேன். எங்களுடைய தலைவர், தமிழக முதல்வர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஆயிரம் முறை திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வாழ்கின்ற தமிழ் மக்களுடைய முடிவு என்ன முடிவோ அதுதான் எங்களுடைய முடிவு. அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற முடிவு எதுவோ அதைத்தான் நாங்கள் ஆதரிப்போம். எதையும் அவர்கள்மீது திணிக்க மாட்டோம். தமிழ் ஈழம்தான் எங்களுக்கு வழி, வேறு வழியில்லை என்ற நிலையை அவர்கள் எடுப்பார்களானால் அதற்கு பின்பலமாக இருப்போம். இதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை ; எந்தவிதத்திலும் நாங்கள் இதிலிருந்து பின்வாங்கப்போவதில்லை என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்குத் தெள்ளத்தெளிவாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

[திரு. இரா. மோகன்]

கடைசியாக இந்தத் தீர்மானத்தின்மீது நான் மிகத் தெளிவாகப் பேச விரும்புவது, தெரிவித்துக்கொள்ள விரும்புவது ஈழத் தமிழர்களுடையப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உளப்பூர்வமாக இந்த அரசு மத்திய அரசை நோக்கி, அவர்களுடைய இன்னல்களைத் துடைப்பதற்கு நீங்கள் முன்வாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மத்திய அரசு நிச்சயமாக இந்த வேண்டுகோளை செவிமடுத்து, அங்கே வாடிக்கொண்டிருக்கிற இலங்கைத் தமிழர்களுடைய இன்னலை அகற்றும், அவர்களைக் காக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கவலை தரக்கூடிய நிலைமைகளைக் கூர்ந்து கவனித்து, இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டுமென்ற ஆர்வத்தோடு இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இலங்கைப் பிரச்சினையிலே எங்களுடைய நிலைபாடுகளை விமர்சிக்கின்றவர்கள் எங்களுக்கு தமிழ் உணர்வே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்குக்கூட போயிருக்கிறார்கள். ஆனாலும் அங்கே தொடர்ந்து நடைபெற்று வருகின்ற இனப் படுகொலையை—திரு. பீட்டர் ஆல்போன்ஸ் கூட கேட்டார்கள் இனப் படுகொலையா என்று. எங்களுடைய நிலைபாடு, அங்கே தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலையை சிங்கள வெறியர்களும் அவர்களுக்குத் தலைமை தாங்கும் பிரேமதாசா அரசும் நடத்தி வருகிறது என்பது—இலங்கையிலே தமிழினத்தை முற்றாக அழித்துவிடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவிக்கக்கூடிய அளவுக்கு தொடருகிறது என்கிற காரணத்தினாலே கவலையோடு இந்த விவாதத்திலே நாங்கள் பங்கேற்றுக் கொள்கிறோம்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, அங்கே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை காரணமாக பல்லாயிரக்கணக்கான அகதிகள் இங்கே வருகிறார்கள். அது நமக்கு நம்முடைய நலிந்த தோள்களுக்கு பெருத்த சுமையை ஏற்படுத்தியுள்ளது. இருந்தாலும் அந்த சுமை பெரிது அல்ல, மனித நேயம் பெரிது என்ற முறையில் அந்த அகதிகளைப் பேணி பராமரிக்க நாமெல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

[1990 ஆகஸ்ட் 23

[திரு. உ. ரா. வரதராசன்]

ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியின் பின்னணி என்ன என்பதைப் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவதற்கு ஒரு படி என்று அமைந்து இருக்கக்கூடிய இந்திய–இலங்கை உடன்பாடு சீர்குலைக்கப்பட்டிருக்கிறது. இந்த உடன்பாடு சீர்குலைக்கப்பட்டது சிங்கள இன வெறி பிடித்த பிரேமதாசா ஆட்சி காரணமாக. மறுபக்கம் அந்த உடன் பாட்டை சீர்குலைப்பதிலே விடுதலைப் புலிகளும் ஒரு பங்கு ஏற்று இருக்கிறார்கள். இந்திய–இலங்கை உடன்பாட்டை மரியாதைக்குரிய மறைந்த நண்பர் அமிர்தலிங்கம் போன்ற வர்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டார்கள்—செல்வா ஈட்டிய செல்வம் என்று தீட்டி அதை வரவேற்றார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் முதலிலே அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் யாழ்ப்பாணத்திலே சென்று சுடலை அம்மன் கோவில் திடலிலே பொதுக் கூட்டத்திலே அறிவித்து அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து ஆயுத ஒப்படைப்பு என்பதும் கூட நடைபெற்றது. அது முழுவதும் நடைபெற வில்லை என்பதை இப்போதைய நிகழ்ச்சிகள் எல்லாம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் வட கிழக்கு மாகாணத்தினுடைய இடைக்கால முதலமைச்சர் யார் என்று தீர்மானிப்பதிலே இலங்கை அரசுக்கும், எல்.டி.டி.இ.–யினருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதிலேயிருந்து அங்கே இந்த உடன் பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்பு நிலைமைக்கு எல்.டி.டி.இ. சென்றது.

வட கிழக்கு மாநிலத்திற்கு அங்கே தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் எல்.டி.டி.இ. பங்கு ஏற்கவில்லை இ.பி.ஆர்.எல்.எப். பங்கு ஏற்றது. திரு. வரதராஜப் பெருமாள் அங்கே முதலமைச்சராக ஆனார். அதற்குப் பிறகு தாங்கள் பங்கு ஏற்காத தேர்தலில் தங்களை மீறி பங்கு கொண்ட தாங்கள் விரும்பாத இ.பி.ஆர்.எல்.எப். தலைமையின்கீழ் உள்ள வடகிழக்கு மாகாண ஆட்சிக்கு பாதுகாப்பாக அமைந் திருக்கின்ற ஐ.பி.கே.எப். இந்திய அமைதிப் படை என்று கணித்து அமைதிப் படைக்கு எதிராக எல்.டி.டி.இ. ஆயுத மோதலில் ஈடுபட்டது.

ஐ.பி.கே.எப். அங்கே இருந்தபோது அது இந்திய நாட்டி லிருந்து அனுப்பப்பட்ட ராணுவம், அங்கே ராணுவத்தில் இருக் கக்கூடிய சிலபேர் சில தவறுகள் செய்து இருக்கலாம், தவறுகள் நடந்தது என்று பத்திரிக்கை செய்திகள் எல்லாம் கூட வந்திருக் கின்றன. ஆனால் 1983 ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கையிலே தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலை நடத்திய சிங்கள ராணுவம் முகாமுக்குள்ளே முடக்கி வைக்கப்பட்ட காலம் என்பது அமைதிப் படை அங்கே இருந்த காலம் மட்டும் தான் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். அமைதிப் படை அங்கே இருந்த காலத்திற்கு முன்பே அகதிகள் இங்கே வந்து கொண்டு இருந்தார்கள். அது வெளியேறியபிறகும் இப்

1990 ஆகஸ்ட் 23]

[திரு. உ. ரா. வரதராசன்]

போதும் அகதிகள் வந்து கொண்டு இருக்கிறார்கள். அகதிகள் வராத நிலைமை ஏற்பட்டது என்பது அமைதிப் படை அங்கே இருந்த காலத்தில் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அங்கே பிரேமதாசா அரசு இந்த இந்திய இலங்கை உடன் பாட்டின்படி அந்த வட கிழக்கு மாகாண கவுன்சிலுக்கு உரிய அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க முன்வரவில்லை. மாறாக, போராளிக் குழுக்களை எல்லாம் பிரித்து ஆளுகின்ற சூழ்ச்சியிலே அவர் இறங்கினார். ஐ.பி.கே.எப். வெளியேற்றப்பட வேண்டு மென்ற கோரிக்கையை பிரேமதாசா தூண்டிவிட்டார். எல்.டி.டி.இ.—யும் ஐ.பி.கே.எப். வெளியேற வேண்டும் என்று அங்கே கோரிக்கையை வைத்தார்கள். இங்கேயும் ஐ.பி.கே.எப். வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலராலும் முன் மொழியப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக நம்முடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் எவ்வளவுதான் சொன்னாலும் அமைதிப் படை வெளியேற்றம் என்பதை நிர்ணயித்தது கடந்த காலத்திலே மத்திய அரசு ஆட்சியிலே இருந்து இருக்கக்கூடிய திரு. ராஜீவ் காந்தி அரசு தான். அந்த ஒப்பந்தத்தின்படி, உடன்பாட்டின்படி அது ஒரு ஆரம்பம் என்று சொன்னார்களே அந்த ஆரம்பத்தி னுடைய தொடர்ச்சியாக வட கிழக்கு மாகாண கவுன்சிலுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிப்பதையும் நிறைவேற்றியதற்குப் பிறகு அதற்கான நிர்ப்பந்தத்தை இலங்கை அரசாங்கத்தின்மீது செலுத்தியதற்குப் பிறகு அமைதிப் படை வெளியேற்றத்தை திரு. ராஜீவ் காந்தி தொடங்கியிருந்தால் இந்தப் பிரச்சினை இவ்வளவு சீக்கிரம் வெடித்து இருக்காது. மாறாக வெளி யேற்றுவதற்கு ஒப்புக்கொண்டு அதற்கான முழு காலக் கெடுவும் திரு. ராஜீவ் காந்தி அரசால் நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு பின்னால் வந்து இருக்கக்கூடிய தேசீய முன்னணி அரசு இந்த அதிகார பகிர்வு நிறைவேற்றப்பட வேண்டும் என்று பகிர்ந்து அளிப்பதை.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே இரண்டாவது கருத்துக்கே இடம் இல்லையே; பேசட்டுமே.

18-05 மணி

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, நான் சொல்லுவது வரலாற்று நிகழச்சிகள், உண்மைகள். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நிர்ணயித்த காலக்கெடுவின்படி அந்தக் காலக் கட்டத்திற்கு சில நாட்கள், சில வாரங்கள் நீடித்த பிறகுதான் அந்த அமைதிப் படை வாபஸ் என்பது தேசீய முன்னணி ஆட்சி யில் பூர்த்தியானது. தேசிய முன்னணி அரசும்கூட அந்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு நடத்தப்பட வேண்டும், அது நடக்கிற வரையிலே இன்னும் கொஞ்சம் காலம் அங்கே அமைதிப்படை நீடித்து

இருக்கலாம் என்கின்ற நிர்பந்தத்தைச் செலுத்தியிருந்தால் நன்றாக இருக்கும் என்று பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வார்களேயானால் நான் அதை ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் அந்த அமைதிப்படை வெளியேறுவதற்கே தேசிய முன்னணி அரசுதான் காரணம் என்று சொல்வது வரலாற்று உண்மையல்ல என்பதை நான் இங்கே, இந்த அவைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒன்றும் குற்றம் சாட்டவில்லை. செய்திகளைத்தான் சொல்கிறார்.

திரு. உ. ரா. வரதராசன் : ஐ.பி.கே.எஃப்-ஐ வெளியேற்றிய பிறகு அங்கே வடகிழக்கு மாகாண கௌன்சில் ஆட்சி என்பதே குலைந்து போனது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றுக்கும் குறுக்கிட்டுப் பேசவேண்டுமென்று ஆரம்பித்தால் உண்மைகளைக் கூடப் பேச முடியாது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் என் பெயரைச் சொல்லி சொன்னதால் நான் சொல்கிறேன். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் பேசியதால் அவர் உங்கள் பெயரைச் சொன்னார் ; அவ்வளவுதான்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அவர் சொன்ன கருத்துக்களைப் பற்றித்தான் சொல்கிறேன். அதாவது, ராஜீவ் காந்தி அவர்கள் படைகளைத் திரும்ப அழைக்கச் சொன்னார் என்பது வேறு. இனிமேல் என்ன நேர்ந்தாலும் நாங்கள் படைகளை அனுப்ப மாட்டோம் என்று நமது வெளியுறவுத் துறை அமைச்சர் சொல்வது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரும் படைகளை அனுப்புவதற்கு நிர்ணயித்ததைத்தான் சொன்னார். எப்போது யார் நிர்ணயித்தது ; யார் வரவழைத்தது என்பதைத்தான் சொன்னார். வேறு ஒன்றும் சொல்லவில்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது முழுமையாக படை வீரர்களை இங்கே அழைக்கக்கூடிய முடிவை மத்திய அரசு எடுக்கவில்லை.

To show tha. we have no intention to occupy he territory. We are prepared to withdraw our forces at any time. So, as a token of our sincere interest, we exhibited a part of our action. We never made any statement that we will never ask any question about the genocide in Sri Lanka.

அந்த வார்த்தையை ராஜீவ் காந்தியினுடைய அமைச்சரவையிலே,

எந்த அமைச்சரும் சொல்லவில்லை, தேசிய முன்னணியுடையே அமைச்சரவையிலேதான் வெளியுறவு அமைச்சர், நாங்கள் என்ன நேர்ந்தாலும் இனி ராணுவத்தை அனுப்ப மாட்டோம் என்று சொன்னார்கள்.

திரு. உ. ரா. வரதராசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜிவ்காந்தியினுடைய அரசு ஒரு டோக்கன் வித்டிராயல் அடையாள பூர்வமான வாபஸ் மட்டுந்தான் ஒப்புக்கொண்டது, முழுமையாக அமைதிப்படையை வெளியேற்றுவதற்கோ வாபஸ் பெறுவதற்கோ ஒப்புக்கொள்ளவில்லை என்பது உண்மையல்ல. ஜனவரி 31, 1990 என்று நிர்ணயிக்கப் பட்டது. அது, மார்ச் 31 என்று பின்னாலே தள்ளிப்போடப் பட்டது. இவையெல்லாம் வரலாறு ரீதியான உண்மைகள். ஆனால் மீண்டும் அனுப்பப்பட வேண்டுமென்று இப்போது இருக்கிற தேசிய முன்னணியினுடைய அமைச்சர்கள் சொல்லவில்லையே (குறுக்கீடு) குறுக்கிட்டுச் சொல்வதாக இருந்தால், தயவுசெய்து பின்னாலே சொல்லலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாதத்தைத் திசை திருப்பக் கூடாது. அவர் சொல்லட்டுமே.

திரு உ. ரா. வரதராசன்; என்னுடைய கருத்தோட்டம் சிதைவுபடாமல் இருப்பதற்குக் கொஞ்சம் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும் அவர் பேசும்போது அவர் செய்தியைச் சொல்லி விட்டார். (குறுக்கீடு) குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. அவர், செய்தியைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். (குறுக்கீடு) என்ன குற்றச்சாட்டு சொல்லிவிட்டார் நிர்ணயிக்கப்பட்டது என்றுதானே சொல்கிறார் ஒவ்வொன்றுக்கும் எழுந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்று ஆரம்பித்தால் அப்புறம்பேசவே முடியாது. குறுக்கீடு அவர் பேசட்டும், விடுங்கள்,

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதிப் படையை வாபஸ் பெறுவது என்று எடுத்த முடிவு தவிர்க்கப்பட முடியாத முடிவு. நாங்களும் ஒப்புக கொள்ள வேண்டும். காரணம், இந்தியா-இலங்கை உடன பாட்டிலே இலங்கையினுடைய அரசு, இலங்கையினுடைய குடியரசுத் தலைவர் விரும்புகிற நாள் வரையில்தான் அமைதிப்

படை இருக்க முடியும் என்கின்ற அடிப்படையில்தான் அந்தப் படை அனுப்பப்பட்டது. இப்போது தேசிய முன்னணியினுடைய ஆட்சியிலே இருக்கக்கூடிய வி. பி. சிங் ஆனாலும் சரி, வேறு எந்த அமைச்சர் ஆனாலும் சரி 'நான் நினைக்கிறேன், அனுப்புகிறேன்' என்று அனுப்புவதற்கு ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தனே உடன்பாட்டிலே இடம் இல்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. உண்மையைத் தெரிந்து கொண்டு உண்மைச் செய்திகளுக்கிடையே அடிப்படையிலே நம்முடைய விமர்சனங்கள் இருக்க வேண்டுமென்பதைத்தான் என்னுடைய நோக்கமாக நான் சொல்கிறேன்.

இப்போது, ஐ.பி.கே.எப். வெளியேறியதற்குப் பிறகு அங்கே வடகிழக்கு மாகாண கவுன்சில் என்பது குலைந்து போனது. வரதராஜப்பெருமாள் அவர்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வெளியேறுகிற நேரத்தில்கூட அரசியல் தீர்வுக்கு மாறான ஒரு அறிவிப்பை வரதராஜப்பெருமாள் அந்த கவுன்சிலினுடைய தீர்மானமாக நிறைவேற்றி, வெளியேறினார். அதுவும் சரியல்ல என்பது எங்களுடைய கருத்து.

அங்கே, வடகிழக்கு மாகாண ஆட்சி நிலை குலைந்ததை எல்.டி.டி.ஈ. தன்னுடைய வெற்றியாக நினைத்தது. பிரேமதாசா, எல்.டி.டி.ஈ., தேன்நிலவு சற்றுகாலம் அங்கே நீடித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இந்த மன்றத்திலே சொன்னார்கள். ராஜீவ்காந்தி ஆட்சியிலே இருந்தபோது பேச்சு வார்த்தைக்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சென்று ராஜீவ்காந்தியை சந்தித்த போது, பின்னாலே 'நாங்களே நேரடியாக இலங்கை அரசோடு பேசிக் கொண்டிருக்கிறோம், இந்திய அரசாங்கத்தினுடைய தலையீடு தேவையில்லை' என்று விடுதலைப் புலிகளே சொல்ல வேண்டிய அளவுக்கு அவர்களிடத்திலே ஒரு உறவு ஏற்பட்டது. அந்தத் தேன்நிலவு பிரேமதாசாவுக்குத் தேவைப்பட்டது. காரணம், தெற்கே ஜெ.வி.பி. பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இவருக்கு ஒரு கால அவகாசம், இடைவெளி தேவைப்பட்ட காரணத்தினாலே எல்.டி.டி.ஈ-யோடு சற்று காலம் சமரசமாக அவர் இருந்தார். ஜெ.வி.பி. பிரச்சினையை ஓரளவுக்கு கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்ததற்குப் பிறகு பிரேமதாசா தன்னுடைய இராணுவத்தை எல்.டி.டி.ஈ.-க்கு எதிராகத் திருப்பியிருக்கிறார் என்பதுதான் இன்றைய நிகழ்வுகள். அங்கே பிரச்சினை வெடித்தது.

வடகிழக்கு மாகாணத்திலே இருக்கக்கூடிய காவல் நிலையங்களையெல்லாம், போலீஸ் ஸ்டேஷன்களையெல்லாம் தங்களுடைய கட்டுப்பாட்டிலே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று எல்.டி.டி.ஈ. கோரியபோது, அதை ஏற்க முடியாது என்றதற்குப் பிறகு, சிங்கள இராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.க்கும் இடையிலே ஆயுத மோதலாக அங்கே ஆரம்பித்ததுதான், இன்றைக்கும் அந்த யுத்தம் தொடருகிறது.

1990 ஆகஸ்ட் 23] [திரு. உ.ரா. வரதராசன்]

13-10 மணி

எல்.டி.டி.ஈ. இலங்கை இராணுவ மோதல் தொடங்கிய பிறகுதான், இலங்கைத் தமிழர் மீது சிங்கள இராணுவம் நாலு கால் பாய்ச்சலிலே பாயத் தலைப்பட்டது. அகதிகள் வருவதும் அதற்குப் பிறகுதான் ஆரம்பித்திருக்கிறது. யாழ் கோட்டைக் கான சண்டையிலே, யாழ் நகரைச் சுற்றி வசிக்கக்கூடிய அப்பாவித் தமிழ் மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலேயெல்லாம், ரசாயனக் குண்டுகளை, தீக்குண்டுகளை வீசி அழிக்கிற அந்தப் படுகொலை முயற்சியையும் சிங்கள அரசு மேற்கொண்டது. இவையெல்லாம் கடுமையான கண்டனத்திற்குரியவை. இத்தகைய நிலைமைக்கு பிரேமதாசா, சிங்கள வெறியர்கள், சிங்கள இனவெறி அரசு ஆகியோர் பிரதானப் பொறுப்பு. ஆனால், எல்.டி.டி.ஈயும் துரதிருஷ்டவசமாக இந்த நிலைமைக்கு ஒரு காரணமாக இருந்திருப்பதுதான் வருத்தத்திற்குரியது.

எல்.டி.டி.ஈ. இனர் இன்னொன்றையும் செய்கிறார்கள். சகோதரப் போராளிகளைத் தாக்கி அழிக்கிற போக்கிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, பிரேமதாசா அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள், 'சொந்த மக்களையே குண்டு வீசிக் கொல்வதா?' என்று. சிங்கள இனவெறி காரணமாக, தமிழ் மக்களை, தன்னுடைய நாட்டு மக்களாக இருந்தாலும், கொன்று குவிக்கிற அந்த ஈனச்செயலை பிரேமதாசா செய்து கொண்டிருக்கிறார். அது தடுக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தது முற்றிலும் சரி. ஆனால், 'சொந்த சகோதரத் தமிழர்களையே கொல்வதா?', என்று பிரபாகரனைக் கேட்க வேண்டிய கடமையையும் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அது ஏதோ சகோதர யுத்தம் அல்ல. யுத்தம் என்று சொன்னால், இருவருமே ஆயுத பாணியாக இருந்து நடத்துவதுதான் யுத்தம். ஆனால் நிராயுதபாணியாக இருக்கக்கூடிய போராளிகளையெல்லாம் இதரப் போராளிகளையெல்லாம் கொல்வது சகோதரப் படுகொலை. இதிலே தொடர்ந்து, எல்.டி.டி.ஈ. ஈடுபட்டு வந்திருக்கிறது. சிறிசபாரத்தினம், உமாமகேஸ்வரன்.........................

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் போராளிகளுக்குள்ளே சகோதரத்துவம் வேண்டும் என்று 'கலைஞர் மடல்' வாயிலாக பல கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். பல மேடைகளிலும் பேசியிருக்கிறார்கள். எனவே, கலைஞர் அவர்கள் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்பது போல மாண்புமிகு உறுப்பினர் பேசுவது சரியல்ல.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சகோதர யுத்தம் நடக்கக் கூடாது என்று மாண்புமிகு கலைஞர் அவர்கள் தொடர்ந்து பேசி வருவதையும், எழுதி

வருவதையும் படித்திருக்கிறவன்தான் நான். தமிழ்நாட்டிலே பத்மநாபா படுகொலை நடந்ததற்குப் பிறகு, சகோதர யுத்தத்தை தமிழ்நாட்டிலே நடத்தி விட்டார்களே என்று அறிக்கை விட்டதும் உண்மைதான். நான் கேட்பது, இன்றைக்கு சகோதரப் படுகொலையை நடத்தக்கூடிய எல்.டி.டி.ஈ. யினரைப் பார்த்து பிரபாகரனைப் பார்த்து, பிரேமதாசாவுக்கு விடுத்த வேண்டுகோளைப் போல 'சகோதரப் போராளிகளைப் படுகொலை செய்வதை நிறுத்துங்கள்' என்ற வேண்டுகோளையும் சேர்த்து தெளிவாக முதலமைச்சரவர்கள் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாக இருந்ததே தவிர, சகோதர யுத்தத்தை முதலமைச்சர் அவர்கள் ஊக்குவிக்கிறார்கள் என்னும் பொருள்பட நான் சொல்லவில்லை. இன்றைக்கு, உமாமகேஸ்வரன், அமிர்தலிங்கம், பத்மநாபா ஆகியோர் எல்.டி.டி.ஈ-யினரால் கொலை செய்யப்பட்டிருப்பது என்பது வருந்தத்தக்க, அதிர்ச்சி அளிக்கக்கூடிய, அநாகரீகமான உண்மைகள். அவையும் சேர்த்து தடுத்து நிறுத்தப்பட்டால்தான், இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது காண முடியும்.

இப்போது அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது சரியானது. இன்றைக்கு இருக்கக்கூடிய சர்வதேச சூழ்நிலையிலே—உலக சூழ்நிலையிலே, எந்த நாட்டினுடைய பிரச்சினையாக இருந்தாலும், அதற்கு ஒரு இராணுவத் தீர்வு என்பது சாத்தியம் இல்லை. ஆனால், எது அரசியல் தீர்வு என்பது துரதிருஷ்டவசமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தில் தெளிவாகக் கூறப்படாமலேயே இருக்கிறதே என்கிற காரணத்தினாலேதான், ஒரு திருத்தத்தைத் தர வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. தனி ஈழத்தைத் தான் ஈழத் தமிழர்கள் மீது நான் திணிக்க விரும்பவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கே திரு. மோகன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது இந்தப் பிரச்சினையிலே ஒரு முன்னேற்றமான நிலைபாடுதான். ஆனால், ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளிட்டு, சுயாட்சி அதிகாரம் கொண்ட வட கிழக்கு மாகாணம் தமிழர்களுக்கு, தமிழர் வாழக்கூடிய பகுதிகளுக்கு என்கிற முறையிலேதான், அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதிலே எல்.டி.டி.ஈ. மட்டுமல்ல; (எல்.டி.டி.ஈ., வேண்டாமென்று நான் சொல்லவில்லை) எல்.டி.டி.ஈ.-யையும் சேர்த்து அனைத்து தமிழ் ஈழப் பகுதிகள்—தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய அரசியல் கட்சிகள், போராளிக் குழுக்கள் அத்தனையையும் சேர்த்து பங்கேற்கச் செய்து, ஒரு பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தினுடைய நோக்கமாகும். (மணியடிக்கப் பெற்றது) நான் பிரச்சினையை விட்டு வெளியே செல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். சற்றுக்கூடுதலாக நேரம் ஒதுக்குங்கள்.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால்தான் 14 மணித்துளிகள் கொடுத்திருக்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : அங்கே இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். அதற்கு ஒரு போர் நிறுத்தத்தை இலங்கை அரசு பிரகடனப்படுத்த வேண்டும். இதற்கு இந்திய அரசு, இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். இராணுவ மோதலை நிறுத்த எல்.டி.டி.ஈ-யும் ஒப்புக் கொள்ள வேண்டும்; நிறுத்த வேண்டும். எல்.டி.டி.ஈ. ஆயுதங்களைக் கீழே போட்டு, இராணுவத் தீர்வின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது சாத்தியமல்ல என்கிற நிலைபாட்டை ஏற்க வேண்டும். அரசியல் தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டும். சகோதரப் படுகொலையை நிறுத்த வேண்டும். அதோடு தனது சகோதரப் படுகொலை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு, தமிழ் மண்ணை-தமிழ் நாட்டைத் தளமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் தடுத்த நிறுத்த வேண்டும் என்பதையும் சேர்த்து வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இங்கே முன்னாலே கூட, போர் நிறுத்தம் பற்றி, எல்.டி.டி.ஈ யின் தலைவராக இருக்கக் கூடிய கிட்டுவோடு முதலமைச்சரவர்கள் பேசினார்கள். பேசி, பத்திரிகையிலேயும் செய்தி வந்திருக்கிறது. போர் நிறுத்தம் என்று ஒப்புக் கொண்டால், இலங்கை அரசு வெளிநாடுகளிலே இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது; ஆகவே, அந்த இடைக் காலத்தை அது பயன்படுத்திக் கொண்டு விடுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, போர் நிறுத்தத்தை அவர்கள் ஏற்கவில்லை என்பது போல் முதலமைச்சர் அவர்களோடு கிட்டு பேசியதாக இன்றைக்குத் தகவல் தெரிவித்தார்கள்..

13-15 மணி

அப்படியானால் போர் தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்குக் கூட எல்.டி.டி.ஈ. தயாராக இல்லை என்று சொன்னால், இதன் முடிவு என்னவாக இருக்கும்? எப்போது முடியும்? இந்தப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு என்று சொல்கிறபோது நேரடி ராணுவப் போராட்டம், ராணுவ யுத்தத்தின் மூலம் தீர்வு என்று எல்.டி.டி.ஈ.யும் சொல்லவில்லை. அவர்கள் ஒரு கொரில்லா போராட்டத்தைத்தான் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். கொரில்லா போருக்கு எவ்வளவு காலம் என்ற நிர்ணயிப்பே கிடையாது. அது பல பத்தாண்டுகளுக்குக் கூட தொடரலாம். அதற்குள்ளாக அங்கே தமிழர்களின் நிலைமை என்ன ஆகும்? அப்பாவித் தமிழர்கள் எவ்வளவு அல்லலுறுவார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கே இருக்கின்ற தமிழர்களை சிங்கள இராணுவததினரின் இனவெறி அரசு கொன்று குவிப்பதற்கும், மிச்சம் உள்ளவர்கள் இலட்சக் கணக்கில் தமிழ்நாட்டுக்கு வந்து தஞ்சம் புகுவதற்கும்

பிறகு அங்கே தமிழர்களே இல்லை என்ற நிலைமைக்குக் கொண்டு போய்விடும். இதையெல்லாம் ஏகாதிபத்திய சக்தி, கள் இலங்கையில் காலூன்றி நின்றுகொண்டு தூண்டிவிட்டுக் கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏகாதிபத்திய சக்திகள் அங்கே காலூன்றி இருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் அல்ல, இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே கூட ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை நான் சுட்டிக்காட்டி இந்தத் திருத்தத்தை வலியுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோடு இறுதியாக, இந்தப் பிரச்சினையை ஒட்டி தமிழ் நாட்டிலே கூட இதனுடைய எதிரொலியாகப் பிரிவினைக் குரல் எழுப்புகிறவர்கள் பலபேர் இருக்கிறார்கள். தமிழ் தேசியத் தன்னுரிமை என்ற பெயரில் இந்தக் கோரிக்கை வெளிப்படுத்தப் படுகிறது. இதைப் பத்திரிகைக்காரர்கள் சில பேர் எப்படி எழுதுகிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதலமைச்சர் கலைஞர் அவர்களே, இந்தப் பிரிவினை கோரிக் கைகளை ஆதரிக்கிற நிலைபாட்டை மேற்கொண்டிருக்கிறார் கள் என்று எழுதுகிறார்கள்.

அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசை இன்னும் ஒரு பிரிவினை சக்தி என்று வருணிக்கிற நிலை மையை துரதிஷ்டவசமாக ராஜீவ் காந்தி உட்பட பல பெரியவர்கள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஒருபடி மேலேபோய் தேசிய இயக்கம் என்ற முறையில் தன்னை இணைத்துக்கொண்டு தேசிய முன்னணி அரசின் ஒரு பகுதியாகவே இருக்கக்கூடிய நிலையில் இப்படிப் பிரிவினைக் குரல் இங்கே தமிழகத்தில் எதிரொலிப் பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இது தொடர்பாக ஒரு சிறிய செய்தியைச் சொல்ல விரும்பு கிறேன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவரே அதிக நேரம் எடுத்தால் அப்புறம் ரொம்ப நேரம் ஆகிவிடும் ஒரு மணித்துளிக்குள் முடிக்க வேண்டும்.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே இந்தப் பிரச்சினையில் அறிக்கை விட்டிருக்கக் கூடிய, ஆளும் கட்சி சார்பாகச் சொல்லியிருக்க கூடிய, திரு. ஆலடி அருணா, முன்னாள் எம். பி. அவர்கள் ''இந்தியா போன்ற பல இனங்கள், பல மொழிகள் பல நாகரீகங்கள், பல வகுப்புகள் நிறைந்த நாட்டில் தன்னாட்சி, தனி ஆட்சி முழக்கங்கள், வகுப்பு வாதங்கள், பிரிவினை முழக்கங்கள் ஏற் படுவது இயற்கை,'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி

[திரு. உ. ரா. வரதராசன்]

1990 ஆகஸ்ட் 23]

ஆளும் கட்சி சார்பிலே ஒரு அறிக்கைவந்து, இது இயற்கை என்று சொல்வது அதை நியாயப்படுத்துவதுபோல் ஆகி இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டவிரும்புகிறேன். பின்னாலே, ''இதைத் தடுக்க அரசு கடமைப்பட்டு இருக்கிறது,'' என்று திரு. ஆலடி அருணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இதை முழுவதுமாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக அதையும் சொல்கிறேன். இதைச் சொல்கிறபோது இதைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அகதிகள் வருகை என்பது ஆக்கிரமிப்பு என்று வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஆக்கிரமிப்பு என்று வர்ணிக்கப்படுமேயானால் அதை அரசியல் நடவடிக்கை மூலம் முறியடிக்க முடியாது, ராணுவ நடவடிக்கைதான் என்று போகும். அகதிகள் வருகை காரணமாக நிர்ப்பந்தம், நெருக்கடி, சுமைகள் எல்லாம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். இந்தப் பிரச்சினையில் அரசியல் தீர்வு என்பதை அவர்களுடைய முடிவுக்கே விடுகிறேன் என்று சொல்வதற்கு பதிலாக இலங்கைத் தமிழருடைய எதிர்கால நன்மையைக் கருதி ஒரு தொலை நோக்கோடு தமிழர்களுடைய பிரச்சினையிலே தீர்வு காண்பதற்கு ஒரு தீர்வு சொல்ல வேண்டும் என்கிற கடமையோடு துணிச்சலோடு, இதுதான் அரசியல் தீர்வு, சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநில சுயாட்சி கொண்ட வடகிழக்கு மாகாணம் என்பதுதான் தீர்வு, இந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அனைத்து போராளிக் குழுக்களுக்கும் வேண்டுகோளாக விட்டு அதனுடைய அடிப்படையிலேயே மத்திய அரசு செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்த முன்வர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் பிரேரேபித்திருக்கின்ற இந்த இலங்கைப் பிரச்சினை சம்பந்தமான தீர்மானத்தை நானும் எங்கள் கட்சியின் சார்பில் ஆமோதிக்க முன்வருகிறேன். இதுவரையில் பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அங்கே இதுவரையில் சண்டை நடந்தது, யார், யார் செத்தார்கள் என்று கேட்டால் எப்படிச் செத்தாலும் தமிழன்தான் செத்திருக்கிறான். எவன் எப்படிப் போனால் என்ன ? எந்தச் சர்க்காராக இருந்தால் என்ன ? போராளியாக இருந்தால் என்ன ? எல். டி. டி. இ. யாக இருந்தால் என்ன ? பத்மநாபாவாக இருந்தால் என்ன ? ராஜீவ் காந்தியாக இருந்தால் என்ன, யாராக இருந்தால் என்ன ? இறந்தவர்கள் தமிழர்கள். தமிழன்தான் இறந்திருக்கிறான். அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று நம்முடைய

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

[1990 ஆகஸ்ட் 23

கலைஞர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போது நடப்பது என்ன? யாழ்ப்பாணத்திலே குண்டுமாரி பொழிகிறது என்பதைப் பேப்பரிலே பார்க்கிறோம். பேப்பரிலேதான் பார்க்கிறோம். நேரிலே நாம் பார்க்கப் போகிறோமா? அவ்வளவு தைரியம் எங்கே நம்முடைய ஆட்களுக்கு இருக்கிறது? அந்தமாதிரி இல்லை. அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற தமிழர்கள் இங்கே அகதிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆயிரம், இரண்டாயிரம் அல்ல கிட்டத்தட்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல் 80,000-க்கு மேல் ஓடும் போல் இருக்கிறது.

13-20 மணி

நாங்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் எட்டு நாள் ஒன்பது நாள் சுற்றுப்பயணம் பண்ணி அகதிகளின் நிலைமைகளையெல்லாம் அறிந்து கொண்டு வந்தோம். அதனால்தான் இப்போது இவர் கூட கேள்வி போட்டார். ஐ. பி. கே. எப். ராணுவம் அங்கே இருப்பது நல்லதா இல்லையா என்று எல்லாம் கேட்டார்கள். நாங்கள் ஒரு கேள்வி மட்டுமல்ல, ஆதியிலே இருந்து அந்தம் வரை தமிழர்கள் எப்படி இருந்தார்கள், எப்படி வாழ்ந்தார்கள், ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்றெல்லாம் கேட்டோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதில் சொன்னார்கள். ஐந்து விரலும் சரியாகவா இருக்கிறது? அப்படிச் சொல்லும்போது ஏதாவது அவர்கள் பாதகமாகச் சொன்னதை பேப்பர்காரர்கள் அப்படியே போட்டு விடுகிறார்கள். அது பிரச்சினையாகிவிடுகிறது. போடவேண்டியதுதான். நியாயம். அவர்களுடைய நியாயம். அது அவர்களுக்கு ஜனநாயக உரிமை, அதுமாதிரி தமிழ் அகதிகள் இங்கே வரும் போது—கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்—அது போல அவர்களைப் பராமரிக்கிற பொறுப்பு நம்முடையது. கிட்டத்தட்ட நாங்கள் எத்தனையோ முகாம்களைப் பார்த்திருக்கிறோம். அதனுடைய விளைவுகள் என்ன என்பதைப் பற்றி புள்ளிவிவரம் கொண்டு வந்திருக்கிறோம். கிட்டத்தட்ட 35 முகாம்களுக்கு மேல் பார்த்தோம். 5,600 குடும்பங்களுக்கு மேல் பார்த்தோம். 19,000-க்கு மேல் 20,000 வரை அகதிகளை நேரடியாக விசாரணை செய்திருக்கிறோம். அதனுடைய நிலைமையைத்தான் சொல்ல வேண்டும். நடந்தது பற்றி சொல்லி, கேட்டு என்ன பிரயோசனம்? இறந்து போனவன் பற்றி, குண்டு போட்டது பற்றி கேட்டு என்ன பண்ணுவது? நீ இப்படி நடந்தாய், நான் இப்படி இருந்தேன் என்று சொல்லி என்ன பிரயோசனம்? அதையெல்லாம் யார் கேட்டார்கள்? இன்றைக்கு எப்படி இருக்கிறாய்? அதுதானே முக்கியம். அவர் அப்படி இருந்தார், இவர் இப்படி இருந்தார் என்று சொல்வது முக்கியமல்ல. அதை யார் கேட்டது? இன்றைக்கு உன் வீடு என்ன? உன் வாசல் என்ன? சொத்து என்ன? சுதந்திரம் என்ன? அதற்குத் தான் பேச வேண்டும்.

1990 ஆகஸ்ட் 23] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

இன்றைய நிலையில் தமிழர்களை அங்கே தாக்குகிறார்கள். தமிழர்கள் இங்கே வருகிறார்கள். தமிழர்கள் ஒரிசாவுக்கு அனுப் பப்படவில்லையா ? அங்கே அவர்களை வைத்துக் கொள்ள முடிந்ததா ? அவர்களை யாராவது வைத்துக் கொண்டானா? நம் தமிழ் இனத் தலைவர் கலைஞர் அவர்கள், மெதுவாக அவர்களை இங்கே கொண்டு வந்து பராமரிக்கிறார். அதிலே போய் விசாரித்தோம். ஒவ்வொரு தமிழர்களையும் முகாமில் விசாரித்தபோது என்ன நிலைமை, எப்படி இருக்கு என்று விசாரித்தால், பலரும் பலவிதமாக அபிப்பிராயங்கள் சொன் னார்கள். பராமரிப்பு பற்றி ஒன்றும் சொல்ல முடியாது நல்லாதான் இருக்கு என்று சொன்னார்கள். ஒரு மாதம் ஒன்றரை மாதமாக நாங்கள் எல்லாம் வந்து கொண்டிருக் கிறோம், ஏற்கெனவேயும் அகதிகளாக வந்தோம், ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு. முன்பு வந்ததில் 10-ல் 8 பேர் இப்போதும் வந்திருக்கிறோம் என்றார்கள். அதையும் நாங்கள் கேட்டோம். இதற்கும் அதற்கும் வித்தியாசம் இருக் கிறது என்றார்கள். இப்போது பராமரிப்பு நன்றாகத்தான் இருப்பதாகச் சொன்னார்கள். வேறு என்ன செய்ய முடியும்? பராமரிப்புதானே, கஷ்டம் இருக்காதா ? இருக்கும்தான். அகதிகள் இப்போது ஓடிவரவில்லையா ? அப்போதும் வந்தார் கள். இப்போதும் வருகிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத் தில் வரவில்லையா ? எல்லா ஆட்சியின்போதும் வந்தார்கள். அதைப்பற்றியும் விசாரித்தோம். கிட்டத்தட்ட நாங்கள் பார்த்த முகாம்களில் 20,000 அகதிகளைச் சந்தித்தோம். அந்த முகாம்களில் ஒரு கிலோ அரிசி ரேஷனில் 57 பைசா வுக்குக் கொடுக்கிறார் தமிழ் இனத் தலைவர் கலைஞர். எவ்வளவு சௌகர்யம் பாருங்கள் ? அப்படி கணக்குப் பார்த் தால் ஆளுக்கு ரூபாய் 150 சம்பளம், பெண்களுக்கு ரூபாய் 120 சம்பளம், குழந்தை குட்டிகளுக்கு ரூபாய் 60 வீதம் கொடுத்து ரேஷனிலேயும் இப்படி விலையைக் குறைத்து சாமான்களைக் கொடுக்கிறார். இப்படி சகலவிதமான வசதியோடும் அவர் கள் இருக்கிறார்கள். இனிமேல் இலங்கைக்குப் போ என்றால் கூட சாதாரணமாகப் போகமாட்டான். எப்படிப் போ வான் ? நல்லபடியாக பராமரிப்பு, எந்தவிதமான கஷ்டமும் இல்லை.

39 அகதி முகாம்களையும் பார்த்தபோது கடந்த இரண்டு வாரத்திற்குள் அதிகம் பேர் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்தவுடனேயே இனாமாக, பெரிய பெரிய தொண்டு நிறுவனங் களிடம், லயன்ஸ் கிளப் மற்றும் தனவந்தர்களிடம் போய், இங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லாம் உங்கள் தர்மமாக இருக்கட்டும், அரசாங்கம் பணம் சாங்க்ஷன் இருக்கிறதோ இல்லையோ, முதலில் உங்கள் பொறுப்பில் அவர்களைப் பராமரிக்கவேண்டுமென்று கேட்டு, சாம்பார் சாதம், புளி சாதம், தயிர் சாதம் எல்லாம் செய்து போட்டு, ரொட்டி,

பால் எல்லாம் வாங்கி அதிகாரிகள் கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறார்கள். சில குறைகள் ஆங்காங்கு இருக்கத்தான் செய்யும். எத்தனை இடங்களுக்குத் தான் அகதிகளை அனுப்புவார்கள்? எத்தனை பேருக்குத்தான் இடம் கிடைக்கும்? வந்துக் கொண்டே இருக்கிறார்கள். சத்திரம் பிடித்து, பராமரிக்க வண்டாமா? தமிழர்கள் தமிழர்கள் என்று சொல்லிவிட்டு வந்தவன் காதில் ஈ பறக்க விட்டால் சும்மா தமிழன் என்று எப்படி உணர்வு இருக்கும்? அந்த முகாம்களைப் போய்ப் பார்க்கும்போது சில முகாம்களில் கஷ்டம் இருக்கத்தான் செய்யும். ஒரு வாரத்திற்குள் வந்தவர்களுக்கு சரியான பராமரிப்பு இல்லை. முடியவில்லை. எங்கள் பொருட்கள் வந்து சேரவில்லை என்கிறார்கள். அங்கே சில கஷ்ட நஷ்டங்கள் இருக்கிறது. சின்னதுதான். பெரிய கஷ்டம் இல்லை. ரேஷன் பொருட்கள் தருகிறார்கள். வந்ததும் உடுப்பு கொடுத்திருக்கிறார்கள். பாவாடை கொடுத்திருக்கிறார்கள். வேட்டி சட்டை கொடுத்திருக்கிறார்கள். படிப்பதற்கு உடனே பள்ளிக்கூடத்தில் சேர்த்து இருக்கிறார்கள். ஒருவிதமான குறையும் வைக்கவில்லை. செய்ய முடியாதது என்னவென்றால், 100 பேர் படகில் வந்தோம், நாலு பேர் அங்கே போய் விட்டார்கள். அப்பனும் பிள்ளையும் பிரிந்துவிட்டோம் என்றால் அது முடியவில்லை. அதைத்தான் கவலையாகத் தெரிவித்தார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13–25 மணி

கல்யாண சத்திரம் எல்லாவற்றையும் அதிகாரிகள் புக் பண்ணிவிட்டார்கள். இனிமேல் எங்களைக் கேட்காமல் கல்யாண சத்திரத்தை வாடகைக்கு யாருக்கும் கொடுக்காதீர்கள் என்று தாசில்தார் போன்ற அதிகாரிகள் பிடித்து வைக்கிறார்கள். 8,000 ரூபாய் வாடகையுள்ள கல்யாண சத்திரம் எல்லாம் இவர்களைப் பராமரிப்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது அவர்களைப் பராமரிக்க வேண்டுமல்லவா? சில இடங்களில் நாம் பார்க்கும்போது நம் வீடே ஒழுகுது. அதுபோல அங்கேயும் போய் பார்த்தால் சில இடங்களில் ஈரமாக இருக்கிறது, காரணம் ஒழுகும் நிலைமை இருக்கிறது. 3, 4 நாட்கள் சர், சர் என்று மழை. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை இங்கெல்லாம் போகும்போது இம்மாதிரி மழை. இதுபோல் நான் சீசனை பார்த்ததே இல்லை. அதுமாதிரியான நிலைமையில் அங்கே பார்க்கும்போது அகதிகள் கஷ்டப்படும்படியான நிலைமையை பார்க்க முடிந்தது. அப்படிப் பார்க்கும்போது வாலாஜாபேட்டை, பெரமாநல்லூர், சித்தர் கோவில் இம்மாதிரி ஒரு சில சின்ன அகதிகள் முகாம்களில் மட்டும்தான் அவர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகும்படியான

நிலைமையை காண முடிந்தது. அதுமாதிரி வேலூரில் போய் பார்த்தோம். போலீசுக்கு டிரெயினிங் கொடுக்கிறார்களே, அந்த போலீசுக்கான கேன்டீனை இவர்களுக்காக திறந்து விட்டது போல தோற்றம் ஏற்பட்டது. இவர்களுக்காக இரண்டு விசிறி போட்டிருக்கிறார்கள். 'கேரம் போர்ட்' ஆடுகிறார்கள். 'பாஸ்கட் பால்' ஆடுகிறார்கள். காசிக்கு போகிறவர்களுக்கு சாமான்களை எல்லாம் பந்தோபஸ்தாக வைக்க 'டார்மிட்டரி' கொடுக்கிறார்களே, அதுபோல் இவர்களுடைய பொருள்களை எல்லாம் பந்தோபஸ்தாக வைப்பதற்கான வசதிகளை செய்திருக்கிறார்கள். அப்படி என்றால் கல்யாணம் செய்து வைப்பது ஒன்று மட்டும்தான் பாக்கிபோல் இருக்கிறதே என்று நான் கேலியாக கேட்டேன். அவ்வளவு சௌகரியமாக அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

இராமேஸ்வரம் போய் பார்த்தோம். அதுபோல திருச்சி, கொட்டப்பட்டு எல்லாம் போய் பார்த்தோம். பிரைவேட் நர்சிங் ஹோம் மாதிரி அங்கே இருக்கிறது. நாங்கள் இம் மாதிரி வசதிகளை பெற போக வேண்டுமென்றால் கூட 2, 3 மைல் தள்ளி தான் போக வேண்டும். ஆனால் இங்கே இவர்களையோ காலையில், மத்தியானம் மற்றும் சாயங்காலம் ஆகிய மூன்று வேளைகளிலும் டாக்டர்கள் வந்து, ஒவ்வொரு முறையும் 'உனக்கு உடம்புக்கு என்ன! உடம்புக்கு ஏதாவது சிகிச்சை தேவை இருக்கிறதா' என்று இவர்களை டாக்டர்களே தேடி வந்து கேட்டு உதவி செய்கின்ற நிலைமையைப் பார்த்தேன். இதுபோல யாரும் செய்ய முடியாது. அவ்வளவு தூரம் நல்ல வசதிகளைச் செய்கிறார்கள்.

இப்படி நான் சொல்வதை கேட்டு, தீட்சிதருக்கு என்ன இதில் அக்கறை? அகதிகள் இவருக்கு ஏதாவது சம்பளம் அல்லது லஞ்சம் கொடுக்கிறார்களா என்று கேட்கலாம். எங்கள் கட்சியிலே, தேசிய முன்னணி கட்சியிலே, சிவாஜி தலைமையில் இதற்காக என்று ஒரு கமிட்டி போட்டோம். இங்கெல்லாம் தீட்சிதர் போனால்தான் சரியாக இருக்கும் என்று எட்டு பேர் கொண்ட ஒரு கமிட்டியை இரண்டு, மூன்று கார் கொடுத்து விசாரிக்க அனுப்பினார்கள். சிவாஜி அவர்களுக்கு இருந்த ஓர் ஆர்வத்தின் காரணமாக எங்களைப் போய் விசாரிக்கச் சொன்னார்கள். மத்தியிலிருந்து இவர்களுக்காக எவ்வளவு கொடுத்தார்கள்? எவ்வளவு கேட்கப் போகிறீர்கள்? நீங்கள் இதுவரை எவ்வளவு செலவழித்தீர்கள் என்றெல்லாம் இங்கு கேட்டார்கள்.

ஓர் அகதிக்கு 25 ரூபாய் செலவு என்று வைத்தால்கூட வருடத்திற்கு 110 கோடி ரூபாய் வேண்டும். தமிழ்நாடு அரசு இதைத் தாங்குமா என்று கேட்கலாம். எதையும் தாங்கும் அமைச்சர்கள் தான் இங்கே இருக்கிறார்கள் (சிரிப்பு) இருந்தாலும் மத்திய அரசிடமிருந்து நிறைய வருகிறது. இன்னும்

கொடுப்பார்கள். 11, 12 மைல் தூரத்தில் தான் நாம் இருக்கிறோம். நாம் செய்யாமல் வேறு யார் போய் செய்ய முடியும். அகதிகளுக்கு இன்னும் ஏதாவது பணம் வேண்டுமா, பராமரிப்பில் ஏதாவது குறை இருக்கிறதா, நல்ல ப்ராமரிப்பு இருக்கிறதா, இன்னும் எவ்வளவு பணம் தேவை, எவ்வளவு செலவழிக்க முடியும்? இந்த சர்க்காரால் எவ்வளவு செலவழிக்க முடியும், என்றெல்லாம் பார்த்தோம். இந்த சர்க்காரால் முடியாது என்பதல்ல, நிறைய கொடுக்கிறார்கள், கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் மூன்று கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இன்னும் எங்கள் எஸ்டிமேட்படி 110 கோடி ரூபாய் வரை செலவாகும். காரணம் யாழ்பாணத்திலிருந்து தினமும் இன்னும் வந்துகொண்டேயிருக்கிறார்கள், வந்துகொண்டேயிருப்பார்கள். இன்னும் அகதிகள் முகாம்களில் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு மேல் போகலாம்.

படகுக்கு 500 ரூபாய்; 1,000 ரூபாய் கொடுத்து வந்தோம், 200 ரூபாய், 300 ரூபாய் குழந்தைகளுக்கு கொடுத்து வந்தோம் என்று அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்பவர்களுக்கு கண்ணீர் வரும் நிலைமை இருக்கிறது. நாங்கள் எங்களுடைய சாமான்களை எல்லாம் விட்டு வந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். உங்களுடைய செலவுக்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால் 10 ஆயிரம் ரூபாய் வரை அங்குள்ள நோட் ரூபாய் கொண்டு வந்தோம். அதை எப்படி நேரடியாக நாங்கள் செலவு செய்ய முடியும் என்கிறார்கள், அங்கேயும் சமூக விரோதிகள் புகுந்து விடுகிறார்கள். இவர்கள் நான்கில் ஒரு பங்கு கொடுத்து அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். பிறகு எப்படியாவது ஒப்பேத்தி மாற்றலாம், வட்டியாக கால் பங்கு பணம் போனால் கூட மீதி 75 சதவீதம் தங்களுக்குத் தானே வரும் என்று இப்படி செய்கிறார்கள். இப்படி 70, 80 சதவிகிதத்தினர் தங்களுடைய ரூபாய் நோட்டுகளை கொடுத்து ஏமாந்துவிட்டார்கள். அதுபோல அங்கே சமுத்திரத்தை விட்டு படகிலிருந்து இறங்கிய உடனே ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்களோ என்கிற பயத்திலேயே தங்க நகைகளை கேட்கின்ற விலைக்கு விற்றுவிடுகிறார்கள். இம்மாதிரி அங்கே கஷ்டப்படுகின்ற அகதிகளை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது தான் இந்த வார்த்தைகள் அவர்களிடமிருந்து வந்தன.

இன்றைக்கு அவர்களுக்கு இராணுவத்தால் தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது. நாற்பது வருடங்களுக்கு முன்பு நாம் சுதந்திரம் வாங்கினோம். அதற்கு முன்பு என்ன நிலைமை இருந்தது? அதற்கு முன்னாலே அங்கே போய் தோட்டங்களிலே வேலை செய்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் இன்றைக்கு அங்கேயிருந்து அடிபட்டுக்கொண்டு இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். நாம் சுதந்திரம் கேட்பது என்பது பிறப்புரிமை, அதில் தப்பு இல்லை. இருந்தாலும்

ஒரு நாட்டில் அப்படி கேட்பது பிரிவினை. தற்போது அது முடியுமா, முடியாதா என்பதுதான் பெரிய பிரச்சினை. பிரிவினையை நம்முடைய நாட்டிலேயே அண்ணாதுரை அவர்கள் காலத்திலேயே தூக்கி எறியச் சொன்னார்கள். பிரிவினை என்ற வாதமே இனி வேண்டாம். இனி ஒற்றுமையாகத்தான் வாழ வழிவகை காண வேண்டும். இந்தியாவில் இராணுவம் இல்லையா? இந்திய கப்பல் படை இல்லையா? ஏரோடிராம் இல்லையா? இங்கேதான் 'சார்க்' மாநாட்டையே கூட்டினார்கள். 'சார்க்' மாநாடு போடப்பட்டதே எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றுதானே. அதற்காகத்தானே 6 நாடுகள் சேர்ந்து ஒற்றுமையை உருவாக்கத் தானே அதனை அமைத்தார்கள். இன்றைக்கு அந்த நாட்டிலே ஒற்றுமை இல்லையென்றால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்? இப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு அங்கிருந்து அகதிகள் தினமும் வந்துகொண்டிருக்கிறார்கள். இது லட்சம் அகதிகளுக்கு மேல் போகும்.

13-30 மணி

கலைஞர் அவர்கள் 80,000 வீடுகள் கட்டியிருப்பதைப் பார்த்து ரொம்ப ஆச்சரியப்படுகிறேன். எல்லாம் நல்லபடியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் சில இடங்களிலே கஷ்டம் இருக்கிறது. முகாம்களில் 12 முதல் 15 வயது குழந்தைகளுக்கு 40 ரூபாய் தருகிறார்கள். கணக்கு பார்க்கும்போது ஒரு குடும்பத்திற்கு 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய் கணக்கு வருகிறது. ரேஷன்படி கணக்கு பார்த்தால் ஆயிரம் ரூபாய். நமக்கு சீமை எண்ணெய் கிடைக்கவில்லை. கொட்டாம்பட்டி முகாமிலே 10 லிட்டர் எண்ணெய் கொடுக்கிறார்கள். மந்திரி கூட பார்த்துவிட்டு வந்தார்கள். நமக்குக் கூட கிடைக்கவில்லை. இருந்தாலும் நாம் பக்கத்திலே போய் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அவர்களைப் பார்த்தாலே பயப்படுகிறார்கள். அவர்கள் விடுதலைப் புலிகளாக இருப்பார்களோ என்று பயப்படுகிறார்கள். அதனால் அவர்களை நாம் பராமரிக்கிறோம். இந்தப் பிரச்சினையிலே மத்திய அரசினுடைய தீர்வு என்ன என்பதற்காகத்தான் இதை வேகமாக நிறைவேற்றுகிறோம். இன்றைக்கு 80,000 அகதிகள் வந்திருக்கிறார்கள். அது லட்சம் பேராகும்போல் இருக்கிறது. இங்கேயிருந்து இவ்வளவு அகதிகள் வந்தால், இறந்த தமிழர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். இந்திய இராணுவம் யாரைக் கொன்றது? பிரபாகரன் படையும், இந்தியப் படையும் சண்டை போட்டு, ஆயிரக்கணக்கானவர்கள் செத்தார்கள். அதற்கு யார் என்ன பண்ணுவது? எனவே இந்தத் தீர்மானத்தை வரவேற்றாக வேண்டும். வேறு வழியே இல்லை. மத்திய அரசை மாநில அரசு அணுகி ஒரு அரசியல் தீர்வு காணவேண்டுமென்று சொல்கிறோம். படையை, அனுப்பி, அவர்களிடத்திலே ஒரு பிரிவினை மனப்பான்மையை ஏற்படுத்தவில்லை. வெளி உறவு அமைச்சர் திரு. குஜ்ரால் இருக்கிறார். அவர் கீழே எத்தனையோ ஐ.ஏ.எஸ். செய

லாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பார்த்து, பேசி விட்டுத்தான் வருகிறார்கள். பேப்பரிலே வந்துகொண்டிருக் கிறது. திரு. கோபால்சாமிக்குக் கூட எக்ஸ்டர்னல் அபேர்ஸ் டிபார்ட்மென்டில் நாங்கள் பதவி கொடுத்துவிட்டோம். அவர்கள் காங்கிரஸ்காரர். ராஜீவ் காந்தியால் போற்றப்பட்டவர். எங் களுக்கு கட்சி கிடையாது. எவன் நல்லவனோ, எங்கே ஆற்றல் இருக்கிறதோ, எங்கே அறிவு இருக்கிறதோ அவர்களைப் போடுகிறோம். இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. கோபாலசுவாமி ஐயங்கார் மகன் பார்த்தசாரதிக்கு இன்றைக் குப் பதவி கொடுத்திருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : எந்த ஜி.பி.-யைச் சொல்கிறார்? பழைய செயலாளர் திரு. ஜி. பார்த்தசாரதிக்கு பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா? என்ன பதவி கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். அவர் காங் கிரஸ்காரராக என்றும் இருந்ததில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அவர் காங்கிரஸ் காரர் என்று சொல்லவில்லை. அவர் பொது மனிதராகத்தான் இருந்தார். அவர்களுக்கெல்லாம் பதவி கொடுத்திருக் கிறோம். உங்களுடைய அபிப்பிராயம் என்ன? மறுபடியும் படையைக் கொண்டு போய் நிறுத்தி, அவர்களுக்கும் போராளி களுக்கும் சண்டை மூட்டி, மறுபடியும் தமிழர்கள் சாகவேண்டுமா? ஆகையால் கலைஞர் அவர்களுடைய தீர்மானத்தை, தமிழினத் தலைவருடைய தீர்மானத்தை, மத்திய அரசோடு உறவு கொண்டு நேரடியாகப் பேசி, நல்ல முறையில் பேசி, தீர்வு காணவேண்டுமென்று தீர்மானத்தை வரவேற்று விடை பெறுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பேரவை சம்பந்தப்பட்ட காரணத்தாலே இதைச் சொல்கிறேன். இந்தப் பேரவையிலே இருந்த 3 உறுப்பினர்கள் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் காரணத்தாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களாகத் தொடர்ந்து செயல்படுவார்கள் என்று திரு. உக்கம் சந்தையும், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரனையும், திரு. திருநாவுக்கரசையும் பற்றி இங்கேஅறிவிக்கப்பட்டது. அதைத் தாங்கள் கவனத்தில் கொண்டும் அந்த இட ஒதுக்கீட்டைச் செய்தீர்கள். ஆனால் நீதி மன்றம் 23 ஆம் தேதியன்று வரை அனுமதித்ததை இன்று ரத்து செய்திருக்கிறது. எனவே அவர்கள் உள்ளே இருந்தாலும், வெளியே இருந்தாலும் அவர்கள் எந்த அமைப்பில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்கின்ற வகையிலே தங்களுடைய தீர்ப்பை நாங்கள் எதிர் பார்க்கிறோம். காரணம், நீதி மன்றத்தினுடைய தீர்ப்பைப் பற்றி இப்போது தான் நான் கேள்விப்பட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தனே நீதிபதியாக இருந்தாலும் எனக்குச் செய்தி வந்து சேர

வேண்டும். (குறுக்கீடு) இதுதான் ரொம்ப முக்கியம், இதை முடிவு பண்ணிவிட்டுத்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையை முடிவு பண்ணவேண்டுமா?

13-35 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த பொறுப்புணர்வோடும், அரசியல் விவேகத்துடனும், மாநில அரசுக்கு உரிய அதிகார வரம்புக்கு உட்பட்டும் இந்தத் தீர்மானம் வரையப்பட்டிருக்கிறது என்பதை நான் மெத்த மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். இதை வரவேற்கிறேன். இந்தப் பிரச்சினையில் என்னைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பொறுப்போடு இந்தத் தீர்மானத்தை வரையறுத்து இருக்கிறார்களோ அதைப் போலவே நான் என்னுடைய வரையறைக்கு உட்பட்டு பொறுப்போடு பேச வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் மனிதப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மனிதர்கள் கொல்லப்பட்டால்—அது எங்கு கொல்லப்பட்டாலும், யாரால் அநீதியாகக் கொல்லப்பட்டாலும் நாம் அனைவரும் அதனைக் கண்டித்துப் பேசி அவர்களை எல்லாம் தண்டிக்க வேண்டுமென்று கேட்க உரிமை படைத்தவர்கள். அந்த அடிப்படையில் இந்த அவை, நமக்குப் பக்கத்திலே இருக்கிற நம்முடைய இன மக்கள் நிறைய வாழ்கிற நம்முடைய சொந்த பந்தங்கள் நிறைய இருக்கிற நம்முடைய தமிழ் மக்களை ஒரு நாட்டு அரசாங்கமே கொல்கிறது என்ற சூழ்நிலையில் கண்டிப்பது என்பது நாம் பெற்றிருக்கிற உரிமை மட்டுமல்லாமல் அது நம்முடைய கடமையும் ஆகும். அந்த அடிப்படையில் நான் இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

ஒரு நாட்டில் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டால் போலீஸ்காரர்களை வைத்து அந்த கலவரங்களை அடக்குவது என்பது இயல்பு, இயற்கை, அது தேவை. ஆனால் தொடர்ந்து அது அதனுடைய பிரஜைகளுக்கு எதிராகவே இராணுவத்தை ஏவி, குண்டுகள் வீசி எந்தவிதமான ஒரு நீக்குப்போக்கும் இல்லாமல் அதனுடைய சொந்தப் பிரஜைகளைக் கொன்று குவித்துக் கொண்டிருப்பதை சர்வதேசச் சட்டம் அனுமதிக்கிறதா, சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தயவு செய்து குறிப்பாக என்னைப் பொறுத்தவரையில், 1965 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சாஸ்திரி—ஸ்ரீமாவோ பண்டார நாயகா உடன்பாட்டின் அடிப்படையில் ஈழ நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் வம்சாவழியினர் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பிரிவு அங்கேயே பிரஜா உரிமை பெற்று முழு உரிமையோடு இருக்க வேண்டும், அதனுடைய இன உணர்வோடு இருக்க வேண்டும், மொழி உணர்வோடு

வாழ வேண்டும், அதனுடைய கலாச்சாரத்தைப் பேணி வாழக் கூடிய மொழி உரிமையோடு அங்கு வாழ வேண்டும் என்று இரண்டு பிரதமர்களும் ஏற்றுக்கொண்டு, இன்னொரு பிரிவு இந்த நாட்டிற்குத் திரும்பி வருவதா அல்லது அங்கேயே இருப்பதா என்ற 'ஸ்டேட்லெஸ்' என்ற முறையில் அவர்கள் குறிக்கப்பெற்று, மற்றொரு பிரிவு இந்திய நாட்டிற்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டும்: அவர்கள் இந்திய நாட்டுப் பிரஜைகள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இன்றைக்கு ''ஸ்டேட்லெஸ்' மக்கள் என்ற தமிழ் மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழர்கள் இந்திய நாட்டுப் பிரஜைகள் என்று பிரிக்கப்பட்டவர்களும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களைக் குண்டு வீசி அந்த நாட்டு அரசு கொல்கிறது என்று சொன்னால் இந்திய நாட்டினுடைய கடமை என்ன? எங்கு வாழ்ந்தாலும் இந்திய மக்களைக் காக்க வேண்டிய பொறுப்புடைய இந்திய அரசு, இந்திய நாடு, இந்திய நாட்டு மக்கள்—நமக்குப் பக்கத்திலே இருக்கிற நம்முடைய நாட்டுப் பிரஜைகளை அந்த அரசு தொடர்ந்து கொன்று கொண்டிருக்கிறது என்றால், இந்த நாட்டிலே பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற, தங்களுடைய மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கத்தின் கடமை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்கு இருக்கிற குறையெல்லாம் சாஸ்திரி-ஸ்ரீமாவோ பண்டாரநாயகா உடன்பாட்டிலே குறிக்கப்பட்டு இருந்த தமிழர்களுக்கு உரிய உரிமைகளை நிலை நிறுத்த அன்று இருந்த இந்திய அரசாங்கத்தில் இடம் பெற்று இருந்தவர்கள் முறையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதை நான் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். அவர்கள் அவர்களுடைய உரிமைகளை முறையாக நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாத காரணத்தினால் தொடர்ந்து தமிழர்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டு வந்த காரணத்தினாலேதான் தமிழர்களிடையே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு, இறுதியாக இவர்களோடு நம்மால் வாழமுடியாது என்ற நிலை அங்கே உருவானது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இரத்தத்தோடு இரத்தம், எலும்போடு எலும்பு, உயிரோடு உயிர், உடம்போடு உடம்பு என்று விவாகம் செய்து வைக்கப்பட்டவர்கள்கூட, வாழ்க்கை முழுவதும் ஒன்று என்று இணைத்து வைக்கப்பட்டவர்கள்கூட, மனம் முறிந்துவிட்டால், இனிமேல் தொடர்ந்து வாழமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், நான் என் வழி: நீ உன் வழி' என்ற நிலைக்கு ஆளாக்கப்படுவதற்குச் சட்டம் இடம் கொடுக்கும்போது, சாஸ்திரி-ஸ்ரீமாவோ பண்டாரநாயகா உடன்பாட்டின் அடிப்படையிலே தமிழர்கள் பெற்ற உரிமைகளை நிலை நாட்ட இங்கே இருந்த நம்முடைய இந்திய அரசு என்ன செய்தது? முழுவதுமாக அதை மறந்துவிட்டது. அது அவர்களுடைய கவனமின்மை காரணமாகத்தான்.

1990 ஆகஸ்ட் 23] [திரு. எம்.அப்துல் லத்தீப்]

13-40 மணி

அன்றைக்குக் கூட பலர் பேசினோம். வடபுலத்திலேயிருந்து மக்கள் கொலை செய்யப்பட்டால், அவர்கள் அழிக்கப்பட்டால் ஒரு வேளை தூங்கிக் கொண்டிருப்பவர்க்ள் எழுந்து உட்காருவார்கள். தமிழர்கள் என்ற காரணத்தால்தான் அவர்கள் கண்கள் திறக்கப்படவில்லை. அவர்கள் அசைவதும் இல்லை, என்று அன்றைக்கு நாடு முழுவதும், தமிழ்நாடு முழுவதும் பேசினோம். அன்றைக்கிருந்த இந்திய அரசாங்கம் இப்படி செய்தது. இதற்கு அரசியல் பின்னணி உண்டு என்று சொல்கிறார்கள். உண்டுதான். திரு. ராஜீவ் காந்தி அவர்கள், அதிபர் ஜெயவர்த்தனாவோடு உடன்பாடு செய்து கொண்டதற்கும் அரசியல் கட்டாயங்கள் உண்டு. அதை மறுக்க யாராலும் முடியாது. அதிபர் ஜெயவர்த்தனா அவர்கள், திரு. ராஜீவ் காந்தியோடு செய்து கொண்ட உடன்பாட்டுக்குக் காரணம் அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு ஏற்பட்ட அரசியல் கட்டாயங்கள்தான். இவருக்கு இருந்த கட்டாயங்கள் வேறு, அவருக்கு இருந்த கட்டாயங்கள் வேறு. ஆனால் இரண்டு பேருக்கும் இடையே இருந்த அரசியல் கட்டாயங்களைத் தீர்த்துக்கொள்வதற்காக யார் அழிக்கப்படுகிறார்கள் இன்றைக்கும் என்றால் தமிழர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. உடன்பாட்டின் அடிப்படையிலே இந்திய இராணுவம் சென்றது உண்மைதான். ஆனால் எந்த வகையிலே அது நடந்து கொண்டது என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இந்திய நாடு தொடர்ந்து ஒரு கொள்கையைப் பேணி வருகிறது. 'நான்-இன்டர்பியரன்ஸ்'—மற்ற நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பது நேரு பெருமகனார் வகுத்த பஞ்சசீலக் கொள்கையினுடைய அடிப்படையாகும்.அந்த அடிப்படையில் பார்த்தாலும் ஈழ நாட்டில் நாம் தலையிட்டு இருக்கக் கூடாது. ஆனால் அங்கேயிருந்த விசேஷ சூழ்நிலையின் காரணமாக மனிதாபிமான அடிப்படையில் அதிபர் ஜெயவர்த்தனா அவர்களும், திரு. ராஜிவ் காந்தி அவர்களும் சேர்ந்து ஒரு உணர்வுக்கு ஆளாகி,ஒரு உடன்பாட்டுக்கு ஆளாகி, ஈழ நாட்டுக்கு இராணுவம் அனுப்பப்படும் என்று அனுப்பியதற்குரிய காரணம் என்ன என்பதை யாரும் புரிந்து கொள்ளாமல் இல்லை. எல்லோருக்கும் தெரியும். ஆனால் இராணுவம் சென்று என்ன செய்தது? தமிழர்களைக் காப்பாற்றியதா? எத்தனை தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். இந்த ராணுவம், நமது தமிழச்சிகளை நிர்வாணமாக ஆக்கி சிங்களவர்கள் ஊர்வலம் நடத்தியபோது, சிங்களவர்களோடு சேர்ந்து கொண்டு நம்முடைய பெண்மணிகள் நிர்வாணமாக ஆக்கப்பட்டு ஊர்வலமாக வந்தபோது அவர்களைப் பார்த்து இந்த இராணுவத்தினர் ரசித்தார்கள்.

''பலாம்பா பலாம்பா தமிழா நீ தூ ணலட்சணா'',
''பலாம்பா பலாம்பா தமிழா நீ தூ ணலட்சணா'' என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தீர்மானத்தை நோக்கிப் போகலாம், வேறு செய்திகள் வேண்டாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே,.........

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் இரண்டு பேரில் யார் பேசப் போகிறீர்கள்? திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இந்திய சுதந்திர தினத்தில் கொடியேற்றிப் பேசிய பாரதப் பிரதமர் கூட அமைதிப்படை பணியைப் பற்றி பாராட்டிப் பேசியிருக்கிறார். இப்போது அங்கே இருக்கிறவர்களைக் காப்பாற்றுவதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், இப்படிப்பட்டச் செய்திகளைச் சொல்லி அந்த இராணுவத்திலே பணியாற்றியவர்கள் அத்தனை பேரையும்—தவறான குற்றச்சாட்டு என்று கூட நான் சொல்ல முடியும், அவர் வேறு வழியில் வாதாடலாம்—புண்படுத்தும் சொற்களால் சொல்வது "தாயின் மணிக்கொடி பாரீர், அதை தாழ்ந்து பணிந்து புகழ்ந்து பாடிட வாரீர்" என்று அந்த மணிக்கொடியை காப்பாற்றுபவர்களைப் பற்றி இத்தகைய வார்த்தைகளால் சொல்லுவது சற்றும் பொருத்தமாக இல்லை. அதுவும் உண்மைக்கு மாறானது. தயவு செய்து அந்தப் புண்படுத்தும் சொற்களைச் சொல்ல வேண்டாம் என்று இப்போது உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அதைவிட்டுவிட்டு நேரிடையாகப் பிரச்சினைக்கு வரலாம்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நான் சொல்லுகிறேன். திரு. அப்துல் லத்தீப் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்போது நிலைமை உங்களுக்குத் தெரியும். தேசீய முன்னணி அரசு, தி.மு.க. அரசு ஆகியவற்றினுடைய உடன்பாடான போக்கில் அதற்கான தீர்வுகளை நோக்கி இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. அருள்கூர்ந்து உடன்பாடான செய்திகளைப் பேசி விரைவில் முடிக்க வேண்டுகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : அந்த இலக்கை நோக்கித்தான் நான் சென்று கொண்டிருக்கிறேன். மற்றவர்கள் சென்ற பாதையில்தான் நான் சென்று கொண்டிருக்கிறேன். மற்றவர்கள், பாதைகளிலே உபாதைகளை ஏற்படுத்தி விட்டார்கள். அந்த உபாதைகளையெல்லாம் நான் அகற்றிக் கொண்டுதான் போய்க் கொண்டிருக்கிறேன்.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நம்முடைய பாதைக்கு வாருங்கள். அருள்கூர்ந்து நேரிடையாகப் பிரச்சினைக்கு வாருங்கள். தேவையில்லாமல் உணர்ச்சி வசப்பட்டுப் பேசாமல் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இலக்கை நோக்கி வரவேண்டும்.

13-45 மணி.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, நான் சொல்வது பிரச்சினை தீர வேண்டும் என்பதில் எல்லோருக்கும் அக்கறை உண்டு. எனவேதான் இந்தத் தீர்மானம் மிகவும் பொறுப்போடு வரையப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். ஆனால் இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது? தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரண்டு மாநாடுகள் நடைபெறுகின்றன ஒரே நேரத்தில் — சென்னையில் ஒரு மாநாடு நடைபெறுகிறது — பி.ஜே.பி. யின் மாநாடு. இன்னொரு செயற்குழு டெல்லியில் நடைபெறுகிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்துக்களை வெளியிட்டுக் கொள்கிறார்கள். அது அவர்களுடைய உரிமையின்பாற்பட்டது. நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இங்கு நடந்த மாநாட்டில், டெல்லியில் நடந்த செயற்குழுவில் எப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லி தமிழகத்தில் இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு சிலபேர் முயன்றார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. நான் அவர்களுடைய பெயரைச் சொல்லவில்லை. ஒரே நேரத்தில் நடந்த இரண்டு நிகழ்வுகள். தமிழகத்தில் ஈழப்புலிகள் தஞ்சம் புகுகிறார்கள். ஈழப் புலிகளுக்கு இங்கே இருக்கிறவர்களே ஆயுதம் தருகிறார்கள். இங்கே ஆயுதம் தருவதற்கு குறிப்பிட்ட நோக்கம் உண்டு. தமிழகத்தில் காஷ்மீரில் இல்லாத நிலைமை, பஞ்சாபில் இல்லாத நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற கருத்துக்கள் சொல்லப்படும்போது அது எந்த அளவிற்கு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் என்பதையும் தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அதைத்தான் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர வேறல்ல. இலக்கியத்தோடு சிலபேர் இங்கே பேசினார்கள். அவர்கள் பேசியதற்கு பதில் கொடுப்பதற்கு எனக்கும் உரிமை உண்டு. 'தாயின் மணிக்கொடி..' பற்றி மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். தாயின் மணிக்கொடியை அவர் மட்டும் மதிப்பவர் அல்ல. அவர் மதிப்பவராக மட்டும் இருக்கலாம். நாங்கள் அதற்கு உயிர் கொடுப்பவர்கள் கூட—அதை அவர்கள் மறந்து விடக் கூடாது. இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் உணர்ந்து அதோடு வேறு பிரச்சினைகளை இணைக்கக் கூடாது என்று நான் தயவு செய்து அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, முதல் தவறு எங்கே நடந்தது என்றால் சாஸ்திரி—ஸ்ரீமாவோ பண்டாரநாயகா உடன்படிக்கை அடிப்படையில் தமிழர்களுக்கு உரிமை சாசனமாக வழங்கப்பட்ட அந்த உரிமைகளை நிலைநாட்ட, வற்புறுத்த, பெற இந்திய அரசாங்கம்

தொடர்ந்து மறந்து விட்டது. அதிலே அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அங்கேயிருந்து தான் அந்தப் பிரச்சினை உருவானது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, சாஸ்திரி—ஸ்ரீமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தை இப்போது இலங்கை அரசு சொல்லி அங்கேயிருக்கிற தோட்டத் தொழிலாளர்களை, தமிழர்களை இங்கே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இப்போது அதை வலியுறுத்தவில்லை என்று சொல்வது நமக்கு, நம்முடைய நலன்களுக்கு முரணானது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, முதலிலேயே நான் சுட்டிக் காட்டி விட்டேன். அதிலே மூன்று நிலைகள் உருவாகின. சில பேர் அங்கேயிருந்து வெளியேற்றப்பட வேண்டும்—எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் குறிக்கப்படவில்லை. இன்றைக்கும் அங்கே இருக்கிறார்கள். சிலபேர் வெளியேற்றப்பட வேண்டும் என்ற குறிப்பும் இருக்கிறது. ஆனால் அவர்களும் கொல்லப்படுகிறார்கள். கொல்லப்படும்போது இந்திய அரசாங்கத்தினுடைய கடமை என்ன? நம்முடைய அங்கீகரிக்கப்பட்ட பிரஜைகள் கொல்லப்பட்டு வருகிறார்கள். என்பது தான் முக்கியமான பிரச்சினை. அதைத்தான் இங்கே சுட்டிக் காட்டினேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்கே சென்றவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை அந்த நாட்டு பத்திரிகையில் வந்ததைத் தான் சொன்னேனே தவிர, நம்முடைய இராணுவம் அனுப்பப்பட்ட நோக்கம் என்ன, அது எப்படி நடந்து கொண்டது என்பதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் நேரிடையாகப் பார்க்கவில்லை. வந்த செய்திகளைத் தான் சொன்னேன். எனவே, அந்த உடன்படிக்கையை ஜனாதிபதியாக இருந்த திரு. ஜெயவர்த்தனா அவர்கள் தனக்கு ஏற்பட்ட உள்நாட்டு குழப்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு, உரிமைகளைப் பெறுவதற்கு.......

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்திய—இலங்கை உடன்பாடு ஏற்பட்ட நேரத்தில், ராஜிவ் காந்தி—ஜெயவர்தனே உடன்பாடு ஏற்பட்ட நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சேர்ந்துள்ள கட்சி அந்த உடன்பாட்டை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றி அது பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்த நிலையை அவர் மறந்து விட்டாரா அல்லது மாறுபட்ட நிலையிலிருந்து பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இன்றைக்கும் நான் சொல்கிறேன். இராணுவம் அனுப்பப்பட்டது வேறு. அதை நாங்கள் ஆதரித்தோம் என்பது உண்மை. அந்த இராணு

வம் எப்படி நடந்து கொண்டது என்பது வேறு. அதை விமர்சனம் செய்வதற்கு எனக்கு உரிமை உண்டு. அதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் விட்டு விட்டு உறுப்பினர் அவர்கள் நேரிடையாகப் பிரச்சினைக்கு வர வேண்டும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, பரிகாரம் காண வேண்டுமென்றால் சில சூழ்நிலைகளை உருவாக்கினால் தான் பரிகாரம் காணமுடியுமே தவிர வேறல்ல. இந்திய அரசாங்கத்திற்குச் சில கட்டாயங்கள் உண்டு. அதைப்போல ஈழ அரசாங்கத்திற்கும் சில கட்டாயங்கள் உண்டு. அதே நேரத்தில் அங்கே வாழ்கிற தமிழர்களுக்கும் சில கடமைகள் உண்டு. அங்கேயிருக்கிற முக்கிய குறைபாடுஎன்னவென்றால் தமிழர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையின்மை என்பதை மறந்து விடக் கூடாது. தமிழர்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டிருந்தால் படுகொலைகள் நடந்திருக்கமாட்டா.

13-50 மணி

தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த அமிர்தலிங்கம் போன்றவர்கள் கொல்லப்பட்டு இருக்கமாட்டார்கள். நம்முடைய பாலசிங்கம் போன்றவர்கள் கொல்லப்பட்டு இருக்கமாட்டார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உயிரோடு இருப்பவர்களைக் கொலை பண்ணுகிறீர்களே, (குறுக்கீடு). பொதுவாகவே 12 மணிக்கு மேலே அவருக்கு வாய்ப்புக் கொடுத்தால் இப்படி ஆகிவிடுகிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : பாலு என்று பெயரிலே கொஞ்சம் (சிரிப்பு) எனவே பத்மநாபா அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இப்படி எல்லாம் நடந்திருக்காது. நான் சொல்ல விரும்புவது, எங்களைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையிலே தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும், ஒரே குரலில் அவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராட வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும், தமிழர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதே நேரத்தில் முஸ்லீம்கள் மசூதியிலே தொழுது கொண்டிருந்தபோது கொல்லப்பட்டார்கள் என்று வந்திருக்கிற செய்தி என்பது நம்முடைய உள்ளங்களை எல்லாம் கலக்கி விட்டது. மனித இனத்திற்கு விரோதமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒரு மகத்தான இருதயமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல் என்று சொன்னால், அது மிகையாகாது. யார் செய்தார்கள்

என்பதுதான் இப்போது முக்கியம். ஈழத்தின் புலிகள்தான் செய்தார்கள் என்று இலங்கை அரசாங்கம் சொல்கிறது. ஆனால் அப்படி இல்லை. நாங்கள் செய்யவில்லை, எங்களையும் முஸ் லீம்களையும் பிரித்து வைப்பதற்காக இலங்கை அரசாங்கமே செய்த ஒரு ஏற்பாடு என்று....(குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர். பால சுப்பிரமணியம் இப்படி அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், எப்போதுதான் அவர் பேசி முடிப்பது? இப்போது என்ன Point of Order? இந்தப் பிரச்சினையிலே உங்களுக்கு என்ன Point of Order? (குறுக்கீடு). உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அடிக்கடி எழுந்து Point of Order கேட்கக் கூடாது. அடிக்கடி கேட்டால், எதற்கும் மரியாதை இல்லாமல் போய்விடும். (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, நான் கொஞ்சம் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கிறேன் என்று தாங்கள் குறைபடுகிறீர்கள். என்னுடைய நேரம் இப்படி மற்றவர்களால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தோழர் தான். நீங்கள் இரண்டு பேர்களும் செய்வதுதான்.

திரு. எம். அப்துல் லத்தீப் : இந்த இரண்டு கருத்துக்களும் வந்து இருக்கின்றன. ஈழப் புலிகள் கொன்றிருக்கிறார்கள் என் பது ஒரு செய்தி. அதற்கு வந்திருக்கிற மறுப்புச் செய்தி, ஈழப் புலிகள் நாங்கள் செய்யவில்லை. எங்களையும், முஸ்லீம்களை யும் பிரிப்பதற்காக இலங்கை அரசாங்கமே செய்திருக்கிற சதி, அவர்களே, தங்களுடைய ஆட்களை வைத்துக் கொன்று இருக் கிறார்கள் என்பது இன்னொரு செய்தி. ஆக, இந்த இரண்டு செய்திகள் வருகின்றன. இதை யார் செய்திருந்தாலும் அதைக் கண்டிப்பது, அவர்களுக்கு கண்டனம் மட்டுமல்ல. தண்டனையும் வழங்குவதற்கு International comity of Nations எல்லோரும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக யுத்தத்தில் சுட்டுக் கொல்வது சாதாரணம். ஆனால் தொழுகையில் இருப்பவர்கள், என்ன நடக்கிறது அக் கம் பக்கத்தில் என்பது கூட தெரியாதவர்கள், கையிலே ஆயுதம் இல்லாதவர்கள், தன்னைத் தானே தற்காத்துக் கொள்ள முடி யாதவர்கள், தொழுகையிலே, கூட்டுத் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும்போது, துப்பாக்கியை எடுத்து, அனைவரையும், நூற்றுக்கணக்கானவர்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். இந்தப் படுகொலையை சர்வதேசமும் கண்டிக்க வேண்டும். எல்லா

1990 ஆகஸ்ட் 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

நாடுகளும், எல்லா காலத்திலும் கண்டிக்க வேண்டும் என்ற அடிபடையில் அந்த நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. எனவே ஈழப்பிரச்சினை தீரவேண்டும் என்றால், யதார்த்த நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, நாம் இன்றைக்கு நடவடிக்கை களை மேற்கொள்ளவேண்டும். தமிழர்கள் எல்லாம் ஒன்றாக வேண்டும். அந்தத் தமிழர்களைக் கூட முஸ்லீம்கள் என்று பிரிவினை செய்து பார்க்கக் கூடாது. அங்கேயிருக்கிற நிலைமை களிலே, எல்லா தமிழர்களுக்கும் நன்மை ஏற்படும் வகையில் தமிழர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்து இலங்கை அரசாங்கத் தோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அப்படி பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் துணையாக இருக்க வேண்டும். இந்திய அரசாங்கம் துணையாக இருப்பதற்கு தமிழக அரசாங்கத்தோடு முறையாக பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இப்போது 80 ஆயிரம் மக்கள் வந்து விட்டார்கள். அவர்களை எப்படிச் சமாளிப்பது? ஏற்பட்டு இருக்கிற மிகப் பெரிய பொருளாதாரச் சிக்கல்களை நாம் எப்படிச் சமாளிப்பது? 80 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நிலம் அங்கே காலியாகிவிட்டது. தமிழகத்திலே அவர்கள் வந்து புகுந்துவிட் டார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் அது ஒரு மறைமுகமான ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது விஷயத்திலே நம்முடைய இந்திய அரசாங்கம் தார்மீக நிலைமைகளையும், தர்ம நியாயங்களையும், தனக்கு இருக்கிற கடமைகளையும் உணர்ந்து பார்த்து செயல்பட வேண்டும். வீணாக யாரோ எங்கோ உட்கார்ந்து கொண்டு, தமிழக அர சாங்கத்தின்மீது களங்கம் கற்பிப்பது, தமிழக அரசாங்கம்தான் இதிலே மிகப் பெரிய பங்கு வகிக்க வேண்டும், அவர்கள் தான் நடுநிலையிலேயிருந்து செயல்பட வேண்டும் என்று சொல்லி, அவர்களுடைய எண்ணங்களிலே ஒரு குறையைக் கற்பித்து, அவர் கள் செம்மையாக, சுதந்திரமாக இந்த விஷயத்தில் செயல்பட முடியாமல், தமிழக அரசாங்கத்தை, அரசியல் நோக்கத்தோடு சில கட்சிகள் இன்றைக்கு விமர்சித்து வருவது, தமிழர்களுடைய வாழ்க்கையோடு விளையாடுவதற்கு ஒப்பாகும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற இந்தச் சூழ்நிலையில் இந்த அரசாங் கத்தைத் தவிர, வேறு அரசாங்கத்தால், இவ்வளவு விவேகத் தோடும், இவ்வளவு சிறப்புக்குரிய வகையிலும் இந்தப் பிரச் சினையை அணுகிவிட முடியாது என்பது என்னுடைய கருத்து மட்டுமல்ல, டெல்லி வட்டாரத்திலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்தும் ஆகும். டெல்லியிலே இருக் கிற அனைத்துக் கட்சிகளுடைய உறுப்பினர்களும் அப்படித்தான் சொல்கிறார்கள். பெயரை வேண்டுமானால் நான் சொல்லத் தயார். ஆகையினாலே தமிழக அரசாங்கத்திற்கு உதவிகரமாக இருந்து, தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு, வாழவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த முஸ்லீம்களைக் கொன்று குவித்த செய்தி நம்முடைய ஈழப் புலிகளுக்கு ஒரு பெரிய குறையையும் கறை யையும் ஏற்படுத்தி இருக்கிறது. இலங்கை அரசாங்கத்திற்கு

ஒரு கறையை ஏற்படுத்தி இருக்கிறது. அதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானம் எப்படி வடிக்கப்பட்டு இருக்கிறதோ, அந்த வகையிலே நான் ஆதரித்து அமர்கிறேன்.

13-55 ம ணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வழிமொழிகின்ற வகையில், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்த கட்சிகளின் உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும், திருத்தங்களைத் தந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீர்மானத்தின் மீது நான் ஆற்றுகின்ற இந்த நிறைவு உரை முழுமையாக இருக்க வேண்டுமென்பதற்காக முன் மொழியப்பட்ட தீர்மானத்தை மீண்டும் ஒரு முறை நினைவு படுத்தி, தரப்பட்டுள்ள உறுப்பினர் திருத்தங்களையும் அந்த உரையில் இணைத்து—திருத்தங்களை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ—எனினும் இப்படிப்பட்ட திருத்தங்களும் இடம் பெற்றன என்பதற்கேற்ப அவைகளையும் தொகுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் முன்மொழிந்த தீர்மான வாசகம்.

''இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டு கொண்டிருக்கிறார்கள். அஃதன்னியில் விமான குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டு தங்கள் உடமைகளை இழந்து உயிர் தப்பினால் போதும் என்று பல்லாயிரக் கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து குவிந்த வண்ணமிருக்கிறார்கள்.

இலங்கையில் இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுவதையும் அகதிகள் வருகையின் மூலம் ஒரு வகையான ஆக்கிரமிப்பை இலங்கை அரசு இந்திய நாட்டின் மீது செய்து வருவதையும் நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

எனவே இதற்கோர் அரசியல் தீர்வு கண்டு இலங்கையில் தமிழர்கள் நிலையான நிம்மதியான வாழ்வைப் பெறவும் இங்கே அகதிகளாக வந்திருப்போர் மன ஆறுதலுடன் அச்சமின்றி தங்கள் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று இந்தப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இதனோடு இணைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் ஒரு திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அழகர்சாமி அவர்களும், பழனிச்சாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதில் கடைசிப் பத்தியில் இணைக்க

வேண்டுமென்ற அவர்கள் கருத்துக்கள், "மேலும் உரிய சூழ்நிலையை உருவாக்குவதில் இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கூடிப் பேசி தமிழர் பாதுகாப்பிற்கும், பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு காண மத்திய அரசு முன்வர வேண்டுமெனவும் இப்பேரவை கேட்டுக் கொள்கிறது" என்பதாகும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு ரமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்களும் தந்துள்ள திருத்தம், "இலங்கை அரசு போராளிக் குழுக்களிடையே பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைப்பிடிப்பதைக் கைவிட்டு, உடனடியாக ராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு, இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும். அவ்வாறே எல்.டி.டி.ஈ.—இயக்கத்தினரும் ஆயுத மோதலைக் கைவிட்டு, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பவும், அரசியல் தீர்வு காணவும் முன்வருவதோடு, இதர போராளிக் குழுக்களுக்கு எதிரான தாக்குதலை நிறுத்த வேண்டும். இலங்கையிலுள்ள தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் போராளிக் குழுக்கள் அனைத்தையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ் மக்கள் கணிசமாக வாழும் இலங்கை வடக்கு—கிழக்கு மாகாணத்திற்குப் பரவலான கூடுதல் அதிகாரங்கள் கொண்ட சுயாட்சி உரிமையை வழங்கி, இலங்கை அரசு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பதாகும்.

இதிலே பெரிய மாறுபாடோ அல்லது முரண்பாடான கருத்தோ அரசுக்கு இல்லை என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் இந்தத் திருத்தத்தை இதிலே இணைக்க இயலாமைக்கு நான் சொல்ல விரும்புகின்ற காரணம், நாம் இந்திய அரசைத்தான் கேட்டுக் கொள்ள முடியும். திருத்தத்திலே இலங்கை அரசு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இருப்பதால் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கின்ற கடமை நமக்கு இருந்தாலும், உரிமை இல்லாத காரணத்தால் நாம் உரிமையோடு கேட்டுக் கொள்ளக் கூடிய அரசாக இந்திய அரசு இருக்கின்ற காரணத்தால் இந்தத் திருத்தத்தை இதிலே இணைக்காவிட்டாலும் கூட, அந்தத் திருத்தங்களிலே சொல்லப்பட்டிருக்கின்ற அந்த மையக் கருத்துக்கள் எனக்கு உடன்பாடானவை, இந்த அரசுக்கு உடன்பாடானவை என்பதை இங்கே நான் அழுத்தந்திருத்தமாக, திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

14-00 மணி

இங்கே நம்முடைய உறுப்பினர்கள் பேசினார்கள். முதலிலே நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் புதுக் கவிதையோடு தன்னுடைய பேச்சைத் தொடங்கினார். அந்தப்

புதுக் கவிதையின் வாசகங்கள் உடனடியாக எனக்குக் கிடைத்தன. வாங்கிக் கொண்டேன். அவரிடமிருந்து அல்ல— வர வேண்டிய முறையில். அதிலே அவர்கள் சொன்னார்கள் ''இலைகளைப் பறிக்கின்ற போதும் கிளைகளை முறிக்கின்ற போதும் எதிர்த்துக் கேட்டிருந்தால் அவர்களுக்கு வேர்களையே எரிக்கிற வீரம் பிறக்குமா'' என்று கேட்டிருக்கிறார்கள். அது ஆல்போன்ஸே எழுதிய கவிதையாக இருந்தால் பாராட்டுவேன். வேறு யாராவது எழுதி படித்திருந்தால், அதை நினைவூட்டியதற்காகப் பாராட்டுவேன். ''இலைகளைப் பறிக்கிற போதும், கிளைகளை முறிக்கிற போதும் எதிர்த்துக் கேட்டிருந்தால் அவர்களுக்கு வேர்களையே எரிக்கிற வீரம் பிறக்குமா'' என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது மிச்சப்பட்டது வேர்கள் தான். இலைகளும் கிளைகளும் முறிக்கப்பட்டது ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அதைச் சொல்லுகிறேன் என்றால், அவர்களே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் வடக்கு—கிழக்கு மாநிலத்திலே ஒரு கவுன்சிலை உருவாக்கி வரதராஜ பெருமாள் அவர்களை முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்கச் செய்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

அப்படிப் பொறுப்பை ஏற்ற வரதராஜ பெருமாள், பொறுப்பேற்ற நாளிலேயிருந்து அந்தப் பொறுப்பை விட்டு விட்டு இலங்கையை விட்டு வெளியேறி வெளி நாடுகளிலே தஞ்சம் புகுந்த வரையில் என்ன கோஷத்தை எழுப்பிக் கொண்டிருந்தார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. வரதராஜ பெருமாள் எழுப்பிய கோஷமே, ''தமிழர் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. அது ராஜீவ் காந்திக்கும் ஜெயவர்த்தனாவிற்கும் இடையிலே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு எதிரானது. சிங்களவர் குடியேற்றம் தொடர்ந்து கொண்டே இருக்குமானால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து பயன் இல்லை. ஒப்பந்தத்தை மீறி காரியங்கள் நடைபெறுகின்றன'' என்று வரதராஜ பெருமாள், இங்கே ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் பெரும் குரலெடுத்துப் பேசினார். ஆனால் அப்போது இந்தியா அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை, அல்லது இந்தியா சொன்னதை இலங்கை அரசு செவி கொடுத்து கேட்கவில்லை, அலட்சியப்படுத்தி விட்டது. அதனால் தான் அவருடைய கவிதைக்கு சரியான பொருள் என்னவென்றால், வேண்டுமென்றே தமிழர் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் நடைபெற்றபோது, எதிர்த்துக் கேட்டிருந்தால் வேர்களையே எரிக்கிற வீரம் அவர்களுக்குப் பிறந்திருக்காது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

14-05 மணி

அடுத்து 'கண்களைத் தோண்டிய பிறகு புருவத்திலே பூசுவதற்கு மை சேகரிக்கும் மானிடர்களே' என்பது அவர்களின் புதுக் கவிதையினுடைய அடுத்த பகுதி. வரதராஜ பெருமாள் தமிழகத்திற்கு வந்தது உங்களுக்குத் தெரியும். அவர் வந்தபோது நான் அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தேன். அதைப் போலவே விடுதலைப் புலிகளின் சார்பாக பாலசிங்கம் அவர்களும், யோகி அவர்களும் என்னிடத்திலே பேசுவதற்காக வந்திருந்தனர். மற்ற போராளிக் குழுக்களின் தலைவர்களும் என்னிடத்திலே பேசுவதற்காக வந்திருந்தார்கள். அப்போது தேசிய முன்னணி ஆட்சி மத்தியிலே பொறுப்பேற்று விட்ட சூழ்நிலை. அப்போது தமிழகத்திற்கு வந்த வரதராஜ பெருமாள் அவர்கள் என்னிடத்திலே மாத்திரம் அல்ல, பத்திரிகை நிருபர்களிடத்திலேயும் சென்னையிலே சந்தித்தபோது மட்டுமல்ல, டெல்லியிலே நிருபர்களிடத்திலே சந்தித்த போதும் சொன்னது என்ன? டெல்லியிலே உள்ள தலைவர்களை ராஜீவ் காந்தி உள்பட எல்லாத் தலைவர்களையும் சந்தித்தபோது பிரதமர் மற்றும் உள்ள மத்திய அமைச்சர்களை சந்தித்தபோது என்ன சொன்னார், பத்திரிகைகளிலே, எடுப்பாக வந்த செய்திகள் என்னவென்று பார்த்தால் பெயர் தான் வடக்கு—கிழக்கு மாநில அரசு என்று இருக்கிறதேயல்லாமல் அதிகாரபூர்வமாக எங்களுக்கு அரசாங்கம் என்ற பெயரே கிடையாது என்று. இரண்டாவது, எந்த அதிகாரமும் தங்களுக்குக் கிடையாது. ராஜீவ்—ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தின்படி கோடிட்டுக் காட்டப்பட்ட எந்த அதிகாரங்களும் எங்களுக்குக் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் எங்கள் பகுதியிலே ஒரு குட்டையோ, குளமோ இருந்தால் அந்தக் குட்டையோ, குளமோ மழை பெய்து நிரம்பியிருந்தால் மாநிலக் கௌன்சிலுக்குச் சொந்தம். வாய்க்கால் வழியாக, ஒரு ஆறு வழியாக தண்ணீர் வந்து நிரம்பினால் அது மத்திய அரசுக்குச் சொந்தம். எங்கள் பகுதியிலே இருக்கின்ற வீதிகள், தெருக்களில் ஒரு தபால் ஆபீஸ் திடீரென்று வந்துவிடுமேயானால்—தபால் ஆபீஸ் கூட வர வேண்டியதில்லை,—ஒரு தபால் பெட்டியை திடீரென்று வைத்து விடுவார்களேயானால் அந்தத் தெரு, வீதி மத்திய அரசுக்குச் சொந்தம். இப்படிப்பட்ட அதிகாரமே இல்லாத ஒரு பொறுப்பு தான் எங்களிடத்திலே இருக்கிறது என்று அவர் சொன்னார், ஆனால் மதிப்பு மிகுந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியாவிலே பேசியது என்ன? சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்திலே பேசியது என்ன என்பதை நான் குற்றச்சாட்டிற்காகச் சொல்லவில்லை. அவர் கூட எண்ணி, எதிர்பார்த்து, ஏமாந்துவிட்டார் என்பதற்காக இதைச் சொல்கின்றேன். அவர் சொன்னார், இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை விட, அதிகாரங்களை விட

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஆகஸ்ட் 23

அதிக உரிமைகளும், அதிக அதிகாரங்களும் வடக்கு—கிழக்கு மாநிலத்திற்கு இலங்கையிலே வழங்கப்பட்டிருக்கிறது என்று பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் இதே சென்னை மாநகரத்திலே எடுத்துச் சொன்னார்கள். அதை நாம் மறந்து விடவில்லை. எல்லா ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது. அவருடைய பேச்சு புத்தகமாகவே அச்சு ஏற்றப்பட்டு தரப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே உள்ள மாநிலங்களை விட அதிக சுயாட்சித் தன்மையோடு. அங்கே வடக்கு—கிழக்கு மாநிலத்தில் சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது என்று ராஜீவ் காந்தி அவர்களே சொன்னார்கள். அவர்கள் நம்மை ஏமாற்றுவதற்காகச் சொல்லவில்லை. ராஜீவை ஏமாற்றுகின்ற வகையிலே அந்த ஒப்பந்தத்தை இலங்கையிலே உள்ள அரசு மீறிவிட்டது என்பதற்காகத் தான் இதை நான் சொல்கின்றேன். எனவே எந்த அதிகாரமும் இல்லாத ஒரு சூழ்நிலையில் வரதராஜ பெருமாள் அவர்கள் இங்கே ஐ.பி.கே.எஃப்.—இந்திய அமைதிப் படை ஏற்கெனவே ராஜீவ் காந்தி அவர்களே ஒப்புக் கொண்டு அதற்குப் பிறகு வி. பி. சிங் அவர்கள் பிரதமராக ஆன பிறகு ராஜீவ் ஒப்புக் கொண்டதை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையிலே இந்திய இராணுவ அமைதிப் படை திரும்ப பெறப்பட்ட பிறகு ஏற்பட்ட நிலைமைகள் எல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். இவைகளையெல்லாம் விளக்க நான் விரும்பவில்லை. ஒன்றை இந்த அவை மறந்திருக்காது. நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் டெல்லிக்குச் சென்று பிரதமராக அன்றைக்கு வீற்றிருந்த ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்தேன். அந்த சந்திப்பு 2 நாள் சந்திப்பு. அந்த 2 நாள் சந்திப்பில், ராஜீவ் அவர்களோடு நான் பேசியது 2 மணி நேரம். ராஜீவ் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட நட்வர்சிங் போன்ற அமைச்சர்களோடும், வேறு பல வெளியுறவுத் துறை அதிகாரிகளோடும் நான் பேசியது 8 மணி நேரம். மொத்தத்தில் 10 மணி நேரம் அந்த இரண்டு நாளில் நான் இலங்கைப் பிரச்சினை குறித்து டெல்லியிலே பேசியிருக்கிறேன். அதிலே 2 மணி நேரம் பிரதமராக இருந்த ராஜீவ் அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அந்தப் பேச்சைப் பற்றி ராஜீவ் அவர்களே கூட மிகச் சிறந்த சந்திப்பு என்று மற்ற அமைச்சர்களிடத்திலே அவர்கள் சொல்லி பெருமைப் பட்டுக் கொண்டார், மகிழ்ச்சியடைந்தார் என்று கேள்விப் பட்டு நானும் பூரிப்பு கொண்டேன். அந்த பூரிப்போடு நான் சென்னைக்கு வந்தபோது தான் நம்முடைய பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இந்த அவையிலே எழுந்து 'இந்தியத் துணைக் கண்டத்தினுடைய தலைவர் அவர்களும், இங்கே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு விடிவு கண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். நானும் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியோடு அவர் தெரிவித்த நன்றியை ஏற்றுக் கொண்டேன். அதற்குப் பிறகு மீண்டும் ஒரு முறை ராஜீவ் அவர்களுடைய அழைப்பின் பேரில் டெல்லிக்குச்

1990 ஆகஸ்ட் 23] [டாக்டர் மு. கருணாநிதி]

சென்று மறுபடியும் இலங்கைப் பிரச்சினை குறித்து பேசப் பட்டது. அப்போது தான் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவுகளின்படி வடக்கு–கிழக்கில் அமைந்துள்ள கௌன்சிலில் விடுதலைப் புலிகளுக்கு பெரும்பான்மையான இடங்களைத் தருவது என்றும், சில இடங்களை—குறிப்பிட்ட சில இடங்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் உள்ள ஈராஸ், டெலோ போன்ற இயக்கங்களுக்குத் தருவது என்றும் பேசி முடிவு எடுக்கப்பட்டு, இதைப் பற்றி பேசுவதற்கு நீங்களே கூட கொழும்புக்குச் செல்லலாம் என்று என்னைச் சொன்னார், அல்லது யாராவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் கொழும்புக்குச் செல்லலாம். அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்கின் றோம். அதைப் போலவே விடுதலைப் புலிகளுடைய பிரதிநிதி களைச் சந்திப்பதற்கு அதற்கான வசதிகளையும், வாய்ப்பு களையும் நாங்கள் செய்து தருகிறோம். என்றெல்லாம் குறிப்பிட்டு, ஒரு தேதியையும் அவர்கள் அன்றைக்கு சுட்டிக்காட்டி, அந்தத் 'தேதியிலே செல்வதற்குத் தயாராக இருங்கள் என்று சொன்னார்கள். என்ன விபரீதம் என் றால், தமிழனுடைய தலைவிதி தமிழ்நாட்டிலே ஏற்பட்ட அரசியல் மாறுதல் இலங்கைத் தமிழனுடைய தலைவிதியை மாற்றி விட்டது என்பதை நான் மிகுந்த சோகத்தோடு இங்கு சொல்ல விரும்புகின்றேன். அப்போது மார்ச் திங்கள் 25 ஆம் தேதி சட்டமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சி யைப் பற்றி எல்லாம் நான் விவரிக்க விரும்பவில்லை. அந்த நிகழ்ச்சியையொட்டி, தமிழ்நாட்டிலே அரசியல் சூழ்நிலை மாறியது. தமிழ்நாட்டிலே இருந்த அரசியல் சூழ்நிலைக்கும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கும் முடிச்சுப் போடப்பட்ட காரணத்தால், பெருமுயற்சி எடுத்துக் கொண்ட அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் பிறகு அதைப்பற்றிப் பேசாமல் இருந்துவிட்டார்.

14-10 மணி

டெல்லியிலே இருந்து எனக்கு தூது வருவார்கள், அதிகாரி கள் வருவார்கள், அவர்கள் என்னையோ அல்லது நான் அனுப்பு கின்றவர்களையோ இலங்கைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு களைச் செய்வார்கள் என்றெல்லாம் நாள் குறித்து, அந்த நாளுக்காக நான் காத்திருந்தபோது இடையிலே மார்ச் 25ஆம் தேதி இங்கே பட்ஜெட் சமர்ப்பிக்கிற நாள் வந்து, அதிலே ஏற்பட்ட தகராறுகளின் காரணமாக பிறகு 'தினேஷ்சிங் வருகை, பூச்செண்டு தருகை' இவைகளையெல்லாம் ஒட்டி ஏற்பட்ட அரசியல் கசப்புக்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே போய் முடிந்து விட்டது. அது இலங்கைத் தமிழனுடைய தலை யெழுத்தாக ஆகிவிட்டது. இந்தக் கசப்புணர்வை அதற்குப் பயன்படுத்தாமல் இருந்திருப்பார்களேயானால் அல்லது அவர் பயன்படுத்துகின்ற அளவுக்கு இங்கே இருந்து ஒரு தூண்டுதல் இல்லாமல் இருந்திருக்குமேயானால் எப்படியோ இந்தப் பிரச்சினை அன்றைக்குச் சுமுகமாக, நாம் இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிறோமே, அரசியல் தீர்வு, அந்த அரசியல் தீர்வின்

அடிப்படையிலே நல்ல முறையிலே முடிந்திருக்கக்கூடும். அது நடக்கவில்லை. அதற்குப் பிறகு ஒரு 15 நாள், 20 நாளுக்குப் பிறகு பார்த்தால் பிரேமதாசாவோடு எல்.டி.டி.ஈ. குழுவினர் பேசுகிறார்கள் என்ற செய்தி வந்தது. அந்த நேரத்தில் அப்போதும் பிரதமராக இருந்த ராஜீவ் அவர்கள் சென்னை விமான நிலையத்தின் வழியாக இங்கு வந்து ஹெலிகாப்டரிலே இறங்கி, விமானத்திலே ஏறி டெல்லிக்குச் செல்கிறார்கள். அப்போது என்னையும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மாறனையும் பார்த்துப் பேசினார்கள். நான் அவரிடத்திலே கேட்டேன், இப்படி ஏமாற்றி விட்டீர்களே என்று. உடனடியாகச் சொன்னார்கள், நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேனே என்று அவர்கள் சொன்னார்கள். நீங்கள் ஆள் அனுப்புவதாகச் சொன்னீர்கள், யாரும் வரவில்லையே என்று சொன்னேன். நாளைக்கே மாறனை அனுப்பி வையுங்கள். முடிந்தால் இப்போதே என்னோடு இந்த விமானத்திலே வரட்டும் என்று சொன்னார்கள். நாளைக் காலையிலே வருவதாக மாறன் சொன்ன பிறகு, அப்படியே மறுநாள் காலையிலே மாறனை அனுப்பி வைத்தேன். அனுப்பி வைத்த பிறகு ராஜீவ்காந்தி அவர்கள் மாறனிடத்திலே சொன்னது, 'இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை, இனிமேல் மேற்கொண்டு முன்பு பேசிய அதே பிரச்சினையின் அடிப்படையில் அதே சமரச உடன்பாடு செய்து கொள்ளத் தயார்' என்று சொன்னதும், நாங்கள் அவர்களோடு தொடர்பு கொண்ட போது அதற்கு முன்பாக, அவர்கள் பிரேமதாசாவிடத்திலே பேசச் சென்று விட்டார்கள்.

அந்த நேரத்திலேதான் ராஜீவ் அவர்களே சொன்னார்கள், பிரேமதாசாவோடு பேசத் தேவையில்லை. அவர்களுக்கு ஈழம் தான் வேண்டுமென்றால் அதைப் பெற்றுத்தரக் கூட இந்திய அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன காரணத்திற்காக ஈழம் வேண்டுமென்ற கொள்கையை ராஜீவ் காந்தி ஒத்துக்கொண்டார் என்று பொருள் அல்ல. சில நேரங்களில் வேகமாகப் பேசுகிற நேரத்தில் சில பிரச்சினைகளை வைத்துப் பேசுகிற நேரத்தில் பிரிவினையைப் பற்றி, நாட்டு விடுதலையைப் பற்றிப் பேசிவிடுவது இயற்கை. நேற்றைக்குக் கூட அ.தி.மு.க. உறுப்பினர்கள் டெல்லியிலே இந்திப் பிரச்சினையிலே பேசும்போது, 'நீங்கள் இந்தியைத் திணித்தால் நாடு துண்டு ஆகிவிடும்' என்று பேசியிருக்கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல, 'இந்தியா துண்டு ஆகிவிடும் நீங்கள் இந்தியைத் திணித்தால்' என்று அன்பரசு, எம்.பி., அவர்களே பேசியதாக இன்று இந்துப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைப் போல ஒன்று. அதற்காக நாங்கள், தமிழ் ஈழம், அது தான் என்னுடைய கொள்கை என்று ராஜீவ் அறிவித்து விடவில்லை. அதைக்கூட பெற்றுத் தரத் தயார், பிரேமதாசாவோடு பேசத் தேவையில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நிலைமைகள் எல்லாம் மாறிவிட்டன.

[டாக்டர் மு. கருணாநிதி]

அவர்களே பேசச் சென்று விட்டார்கள். அப்படிப் பேசச் சென்றது, பிரேமதாசாவினுடைய வலையிலே விழுந்தது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். வலையிலே விழுந்ததைப் போல் தான், விடுதலைப் புலிகள் அவர்களுடைய வலையிலே விழுந்து இன்றைய தினம் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வரக் கூடிய ஒரு சோகக் கட்டம், நம்மால் சகிக்க முடியாத அளவுக்கு நடந்து கொண்டிருக்கின்றது. இன்று நம் முன்னால் இருக்கின்ற பிரச்சினை, இதற்கு எப்படித் தீர்வு காண்பது என்பதுதான்.

பல பிரச்சினைகள் இங்கே பேசப்பட்டிருக்கின்றன. நான் அவைகளுக்கெல்லாம் மாறான கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல. எல்லாப் போராளிகளுமே வன்முறையிலே ஈடுபடுவது போன்ற காரியங்களில் தமிழ்நாட்டிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஈ. பி. ஆர். எல். எஃப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 7, 8 தடவை, 1987 ஆம் ஆண்டிலேயே பல முறை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏ. கே. 47 போன்ற துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள் என்று எம். ஜி. ஆர். ஆட்சிக் காலத்திலேயே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல விடுதலைப் புலிகளும் இங்கே ஆயுதங்களைக் கொண்டு வருகின்ற முயற்சியிலே ஈடுபட்டபோது இந்த அரசால் அவர்கள் பிடிக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஒன்றை நான் அன்றைக்கும் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன், விடுதலைப் புலிகளுக்கு அல்லது மற்ற போராளிகளுக்கு முகாம்கள் தமிழ்நாட்டில் இருந்தது உண்மை. ஆனால் கடந்த 2 அல்லது 3 ஆண்டுக் காலமாக அவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் இல்லை. நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல அலுவலகங்கள் இருந்தன. அந்த அலுவலகங்களை வைத்துக்கொண்டு இங்கே இயங்கி வந்தார்கள். இன்றைக்கு கூட அந்த அலுவலகங்களை வைத்துக் கொண்டு அவர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் அந்த அலுவலகங்களில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வதும் நான் அடிக்கடி குறிப்பிட்டதைப் போல சகோதர யுத்தத்திலே ஈடுபடுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல என்பதை இப்போது நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

14–15 மணி

இன்று நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்ற இருக்கின்ற—வேண்டும் என்று விரும்புகின்ற இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படையில்—இன்று காலையிலே கூட நான் இன்னொரு முயற்சியாக எடுத்து இரண்டு பிரச்சினைகளுக்காக பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களை நம்முடைய கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமைச்சர் பொறுப்பு ஏற்றிருக்கின்ற திரு. முரசொலி மாறன் அவர்களும் பிரதமரைச் சந்தித்து இருக்கிறார்கள். அந்தச்

செய்தியை அப்படியே படிக்கிறேன். மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வை. கோபால்சாமி, தா. கிருஷ்ணன், மிசா இரா. கணேசன், ஜே. எஸ். இராசு, முகமது சகி, வெங்கட்ராமன் மற்றும் வீரப்பன் ஆகியோர் இன்று காலையில் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களைச் சந்தித்தார்கள்.

முதல் பிரச்சினையாக இந்தி மொழி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த 4 மாநில முதலமைச்சர்கள் ஆங்கிலத்திற்கு விரோதமாக பேசியிருப்பதைக் குறிப்பிட்டு அவர்கள் அப்படி பேசியிருப்பதானது இந்திய ஒருமைப்பாட்டிற்கு விரோதமான செயல் என்றும் தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் மொழிக் கொள்கை பற்றி குறிப்பிட்டதற்கு மாறான செயலை இந்த 4 மாநில முதலமைச்சர்களும் கையாள்வதாகவும் தெரிவித்து கடிதம் கொடுத்தார்கள். கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பிரதமர் அவர்கள் இன்றைக்கே அதைப்பற்றிக் கவனிப்பதாகவும் அந்த 4 மாநில முதலமைச்சர்களும் தெரிவித்த கருத்து தேசிய முன்னணி அரசைக் கட்டுப்படுத்தாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்து உறுதிமொழியும் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி.)

அடுத்து மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் சென்ற அந்தக் குழு பிரதமரிடம் இலங்கை நிலைமைகளை விளக்கமாகக்கூறி அகதிகள் வரவு 80 ஆயிரத்தைத் தாண்டி விட்டதாகவும், விமானத் தாக்குதல் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அப்பாவி மக்கள் கொல்லப் படுவதுநீடிப்பதாகவும், மறைமுகமான இலங்கையின் ஆக்கிரமிப்பு அகதிகளை அனுப்புவதன் மூலம் நீடிப்பதாகவும் எனவே இந்தியா மேலும் காலம் தாமதிக்காமல் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது வலியுறுத்தலின்பேரில் உடனடியாக இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளுக்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்தும் பிரதமர் அவர்கள் உடனடியாகக் கவனிப்பதாகக் கூறியதோடு வெளி விவகாரத் துறைச் செயலாளரை உடனடியாக தொலை பேசியில் அழைத்து அவர்களிடத்திலே பேசி இருப்பதாகவும் செய்தி வந்துள்ளது. இங்கு இந்தத் தீர்மானத்தின் மூலமாகப் பேசும்போது இந்திய சர்க்கார் என்ன செய்தது, தமிழக அரசு என்ன செய்தது என்று நம்முடைய திரு. ஆல்போன்ஸ் அவர்கள் அல்லது மற்ற உறுப்பினர்கள் கேட்கும்போது நான் அதற்கு வருத்தப்படவில்லை. அப்படிக் கேட்பது தான் இங்கு இருக்கின்ற அரசுக்கும் நல்லது, மத்தியில் இருக்கும் அரசுக்கும் நல்லது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் கேட்டால் தான் நாங்கள் செயல்பட முடியும். எதிர்க்கட்சிகள் கேட்கிறார்கள் என்றால் இந்த அரசு எந்த உணர்வோடு இருக்கிறதோ அந்த உணர்வுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும்

அளிக்கின்ற வகையில்தான் நீங்கள் இங்கே வைக்கின்ற பிரச்சினைகள், நீங்கள் எழுப்பிய வினாக்கள் இருக்கின்றதே அல்லாமல் எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் கூட அது எங்களை மேலும் ஊக்கப்படுத்தி இந்தப் பிரச்சினையில் வேகமாகச் செல்வதற்கு எங்களைத் தூண்டுகின்ற ஒன்றாக நாங்கள் கருதுகிறோமே அல்லாமல் வேறு அல்ல என்பதை மிகுந்த பணிவோடு இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. ஆல்போன்ஸ் அவர்கள், மத்திய அரசு இந்த அகதிகளுக்கு இதுவரையில் என்ன செய்தது என்று கேட்டார்கள். அகதிகளுக்கு 10 கோடி ரூபாய் செலவாகும். அதற்கு முன் பணமாக தரவேண்டுமென்று கேட்ட உடனே மத்திய அரசு அகதிகள் பிரச்சினைக்காக 4 கோடி ரூபாயை அனுப்பி வைத்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளகக்டமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இதுவெல்லாம் கூட பதில் ஆக அல்ல விளக்கமாகத் தான் சொல்கிறேன். ஒருவேளை அவருக்குத் தெரியாமல் இருந்து இருக்கலாம், அதனால் கேட்டு இருக்கக்கூடும். நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள் அகதிகள் முகாம்களுக்கு எல்லாம் சென்று வந்ததைப் பற்றிச் சொன்னார்கள். அகதிகள் முகாம்களில் உள்ள அகதிகள் எவ்வளவு வசதி வாய்ப்புகளோடு இன்று வாழ வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அல்ல, இலங்கையில் இருக்கிற அரசு பிரதிநிதிகளுக்குக்கூட அமைச்சர்களுக்குக் கூட அதன் காரணமாக பொறாமை கொண்டு இப்படி இவ்வளவு வசதிகளைச் செய்யலாமா என்று அவர்கள் வினவியதோடு அந்த அகதிகள் முகாம்களை எல்லாம் நாங்கள் சென்று பார்க்க வேண்டும் என்று கூட அவர்கள் விருப்பம் தெரிவித்து அறிக்கை விடுத்தபோது அவர்களைப் பார்க்க நாங்கள் அனுமதிக்க முடியாது என்று தமிழக அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டோம்.

14–20 மணி

அதை மத்திய அரசுக்கும் நாம் தெரிவித்து இருக்கிறோம். முஸ்லீம்கள், இவர்களுக்கிடையே பலியாகின்ற செய்தியை நம்முடைய லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதைக் குறித்து இரு செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. பத்திரிகைச் செய்திகள்அல்லதுடி.வி-யிலே வருகின்ற செய்திகளின் படி முஸ்லீம்களை எல். டி. டி.ஈ-யினர் கொன்றுவிட்டார்கள் என்று ஒரு செய்தியும் அதைத் தொடர்ந்து, அதை எல். டி. டி. ஈ. இயக்கம் மறுக்கிறது என்ற ஒரு செய்தியும் வந்துகொண்டு இருக்கிறது. அவர் எடுத்துக் காட்டியதைப்போல அங்கே வாழ்கின்ற முஸ்லீம்களும் தமிழர்கள்தான். தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் தான் அங்கே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். முஸ்லீமோ அல்லவோ வேறு யாராக இருந்தாலும், மனித நேய உணர்வோடு

இப்படிப்பட்ட படுகொலைகளை நாம் யாரும் சகித்துக் கொண்டு இருக்க முடியாது. அங்கே நடைபெறுகின்ற இந்தப் போர் நிறுத்தப்படவேண்டுமென்பதிலே இருவிதமான கருத்துக்களுக்கு இடமேயில்லை. வரதராசன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல லண்டன் மாநகரத்திலே இருக்கின்ற 'கிட்டு' அவர்கள் 4,5 வாரங்களுக்கு முன்பு தொலைபேசியிலே என்னைத் தொடர்பு கொண்டு நான் தெரிவித்த கருத்தை அவரே லண்டன் மாநகரத்திலே உள்ள ஏடுகளுக்குச் சொல்லி அதை இந்தியாவிலே உள்ள ஏடுகள் எல்லாம் பிரசுரித்து இருக்கின்றன. அனைவருக்கும் தெரியும் அவர் என்னிடத்திலே பேசும்போது நான் சொன்னேன், 'சீஸ் ஃபையர்' செய்துவிட்டு, பேச்சுவார்த்தைக்குச் செல்லுங்கள் அதுதான் உகந்த வழி என்று நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். இப்படி நான் சொல்கின்ற காரணத்தால், ஆல்போன்ஸ் கேட்டதைப்போல, அன்றைக்கு 'தமிழ் ஈழம்' 'தமிழ் ஈழம்' என்று சொன்னீர்களே அது என்ன வாயிற்று என்று கேட்பதிலும் அர்த்தமில்லை. "தமிழ் ஈழம்" என்று சொன்னோம்: இன்றைக்கும் அது அவர்களுக்குக் கிடைக்குமேயானால் நாமெல்லாம் மகிழ்ச்சி அடைவோம். அதில் என்ன தவறு இருக்க முடியும். ஒரு விடுதலைப் போராட்டத்திலே அவர்கள் இறங்கி இருக்கிறார்கள். கூடாது என்று சொல்லவோ விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்றவர்கள் மீது வேண்டாத ஒன்றை நாம் திணிக்கவோ நிச்சயமாகத் தயாராக இல்லை. எந்தவொரு நிகழ்ச்சியிலும், முதலிலே கோரிக்கை ஒன்றாக இருந்து, அடுத்து, படிப்படியாக அந்த கோரிக்கைகளுடைய தன்மைகள் மாறக்கூடும். 'மகாபாரதம்' படம் டி.வி. யிலே அண்மையிலேதான் பார்த்து முடித்து இருக்கிறோம். அதிலே கூட கண்ண பரமாத்மா தூது சென்ற போது முதலிலே 5 நாடுகள் கேட்டு, பிறகு 5 ஊர்கள் கேட்டு, பிறகு 5 வீதிகள் கேட்டு, பிறகு 5 வீடுகள் கேட்டு, அதற்குப் பிறகுதான் பாரதப் போரே நடைபெற்று—5 வீடுகள் தராத காரணத்தால், நாடே கிடைத்து விட்டது அவர்களுக்கு. அப்படி கிடைத்தாலும் கிடைக்கலாம், இவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அது அல்ல இப்போது நமக்குள்ள பிரச்சினை. நாம் இன்றைக்கு மிக முக்கியமாகக் கருதுவது இலங்கையிலே தமிழனுக்கு அமைதி வேண்டும். தமிழ் இனத்திற்கு அமைதி வேண்டும்: நிலையான அமைதி வேண்டும். ஏறத்தாழ 40 ஆண்டுக்காலமாக அவர்கள் போராடுகிறார்கள். தந்தை செல்வநாயகம் கையிலே ஆயுதம் எடுத்து அந்தப் போராட்டத்திலே குதிக்கவில்லை. அறப்போராட்டத்திலேதான் குதித்தார். அவரைத் தொடர்ந்து தமிழ் தேசிய முன்னணியை உருவாக்கிய அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஆயுதம் எடுத்து போராட்டத்திலே குதிக்கவில்லை. அறப் போராட்டத்தின் மூலமாக 40 ஆண்டுக்காலமாக கிடைக்காத ஒன்றை எப்படி உத்தமர் காந்தியடிகள் அறப்போராட்டத்தின் மூலமாக விடுதலையைப் பெற முடியுமா முடியாதா என்று சந்தேகித்து, பகத்சிங் துப்பாக்கி எடுத்தானோ, எப்படி வாஞ்சிநாதன் துப்பாக்கி எடுத்தானோ அதைப்போல அகிம்சையின்

மூலமாக அங்கே சுதந்திரத்தைப் பெற முடியுமோ முடியாதோ என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் பிரபாகரன் அங்கே துப்பாக்கி எடுத்திருக்கிறானே அல்லாமல் வேறு அல்ல. எனவே இன்றைக்கு நாம் விரும்புவது துப்பாக்கியை இருசாராரும் கீழே போட்டுவிட்டு, பேச்சு வார்த்தைக்கு வரவேண்டும். அந்தப் பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு சந்தேகம் இருக்கிறது. போர் நிறுத்த நேரத்திலே ஒரு அரசு தனக்குள்ள எல்லா அதிகாரங்களையும் வசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு தளவாடங்களைப் பெருக்கிக் கொண்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் இருக்கிறது. அந்தச் சந்தேகத்தைப் போக்குகின்ற அளவுக்கு, இடையிலே ஒருவர் அதற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும். உத்தரவாதம் அளித்து இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும். அதற்கு இந்திய அரசு முன்வரவேண்டும். நான் இந்திய அரசை வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள, இந்தத் தீர்மானத்தின் மீது நீங்கள் பேசிய பேச்சுக்களெல்லாம் எனக்கு ஆயுதங்களாகப் பயன்படுகின்றன என்று கூறி இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏற்க வேண்டுமென்று தெரிவித்து, அமைகின்றேன்.

திரு. உ. ரா. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதி எண் 175 மற்றும் 177-க்கு உட்பட்டு நான் அளித்த திருத்தத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்தச் சிக்கலை நீக்குவதற்காக ''இலங்கை அரசு இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்ற இடத்திலே ''உடனடி நடவடிக்கை எடுக்க இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்'' என்பதைச் சேர்த்துக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார் என்று நான் நம்புகிறேன், ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

14-25 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இறுதியாகப் பேசிய இந்த நிறைவு உரை பேச்சே அப்படியே அச்சு ஏற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட இருக்கிறது. அப்படி அனுப்பப்படும்போது, அதுவே தீர்மானம் மாதிரிதான் போகப் போகிறது. எனவே இத்திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, அதன் மூலமாக ஒரு சிக்கலை ஏற்படுத்தக் தேவையில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால், பேச்சுவார்த்தைக்கு வரும்போது, ''நீ தமிழ் ஈழம் என்ற சொல்லை விட்டுவிட்டு வரவேண்டும்'' என்று இலங்கை அரசு சொல்லக் கூடும். ''தமிழ் ஈழத்தை ஒத்துக்

கொண்டால்தான், நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோம்' என்று அவர்கள் சொல்லக் கூடும். ஆகையினால்தான் இந்த இரண்டுக்குமிடையே எதையும் சொல்லாமல், முதலில் பேச்சு வார்த்தைக்கு வரட்டும், இரண்டையும் பற்றிப் பேசாமல் பேச்சுவார்த்தைக்கு உட்காருங்கள் என்று நாம் கேட்டுக் கொள்வதையே நம்முடைய தீர்மானமாக அமைக்கவும், அதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவும்தான் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பேச்சிலேயே அந்தத் திருத்தங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதையும் நான் முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் திருத்தங்களை வலியுறுத்தாமல், அவை என்னுடைய பேச்சிலே இடம் பெற்றிருப்பதனால் வரவேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய நிறைவுரையில் இறுதியிலே இந்தத் திருத்தத்தின் உள்ளடக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்று கூறியதற்காக திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை.

திருவாளர்கள் உ.ரா. வரதராசன், ஜி. பழனிச்சாமி ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் மாண்டு கொண்டிருக்கின்றார்கள். அஃதன்றியில் விமான குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டு தங்கள் உடைமைகளை இழந்து உயிர் தப்பினால் போதும் என்று பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வந்து குவிந்த வண்ணமிருக்கின்றார்கள்.

இலங்கையில் இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுவதையும் அகதிகள் வருகையின் மூலம் ஒரு வகையான ஆக்கிரமிப்பை இலங்கை அரசு இந்திய நாட்டின் மீது செய்து வருவதையும் நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே இதற்கோர் அரசியல் தீர்வு கண்டு இலங்கையில் தமிழர்கள் நிலையான நிம்மதியான வாழ்வைப் பெறவும் இங்கே அகதிகளாக வந்திருப்போர் மன ஆறுதலுடன் அச்சமின்றி தங்கள் தாயகத்திற்குத் திரும்பிச் செல்லவும் உரிய சூழ்நிலையை

உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று இந்தப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒட்டு மொத்த தமிழர்களின் ஒருமித்த உணர்வோடு ஒருமுகமாக நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை 14-27 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப் பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

58. சுற்றுலாப் பயணிகள் பேருந்துகளுக்கு அனைத்திந்திய அளவில் அனுமதி வழங்குவது குறித்து உள் (போ.6) துறையின் 31–1–1989-ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1939 ஆம் ஆண்டு இயக்கூர்தி கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

59. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30–12–1989 ஆம்

உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று இந்தப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒட்டு மொத்த தமிழர்களின் ஒருமித்த உணர்வோடு ஒருமுகமாக நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை 14-27 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

58. சுற்றுலாப் பயணிகள் பேருந்துகளுக்கு அனைத்திந்திய அளவில் அனுமதி வழங்குவது குறித்து உள் (போ.6) துறையின் 31–1–1989-ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1939 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

59. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30–12–1989 ஆம்

உருவாக்க இந்திய அரசு உடனடியாக முன்வரவேண்டுமென்று இந்தப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒட்டு மொத்த தமிழர்களின் ஒருமித்த உணர்வோடு ஒருமுகமாக நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை 14-27 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப் பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

58. சுற்றுலாப் பயணிகள் பேருந்துகளுக்கு அனைத்திந்திய அளவில் அனுமதி வழங்குவது குறித்து உள் (போ.6) துறையின் 31–1–1989-ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1939 ஆம் ஆண்டு இயக்கூர்தி கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

59. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 30–12–1989 ஆம்

நாளிட்ட 691 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

60. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16–9–1989-ஆம் நாளிட்ட 703 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

61. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 5–2-1990-ஆம் நாளிட்ட 68-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

62. வடஆற்காடு மாவட்டம், சேத்துப்பட்டில் உள்ள ஷேம மறுவாழ்வு பயிற்சி மையத்தினரால் நடத்தப்படும் பயிற்சியின் போது தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16–2–1990-ஆம் நாளிட்ட 91-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

63. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–9–1975 ஆம் நாளிட்ட II(1) வ.வ.ச.அ./854/75 ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் 13–3–1990-ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

64. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனைக்கு விதிக்கக் கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–3–1990 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

65. திருச்சிராப்பள்ளி, திருவாளர்கள் புனித ஜோசப் அச்சக நிலையத்தினரால் அச்சுக் கட்டணமாக வசூலிக்கப்படும் தொகைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4–4–1990 ஆம் நாளிட்ட 216 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

66. எந்த ஒரு விற்பனையாளராலும் விற்பனை செய்யப்படும் புகைப்படக் கருவிகள், புகைப்படத் தாள் மற்றும் சுருள்களுக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 9–5–1990 ஆம் நாளிட்ட 278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

67. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் அட்டவணைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8–6–1990 ஆம் நாளிட்ட 366 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

68. அண்ணா பல்கலைக்கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகசட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

69. அண்ணா பல்கலைக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகசட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

70. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1990 ஆகஸ்ட் 23]

71. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

72. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1987–88-ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1984–85–ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

12. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை.

13. ஒன்பதாவது நிதிக் குழுவிற்கு தமிழக அரசு அளித்த குறிப்புத் தொகுதியின் சுருக்கமும், ஒன்பதாவது நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும்.

14. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை, 1990–91.

15. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1990–91.

16. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1990–91.

17. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

1990 ஆகஸ்ட் 23]

71. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

72. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1987-88-ஆம் ஆண்டிற்கான இருபத்திமூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1984-85-ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

12. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை.

13. ஒன்பதாவது நிதிக் குழுவிற்கு தமிழக அரசு அளித்த குறிப்புத் தொகுதியின் சுருக்கமும், ஒன்பதாவது நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும்.

14. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை, 1990-91.

15. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1990-91.

16. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1990-91.

17. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

18. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும், (எண்கள் 1 முதல் 50 வரை) (ஐந்தாவது பட்டியல்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS